



# நற்செய்தியைப் பரப்புதல்

பெர்னர்ட் ஆர். இயங்மன்

திருமறைக்கு ஒரு பின்னணி 4




பிரிட்டன்
ஜெர்மனி
கால்
ஸ்பெயின்
இத்தாலியா
உரோம்
சிசிலி
கார்த்தேஜ்
தான்யூப் நதி
கருங்கடல்
ஆர்மீனியா
ஆசியா
கொரிந்து
அத்தேனே
எபேசு
மத்தியதரைக் கடல்
கிரேத்தா
அந்தியோகியா
தமஸ்கு
செசரியா
எருசலேம்
தைகிரிஸ் நதி
ஐப்பிராத்து நதி
பாபிலோன்
அலெக்சாந்திரியா
எகிப்து
நைல் நதி
அரேபியா
கி.பி. முதல் நூற்றுண்டின் இறுதியில் உரோமப் பேரரசு
கிலோ மீட்டர்
0 400 800 1200 1600

# நற்செய்தியைப் பரப்புதல்

புத்தகம் நான்கு

## திருமறைக்கு ஒரு பின்னணி

ஆங்கில மூலம் :
பெர்னர்ட் ஆர். இயங்மன்

தமிழாக்கம் :
ஜி. ராஜ்பகதூர்

தமிழ்த் திருச்சபைகள் சமயக் கல்விக் குழு
(T. I. C. C. R. E.)

# வாசகர்கள் கவனத்திற்கு

திருமறையில் கொடுக்கப்பட்டுள்ள செய்திகள் நான்கு பாகங்களாகப் பிரிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். ஆபிரகாம் முதல் சாலொமோன் வரை ஒரு பகுதியாகவும்; பிளவுபட்ட இஸ்ரவேல் இராஜ்யம் தொடங்கி, கிறிஸ்துவின் வருகை வரை மற்றொரு பகுதியாகவும்; கிறிஸ்துவின் வாழ்க்கையும் போதனையும் மூன்றாவது பகுதியாகவும்; கிறிஸ்தவம் பரவியவிதம் நான்காவது பகுதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. நம்முடைய தொடர் நூல்களையும் இந்த முறையிலேயே நாம் பிரித்து எழுதியுள்ளோம்.

புத்தகம் 1 : மூதாதையர், நியாயாதிபதிகள், அரசர்கள்.
புத்தகம் 2 : தீர்க்கர்கள், அரசர்கள், தலைவர்கள்.
புத்தகம் 3 : இயேசு வாழ்ந்த பலஸ்தீனா.
புத்தகம் 4 : நற்செய்தியைப் பரப்புதல்.

இந்த நூலும் இத்தொடரில் உள்ள மற்ற நூல்களும் எழுதப்பட்டதின் நோக்கம், திருமறையில் சொல்லப்பட்டுள்ள மக்களையும் அவர்கள் வாழ்ந்திருந்த நாட்டையும்பற்றியும், அவர்கள் வாழ்க்கை, தொழில், வீடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவைபற்றியும் பல்வேறு விஷயங்களைப் பின்னணியாக்த் தருவதேயாகும். அம்மக்கள் அனுபவங்களையும் அக்கால நிகழ்ச்சிகளையும் நீங்கள் தெளிவாகப் 'பார்ப்பதற்கு'த் துணையாக ஏராளமான படங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் மூலமாக, அக்கால மக்கள் கடவுளைப்பற்றி என்ன எண்ணங்கொண்டிருந்தார்கள், இக்காலத்தில் வாழும் நாம் அவர் எப்படிப்பட்டவர் என்று அறிந்துகொள்ளலாம் என்பதை நீங்கள் விளக்கமாக உணர்ந்துகொள்ளவே அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் கொடுக்கப்பட்டுள்ள திருமறைப் பகுதிகளை நீங்கள் கட்டாயம் படிக்கத் திட்டம்பண்ணிக்கொள்ளுங்கள்—படிக்காமல் இருந்துவிடக்கூடாது. இப்புத்தகத்தை நீங்கள் படிக்கும்போது திருமறைப் பகுதிகளை இன்றைய மொழிபெயர்ப்பில் படித்துக்கொள்ளுங்கள். நீங்கள் திருமறையைப் பழைய மொழிபெயர்ப்பிலேயே படித்துப் பழகியிருந்தால் இன்றைய மொழிபெயர்ப்பில் படிப்பது தொடக்கத்தில் சிறிது புதிதாகக் காணப்படலாம். ஆனால் அது விளங்கிக்கொள்வதற்கு எவ்வளவு எளிதாயிருக்கிறது என்பதை நீங்கள் வெகுசீக்கிரத்தில் கண்டுகொள்வீர்கள். இந்திய வேதாகமச் சங்கம் புதிய ஏற்பாட்டின் ஒரு புதிய மொழிபெயர்ப்பை அண்மையில் வெளியிட்டுள்ளது; உரோமன் கத்தோலிக்க சபையினர் வெளியிட்டுள்ள புதிய ஏற்பாடும் உங்களுக்கு மிகவும் பயன்படும்.

சில சொற்கள் உங்களுக்குப் புதியவையாக இருக்கலாம். ஆட்கள், இடங்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் விதமும் கொஞ்சம் மாறியிருக்கலாம். ஆட்களின் பெயர்கள், வசனங்கள் ஆகியவை மோனகன் என்பவரின் 'திருமறை திருப்புதலி'லிருந்தும், புதிய ஏற்பாட்டின் புது மொழிபெயர்ப்பிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன. இடங்களின் பெயர்களுக்கான சொற்கள் H. H. Rowley-யின் 'மாணவர்களுக்கான திருமறை நாட்டுப் படப் புத்தகம்' (*The Students' Bible Atlas*) என்பதிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. மற்றச் சொற்களை இந்நூலின் கடைசியில் கொடுக்கப்பட்டுள்ள அரும்பதவுரைத் தொகுதியில் நீங்கள் காணலாம்.

©

*First published in* 1976

PRINTED IN INDIA AT THE DIOCESAN PRESS, MADRAS—1976. B7535

# முகவுரை

நடபடிகள் நூல் சில வேளைகளில் 'தூய ஆவியானவரைப்பற்றிய நற்செய்தி நூல்' எனப்படுகிறது. அதன் பொருள் என்ன என்பதை நாம் இந்நூலில் காண்போம். இதில் கூறப்பட்டுள்ள வரலாற்றை ஏறக் குறைய இரு சம பாகங்களாகப் பிரிக்கலாம். முதல் பதினைந்து அதிகாரங்கள் திருச்சபையின் ஆரம்ப காலத்திய செய்திகளைக் கூறுகின்றன. அதாவது, திருச்சபை எவ்விதம் தொடங்கினது என்றும், யூதரும் புற இனத்தவரும் (யூதர் அல்லாதாரும்) புது கிறிஸ்தவ நம்பிக்கையில் எவ்விதம் ஒன்றுபட்டார்கள் என்றும் கூறுகிறது. மீதி பன்னிரண்டு அதிகாரங்கள் பவுலின் வரலாற்றைக் கூறுகின்றன. புதிதாகத் தொடங்கப்பட்ட கிறிஸ்தவ சபை அவர் தூதுப் பயணங்களால் உரோமப் பேரரசு எங்கணும் பரவிற்று.

நடபடிகள் நூல் ஒரு வரலாற்று நூல்; வீரச் செயல்களும் சூழ்ச்சிகளும் கபடச் செயல்களும் நிறைந்தது; ஒரு வாழ்க்கை வரலாறு; மனதைத் தூண்டக்கூடியது; கிளர்ச்சியடையச் செய்வது; ஆராய்ந்து படிக்க வேண்டியது. இதன் தலைவர் கிறிஸ்து. ஆனால் இந்நூலின் முக்கிய பாத்திரம் தூய ஆவியின் ஆற்றலால் பணிபுரியும் பவுல்.

புத்தகம் 3ன் இறுதியில் 'தங்களுக்காக ஒரு இடத்தை ஆயத்தம்பண்ண' தங்கள் ஆண்டவர் போயிருக்கிறார் என்றும், தங்களோடு எப்போதும் இருக்கிறார் என்றும் சீடர் அறிந்து மகிழ்ச்சி உள்ளவர்களாய், இயேசுவால் வாக்குப்பண்ணப்பட்ட ஆற்றல் வாய்ந்த தூய ஆவிக்காகக் காத்திருக்க வீட்டின் மாடி அறைக்குச் சென்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது. பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்தவ திருச்சபை பிறந்தது. நடபடிகள் நூலில் இவ்வரலாறு தொடர்ந்து சொல்லப்படுகிறது. இது கி.பி. 82 போல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது.

நடபடிகள் நூலை எழுதியவர் யார்? இப்படிப்பட்ட காரியங்களை ஆராய்ந்து அறிவதையே தங்கள் வாழ்க்கையின் பணியாகக் கொண்டவர்களைப் புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சியாளர் என்கிறோம். இந்நூலை எழுதியவர் லூக்காவே என்று இவர்கள் நம்புகிறார்கள். ஆண்டவரின் வாழ்க்கையையும் திருப்பணியையும்பற்றிக் கூறுவதும் தம் பெயரையே வைத்திருப்பதுமான நற்செய்தி நூலை லூக்கா எழுதியபோதிலும் அவர் இயேசுவின் சீடரில் ஒருவரல்ல என்பதை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். லூக்கா ஒரு கிரேக்க வைத்தியர்; அநேகமாய் பிலிப்பியைச் சேர்ந்தவராய் இருக்கலாம்; இவர் ஒரு கிறிஸ்தவர். இவர் பவுலை முதலாவது துரோவா பட்டினத்தில் சந்தித்தார். அதிலிருந்து அவர்மேல் பற்றுள்ள நண்பராகவும் அவரைப் போற்றிப் பாராட்டுகிறவராகவும் ஆனார். இருவரும் படித்தவர்கள்; பண்புள்ளவர்கள். ஒருவரோடு ஒருவர் உரையாடுவதிலும் எண்ணங்கள் பரிமாறிக்கொள்வதிலும் மிகுந்த இன்பம் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் அதிக காலம் ஒன்றாகவே இருந்தார்கள். எப்படியெனில், பவுலின் பயணங்களின்போது லூக்கா நண்பராகவும் வைத்தியராகவும் அவரோடு சென்றார். ஏனெனில் பவுலுக்கு அடிக்கடி வியாதிக்காகவும், கடுமையான நோவுக்காகவும் சிகிச்சை தேவையாயிருந்தது. பின்வரும் பகுதிகளில் லூக்காவைப்பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம்: கொலோ. *4:14*; 2 தீமோ. *4:11*; பிலே. *24*. நடபடிகள் நூலில் கூறப்பட்டுள்ள சில சம்பவங்கள் நடந்தபோது லூக்கா அங்கு இருந்திருக்கிறார். ஆகையால் நேரில் கண்டவைகளை அப்படியே கூறியிருக்கிறார். இவைதான் 'நாங்கள்' என்று அவர் விவரிக்கும் பகுதிகள். அவை பின்வருப்வை: *16:10–17; 20:5–15; 21:1–18; 27:1—28:16*.

லூக்கா பவுலின் நெருங்கிய நண்பர் என்று நாம் அறிந்திருக்கிறபடியால் எடுத்துரைக்கப்படும் செய்திகளில் பவுலின் பேரார்வமும், வீரச் செயல்கள் செய்வதில் அவருக்கிருந்த துணிவும் பெயரளவில் அல்லாமல் உண்மையாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அவ்விதமே தான் இருக்கின்றது. இதை எழுதியவர் மற்றவர்களைவிட பவுலோடு மிக நெருங்கிப் பழகிய ஒருவரானபடியால்தான் பவுலின் பேருக்கம் இவ்விதம் வெளிப்படுத்தப்படுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இவற்றைக் குறித்து ஆராய்ச்சி செய்தவர்கள் நடபடிகள் நூலையும் தம் பெயரிடப்பட்டுள்ள நூலையும் லூக்காவே எழுதினார்

என்று கூறுகிறார்கள். பின்வருபவற்றை இவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்:—

1. நடபடிகள் நூலும் லூக்காவின் நற்செய்தி நூலும் கிரேக்கரும் உயர் குடியில் பிறந்தவருமான தேயோப்பிலு என்பவருக்கே அர்ப்பணிக்கப்பட்டிருக்கின்றன (லூக். 1:1–4; அப். 1:1).
2. லூக்காவிலும் நடபடிகள் நூலிலும் ஒரே மொழி நடை காணப்படுகிறது. கிரேக்க மொழி படிக்கத் தெரிந்த அறிஞர்கள் இதை எளிதாய்க் கூறுகிறார்கள். ஏனென்றால் இவை இரண்டும் அந்த மொழியிலேயே எழுதப்பட்டன.
3. லூக்கா ஒரு வைத்தியர் என்பதற்குப் பொருத்தமாகப் பல வைத்தியச் சொற்களும் தொடர்களும் உபயோகிக்கப்பட்டுள்ளன (3:7; 8:7; 9:18; 18:13).

கிறிஸ்தவத் திருச்சபை ஒன்றாகக் கூட்டி இணைக்கப்பட்ட மக்களால் ஆனதாய் இருக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். தங்கள் ஆண்டவரும் தலைவரும் ஆன இயேசு தூய ஆவியின் அதிசயமான ஆற்றலால் தங்களோடு இணைக்கப்பட்டிருக்கிறார் என்றும், தங்களோடு வாழ்கிறார் என்றும் நம்புவதினால் திருச்சபையில் உள்ளவர்களிடையே இன்பமான நட்பும் சமூக ஒற்றுமை உணர்ச்சியும் தங்கள் அன்பையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொள்வதற்குத் தூண்டுதலும் இருக்கவேண்டும் என்றும் விரும்பினார்.

லூக்காவைப்பற்றி என்ன தெரிகிறது? அவர் எழுத்துக்களிலிருந்து அவர் இரக்கமும் பரிவும் உள்ளவர் என்றும், கனிவும் பொறுமையும் உள்ளவர் என்றும், அடக்கத்தோடு கண்டிப்பவர் என்றும் காணப்படுகிறது. அதாவது நல்ல வைத்தியருக்குத் தேவையான எல்லா குணங்களும் உடையவராயிருந்தார். அவர் எழுதுப்வைகளைக் குறித்தும் மிகவும் கவனம் உள்ளவராய் இருந்தார். தம் விரிவுரைகள் சரியாக இருக்கவேண்டுமென்றும் அக்கறை உள்ளவராய் இருந்தார். சர் வில்லியம் ராம்சே என்னும் சிறப்பு வாய்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் லூக்காவின் செய்திகள் வரலாற்றுப்படி சரியானவை என்றும் நம்பக்கூடியவை என்றும் கூறியுள்ளார். லூக்கா எழுதியவற்றின் பெரும் பகுதி அவர் பவுலுடன் கூடவே இருந்து பெற்ற அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டவை. பவுலின் நண்பர்களும் வளரும் திருச்சபைபற்றி அறிவித்து, லூக்காவுக்கு அறிக்கைகள் அனுப்பி வந்தார்கள். கிறிஸ்தவ நம்பிக்கையின் ஆரம்பத்தைக் குறித்து லூக்காவுக்கு நேரடியான தகவல் தெரியாது. ஆகையால் அதைக் குறித்து எழுதப்பட்டிருந்த சில செய்திகளை அவர் திரட்டியிருக்கலாம்.

நடபடிகள் நூலை எழுத ஆரம்பித்தபோது லூக்கா கடினமான பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அப்போஸ்தலர்கள், பவுல் முதலியவர்களின் வேலையைப்பற்றிய செய்திகளை அவர் தெரிந்துகொண்டு அவற்றை வியக்கத்தக்க வகையில் தெளிவாக எழுதியுள்ளார். அவர் மூன்றாவது புத்தகம் ஒன்றும் எழுதத் திட்டமிட்டிருந்திருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஏனென்றால் நடபடிகள் நூல் திடீரென்று முடிவடைகிறது. திருச்சபை எவ்விதம் தொடங்கியதென்றும், அதைப் பவுல் எவ்விதம் பரவச் செய்தாரென்றும் தெளிவுபடுத்தும் வரலாற்றை எழுதி அளித்ததற்கு நாம் அவருக்கு நன்றி உள்ளவர்களாய் இருக்கிறோம். இது கிறிஸ்தவத்தின் தொடக்கமே ஆகும். ஏனெனில் இந்நிமிடம் வரை அது செயல்பட்டுக்கொண்டே இருக்கிறது.



உரோமிலுள்ள தூய பேதுரு ஆலயம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முகவுரை | iii |
| அத்தியாயம் | |
| 1. அப்போஸ்தலர் நடபடிகளுக்கு ஒரு பின்னணி | 2 |
| 2. பெந்தெகொஸ்தே | 11 |
| 3. பேதுருவும் யோவானும் | 18 |
| 4. ஸ்தேவான், சவுல், பிலிப்பு | 25 |
| 5. தமஸ்குவுக்குச் சென்ற பாதையில் | 37 |
| 6. புற இனத்தவரை சபை ஏற்கிறது | 45 |
| 7. முதல் தூதுப்பயணம் | 55 |
| 8. எருசலேமில் நடந்த விவாதக் கூட்டம் | 71 |
| 9. இரண்டாம் தூதுப்பயணம் | 76 |
| 10. மூன்றும் தூதுப்பயணம் | 94 |
| 11. எருசலேமில் பவுல் | 105 |
| 12. பவுலும் உரோம ஆளுநர்களும் | 113 |
| 13. உரோமுக்குச் செல்லுதல் | 118 |
| 14. உலகெங்கும் | 127 |
| 15. அரும்பதவுரைத் தொகுதி | 136 |


முன் அட்டைப் படம்: தூய தோமாவின் குன்றின்மேலுள்ள ஆலயம்.


## ACKNOWLEDGMENTS

Grateful acknowledgment is made to Hulton Educational Publications for permission to translate and publish the four books in the series *Background to the Bible* by Bernard Youngman, and for permission to make use of the art work in the series *The Bible Story and its Background* by Norman Bull.

The Editorial Committee consisted of John Dorairaj, Joy R. Tangayya, Celia Barber and Beth Walpole. The illustrations were prepared by A. J. T. James and C. Thangavelu.

அத்தியாயம் 1

# அப்போஸ்தலர் நடபடிகளுக்கு ஒரு பின்னணி

கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சியையும் அது பரவிய விதத்தையும் நாம் அறிந்துகொள்ள விரும்பினுல் முதற்கண் அக்காலப் பின்னணி பற்றிச் சற்றுத் தெரிந்துகொள்ளவேண்டும். அந்நாளில் உலகம் என்பது உரோமப் பேரரசின் அளவில் அடங்கிநின்றது. இங்கிலாந்து நாட்டிலுள்ள தைன் நதி தொடங்கி ஐப்பிராத்து நதிவரை உள்ள மத்தியதரைக்கடல் பகுதியே அந்த உலகம். முன் அட்டையிலுள்ள நாட்டுப் படத்தைப் பாருங்கள். இத்தாலியா நாடு அதன் நடுநாயகமாகவும் உரோமப் பட்டணம் அதன் இதயத்தைப் போலவும் அமைந்திருந்தது. பலஸ்தீனு மிகச் சிறிய பகுதியே. படத்தைப் பார்த்தால் இந்த உண்மை புலனுகும். புத்தகம் 3, முதலாம் அத்தியாயத்தில் நாம் சந்தித்த கிரேக்கர்கள், உரோமர்கள், யூதர்கள் என்ற மூன்று முக்கிய இன மக்கள் உரோமப் பேரரசு முழுவதும் பரவலாக வாழ்ந்து வந்தனர். உரோமப் பேரரசின் அரசியல், பாகுபாடு, சமயம், பண்பாடு ஆகியவற்றில் இம்மூவருடைய செல்வாக்கு நின்று நிலவியது.

### கிரேக்கர்கள்

மாவீரன் அலெக்சாந்தர் சின்ன ஆசியா, பலஸ்தீனு, மற்றும் கீழ்த்திசை நாடுகளில் வெற்றிக்கொடி நாட்டிவந்தபோது கிரேக்கர்கள் தங்கள் நாட்டு நாகரிகத்தையும் கலையையும் எழிலையும் எங்கும் பரவச் செய்திருந்தனர். இவர்கள் பேரரசு உரோமப் பேரரசுக்குக் கைமாறிய பிறகும்கூட வெகு காலத்திற்கு இவர்களுடைய கட்டிடக் கலையும் காவியங்களும் மெய்ப்பொருளியலும் கலைகளும் அவற்றின் செல்வாக்கை இழந்துவிடவில்லை. இன்றும்கூட கிரேக்கர்களின் பெருமையை நாம் எண்ணிப் பார்ப்பதற்கு இவைகளன்றோ காரணமாய் அமைகின்றன! இவர்கள் கொடுத்த செல்வங்களில் மிகச் சிறப்பானது கிரேக்க மொழி. கற்றுக்கொள்வதற்கும் எழுதுவதற்கும் பேசுவதற்கும் மிக எளிதாக இருந்த காரணத்தால் அம்மொழியே பேரரசு எங்கணும் வாழ்ந்துவந்த மக்கள் மத்தியில் முக்கிய மொழியாகத் திகழ்ந்தது. மக்கள் ஒருவரோடொருவர் பழகவும் வணிகத் தொடர்பு கொள்ளவும் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளவும் இந்த மொழி மிகவும் பயன்பட்டது. ஒருவரோடொருவர் உரையாடுவதன் மூலமாகவும், கடிதங்கள் வழியாகவும் கிறிஸ்தவ சமயத்தின் தூது பல இடங்களுக்குப் பரவுவதற்கு இம்மொழியே பெரிதும் உதவிற்று. புதிய ஏற்பாடு முதன் முதலாக கிரேக்க மொழியில்தான் எழுதப்பட்டது. 'செப்துவஜிந்த்' (எழுபது) என்ற பழைய ஏற்பாட்டின் சிறப்பான கிரேக்க மொழிபெயர்ப்பே (புத்தகம் 2, அத்தியாயம் 11) பேரரசின் எல்லைகளில் உள்ள எல்லா ஜெப ஆலயங்களிலும் அந்நாட்களில் வாசிக்கப்பட்டு வந்தது.

உரோமர்கள் கிரேக்கப் பேரரசைக் கைப்பற்றியபோது அங்கு வளர்ந்துநின்ற சிறப்பான கிரேக்கப் பண்பாட்டை அவர்களால் அழிக்கமுடியாமற் போயிற்று. தங்கள் தாய்மொழியான லத்தீன் மொழியை அவர்களால் புகுத்த முடியவில்லை. பேரரசின் பல்வேறு பகுதிகளிலும் கிரேக்கக் குடியிருப்புகள் இருந்தன. சில குடியிருப்புகளில் ஹெலனிய யூதர்கள் இருந்தார்கள். சிதறிக்கிடந்த யூதர்கள் கிரேக்க (ஹெலனிய) நாகரிக வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி வந்ததால் 'ஹெலனிய யூதர்கள்' என்று அழைக்கப்பட்டனர். இயேசுவின் காலத்தில் யோர்தானுக்குக் கிழக்கே உள்ள தெக்கப்போலி (பத்து பட்டணங்கள்) மாவட்டத்தில் கிரேக்கக் குடியிருப்புகள் இருந்தன. தெக்கப்போலியில் அந்தப் பித்துப் பிடித்த மனிதரை இயேசு சுகப்படுத்தியது உங்களுக்கு நினைவிருக்கலாம். பவுலடியார் தம் தூதுப் பயணத்தை மேற்றிசைப் பகுதிகளில் தொடங்கியபோது இத்தகைய கிரேக்க குடியிருப்புகளைப் பல இடங்களில் பார்த்தார்.

### உரோமர்கள்


தாங்கள் பிடித்தாண்ட மக்களின் சமயம், மொழி, வாழ்க்கை முறைகள் ஆகியவற்றில் உரோமர்கள் பெரும்பாலும் பெருமளவு

மாற்றம் செய்வதில்லை. கலகங்கள், குழப்பங்கள் நடைபெறுதவரை இவற்றில் அவர்கள் தலையிட்டுக்கொள்வதும் இல்லை. இவ்வகையில் உரோமப் பேரரசுக்குக் கட்டுப்பட்டு ஏரோது குடும்பத்தினர் பலஸ்தீனுவை ஆண்டு வந்தார்கள். பிரதான ஆசாரியர் என்றழைக்கப்பட்ட தேவாலய தலைமைக்குரு சமய வாழ்க்கையிலும், அன்ருட வாழ்க்கையிலும் எருசலேமில் உள்ள யூதர்களைத் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார். அர்கெலாவு என்ற யூத அரசர் காலத்தில் யூதேயாவிலுள்ள யூதர்கள் அவரை எதிர்த்துக் கலகம் செய்து உரோமர் தங்களை ஆள வேண்டுமென்று கேட்டுக்கொண்ட ஒரே காரணத்தினுல்தான் பிலாத்து அங்கு ஆளுநராக வைக்கப்பட்டிருந்தார்.

உரோம ஆட்சியாளர்கள் பேரரசின் அமைதி காத்தனர். இதன் காரணமாக நிலையான வாழ்க்கைமுறையை மேற்கொண்டு, பேரரசால் முன்னேற்றம் காணமுடிந்தது. உரோம ஆட்சி முறைகள் புகுத்தப்பட்டன. சட்டமன்றங்கள், நீதிமன்றங்கள் ஏற்பட்டன. உரோமர்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த மக்கள் இவற்றின் மூலம் தங்களைத் தாங்களே ஆண்டு கொண்டனர். முக்கிய நகரங்களில் உரோமரின் குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டன. பெரும்பாலும் ஓய்வு பெற்ற போர்வீரர்கள் இவற்றில் இருந்தனர். இவர்கள் இருந்தபடியால் கலகங்களும், சட்ட விரோதச் செயல்களும் தடுக்கப்பட்டன. ஏனெனில், குழப்பம் ஏற்பட்டால் உடனே இவர்கள் படையாகத் திரண்டெழுந்து அதை



உரோம வரிப்பளுவால் யூதர் துன்பப்பட்டனர்




தேவாலயத்திற்கு அருகில் இருந்த அந்தோனியாக் கோட்டை

வளரவொட்டாமல் தடுத்துவிடுவார்கள். இக்கால கட்டத்தில் இங்கிலாந்து நாடும்கூட உரோமப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது என்பதை நாம் கவனிக்கவேண்டும். இந்நாட்டில் குடியேறியவர்களும் ஓய்வுபெற்ற உரோமப் படைவீரரே. இவர்கள் குடியிருப்புகளில் வாழ்ந்து வந்தனர். படையெடுத்துத் தாக்கியவர்கள் ஆயிரக்கணக்கான மக்களை உரோமுக்கு அடிமைகளாகப் பிடித்துக்கொண்டுபோய் அவர்களைச் சந்தைகளில் ஆடுமாடுகளை விற்பதுபோல் விற்றனர். பெரிய விளையாட்டரங்குகளையும், களியாட்டரங்குகளையும் கட்டுவதற்கு இவ்வடிமைகள் பயன்படுத்தப்பட்டனர். கலிலேயர்கள் புரட்சி செய்த காலத்தில் இயேசு இளம் பருவத்தினராயிருந்தார். புரட்சியாளர்கள் பலர் சிலுவையில் அடித்துக் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் அழகான தங்கள் கலிலேய மாவட்டத்தை விட்டுவிட்டு, பல தெய்வ வணக்க நகரமான உரோமுக்குக் கொண்டுபோகப்பட்டனர். மேலும் உரோமர்கள் வரிகளும் விதித்தனர். இவை யூத மக்களுக்குத் தாங்கமுடியாத மிகப் பெரிய பளுவாக இருந்ததுபற்றி புத்தகம் 3ல் ஏற்கெனவே நாம் படித்திருக்கிறோம்.

உரோம ஆட்சி ஆற்றல் வாய்ந்ததாயும், உறுதியாயும் இருந்தது. உரோமப் படைவீரர் நன்கு பயிற்றுவிக்கப்பட்டனர். அவர்களிடம் போதுமான படைக் கருவிகளும் இருந்தன. அவர்கள் பேரரசு முழுவதும் பாசறைகளிலும் காவற் கோட்டைகளிலும் வைக்கப்பட்டிருந்தனர். எருசலேமிலும் அத்தகைய பெரிய பட்டாளம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அந்தோனி என்ற உரோம வீரரின் நினைவாகக் கட்டப்பட்டிருந்த அந்தோனியாக் கோட்டை உரோமப் படைகள் வைக்கப்பட்ட ஒரு பலத்த அரணாய் விளங்கிற்று. இது தேவாலயத்திற்கு அருகில் இருந்தது. முக்கியமாகப் பண்டிகைக் காலங்களில் உரோம

ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சிகளும், பொது ஆர்ப்பாட்டங்களும் நிகழாதபடி பார்த்துக் கொள்ளவேண்டியது அவசியமாயிருந்தது. பவுலடியார்மீது யூதர்கள் கோபங்கொண்டு தாக்கத் தொடங்கியபோது இப்பட்டாளம் தான் அவரைக் காப்பாற்ற ஓடிவந்தது (பக்கம் 106 பார்க்கவும்). தங்கள் படைகள் மூலம் உரோமர்கள் தங்களுடைய பரந்த பேரரசின் தனித் தலைவர்களாய் விளங்கினர். அப்படியிருந்தாலும் உரோமக் குடியுரிமை பெறுவதில் மக்கள் பெருமைகொண்டனர். அடிமைகளாக இருந்தவர்கள் சிறப்பாகப் பணியாற்றினுல் அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்படும். இதைப் பணம் கொடுத்தும் வாங்கலாம் (அப். 22:25—29).

உரோமர்கள் மூர்க்க குணம் படைத்தவர்கள். இவர்களிடையே பல தெய்வ வணக்கம் இருந்தது. வீனஸ், யூப்பித்தர், தியாளுள், மார்ஸ், பாக்கஸ், மித்ராஸ் போன்ற தேவர்களேயும் தேவதைகளேயும் இவர்கள் பயத்துடனும், மூட நம்பிக்கையுடனும் வழிபட்டு வந்தனர். இத்தெய்வங்களேப் பலிகளினுலும், தீய சமயச் சடங்குகளினுலும் மட்டுமே திருப்தி செய்யக்கூடும் என்று எண்ணினர். இவர்களின் அன்ருட வாழ்க்கைச் செயல்கள் தெய்வங்களினுல் கட்டுப்படுத்தப் பட்டனவாக இருந்தன. எனவே இவர்களுக்கு வாழ்க்கை அர்த்தமற்ற சூன்யமாகிவிட்டதில் ஆச்சரியமில்லே. தனிமை உணர்வும், அச்சமும் இவர்களிடம் மேலோங்கி நின்றன. அன்பும் பண்பு மற்று, சிறந்த தெய்வ வழிபாடு இல்லாமல் இருக்கின்ற ஒரு பேரரசு நிலேத்து வாழமுடியாது. உரோமப் பேரரசின் நிலேயும் அங்ஙனம் ஆயிற்று என்பதை சரித்திரம் காட்டுகிறது. கிறிஸ்தவ சமயத்தின் தொடக்க நிலேயிலும், அது பரவி வந்த காலத்திலும் உரோம ஆட்சியின் கொடுங்கோன்மை உச்ச கட்டத்தில் இருந்தது.




யூப்பித்தர்

### யூதர்கள்


பண்டைத் திருச்சபை தொல்லேக்குள்ளானதற்கு வெகு காலத்திற்கு முன்பே மத்தியதரைக் கடல் நாடுகளெங்கும் யூதர்கள் பரவியிருந்தார்கள் என்பதை இங்கு நினேவில் கொள்ளவேண்டும். பாபிலோனியர் காலத்தை நாம் நினேத்துப் பார்க்கவேண்டும் (புத்தகம் 2, அத்தியாயம் 9). இவர்களேயே சிதறிக்கிடந்த யூதர்கள் என்று குறிப்பிடுகிருேம். அப். 2:9—11 வசனங்களில் இவர்கள் குடியேறியிருந்த இடங்களின் பெயர்கள் காணக்கிடக்கின்றன. முக்கிய நகரங்களில் வணிகர்களாகவும், புகலிடம் தேடி வந்தவர்களாகவும், அடிமைகளாகவும் இந்த யூதர்கள் இருந்தனர். எங்கு வாழ்ந்தாலும் தங்கள் சமயப் பற்ருேடு வாழ்ந்தனர். அங்கு வாழ்ந்த மற்ற இனத்தவராலும் இவர்களுடைய வாழ்க்கை ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தது. தங்கள் அரமிய அல்லது எபிரேய மொழியோடு கிரேக்க மொழியையும் இவர்கள் பேசி வந்தனர். வழிபாட்டில் பழைய ஏற்பாட்டின் 'செப்துவஜிந்த்' என்ற கிரேக்க மொழி பெயர்ப்பையும் தங்களுக்கு அருமையான எபிரேயச் சுருள்களேயும் பயன்படுத்தினர். கிரேக்க உடைகளேயும் அணிந்துகொண்டனர். தங்கள் பெயர்களே கிரேக்கப் பாணியிலும் உரோமப் பாணியிலும் மாற்றிவைத்துக் கொண்டனர். உணவு உண்ணுவதிலும்கூட கிரேக்க, உரோம முறைகளே இவர்கள் பின்பற்றி வந்தனர் (புத்தகம் 3, பக்கம் 80).

ஆனால் சென்றவிடங்களிலெல்லாம்—குறிப்பாக, பெரிய நகரங்களில் உள்ள தங்கள் குடியிருப்புகளில்—தவறான வழிபாடும், மூட நம்பிக்கைகளும், பில்லிசூன்யம், மந்திரம் போன்றவைகளும் உள்ள மக்கள் நடுவில் தங்கள் சிறந்த சமய நம்பிக்கைகளைக் கைவிடாமல் பாதுகாத்துக்கொண்டனர். ஒரே மெய்க் கடவுளான யாவேயின்மேல் வைத்திருந்த நம்பிக்கையை சிறப்பாகக் காத்துக்கொண்டனர். ஒரு இடத்தில் பத்து யூத ஆண்கள் இருந்தால்போதும், அங்கு அவர்கள் ஒரு ஜெப ஆலயம் வைத்துக்கொள்ளலாம். இவ்விதம் அவர்கள் அமைத்துக்கொண்டதோடு தங்கள் சடங்குகளையும், ஆசாரங்களையும் விட்டுவிடாமல் காத்துக்கொண்டு, 'தூய்மையற்ற' புற இன மக்களோடு கூடுமானவரை கலவாமல் இருந்துவந்தார்கள்.

எருசலேம் தேவாலயம் யூதர்களுக்குத் 'தாய் வீடு.' ஆயிரக்கணக்கான யூதர்கள் ஒவ்வொரு ஆண்டும் அங்கு செல்வதைத் தங்கள் புனித கடமையாகக் கருதினார்கள். பக்தி நிரம்பிய யூதர்கள் எருசலேமிலேயே குடியிருந்தார்கள். கிரேக்கர்களும் உரோமர்களும் தங்கள் தெய்வங்களின் பயனற்ற தன்மையை அறிந்து, அவற்றை வழிபடுவதில் கொண்டிருந்த ஆர்வத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுவிட்டார்கள். உரோம அரசவையில் நிலவிய தீய ஒழுக்கங்களையும் தீங்குகளையும் கண்டு மனம் சலித்துப்போய் இருந்தார்கள்; தவறான வழிகளில் மக்கள் நடப்பதைக் கண்டு திகைத்துப்போயும் இருந்தார்கள். இந்நிலையில் தாங்கள் தேடுவது யூத சமயத்தின் சிறப்புப் பண்பாக இருப்பதைச் சிலர் கண்டனர். தங்கள் நம்பிக்கையில் உறுதியாயிருக்கவும், தூய வாழ்க்கை நடத்தவும் துணைபுரியக்கூடிய வலிமை படைத்த ஒரே கடவுள்மேல் உள்ள நம்பிக்கையே அச்சிறந்த பண்பாகும். அவர்கள் சமயத்துடன் ஒப்பு நோக்கும்போது அவர்கள் இலட்சியங்களை நிறைவேற்றித்தரும் ஒரு சமயமாக யூத சமயம் இருந்தது. எனவே யூதரல்லாதாரும் ஜெப ஆலயத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்துகொண்டு தொழுகைக்கு ஏற்றுக்கொள்ளப்படுமளவுக்கு யூதத் திருச்சட்டத்தைக் கைக்கொண்டு வந்தனர். நாளாவட்டத்தில் 'மதம் மாறியவர்கள்' அல்லது 'கடவுளுக்குப் பயந்து நடப்பவர்கள்' என்ற பெயர் இவர்




அக்காலத்தில் பலஸ்தீனாவுக்கு வெளியே குடியிருந்த யூதர்களின் எண்ணிக்கையை இந்நாட்டுப் படம் காட்டுகிறது





எருசலேம்

களுக்கு வழங்கலாயிற்று. ஜெப ஆலயக் காணிக்கைகளையும் யூத சமயத்தின் வரிகளையும் இவர்கள் ஒழுங்காகச் செலுத்திவந்தார்கள். ஆனால் இவர்கள் முழு அளவில் யூதர்களாக மாறிவிடவில்லை; அதாவது நுனித்தோல் நீக்குதலை ஏற்றுக்கொள்ளவில்லை,

யூதர்கள் மோசேயின் திருச்சட்டத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றிவந்தனர். அதனால் மரபு என்ற பெயரில் சிறு சிறு சடங்குகளையும் ஆசாரங்களையும் கடைப்பிடித்து வர வேண்டும் என்று இவர்கள் மக்களுக்குப் போதித்து வந்ததால் யூத சமயம் விதிகள் நிறைந்த ஒரு பெருஞ்சுமையாகிவிட்டது. இதுபோன்ற காரியங்களைக் குறித்து இயேசுவுக்கும் இவர்களுக்கும் விவாதம் ஏற்பட்டது (புத்தகம் 3). யூதர்கள் இயேசுவை மறுதலித்து வெறுத்ததோடு அவர்களுடைய மேசியாவாக வந்த அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றும் விட்டார்கள். அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியா இவர் என்று நம்பவும் மறுத்துவிட்டார்கள். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின்மேல் உள்ள நம்பிக்கைக்கு இந்த வைதீக யூதர்கள் எதிரிகளாக அமைந்துவிட்டனர். கிறிஸ்துவைப் பின்பற்றிவந்த பலஸ்தீன யூதர்களும் தங்கள் யூத முறைமைகளைப் பின்பற்றுவதில் ஆர்வங்காட்டினார்கள்; ஒரே சமயத்தில் இரண்டு நம்பிக்கைகளிலும் பற்றுள்ளவராயிருத்தல் கூடாத காரியமாகும் என்ற உண்மையை இவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால் ஹெலனிய யூதர்கள், பரந்த மனப்பான்மை உடையவர்களாய் நற்செய்தியைத் தடையின்றி வரவேற்றனர். தொடக்க நாட்களில் பேச்சாளர்களுக்கும் நற்செய்திப் பணியாளர்களுக்கும் தங்களால் இயன்ற அளவுக்கு உதவிசெய்து உற்சாகமூட்டி, புதிய நம்பிக்கை பரவ மிகவும் ஒத்துழைத்தனர்.

### யூதர்களும் கிறிஸ்தவமும்


யூத சமயத்தின் முக்கிய விஷயங்களில் பிளவு ஏற்பட்டபோது ஹெலனிய யூதர்கள் பழமையான திருச்சட்டத்தையும் யூத சமயச் சடங்குகளையும் விட்டு, எல்லாருக்குமான கிறிஸ்தவ மதத்தைத் தழுவலாயினர். ஆனால் பலஸ்தீன யூதர்கள் இதைச்செய்ய அஞ்சினர். ஹெலனிய யூதர்கள் யூத சமயம் யூதர்களுக்குமட்டுமே உரியது, ஆனால் கிறிஸ்தவ மதமோ எல்லோர்க்கும் உரியது என்று வாதிட்டார்கள். இவ்வாறு நற்செய்தி என்ற சம்மட்டி மக்களிடையே இருந்த பிரிவினைச் சுவர்களைத் தகர்த்தெறிந்து நின்றது. ஆனால் எருசலேமில் கிறிஸ்தவம் வளராமல் போனதற்குக் காரணம் உண்டு. எகிப்திலிருந்து பலஸ்தீன வழியாக, கிழக்கே சின்ன ஆசியா மற்றும் வடகிழக்கு நாடுகள்வரை வாணிபம் நடக்க உதவியாயிருந்த பெரும் போக்குவரத்துச் சாலைகள் எதுவும் எருசலேமைத் தொட்டுச் செல்லவில்லை. ஆகவே மற்றைய பகுதிகளில் வாழ்ந்த யூதரல்லாதார் நடுவில் கிறிஸ்தவம் விரைவில் பரவி அவர்களை ஆட்கொண்டதைப்போல் எருசலேமில் பரவாமற்போனதற்கு இதுவே காரணம். பேதுருவின் தலைமையில் எருசலேமில் யூதர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்தாலும் எருசலேம் பட்டணம் கிறிஸ்தவ சமயத்தின் மையமாகத் திகழவில்லை. கிறிஸ்தவத்தின் ஊற்றாக விளங்கும் வாய்ப்பை அது இழந்துவிட்டது. சீரியாவைச் சேர்ந்த அந்தியோகியாவிலுள்ள யூதரல்லா



கிரேக்கர்களின் கட்டிடக் கலை

தார் நடுவிலும் யூத சமயத்தை ஏற்றுக் கொண்டோர் மத்தியிலும் கிறிஸ்தவம் நன்ருக வளரத்தொடங்கிற்று. இங்குதான் உலகக் கிறிஸ்தவத் திருச்சபைக்கு வித் தூன்றப்பட்டது. யூதர், புற இனத்தவர், சமாரியர், ஆண்டை, அடிமை, ஏழை, பணக் காரர், படித்தவர், பாமரர், மேதைகள், ஞானிகள், மந்திரவாதிகள், போர்வீரர்கள் இப்படி எல்லா மக்களும் திருச்சபையில் அங்கம் வகித்தனர். கிறிஸ்துவின் வழியில் யூதர் புற இனத்தவர் என்கிற வேறுபாடு இல்லாத ஒருவர் உருவாகியிருக்கிருர். அவர் கிறிஸ்த வர் என்பவர். புற இனத்தவருக்கு கிறிஸ்த வத்தைக் கொண்டு கொடுத்தவர் பவுல். கிறிஸ்தவர்களுக்குள் எவ்விதப் பிரிவினையும் கிடையாது என்ற உண்மையை எடுத்துக் காட்டி, அத்தகைய பிரிவினைகள் மறைந் தொழியக் காரணமாயிருந்தவரும் அவரே (கலா. 3:28). இயேசு திருப்பணி செய்து வந்த காலத்தில் யூத சமயத்தில் உள்ள 'தளை' களில் எவைகளெல்லாம் தவறு என்று சுட்டிக் காட்டியிருந்தாரோ (புத்தகம் 3) அவைகளை யெல்லாம் பவுல் அறுத்தெறிந்தார்.

இங்ஙனம் இம்மூன்று இனத்தவரும் பல நன்மைகளைக் கொடுத்திருந்தனர். கிரேக் கர்கள் கிரேக்க மொழியையும் தங்கள் பண் பாட்டையும் கொடுத்திருந்தார்கள். கிரேக்க மொழியின் வழியாகவே நற்செய்தி எங்கும் பரவ முடிந்தது. உரோமர்கள் கட்டுப்பாட்டை யும் ஒழுங்கையும் கொடுத்திருந்தனர்; நல்ல சாலைகளையும் அமைத்திருந்தனர். கிறிஸ்தவ தூதுப் பணியாளர்கள் எங்கும் சுற்றித்திரிந்து பணியாற்ற இச்சாலைகள் உதவின; பூசல், குழப்பம் எதுவும் இல்லாத ஒரு நல்ல அமைதி யான சூழ்நிலையும் ஏற்படுத்தியிருந்தனர். ஆகவே போர்களினுல் இடைஞ்சல் ஏதும் ஏற் படாமல் கிறிஸ்தவத் தூதுப் பணியாளர்கள் தங்கள் பணியைச் செய்ய முடிந்தது. யூதர்கள் ஒரே மெய்யான கடவுள்மேல் நம்பிக்கை வைத்தவர்களாய் மேசியாவை எதிர்பார்த்த வண்ணமிருந்தனர். கடவுளுடைய சொந்த மக்கள் என்ற நம்பிக்கையோடு அவர்கள் வாழ்ந்து வந்தனர். இம்மூன்று இன மக்க ளுக்கும் கிறிஸ்தவம் கிடைத்தது. யூத சமயத் தின் அடிமைத் தளைகளிலிருந்து விடுதலை பெற்ற ஒரு சமயமாக அது இருந்தது. கிரேக் கர்கள், உரோமர்களின் பல தெய்வ வணக் கத்திற்கு ஒரு சவாலாக நின்றது கிறிஸ்தவம். எல்லாவற்றிற்கும் மேலாக, பேரரசுகளால் கூட அடைவதற்கு சாத்தியம் என்று நம்பக் கூடாதிருந்த சகோதரத்துவத்தை இந்தக் கிறிஸ்தவமே உலகில் உண்டாக்கிக் கொடுத் தது.



நற்செய்தி பரவுவதற்கு உதவியாயிருந்த உரோமச்சாலைகளில் ஒன்று

## விளக்கப் பயிற்சி

1. 'நடபடிகளின் புத்தகம் தூய ஆவியான வரின் நற்செய்தி நூல்'—இக்கூற்றின் பொருள் என்ன?

2. நடபடிகள் நூலை எழுதியவர் லூக்கா என்று எங்ஙனம் அறிகிருேம்? இதுபற்றி உங்கள் வகுப்புக்கு எடுத்துச்சொல்ல சில குறிப்புகளைத் தயார் செய்யுங்கள்.

3. இப்புத்தகத்தில் கிடைக்கும் செய்திகளி லிருந்தும் குறிப்புகளிலிருந்தும் திரு மறை விளக்க விரிவுரைகளிலிருந்தும் லூக்கா என்பவரின் வாழ்க்கை வர லாற்றைப்பற்றி நாம் அறிவது என்ன?

4. லூக்கா என்பவரின் நற்செய்தி நூலி லிருந்தும் நடபடிகளின் புத்தகத்திலிருந் தும் லூக்கா மருத்துவ விஷயங்களில் அறிவும் ஆர்வமும் கொண்டவர் என் பதை நிரூபியுங்கள்.

5. உங்களை லூக்கா என்று எண்ணிக் கொண்டு, பவுல் பற்றியும் ஆரம்ப காலத் திருச்சபை பற்றியும் செய்திகளைக் கண்டறிய பவுலின் நண்பர்கள் சிலரைக் கண்டு பேசுங்கள்.

6. மாற்கு பற்றியும் பர்னபா பற்றியும் பவுல் பற்றியும் செய்திகளைச் சேகரிக்கும் நோக்கத்தோடு மாற்குவுக்குக் கடிதம் எழுதுங்கள்.

7. 'புதிய திருச்சபை'யில் ஒருமைப்பாடு, அன்பு, துணிச்சல் ஆகியவை காணப் பட்டன என்னும் கூற்றுக்கு நடபடிகள் 1—5 அத்தியாயங்களிலிருந்து மேற்கோள் கள் கண்டுபிடியுங்கள்.


8. ஒரு கிரேக்கரும், ஒரு உரோமரும், ஒரு யூதரும் 'புதிய நெறி'பற்றி விவாதிப் பதைக் கற்பனை செய்து பேசுங்கள்.

9. 'செப்துவஜிந்த்' என்பது என்ன? அது எங்ஙனம் தோன்றிற்று?

10. நான்கு உரோம தெய்வங்களின் பெயர் களைக் கூறுங்கள். அவற்றின் கிரேக்கப் பெயர்கள் எவை? வழிபாட்டில் ஒவ் வொரு தெய்வத்தின் முக்கியத்துவம் என்ன?

11. உரோமப் பேரரசின் முக்கிய பட்டணங் களில் யூதர்கள் வாழ்ந்ததற்குக் காரணம் என்ன? இது பவுலின் திருப்பணிக்கு எந்த அளவு (அ) உதவியாயிருந்தது? (ஆ) தடையாயிருந்தது?

12. 'மதம் மாறியவர்கள்' என்ற பதம் யாரைக் குறிக்கிறது? இவர்களிடம் பவுல் பேசியவற்றைக் குறித்து யூதர்கள் ஏன் பொறாமை கொண்டனர்?



பெந்தெகொஸ்தே நாள்

அத்தியாயம் 2

# பெந்தெகொஸ்தே

*(லூ. 24:50–53; அப். 1,2)*

### விண்ணேற்றம்

யோவான் *20:1–8*, லூக்கா *24:1–12* ஆகிய பகுதிகளில் ஆண்டவர் உயிர்த்தெழுந்த நிகழ்ச்சிபற்றிச் சொல்லப்பட்டுள்ள அழகான விவரங்களைப் படித்துக்கொள்ளுங்கள்.

ஈஸ்டர் ஞாயிறன்று இயேசு உயிர்பெற்று எழுந்ததை நாம் உயிர்த்தெழுதல் என் கிறோம். அதை அடுத்த நாற்பது நாட்களில் சீடர்கள் துக்கத்தால் நிறைந்து, அவர்மேல் கொண்ட நம்பிக்கையைக் குறித்து நிச்சயம் இல்லாதவர்களாய் இருந்தபோது இயேசு ஒன்பதுமுறை அவர்கள்முன் தோன்றினார். மீண்டும் அவர்களுக்கு அவர் காணப்பட்ட தால் இயேசு உயிருடன் வாழ்கிறார் என்று அவர்கள் நம்பினர். அவர்களோடு வாழ்ந்து வந்த காலத்தில் இருந்ததுபோல் இனி அவர் களுக்கு அவர் காணப்படமாட்டார்; ஆனால் என்றும் அவர்களோடு இருக்கப்போகிறார் என்று அறிந்தனர். இப்படி அவர் அருகி லேயே இருப்பதைக் குறித்து நிச்சயம் உள்ள வர்களான சீடர்கள் புத்துணர்ச்சி பெற்று, புது மனிதர்களாகி விட்டனர். பயந்த கோழைகளாய், சந்தேகப் பிறவிகளாய் இது காறும் அவரைப் பின்பற்றி வந்தவர்கள், புத்துணர்ச்சிமேலிட இப்போது துணிச்ச லோடும் தன்னம்பிக்கையோடும் தங்கள் குருவைப்பற்றிய நற்செய்தியை வெளிப் படையாகக்கூறி அறிவிக்கத் தொடங்கினர். வரப்போவதாக வாக்குப்பண்ணப்பட்டிருந்த மேசியா இயேசுதான்; அவர் இறந்தார்; பின் எழுந்துவிட்டார்; இனி என்றும் வாழுகிறார்; அவர்களுக்கு வாழ்வளிக்க மீண்டும் வருவார். இதுதான் அவர்கள் கூறிய நற்செய்தி. சீடர்கள் யாவரும் யூதர்களாயிருந்ததால் மேசியா தங்களையே அவருடைய சொந்த மக்களாகத் தெரிந்துகொண்டுள்ளார் என்று நம்பினார்கள். இந்த எண்ணம் அவர்களுக்கு எப்போதும் இருந்து வந்தது. கடவுள் அனைத் தின்மேலும் வல்லமை உடையவர் என்று காண்பித்துவிட்டார். பாவத்தையும், அக் கிரமத்தையும், சாவையும்கூட ஒருங்கே மடங்கடித்து வெற்றிக்கொடி நாட்டி விட் டார்.

இயேசு விரைவாகத் திரும்பி வருவார் எனச் சீடர்கள் எதிர்பார்த்தனர். திருச்சபை யின் தொடக்க நாட்களில் அவர்கள் வாழ்க் கையிலும் கூட்டங்களிலும் நடந்த நிகழ்ச்சி கள் பலவற்றைப் பார்க்கும்போது வரப் போகும் இயேசுவைச் சந்திக்க இவர்கள் எப்போதும் ஆயத்தமாக இருந்தனர் என நாம் அறிகிறோம். நாளாவட்டத்தில் இவர் கள் ஓர் உண்மையைக் கண்டுகொண்டனர். இயேசு சொல்லியிருந்ததுபோல், கடவுளே அதற்கு ஏற்ற காலத்தைத் தெரிந்துகொள் வார் என்று அறிந்துகொண்டனர். அதுவரை எருசலேமிலும் யூதேயாவிலும் சமாரியாவி லும் இன்னும் உலகமெங்கும் கடவுள் அரசு குறித்த செய்தியைப் பரப்புவதில் இவர்கள் ஈடுபடவேண்டும் *(அப். 1:6–8)*.

சீடர்களுக்குத் தேற்றரவாளர் என்ற தூய ஆவியானவரை அருளப்போவதாக வாக்குப் பண்ணியிருந்தார் இயேசு. தேற்றரவாளர் என்ற சொல்லுக்கு 'ஆற்றல் அருளுபவர்' என்று பொருள். அதாவது பலவீனங்களை மேற்கொள்ளுவதற்கு வேண்டிய ஆற்றலைத் தந்தருளுபவர். தூய ஆவியானவர் அவர்கள் மேல் வருவார். ஆனால், இப்பொழுது இயேசுவை அவர்கள் முழு அளவில் நம்பி யிருந்ததால் அவர் தந்தையிடம் திரும்பிச் செல்லவேண்டும். இதைத்தான் பரமேறிச் செல்லல் அல்லது விண்ணேற்றம் என்று குறிப் பிடுகிறோம்.

### மத்தியாவுக்குச் சீட்டு விழுந்தது

இயேசு வெகு விரைவில் வந்துவிடுவார் என்ற நம்பிக்கையோடு சீடர்கள் ஒலிவமலையி

விருந்து எருசலேமுக்குத் திரும்பினார்கள். அது ஓர் ஓய்வுநாள் பயணத் தூரமான இரண்டாயிரம் முழத் தொலைவில் இருந்தது (முழம் என்பது 46 முதல் 50 சென்டி மீட்டர் வரை இருக்கலாம்). அவர்கள் மாற்குவின் தாயாருடைய வீட்டில் உள்ள மேலறையில் வந்து தங்கினர் (அப். 1:12,13; 12:12). இயேசுவோடு அவர்கள் இறுதி இராவிருந்துண்ட நிகழ்ச்சிக்குப்பின் சீடர்கள் இந்த இடத்தில் பலதடவை கூடி ஜெபித்து வந்திருக்கின்றனர். பதினொரு சீடர்களும் இயேசுவின் தம்பியரும் தாயார் மரியாளும் மற்றும் இயேசுவுக்கு அறிமுகமான நண்பர்களுமாய்க் கூடி வந்தபடியால் ஆலயங்களில் ஆராதனை நடத்துவதுபோல் இந்த இடத்தில் ஆராதனை நடத்தி வந்திருக்கலாம் (அப். 6:4; 16:13). அவர்கள் கூடி 'அப்பம் பிட்டு மெய்யான உள மகிழ்ச்சியோடு ஒன்றாய்ச் சாப்பிட்டு வந்தார்கள்' (அப். 2:46). இது இறுதித் திருவிருந்தையும் அவர்கள் குருவோடு இருந்த ஐக்கியத்தையும் அவர்களுக்கு நினைப்பூட்டியது (லூ. 24:43; அப். 10:41).

இயேசுவின் பன்னிரண்டாவது சீடனாக இருந்தவன் யூதா இஸ்காரியோத்து. இவன் மட்டுமே யூதேயாவிலிருந்து வந்தவன். மற்ற பதினொருவரும் கலிலேயர்கள். இச்சீடன் தன் குருவைக் கொடூரமாகக் காட்டிக் கொடுத்து விட்டதற்காகக் கடைசியில் தற்கொலையும் செய்துகொண்டான். மத். 27:3—10 வசனங்களில் சொல்லப்பட்டதைவிட அப். 1:15—20 வசனங்களில் சொல்லப்பட்ட விவரங்களே சரியானவையாக இருக்கலாம். இந்த இரு பகுதிகளையும் நாம்படிக்கவேண்டும். யூதாவின் இடத்தை நிரப்ப ஓர் ஆள் தேவைப்பட்டது. சீட்டுப்போட்டுப் பார்த்து கடவுளின் திருவுளத்தை அறியலாம் என்று நம்பினார்கள். அக்காலத்தில் இந்த முறை அதிகம் கையாளப்பட்டு வந்தது. தேவாலயப் பணிவிடை செய்யும் குருக்களின் அன்றாட பணிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் இம்முறை கையாளப்பட்டது.

மத்தியா யூதாவுக்குப் பதிலாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இவருக்கு இயேசுவைத் தெரியும். அவர் திருப்பணியாற்றியதையும் சிலுவையில் அறையப்பட்டதையும் மீண்டும் உயிரோடெழுந்ததையும் இவர் கவனித்து வந்திருக்கிறார். இவர் தெரிந்தெடுக்கப்பட்டார் என்ற செய்தி தவிர அடுத்து நாம் இவரைப்பற்றி ஒன்றுமே கேள்விப்படவில்லை. ஆதிச் சீடர்களில் வேறு சிலரைப்பற்றியும் நாம் அதிகம் கேள்விப்படுவதில்லை. நடபடிகளின் புத்தகத்தில் திருச்சபை வளர்ச்சியின் ஒரு பகுதி மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது; பல செய்திகள் அதில் எழுதப்படவில்லை. மத்தியாவைப்பற்றி வேறெங்கும் குறிப்பிடப்படாததால் இவர் பணி தோல்வியடைந்தது என்று நாம் நினைத்தால் அது தவறாகும். சீடர்கள் இயேசுவோடு தொடர்புடைய எல்லா நிகழ்ச்சிகளையும் தங்கள் கண்ணால் கண்டிருந்தவர்கள். கடவுளின் அரசு என்றால் என்ன என்று அறிந்துவைத்திருந்தார்கள். எனவே அவர்கள் ஒவ்வொருவரும் இப்புதிய நம்பிக்கையின் வளர்ச்சிக்குத் தங்களாலியன்றதைச் செய்தார்கள். இதற்குள்ளாகவே இயேசுவைப் பின்பற்றிய பலரில் இப்பன்னிருவர் தனித்த ஒரு குழுவாக இருந்து சிறப்பான பணி செய்துவந்தனர். இயேசு தெரிந்துகொண்ட சீடர்களின் எண்ணிக்கை பன்னிரண்டு. இஸ்ரவேலின் இனப்பிரிவுகளும் பன்னிரண்டு. இவற்றோடு பொருந்துவதாக அவர்களுடைய எண்ணிக்கை இருக்கவேண்டும் என்று ஒருவேளை நினைத்திருப்பார்களோ என்னவோ!

### பெந்தெகொஸ்தே

கி.பி. 29ம் ஆண்டின் மே திங்கள். கடைசியாக இயேசு காட்சி அளித்ததற்கு அடுத்த பத்தாவது நாள் அது. பஸ்கா பண்டிகை முடிந்து ஐம்பது நாளாகியிருந்தது. எனவே அது பெந்தெகொஸ்தே சமயம். பெந்தெகொஸ்தே என்ற சொல்லுக்கு 'ஐம்பதாவது' அல்லது 'ஏழு வாரங்கள்' என்று பொருள் (லேவி. 23:15—21). சீனாய் மலையில் திருச்சட்டம் கொடுக்கப்பட்ட அப்பெரு நிகழ்ச்சியை இப்பண்டிகை நாட்களில் மக்கள் முற்காலத்தில் கொண்டாடினர் (யாத். 19:16—19). நாளாவட்டத்தில் இது சீரியா நாட்டில் மே, ஜூன் மாதங்களில் நடைபெறும் முன் அறுவடைக் காலத்தோடு தொடர்புபடுத்தப்பட்டது. அப்பொழுது இது முதற்பலன்களைக் கொண்டுவரும் அறுப்பின் பண்டிகை அல்லது ஏழு வாரங்களின் பண்டிகை எனப்பட்டது (யாத். 34:22; 23:16; எண். 28:26). இச்சமயத்தில் தேவாலயத்திற்கு வருபவர்கள் புதிதாக விளைந்த தானியத்தில் சப்பாத்தி வடிவில் இரண்டு அப்பங்களைத் தயாரித்து எடுத்துக் கொண்டு வருவார்கள். தேவாலய குருக்கள் அவற்றை பலிபீடத்தின் முன் அசைவாட்டுவார்கள். அது மகிழ்ச்சிகரமான ஒரு காலம். கடவுளுக்கு நன்றி செலுத்தும் காலம். ஆண்டின் மிக முக்கிய பண்டிகைக் காலம். இப்பண்டிகைக்காக எருசலேமுக்கு வரும் கூட்டம் பெருங் கூட்டமாயிருக்கும். ஏனென்றால் பண்டிகையை ஆசரிக்கும்படி யாவரும் வரவேண்டும் என்பது கட்டளை (யாத்.

23 —19; உபா. 16:16). உரோமிலிருந்தும் அத்தேனே, அலெக்சாந்திரியா, பாக்தாத் போன்ற பட்டணங்களிலிருந்தும் மக்கள் வருவார்கள். எருசலேமிலிருந்து தொண்ணூறு நாள் பயணத்தொலைவுக்குள் இருப்பவர்கள் அனைவரும் பண்டிகை கொண்டாட வர வேண்டும்.

இந்தப் பழமையான பெந்தெகொஸ்தே நாளில் சீடர்கள் ஜெபத்திற்காகக் கூடி, காத்துக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரிலும் வளர்ந்து வந்த உறுதிப்பாட்டு உணர்ச்சிப் பெருக்கின் காரணமாக அளவுகடந்த உற்சாகத்தோடு மக்கள் காணப்பட்டார்கள். இதை நாம் 'ஆனந்தக் களிப்பு' என்கிறோம் (1 சாமு. 10:10; 1 நாளா. 12:18). அச்சமயத்தில் கடவுளின் தூய ஆவியானவர் மெய்யாய் வந்துவிட்டதை அறிந்தார்கள். இயேசுவின் ஆற்றலும் சக்தியும் ஒவ்வொருவருக்குள்ளும் பாய்ந்து செல்லுவதையும் அவர்களால் உணரமுடிந்தது. அவர் தங்களோடு இருப்பதை அவர்கள் நன்றாக அறிந்துகொண்டார்கள். கிறிஸ்து உயிர்த்தெழுந்து உயிருடன் வாழுவதற்கு இதுவே சான்றாயிற்று.

காற்றுக்கும் பிளவுபட்ட அக்கினி நாவுகளுக்கும் 'விளக்கம்' தர இயலாது. பலத்த காற்று அடிக்கும்போது உண்டாகும் இரைச்சல்போல் இருந்தது என்றும், பிளவுபட்ட அக்கினி நாவுபோல் இருந்தது என்றும் லூக்கா கூறுகிறார் (மத். 3:11; எசே. 37:9 பார்க்கவும். 1 இரா. 19:11–13 வசனங்களில் கடவுள் 'காற்றிலும் அக்கினியிலும்' இருக்கவில்லை என்று வியந்து கூறப்பட்டிருக்கிறது). இது ஒரு வருணனை விளக்கம். சீடர்கள் காற்று அடிப்பதுபோல் உணர்ந்தனர்; தங்கள் ஆவிகள் முழுமையானதும் புதிய தன்மை வாய்ந்ததுமான ஒன்றினால் சுடர்விட்டு நன்றாக எரிவதுபோல் ஓர் உணர்வு பெற்றனர் என்பதே ஒருகால் இதன் பொருளாகும். இங்கு நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால் சீடர்கள் ஓர் அற்புதமான அனுபவம் பெற்றார்கள்; அது அவர்களைப் புது மனிதர்களாக்கிற்று.

## இதர மொழிகளில் பேசினார்கள்

தாங்கள் கூடிவந்த நோக்கத்தை நன்குணர்ந்தவர்களாய் மகிழ்ச்சி பொங்கி வழிய, புதிய ஆற்றலால் நிரப்பப்பட்டு, சீடர்கள் பல்வேறு சொற்களைப் பேசி மகிழ்ந்தார்கள். அவர்கள் திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்த வாழ்த்துச் சொற்களாக இவை இருந்திருக்கலாம். இன்றுகூட கூட்டங்களில் மக்கள் அதிக உற்சாகமடையும்போது இப்படிப்பட்ட ஒலியெழுப்புவதைக் கேட்கலாம். வேறு வகையில் தங்கள் உற்சாகத்தை வெளியிடமுடியாமல், உணர்ச்சி மேலிட அவர்கள் 'கடவுளைத் துதிப்போம்', 'அல்லேலூயா' (இரண்டின் பொருளும் ஒன்றே) அல்லது 'ஆமென்' போன்ற சொற்களை வாய்விட்டுச் சொல்லுகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் இச்சொற்களை மட்டுமே நாம் தெளிவாகக் கேட்க முடிகிறது. சீடர்கள் குடிவெறியில் இருந்ததாக மற்றவர்கள் குற்றஞ்சாட்டினர். அவர்கள் பேசிய பல சொற்கள் வெளியிலிருந்த மற்றவர்களுக்குப் புரியவில்லை என்று இதில் இருந்து நாம் அறியவருகிறோம். ஆனால் கடவுளைப் போற்றவேண்டுமென்ற அதே உணர்ச்சியோடு அருகில் நின்றுகொண்டிருந்தவர்களுக்கு இவர்கள் பேசிய பல வார்த்தைகளும் எழுப்பிய பல ஒலிகளும் புரிந்தன. சீடர்கள் திடீரென்று தங்களுக்குத் தெரியாத மொழிகளில் பேசக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பார்கள் என்று சொல்லமுடியாது. பலஸ்தீனாவில் யாவரும் பேசிய அரமிய மொழியில் அவர்கள் பேசியிருக்கக்கூடும்; அல்லது பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்த யூதர்களும், மற்றவர்களும் புரிந்துகொள்ளக்கூடியதான கிரேக்க மொழியில் அவர்கள் பேசியிருக்கக் கூடும்.

தூய ஆவி அருளப்பட்டதோடு, இப்போது எல்லா நாட்டவருக்கும் இனத்தவருக்கும் பிரிவினருக்கும் நற்செய்தியைக் கூறி அறிவிப்பதற்குத் தேவையான ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் சீடர்கள் பெற்றனர்.

இதற்குள் சீடர்கள் வீட்டின் மேலறையை விட்டு, மக்கள் 'திரளாக' நின்றுகொண்டிருந்த ஓரிடத்திற்கு வந்ததாகத் தெரிகிறது. அப். 2:9–11 வசனங்களில் சொல்லப்பட்ட நாடுகள் பல்வேறு மொழிகளையே குறிக்கின்றன. இதனால் கிரேக்க மொழி பேசிவந்த யூதர்களும் (ஹெலனியர்கள்), மற்றைய யூதர்களும் உரோமப் பேரரசில் எங்கெல்லாம் சிதறிக் கிடந்தார்கள் என்பதை நம்மால் கண்டு கொள்ளமுடிகிறது. இங்கு யூதேயா என்பது அரமிய மொழி பேசப்பட்டு வந்த சீரியாவையும் பலஸ்தீனாவையும் குறிக்கலாம். நடந்த நிகழ்ச்சிகள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும், நாம் அறிந்துகொள்வது என்னவெனில் இப்போது சீடர்கள் கிறிஸ்துவின் அரசை நிலைநிறுத்த தாங்கள் எடுத்துக்கொண்ட இலட்சியப் பணி குறித்து உறுதியான எண்ணங்கொண்டிருந்தார்கள்; உற்சாகமாயிருந்தார்கள்; எழுச்சி பெற்றிருந்தார்கள். அச்சத்திலிருந்தும், பாவத்திலிருந்தும், தீமையின்

பிடியில் இருந்தும், சாவின் அதிகாரத்திலிருந்தும் தங்களுக்கு விடுதலைகிடைத்ததை நன்ருக உணர்ந்திருந்தார்கள். மற்றவர்களுக்கும் பரவக்கூடியதான ஒருவகை மகிழ்ச்சியும் களிப்பும் நிறைந்தவர்களாய் அவர்கள் காணப்பட்டனர்.

### பேதுரு ஆற்றிய பேருரை

கிறிஸ்தவ சமயத்தின் தொடக்கமாய்நின்ற ஒரு சிறு கூட்டத்திற்குத் தலைவராகப் பேதுரு ஏற்கெனவே இருந்தார். வேறு எந்தச் சீடரும் பேதுருவின் இடத்தை ஏற்றிருக்கமுடியும் என்று நம்மால் நினைக்கமுடியவில்லை. ஆயினும் அவரும் மற்றச் சீடர்களும் 'உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும்' செல்லத் தொடங்கியபோது இயேசுவின் தம்பியாகிய யாக்கோபு எருசலேமில் உள்ள ஆதித் திருச்சபையைக் கவனித்து வந்தார். எதையும் வெளிப்படையாக, சற்று ஆத்திரமாகப் பேசும் குணம் படைத்த பேதுரு, தங்களைக் கவனித்துக் கொண்டிருந்தவர்களுக்கு எல்லாவற்றையும் விளக்கத் தொடங்கினுர். முதலாவது, அவர்கள் குடிவெறியில் இருக்கவில்லை என்று நிரூபிக்க முனைந்தார். அப்போது மூன்றும் மணிவேளை. அதாவது காலை ஒன்பது மணி இருக்கும். காலை ஜெபங்கள் இன்னும் ஏறெடுக்கப்படவில்லை. ஒருபோதும் அதற்கு முன் திராட்சைரசம் அருந்தமாட்டார்கள். தீர்க்கவுரை நிறைவேற்றத்தையே அவர்கள் கண்டார்கள் என்றும் யாவேயின் நாள்வரும்' என்று யோவேல் தீர்க்கர் உரைத்தது இப்போது நடைபெறுகிறது என்றும் சுட்டிக் காண்பித்தார் (யோவேல் 2:28–32). இதற்கான இரு அடையாளங்களில் முதலாவதைத் தெளிவாய்க் காணலாம். அது தூய ஆவி அருளப்படுதல்.முற்காலத்தில் தீர்க்கர்களிடம் காணப்பட்டது; இன்று தாவீது குலத் தோன்றலான மேசியாவை நம்புகிற அனைவருக்கும் தூய ஆவியானவர் அருளப்படுகிறுர். இரண்டாவது அடையாளம் 'கொடிய பயங்கரமான கடவுளின் நாள்' என்பது. இது இனிமேல் வரும். இதுவே மேசியாவின் ஆட்சி. இயேசு இதனைத் தொடங்கிவிட்டார். இவரே பாடுபடும் தொண்டர். இவரை யூதர்கள் சிலுவையில் அறைந்தார்கள். இவரை உயிரோடிருப்பவராகச் சீடர்கள் அறிந்துகொண்டது மட்டுமல்லாமல் இவரே ஆண்டவர் என்று மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்வார்கள்.

யூதேயாவில் உள்ள மக்கள் இயேசு செய்து வந்த திருப்பணியை நன்கு அறிந்தவர்கள். தேவாலயத்திற்கு வந்துபோகும் வெளிநாட்டுப் பயணிகள் சிலருக்கும் இயேசுவின் பணி தெரியும். ஆகவே இயேசு உயிரோடெழுந்த நிகழ்ச்சியை அவர்களுக்குச் சிறப்பாக எடுத்துரைத்தார் பேதுரு. யூத இனத்தவர் அனைவரும் வழிதப்பிப் போய்விட்டனர்; அவர்கள் மனந்திருந்த வேண்டும் என்ருர். திருமுழுக்கன் யோவானும் மற்ற தீர்க்கர்களும் மனமாற்றம் அடைந்து, ஒரு புதிய நம்பிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு அடையாளமாக மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார்கள். இப்போது பேதுரு மக்களைப் பார்த்து, மனந்திருந்தி இயேசுவை நம்புகிறவர்கள் திருமுழுக்குப் பெறவேண்டும் என்கிருர். நம்பிக்கையற்று, ஐயத்திலும் தீய நெறியிலும் வாழ்ந்த மக்கள், புதிய அரசின் நாயகராகவும் உயிரோடெழுந்த மேசியாவாகவும் இருக்கும் இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு ஒரு தெளிவான புற அடையாளமாக இருப்பது திருமுழுக்கு. அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்படும்; தூய ஆவியானவரின் தூண்டுதல் அவர்களுக்கு ஈவாகக் கொடுக்கப்படும். தண்ணீரால் நடைபெறும் புறமுழுக்குடன் தூய ஆவியானவரால் நிகழ்த்தப்படும் அகமுழுக்கு ஒன்றும் உண்டு என்ருர் அவர்.



கிறிஸ்தவத் திருமுழுக்கு
(உரோம அடிநிலக் கல்லறையில் வரையப்பட்டிருந்த படம்)

## நசரேயர்கள்

பேதுரு பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களில் பலர் இயேசுவை நன்கு அறிந்தவர்கள். எனவே இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ள அவர்கள் ஆயத்தமாயிருந்தார்கள். முதன்முதலாக மனம்மாறி இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களின் தொகை அவ்வளவு பெரிதாயிருந்ததற்கு இதுவே காரணம். ஆதியில் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு 'புதிய நெறி'யினர் (அதாவது இயேசுவின் நெறியினர்) அல்லது 'நசரேயர்' என்ற பெயர் உண்டாயிற்று. புதிய நெறியினரைக் கிறிஸ்தவர்கள் என்று இப்போது குறிப்பிட்டாலும் இப்பெயர் இவர்களுக்குப் பிற்காலத்தில்தான் உண்டாயிற்று. பெந்தெகொஸ்தே நாளே திருச்சபை பிறந்த நாள் ஆகும். அப். 2:42–47ல் திருச்சபையின் உறுப்பினர் தங்கள் செல்வத்தையும் உடைமைகளையும் ஒருவரோடொருவர் பகிர்ந்துகொண்டு மகிழ்ச்சியாயிருந்தார்கள் என்று நாம் காண்கிறோம். இயேசு விரைவாகத் திரும்பிவந்து தம்முடைய ஆட்சியை நிலைநாட்டப்போகிறார் என்று அவர்கள் 'மகிழ்ந்து கூத்தாடினார்கள்'. இனி இவ்வுலகப் பொருட்களால் பயன் ஒன்றுமில்லை. அவர்களுக்கு விண்ணுலக அரசு சொந்தமாகப் போகிறது. 'கிறிஸ்தவ நம்பிக்கையும் கிறிஸ்தவ வாழ்க்கையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை' என்று சொல்லப்பட்டு வந்தது. தாங்கள் போதித்தவைகளைத் தங்களுடைய வாழ்க்கையிலும் இவர்கள் கடைப்பிடித்தனர் (கலா. 5:22ஐ ஒப்பு நோக்கவும்). முன்போலவே ஜெப ஆலயத்திற்கும், தேவாலயத்திற்கும் சென்று தொழுது வந்தனர். இவர்களிடம் காணப்பட்ட முக்கிய மாறுதல் என்னவென்றால் மேசியா வந்துவிட்டார் என்ற நம்பிக்கையே. மற்ற யூதர்கள் மேசியாவின் வரவை இன்னமும் எதிர்பார்த்திருந்தனர். யூதர்களின் ஓய்வுநாளான சனிக்கிழமையை ஓய்வுக்கான நாளாக அவர்கள் ஆசரித்தார்கள். ஆனால் இவர்களோ வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமையில் ஆண்டவர் உயிரோடு எழுந்த அந்தப் பெரு நிகழ்ச்சியைக் காலைத் திருவிருந்து ஆராதனையோடு நினைவுகூர்ந்தார்கள். கான்ஸ்டன்டைன் பேரரசருடைய ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவ மக்கள் யூத சமயத்தை விட்டுப் பிரிந்து யூதர்களின் ஓய்வு நாள் ஆசரிப்பைக் கைவிட்டு, ஞாயிற்றுக்கிழமையைக் கிறிஸ்தவர்களின் ஓய்வுநாளாக ஆசரிக்கத் தொடங்கினர்.

புதிய சமயத்தை ஏற்றுக்கொண்டவர்கள் தொகை பெருகவே பங்கீட்டுப் பிரச்சினைகள் தொல்லை தருகிறவையாயின (கலா. 2:10; அப். 24:17). இருப்பினும் அவர்களிடையே அருமையான ஒருமைப்பாடு நிலவியது. அவர்கள் 'ஜெபத்திலும் அப்பம் பிட்குதலிலும்' ஒற்றுமையைக் கடைப்பிடித்தார்கள். அக்காலத்தில் திருச்சபையில் புற இனத்தவர் இன்னும் சேரவில்லை. இவர்கள் புறத்தேயிருந்து வேடிக்கை பார்ப்பவர்களாகவே இருந்தனர். ஆனால் இவர்களுக்கு 'அச்சம் உண்டாயிற்று'. அச்சம் உண்டானது என்று சொல்வதைவிட 'திகைப்பும் திகிலும் இவர்களை ஆட்கொண்டது' என்றால் மிகவும்



கிறிஸ்தவர்கள் உணவைப் பகிர்ந்து சாப்பிட்டார்கள் (உரோம அடிநிலக் கல்லறையில் வரையப்பட்டிருந்த படம்)

பொருத்தமாக இருக்கும். இந்தப் புறவினத்தவர் ஏற்கெனவே மதம்மாறி யூத மதத்தைத் தழுவி இருந்தவர்கள். 'மேசியா வந்துவிட்டார்; இந்த யூதர்களாலேயே அவர் கொல்லப்பட்டார்; இன்றும் உயிரோடு இருக்கிறார்' என்று சொல்லுகிற இப்புதிய மார்க்கத்தில் சேர இவர்கள் துடிப்புள்ளவர்களாய்க் காணப்பட்டனர். இந்தப் புதிய போதனை இவர்களுக்கு அற்புதமான ஒரு போதனையாக இருந்தது. புறவினத்தவர்களை யூதர்கள் தங்கள் சமயத்தில் முழு உறுப்பினராக எளிதில் சேர்த்துக்கொள்வதில்லை. யூதர் வற்புறுத்திய யூத சமயச்சடங்குகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்ட பிறகே அவர்கள் அங்ஙனம் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். இப்புதிய நெறியில் தாங்கள் நசரேயர்களால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று இப்புறவினத்தவர் விரும்பினார்கள். இதற்கு நசரேயர்களுடைய பதில் என்னவாயிருக்கும்? இப்பிரச்சினை எங்ஙனம் விரிவடைந்து, எப்படி மறைந்தது? இவற்றை நாம் பின்னால் காணப்போகிறோம். ஆனால் இந்தப் பிரச்சினைகளின் விளைவாக மிகச் சிறந்த முடிவு ஒன்று எடுக்கப்படவிருந்ததைக் காண்கிறோம். இப்புதிய சமயம் யூதர்களோடு தொடர்புள்ளதாகவே இருக்கப்போகிறதா அல்லது அதைவிட்டுப் பிரிந்து எவரும் பின்பற்றக்கூடியதாகத் திகழப்போகிறதா என்பதே அந்த முடிவு.

கிறிஸ்தவ சமயம் பரவிக்கொண்டிருந்தபோது திருமுழுக்குச் சடங்கும் அதனுடன் சேர்ந்து நடைபெற்று வந்தது. பல ஆண்டுகள் கழித்து கிறிஸ்தவர்கள் இந்த யூதப் பெந்தெகொஸ்தே பண்டிகையை, தங்களைத் தூய்மைப்படுத்திக்கொள்வதற்கான ஒரு தருணமாக எண்ணத்தொடங்கினர். அன்று தூய வெண்ணிற ஆடை அணிந்து மக்கள் ஆலயம் செல்வார்கள். இந்நாளை வெள்ளை ஞாயிறு விழா (White-Sunday-Tide or Whitsuntide) என்று அழைக்கத் தொடங்கினர். இன்றுவரை ஆங்கிலச் சபைகளில் இதுவே அதன் பெயராக இருக்கிறது. நாம் இதனை 'தூய ஆவியானவரின் திருநாள்' என்கிறோம்.

### பரிசேயரும் சதுசேயரும்

புத்தகங்கள் 2, 3ல் இவ்விரு பிரிவினரையும்பற்றிப் பலமுறை படித்திருக்கிறோம். பரிசேயர்கள் மத ஒழுங்கைத் தீவிரமாய்க் கடைப்பிடிப்பவர்கள். தூயவாழ்வு வாழ திருச்சட்டத்தையும் அதனுடன் தொடர்புடைய நூற்றுக்கணக்கான சிறுசிறு சட்டங்களையும் கைக்கொண்டால் போதும் என்று நினைப்பவர்கள். சதுசேயர் பெரும்பாலும் பிரதான ஆசாரியர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பணக்காரர்; ஆணவக்காரர். சனகரீம் என்ற யூதர்களின் பேரவையில் இவர்களே தலைவர்களாக இருந்துவந்தனர். பரிசேயர்களை இவர்கள் வெறுத்தொதுக்கினார்கள். மறுமை வாழ்வில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் இந்த இரு பிரிவினருக்கும் ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் ஒருமைப்பாடு உண்டு! இயேசுவின் சீடர்கள் போதித்த புதிய போதனைகள் தீவிரமாய்ப் பரவி வருகிறதே என்று இரு சாராரும் மிகவும் கவலை கொண்டனர். பரிசேயர்கள் இயேசுவின் சாவுக்குக் காரணமாக இருந்தவர்கள் என்ற பேச்சு பரிசேயர்களுக்கு அதிக மனச்சங்கடத்தை உண்டாக்கிற்று. ஆனால் சதுசேயர்களின் கவலையெல்லாம் உயிர்த்தெழுதல் உண்டென்று இந்த இயேசுவின் சீடர்கள் பேசிக்கொண்டு திரிகிறார்களே என்பதுதான். இப்படியே கிறிஸ்துவை மேசியா என்றும் அரசர் என்றும் இவர்கள் பேசிவந்தால், உரோமப் பேரரசின் பகைக்கு தாங்கள் ஆளாகும் நிலை வந்துவிடுமே என்ற கவலையும் இவர்களை வாட்டியது. இது கடைசியில் தங்களுக்குப் பெருந்தொல்லை விளைவிக்க



சதுசேயர்

லாம் என்று அஞ்சினுர்கள். இயேசுவைப் பிடித்துச் சிலுவையில் அறைந்தபோது அவர் பணி முடிந்துவிடும் என்று இந்த இருசாராரும் எண்ணியிருந்தார்கள். ஆனுல் இதோ, அவருடைய சீடர்கள் எழும்பி 'சிலுவை மரணத்துக்கென்று நீங்கள் ஒப்புக்கொடுத்த அந்தக் ''குற்றவாளி'' இன்னமும் உயிரோடு இருக்கிருர்' என்று துணிச்சலாய்ப் பேசுகிருர்களே! தங்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்த மேசியாவைத் தங்கள் சனகரீம் பேரவையே கொன்றுவிட்டதாகக் குற்றம் சாட்டுகிருர்களே! இந்த விதமான பேச்சு மக்களிடையே பரவினுல் பரிசேயரையும், சதுசேயரையும் இனி 'பொது மக்கள்' மதிக்கமாட்டார்கள். இந்த அச்சத்தினுல்தான் அன்று இயேசுவைக் கொன்ருர்கள்; இன்று அவருடைய சீடர்களை என்ன செய்யலாம் என்ற ஆலோசனையில் இறங்கியிருக்கிருர்கள்.



பரிசேயர்

## விளக்கப் பயிற்சி

1. ஆதிக் கிறிஸ்தவர்கள் 'மகிழ்ந்து கூத்தாடினுர்கள்' என்று ஒருவர் குறிப்பிட்டார். இக்கூற்று சரியென்று நினைக்கிறீர்களா? உங்கள் விடைக்கான காரணங்களைக் கூறுங்கள்.
2. மத்தியாவும், யோசேப்பு என்றழைக்கப்பட்ட பர்சபாவும் (அ) சீட்டு எடுக்குமுன் (ஆ) சீட்டு எடுத்தபின் உரையாடுவதாகக் கற்பனை செய்து பேசுங்கள்.
3. தூய ஆவி பற்றிய கீழ்க்கண்ட வசனங்களையும் மற்றும் உங்களுக்குத் தெரிந்த வசனங்களையும் எடுத்துப் படியுங்கள்: எண். *11:17; 27:18;* நியா. *3:10;* தானி. *5:12; 6:3;* மத். *3:11;* யோ. *3:5–8; 14:16–19,25,26; 15:26,27; 16:7–14.*
4. மத்தியதரைக் கடல் நாடுகளின் படம் வரைந்து, அதில் அப். *2:9–11* வரை உள்ள வசனங்கள் குறிப்பிடும் பல்வேறு பகுதிகளைக் குறியுங்கள்.
5. பேதுருவின் முதல் திருவுரையை இன்றைய தமிழில் எழுதி, முழக்கமிட்டுப் பேசிக் காட்டுங்கள்.
6. ஒரு கிறிஸ்தவ யூதருக்கும் ஒரு வைதீக யூதருக்கும் இடையே நடைபெறும் உரையாடலைத் தயாரித்துப் பேசுங்கள்.
7. பொருள் கூறுங்கள்: (அ) விண்ணேற்றம் (ஆ) வெள்ளை ஞாயிறு (Whitsun).
8. பரிசேயர்களைப்பற்றியும் சதுசேயர்களைப் பற்றியும் உங்களுக்குக் கிடைக்கும் எல்லாத் தகவல்களையும் சேகரித்து எதனுல், எப்படி, அவர்கள் கிறிஸ்தவர்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்பதை எடுத்துக் கூறுங்கள்.
9. ஆதிக் கிறிஸ்தவர்கள் தங்கள் உடைமைகளை விற்று, தங்கள் பணத்தையும் பொருட்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொண்டதற்கான மூன்று காரணங்களைக் கூறுங்கள்.
10. பேதுரு மக்களிடம் பேசிக்கொண்டிருப்பதுபோல் படம் வரையுங்கள்.
11. எருசலேமிலிருந்த ஒரு யூதராக உங்களைக் கற்பனை செய்துகொண்டு பெந்தெகொஸ்தே நிகழ்ச்சிகள்பற்றி உங்கள் நண்பர்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.
12. நசரேயர்கள் என்பவர்கள் யார்? ஆதித் திருச்சபையின் தொடக்க காலத்தில் புற இனத்தவர்கள் அதில் இல்லாமலிருந்ததற்குக் காரணம் என்ன?

அல்லது

'ஆண்டவரே! எங்கள் உள்ளங்களிலும் மற்றவர்கள் உள்ளங்களிலும் எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ஆவியை அனுப்பும்.' இவ்வாக்கியத்தை முத்து முத்தான எழுத்துக்களில் எழுதி, வகுப்பில் தொங்கவிடுங்கள்.

அத்தியாயம் 3

# பேதுருவும் யோவானும்

*(3; 4; 5; 6:1–7)*


முடவர் நடந்தார்

மற்ற யூதர்களைப்போலவே பேதுருவும் யோவானும் ஒன்பதாம் மணி வேளையில்—அதாவது மாலை மூன்று மணியளவில்—அந்திப் பலிக்காக தேவாலயம் சென்றனர். அவர்கள் கிழக்குப்புறம் உள்ள 'அலங்கார வாச'லின் முன் நின்றுகொண்டிருந்தார்கள். இவ்வாசல் பொன் தகட்டாலும், வெள்ளித் தகட்டாலும் மூடப்பட்டிருந்ததால் இதற்கு 'அலங்கார வாசல்' என்ற பெயர் வந்தது (புத்தகம் 2). இங்கு பிச்சை ஓட்டைக் கையில் ஏந்தியபடி உட்கார்ந்திருந்த ஒரு முடவரைப் பேதுருவும், யோவானும் கண்டார்கள். இவர்களிடமிருந்து ஏதாவது பிச்சைக்காசு கிடைக்கும் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் பேதுரு அவரை நடக்க வைத்துத் திடப்படச் செய்துவிட்டார். இந்த அற்புதச் செயல் 'இயேசுவின் திருப்பெயரால்' நடைபெற்றது என்பதைக் கவனிக்கவும். 'இயேசுவின் திருப்பெயரால்' என்ற தொடரை பேதுருவின் வாயினின்று நாம் அடிக்கடி கேட்கலாம்.

புத்தகங்கள் 2, 3ல் தேவாலய வருணனைச் செய்திகள் நிறைய உண்டு. தேவாலயம் ஒரே கட்டிடமான அமைப்பல்ல. உட்கூடங்களைச்சுற்றி மதில்கள் அமைக்கப்பட்டிருக்கும். மேலே திறந்த வெளியாயிருக்கும். படிக்கட்டுகளில் ஏறி அல்லது சிறப்பு வாசல்கள் வழியாக உள்ளே நுழையவேண்டும் (இப்புத்தகம் பக்கம் 107 பார்க்கவும்). அங்கு தூண்கள் நிறைந்த மண்டபங்கள் உண்டு. இந்த மண்டபங்களிலே இயேசு நிபுணர்களோடு உரையாடியிருக்கிறார். வெளிக்கூடம் வரை புற இனமக்கள் அனுமதிக்கப்பட்டனர். அதற்கு அப்பால் சென்றால் அவர்களுக்கு மரண தண்டனை கிடைக்கும். இங்கிருந்துதான் காசுக்காரர்களையும் வியாபாரிகளையும் ஆடு மாடுகளையும் இயேசு அடித்துத் துரத்தினார். நடுவில் உள்ள கூடத்தில் தேவாலயம் இருந்தது. சிறிய கட்டிடமான இங்குதான் தூய இடமும் அதிதூய இடமும் இருந்தன. இவற்றின் உள்ளே பிரதான ஆசாரியர் மட்டுமே நுழையலாம். பாறை பலிபீடத்தில் பலிகள் செலுத்தப்படும். பலிகள் செலுத்தப்படும் சமயம் தேவாலயப் பாடகர்கள் (லேவியர்) கடவுளுக்குப் புகழும் துதியும் பாடிக்கொண்டிருப்பார்கள்.

தேவாலயத்திற்கு வெளியே சாலொமோன் மண்டபத்தில் நின்றுகொண்டிருந்த பேதுரு, கூடியிருந்த மக்கள் கூட்டத்திடம் அங்கு நிகழ்ந்த அற்புதச் செயலை உடனே இயேசுவோடு இணைத்துப் பேசிக்கொண்டிருந்தார். புற இன மனிதரான பொந்தியு பிலாத்து இயேசுவை விடுதலை பண்ண விழைந்தபோது, அவருடைய சொந்த மக்களாகிய யூதர்கள் அவரைச் சிலுவையில் அறைவதில் தீவிரம் காட்டினர் என்ற செய்தியையும் அவர்களுக்கு நினைவூட்டினார். ஆனால் இயேசு சாவை வென்று எழுந்தார். அவரே அவர்கள் மேசியா. அவர்தான் முடவரைக் குணமாக்க ஆற்றல் அருளியவர் என்று பேசினார்.

சதுசேயர்கள் அனைவருக்கும், குறிப்பாக, பிரதான ஆசாரியர் காய்பாவுக்கும், இது அதிக சங்கடத்தைக் கொடுத்தது. அவர்கள் ஆத்திரங்கொண்டு சீறினர். அவர்கள் நம் பாத உயிர்த்தெழுதலைப்பற்றி இப்போது மீண்டும் அவர்கள் பதில் சொல்லி ஆகவேண்டும். இறந்தோர் யாவரும் உயிர்பெற்று எழப்போகிறார்கள் என்றும், சிறப்பாய் இயேசு உயிர் பெற்றார் என்றும், பேதுரு பேசிய குற்றத்திற்காக அவரையும் யோவா




பிச்சை கேட்ட முடவர்

னையும் சதுசேயர்களின் கட்டளைப்படி காவலர்கள் கைது செய்தனர். மறுநாள் விசாரணை நடைபெறும்வரை இருவரும் காவலறையில் பூட்டிவைக்கப்பட்டனர்.

இவ்வற்புதத்தைக் கண்ணால் கண்டவர்களும் கண்டவர் சொல்ல கேள்விப்பட்டவர்களுமான சுமார் ஐயாயிரம் யூதர்கள் பேதுருவின் கூற்றை ஏற்று, திருமுழுக்குப் பெற்று திருச்சபையில் சேர்ந்தனர். இவர்களில் ஒரு பகுதியினர் சில வாரங்களுக்கு முன் குருத்தோலை ஞாயிறன்று 'ஓசன்னா' என முழங்கியவர்களாய்க்கூட இருக்கலாம். இன்னொரு பகுதியினர் 'சிலுவையில் இவன் அறையப்படவேண்டும்' என்று கூச்சல் போட்டவர்களாயிருந்திருக்கலாம். இப்போது, இந்த இரு சாராரும் உயிர்த்தெழுந்த இயேசுவே அனைவருக்கும் சொந்தமான ஆண்டவர் என்ற கருத்தில் ஒன்றுபட்டு ஒருவரோடொருவர் நட்புறவும் கொள்ளத் தொடங்கினர்.

## சனகரீம் பேரவை முன்னர்

எழுபது பேர்களைக்கொண்ட சனகரீம் பேரவைமுன் பேதுருவும் யோவானும் நின்றனர். இப்பேரவை உரோமப் பேரரசுக்குக் கீழ்ப்பட்டு யூதர்களின் சமய, சமூக நடத்தைகளை விசாரித்துத் தீர்ப்புச் செய்யும் அதிகாரமுடையது. பிரதான ஆசாரியரும் அதில் இருந்தார். சாவுத் தீர்ப்பு எழுதும் அதிகாரம் ஒன்றுதான் இச்சபையினருக்கு இல்லாத அதிகாரம். ஆனால் உரோமப் பேரரசுக்கு அதைச் சிபாரிசு செய்யும் உரிமை இவர்களுக்கு உண்டு. அன்னாவை விலக்கி அவர் மருமகனை காய்பாவைப் பிரதான ஆசாரியராக உரோமப் பேரரசு அமர்த்தியிருந்தது. அப்படியிருந்தும் அன்னாவுக்கு யூதமக்களிடையே நிறைந்த செல்வாக்கிருந்தது. இவர்களெல்லோரும் சேர்ந்துதான் தங்களின் குருவைக் கொன்று விட்டார்கள் என்பது பேதுரு, யோவானின் கருத்து. பேதுருவால் குண



தேவாலயம்

மாக்கப்பட்ட அந்த மனிதர் அவர்கள் பக்கம் சாட்சி சொல்ல அருகே நின்றுகொண்டிருந்தார். பேதுருவுக்கு இப்போது எந்த மனித உதவியும் தேவையில்லை. தம் வழக்கைத் தாமே எடுத்துச்சொல்ல அவரால் முடியும்; தூய ஆவியானவரின் துணையோடு தம் குருவுக்காகவும் அவர் பேசமுடியும். எந்த ஆற்றலைக்கொண்டு, யாருடைய பெயரைக் கொண்டு இம்மனிதரை அவர்கள் குணப்படுத்தினார்கள் என்ற கேள்வி எழுந்தது. ஆற்றல் என்ற பொருள் கொண்ட கிரேக்கச் சொல் ஒரு கண்ணியைப்போல் இங்கு பயன்பட்டது. ‘ஆற்றல்’ என்ற ஒரு பொருளும் ‘மந்திரம்’ என்ற மற்றொரு பொருளும் அச்சொல்லுக்கு உண்டு. மந்திரம் சட்டத்துக்கு எதிரான ஒரு காரியம். இதைப் பேதுரு முன்னறிந்தே, அவர்களால் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டவரும் அதன்பின் உயிரோடு எழுந்தவருமான இயேசுவின் வல்லமையால் அவரைக் குணப்படுத்தியதாகக் கூறினார். அந்த இயேசுவே ‘மூலைக்குத் தலைக்கல்’ என்றார் பேதுரு. இந்த மூலைக்கல் கவனிப்பாரற்றுச் சில காலம் கிடக்கும். வேளை வரும்போது கட்டிடங் கட்டுகிறவர்கள் அதைக் கொண்டுவரச்சொல்லி அதை வைத்து, கட்டிடத்தைக் கட்டி முடிப்பார்கள் *(அப். 4:11; சங். 118:22).*


சனகரீம் பேரவையினருக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. அந்த அற்புத நிகழ்ச்சியை மறுத்துப்பேச அவர்களால் முடியவேயில்லை. அவர்களும் அந்த முடவரைப் பல முறை பார்த்திருந்திருக்கலாம். இப்போது அவர் கால்களை ஊன்றி அவர்கள் எதிரே நடக்கிறார். ஆனால் இயேசுவைப்பற்றிய இந்தப் பேச்சை எப்படியும் தடுத்தாகவேண்டும். படிக்காத பாமரர்களும் மீன்பிடிப்பவர்களுமான பேதுருவும் யோவானும் இன்று பேச்சில் ஆற்றல் படைத்தவர்களாயிருக்கிறார்கள் என்பதைக் கண்டுகொண்டார்கள். இவ்விருவரும் ‘இயேசுவோடு இருந்தவர்கள்’ என்பதையும் நினைவுகூர்ந்தார்கள். இயேசுவோடிருந்ததால் இம்மனிதர்கள் படிக்காதபோதிலும் திறமை உடையவர்களாயிருக்கிறார்கள் என்ற உண்மை இவர்களுக்குத் தெரிய வந்தது.

இப்படி இனி பேசக்கூடாது என்று எச்சரித்து அவர்களை விட்டுவிடுவதுதான் இப்போதுபேரவையினர் செய்யக்கூடும். சனகரீம் பேரவைத் தலைவர் இங்ஙனம் உத்தரவு போட்டால் சீடர்கள் பயந்து அடங்கிவிடுவார்கள் என்று அவர்கள் நம்பியிருக்கலாம். ஆனால் 'நாங்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா, உங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமா?' என்ற பேதுருவின் கேள்வியை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. சனகரீம் பேரவைக்கு அப்போது இது ஒரு தோல்வியாகவே இருந்தது.

### திருச்சபை முறையாக அமைக்கப்பட்டது

பேதுருவும் யோவானும் தங்கள் நண்பர்களிருந்த இடத்திற்குத் திரும்பினார்கள். புதிதாகத் திருச்சபையில் சேர்ந்தவர்கள் தங்கள் உடைமைகளையும் பணத்தையும் கொண்டுவந்தனர். அதைப் பேதுருவும் யோவானும் பொது நிதியாக ஒன்றுசேர்த்து ஒழுங்குபடுத்தி வந்தார்கள். திருச்சபையில் முதன் முதலாகச் சேர்ந்த பணக்காரர்களில் ஒருவர் பர்னபா என்று அழைக்கப்பட்ட யோசேப்பு. 'பர்னபா' என்ற சொல்லுக்கு 'ஆறுதலின் மகன்' அல்லது 'சகாய சீலன்' என்று அர்த்தம். இவர் சீப்புரு தீவிலிருந்து வந்த ஒரு கிரேக்க யூதர்; ஆதித் திருச்சபையின் வளர்ச்சியில் இவருக்குப் பெரும் பங்குண்டு.

இதற்கு நேர்மாறாக அனனியா, சப்பீராள் செய்தி இருக்கிறது. கிறிஸ்தவர்கள் தங்கள் உடைமைகளை எல்லாம் பகிர்ந்து கொள்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன் இவர்களும் தங்கள் பங்கைக் கொண்டுவந்து கொடுப்பதுபோல் நடித்து, தங்கள் நண்பர்களை ஏமாற்றி வந்தார்கள். அதே சமயம் 'கொடைக் குணத்'திற்கான பாராட்டையும் பெற்றுக்கொண்டார்கள். இப்படி இவர்கள் கடவுளையும்நண்பர்களையும் ஏமாற்றி நாணயமற்றுக் கீழ்த்தரமாக நடந்துகொண்டார்



சனகரீம் பேரவை

கள். இவர்களுக்கு நடந்ததைக்குறித்து எழுதும்போது கடவுளை ஏமாற்றியதால் அவர்கள் உடனே செத்து விழுந்தார்கள் என்று லூக்கா எழுதுகிறுர். சிலர் இந்தவிளக்கத்தை ஏற்றுக்கொள்கிறுர்கள். மற்றும் சிலர் இவர்கள் செய்த மாய்மாலம் கண்டு பிடிக்கப்பட்ட அதிர்ச்சியில் அனனியா இறந்துபட்டான் என்கிருர்கள். இவ்வாறு தாங்கள் ஏமாற்றியது கண்டுபிடிக்கப்பட்டதும் கணவன் மரணம் அடைந்த நிகழ்ச்சியும் சேர்ந்து சப்பீராளுக்கு இரட்டையடியாக விழவே அவளும் செத்தாள். இப்படிப்பட்ட சம்பவங்கள் பற்றி நாமும் கேள்விப்பட்டிருக்கிறேம்.

## மீண்டும் சனகரீம் பேரவை கூடிற்று

சனகரீம் பேரவை மீண்டும் கூடி இவர்கள் மேல் நடவடிக்கை எடுத்தது. பேதுருவும் யோவானும் பேரவையினர் கொடுத்த எச்சரிக்கையை அவமதித்தார்கள். எனவே இம்முறை அவர்கள் சிறையில் தள்ளப்பட்டனர். மறுநாட்காலே சிறை அறை வெறுமையாயிருக்கக் கண்டு திகைப்படைந்த சிறைக் காவலர் ஓடிவந்து, பீதியடைந்த பேரவையினரிடம் நிகழ்ந்ததைச் சொன்ஞர். சற்று நேரத்திற்குப்பின் மற்ருெரு செய்தி வந்தது. அதோ, அந்த மனிதர்கள் தேவாலயத்தின் மண்டபங்களில் நின்று திருவுரையாற்றிக் கொண்டிருக்கிருர்கள்! தற்பெருமையுள்ள பேரவையினருக்கு இது நம்பமுடியாத செய்தியாயிருந்தது. பேதுருவும் யோவானும் மீண்டும் அவையினர் முன் அழைத்து வரப்பட்டனர். எவ்வித கெடுபிடியும் சந்தடியும் இன்றி அவர்களைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்ஞர்கள். கூட்டம் கூடிவிடக் கூடாதே என்ற அச்சம் அவர்களுக்கிருந்தது. காய்பா பேதுருவின் மேலும் யோவானின் மேலும் குற்றம் சாட்டிஞர். தேவாலயக் குருக்களைப் பழிவாங்கும் நோக்கத்தோடு இயேசு இறந்ததைப்பற்றிப் பேசி மக்களைத் தூண்டி கலகம் விளைவிக்க முயற்சி செய்வதாக அவர்களைக் குற்றப்படுத்திஞர். என்ன குற்றம் சாட்டிஞலும் சீடர்கள் ஒரே பதிலைச் சொன்ஞர்கள்: ‘மனிதர்களுக்கல்ல, கடவுளுக்கே கீழ்ப்படிவோம்’ என்றனர். அன்று சனகரீம் பேரவையினர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தனர். அவரோ உயிரோடெழுந்து விட்டார். அவருடைய வாழ்க்கைக்கும் திருப்பணிக்கும் சீடர்கள் சாட்சி. அவரே தூய ஆவியானவரின் பேராற்றலையும் இப்போது அவர்களுக்கு வழங்கியிருக்கிருர்.

பேரவையினர் உள்ளத்தில் கொதிப்படைந்தனர். இயேசுவைக் கொன்றதற்கு மக்கள் தங்களைப் பழி தீர்த்துவிடுவார்களோ என்ற அச்சம் வேறு அவர்களை வாட்டியது. எனவே பேதுருவையும், யோவானையும் ஒழித்துக் கட்டிவிடத் திட்டமிட்டனர். இவர்கள் பேச்சைத் தடுத்துநிறுத்த இது ஒன்றே வழி என்ற முடிவுக்கு வந்தனர். கமாலியேல் என்ற ஒருவர் பேரவையில் இருந்தார். இவருக்கு அவையில் நல்ல மதிப்பு. திருச்சட்டத்தைக் கரைகண்ட பரிசேயர் இவர். பேதுருவும் யோவானும் அவையைவிட்டு வெளியே சென்ற பிறகு அவசரப்பட்டு எதையும் செய்துவிடவேண்டாம் என்று பேரவை உறுப்பினர்களைக் கமாலியேல் எச்சரித்தார். கள்ளத் தீர்க்கர்கள் எத்தனையோ பேர் புல்லுருவிகளைப்போல் வந்தனர். வந்த வண்ணமே போய்விட்டனர். இந்தச் சீடர்களும் பொய்யானவைகளைப் பேசித் திரிவார்களாஞல் இவர்களும் தோல்வியடைந்து விடுவார்கள். ஆனுல் கடவுளால் இவர்கள் இயக்கப்பட்டு வருவார்களாஞல் இவர்களை சனகரீம் சபைகூட தடுத்து நிறுத்த முடியாது. ‘கடவுளுக்கு எதிராக எவரும் போர்செய்ய இயலுமோ?’ என்று கேட்டார் அந்த மேதை.

எனவே, பேதுருவையும், யோவானையும் நையப்புடைத்து இனி இயேசுவைப்பற்றி வாய் திறக்கக்கூடாது என்று எச்சரித்து விட்டுவிட்டனர். ஆனுல் அவர்களோ உடனே தேவாலயத்திற்குச் சென்று சிறிதும் அச்சமின்றி தங்கள் வேலையைத் தொடர்ந்தனர் (மத். 5:10). சதுசேயர்களுக்குத் தங்கள் செயல்களோ சீடர்களின் பேச்சோ குழப்பத்திற்கும் கொந்தளிப்பிற்கும் இடம் கொடுத்துவிடக்கூடாது என்று இன்னெரு வகையான அச்சமும் இருந்தது. உரோமப் பேரரசுக்குக் கோபமூட்டிவிட்டால் பிறகு அவர்கள் தலையிட்டுக் கடுமையாகக் காரியங்களைச் செய்வார்கள். அதஞல் தங்கள் செல்வத்திற்கும் சுகபோக வாழ்வுக்கும் அழிவு வந்துவிடும் என்று பயந்தார்கள். அரசுக்குத் துரோகமிழைத்ததாக சீடர்கள்மேல் ஏதாவது அரசியல் குற்றம் சாட்டிஞல்தான் இவர்களைக் கொல்ல உரோம ஆட்சியாளர்கள் எளிதில் இசைவு தெரிவிப்பார்கள் என்று நினைத்தார்கள். பரிசேயர்களும் வேத அறிஞர்களும் இது குறித்து அவ்வளவாய்க் கலவரமடையவில்லை. இவர்கள் இறந்தோர் உயிர் மீண்டெழுவர் என்று நம்பிஞர்கள். உரோம ஆட்சியாளருடையவெறுப்புக்குள்ளாவதைக் குறித்து இவர்கள் அவ்வளவாய்க் கவலைப்படவில்லை. திருச்சட்டத்தைக் குறித்தும் மரபைக் குறித்துமே இவர்களுக்கு அதிக


கவலை. இயேசு இவைகளைத் தாக்கிப்பேசி இருக்கிறார். ஆனால் சீடர்கள் இதுவரை இவைகளைக் குறித்து எந்த வினாவையும் எழுப்பவில்லை. சீடர்களும் இவர்களைப் போலவே மேசியாவில் நம்பிக்கை வைத்திருந் தனர். ஆனால் இப்போது ஒரு வேறுபாடு இருந்தது. பரிசேயரும் வேத அறிஞர்களும் இயேசுவை மேசியாவாக எண்ணி அவர்மேல் நம்பிக்கை வைக்கவில்லை.

### சபையைக் கண்காணிக்க எழுவர் குழு

புதிய சபையாகக் கூடி வாழத் தொடங் கிய மக்களிடையே சில பிரச்சினைகள் தோன் றின. பொருட்களைப் பங்கீடு செய்யும்போது பலஸ்தீன யூதக் கிறிஸ்தவர்கள், கிரேக்க மொழி பேசும் யூதக் கிறிஸ்தவர்களைப் பார பட்சமாய் நடத்தி, ஹெலனிய யூத விதவை களைச் சரிவரக் கவனிக்கவில்லை என்று குறை சொல்லப்பட்டது. பேதுருவும் யோவானும் சாப்பாட்டு விஷயங்களைக் கவனிப்பதை விட்டுவிட்டு நற்செய்தி கூறும் பணியை மட்டுமே செய்யப்போவதாக அறிவித்தனர். ஹெலனிய யூதர்கள் எழுவரைக்கொண்ட குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும், இவர்களே நிருவாகக் காரியங்களைக் கவனிக் கும் உதவியாளர்களாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. உயர்ந்த இலட்சியங்களும்சிறந்த திறமைகளும் உடைய வர்களைக்கொண்டு இக்குழு அமைக்கப்பட வேண்டும். இவர்கள் தூய ஆவியைப் பெற்றி ருக்கவேண்டும்; தேவையான சமயங்களில் திருவுரையாற்றவும் போதிக்கவும் ஆற்றல் படைத்திருக்கவேண்டும் (உபா. 34:9 பார்க் கவும்). ஸ்தேவானும் பிலிப்புவும் (சீடராக இருந்த பிலிப்பு அல்ல இவர்) இந்தக் குழுவில் இருந்தனர். ஏழு என்பது யூதர்களுக்குப் புனித எண். (ஏழு கிளைகளைக் கொண்ட தாகக் குத்துவிளக்கு இருந்ததை இதற்குச் சான்றாகக் கூறலாம்.)

திருச்சபை நிருவாகம் சில காலம் நன்றாக நடந்தது. பேதுருவும் யோவானும் வெற்றி கரமாக நற்செய்தியை அறிவித்து வந்த னர். தேவாலயக் குருக்கள் பலரைக்கூடத் தங்கள் பக்கம் இழுத்து விட்டனர்! (அப். 6:7; யோ. 12:42,43.)

*    *



ஏழு கிளைகளைக் கொண்ட குத்துவிளக்கு

### விளக்கப் பயிற்சி

1. முடவரை நடக்கப்பண்ணிய நிகழ்ச்சியை (அ) அம்முடவர் (ஆ) அங்கு நின்று கொண்டிருந்த ஒருவர் (இ) சனகரீம் பேரவை உறுப்பினர் ஒருவர் கூறும் பாவனையில் கூறுங்கள்.

2. தேவாலயத்தைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் உங்களால் முடிந்தவரை சேகரித்துக்கொள்ளுங்கள். (இவ்வரிசை யில் 1—4 வரை உள்ள புத்தகங்கள் நான் கினையும் ஏ. சி. கிலேட்டனின் வேத அகராதியையும் இதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.) உங்கள் வகுப்பில் நீங்கள் உரையாற்றுவதற்கான பேச்சை யும் தயாரித்துக்கொள்ளுங்கள். படங் கள், வரைபடங்கள் போட்டு நீங்கள் பேசவேண்டியதை விளக்குங்கள்.

3. பேதுருவும் யோவானும் சனகரீம் பேரவைமுன் முதன் முறையாக இழுத்து வரப்பட்டதை நாடகமாக நடித்துக் காட்டுங்கள்.

4. சனகரீம் பேரவையினர் 'தற்காலிகமாக' எவ்விதம் தோல்வி கண்டனர்?

5. சிறைக் காவலரில் ஒருவராகக் கற்பனை செய்துகொண்டு சனகரீம் பேரவையின ரிடம் ஓடி, சீடர்கள் தப்பி ஓடிவிட்டார் கள் என்ற செய்தியைக் கூறுங்கள்.

6. அப்போஸ்தலர் **5:12—42** வசனங்களை நாடகப் பாடமாகத் தயாரித்துப் படியுங் கள். கதை சொல்லுகிறவரும் மற்றும் பல நாடகப் பாத்திரங்களும் இதற்குத் தேவைப்படும். காலைக் கூட்டத்தில் இதைச் செய்து பாருங்கள். (கேள்வி 11ஐப் பார்க்க.)

7. பின்வரும் காட்சிகளைக்கொண்டு ஒரு நாடகத்தைத் தயாரித்து நடத்திக் காட்டுங்கள்:

(i) பேதுருவையும் யோவானையும் விசாரிக்க சனகரீம் பேரவை கூடுகிறது. (ii) சீடர் கள் சிறையிலிருந்து தப்பிவிட்ட செய்தி கூறப்படுகிறது. (5:24ம் வசனத்தைக் கவனியுங்கள்.) (iii) பேதுருவின் பேரி லும் யோவானின் பேரிலும் குற்றம் சாட்டப்படுகின்றது. (iv) அவர்கள் விடு தலை செய்யப்படுகின்றனர்.


8. பேதுருவின்மேலும் யோவானின்மேலும் சதுசேயர்கள் கண்வைக்கக் காரணம் என்ன?

9. 1 பேதுரு 2:21—25 வசனங்களை மனப் பாடம் செய்யுங்கள். 17ம் வசனத்தை அழகாக எழுதுங்கள்.

10. பிலிப்பு தம் குமாரத்திகளிடம், சபையில் எழுவரை நிருவாகிகளாக (டீக்கன்க ளாக) ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றும் அதில் தாமும் ஒருவர் என்றும் விளக்குவ தாகக் கற்பனை செய்து பேசுங்கள்.

11. 'கடவுள் பணி' என்ற பொருளில் காலை ஆராதனை தயார் செய்யுங்கள். பாட்டு, ஜெபம், வேத வாசிப்பு எல்லாம் தெரிந் தெடுத்துக் கொள்ளுங்கள். (கேள்வி 6ஐப் பார்க்கவும்.)

12. கமாலியேலைப் பேட்டி காணுங்கள்.



ஒரு ஜெப ஆலயம்

அத்தியாயம் 4

# ஸ்தேவான், சவுல், பிலிப்பு

*(6:8–15; 7; 8)*

சிலிசியாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் இருந்து வந்த சில ஹெலனிய யூதர்கள் எருசலேமில் வாழ்ந்துவந்தனர். இவர்களுடைய ஜெப ஆலயத்திற்கும், வட ஆப்பிரிக்காவில் இருந்துவந்த யூதர்களுடைய ஜெப ஆலயத்திற்கும் ஸ்தேவான் போயிருந்தார் என்பது தெளிவாகிறது. (லிபர்த்தீனர் என்ற சொல்லுக்கு 'விடுதலை பெற்ற மக்கள்' என்று பொருள் இருந்திருக்கலாம். மற்ற அங்கத்தினர்களைப்போல் லிபியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் இதற்கு வேறொரு பொருள் இருக்கக்கூடும்.)

சிறந்த அறிவோடும் ஆற்றலோடும் உரையாடிய ஸ்தேவானோடு ஜெப ஆலயத்திலுள்ளவர்கள் தர்க்கித்துப் பேசினார்கள். அவர் நல்ல அறிவாளியாயிருந்ததோடு இயேசுவின்மேல் அதிக நம்பிக்கையும் வைத்திருந்தார். நோய்களைக் குணமாக்கும் வரமும் பெற்றிருந்தார். அவருடைய குழுவைச் சேர்ந்த யூதர்களும் யூதத் திருச்சட்டத்தை ஒழுங்காகப் பின்பற்றி வரும் பரிசேயர்களும் இயேசுவைக் குறித்து அவரோடு எவ்வளவோ தர்க்கித்துப் பேசியும் அவர்களால் அவரை மேற்கொள்ள முடியவில்லை. அவர்களைவிட அவரிடம் பரந்த மனப்பான்மை காணப்பட்டது. எருசலேமிலும் யூதேயாவிலும் இருந்த யூதர்கள் எப்பொழுதுமே பிடிவாதமான சமயவாதிகளாயிருந்தார்கள். ஆனால், ஹெலனிய யூதர்கள் அப்படியல்ல. புதிய சமய நம்பிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ள முன்வந்தனர்.

புதிய சமயத்திற்கும் யூத சமயத்திற்குமிடையே பிளவு உண்டாக்கும் வகையில் ஸ்தேவானுடைய வாதங்கள் அமைந்திருந்தன. ஆண்டுகள் செல்லச் செல்ல இப்பிளவு அதிகமாகிப் புதுச்சமயம் தனித்தியங்கும் அளவுக்கு அதிகமாகிவிட்டது. எனவே, ஸ்தேவானுடைய பகைவர்கள் பொறாமையும் ஆத்திரமும் கொண்டனர். யூத வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமானால் முதலில் பொறாமை ஏற்படும், அதை அடுத்துக் கொலை செய்யத் திட்டம் தீட்டப்படும். அதே வண்ணம் பொய்ச்சான்று கூறுபவர்களுக்கு லஞ்சம் கொடுத்து 'இதோ இறைபழிப்புச் செய்துவிட்டான்' என்று ஸ்தேவான்மீது அவர்களைக் குற்றம் சாட்ட வைத்தனர். இக்குற்றம் புரிந்தவர்களுக்குரிய தண்டனை என்ன தெரியுமா? அப்படிப்பட்டவர்கள் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும் (லேவி. 24:16). இப்புதிய சமயத்திற்கு எதிராக சதுசேயரோடு பரிசேயரும் அணிவகுத்து நின்றனர். இயேசுவைக் கொலை செய்யும் போது இப்படி ஒரு கூட்டணி உருவாகியிருந்ததை நாம் அறிவோம்.


### ஸ்தேவான் பதில் கூறினர்

சிறிது காலத்திற்கு முன் சனகரீம் அவையினருக்கு முன் குற்றவாளிக் கூண்டிலே பேதுரு நின்ற அதே இடத்தில் இப்போது ஸ்தேவான் நிற்கிறார். அவையினர் பெரிய அரைவட்ட வடிவில் அமர்ந்திருக்கிறார்கள். நடுவில் பிரதான ஆசாரியர் உட்கார்ந்திருக்கிறார். இரு முனையிலும் இரு வேத அறிஞர்கள் உட்கார்ந்து ஒருவர் குற்றவாளியின் சார்பிலும் அடுத்தவர் குற்றவாளிக்கு எதிராகவும் சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர். முன்னால் உள்ள நீண்ட இருக்கைகளில் இளம் வேத அறிஞர்களும், திருச்சட்டம் பயிலும் மாணக்கர்களும் உட்கார்ந்திருக்கின்றனர். ஒருவேளை

சவுலும் இங்கே இருந்திருக்கலாம். குற்ற வாளிகளில் பலர் இக்கூண்டிலே ஏறியவுடன் பயத்தால் நடுங்கி மயங்கி விழுவதுண்டு. அன்று பேதுருவும் அஞ்சவில்லை; இன்று ஸ்தேவானும் அஞ்சாநெஞ்சராய் நிற்கிறார். ஸ்தேவானுடைய முகம் 'ஒரு தேவதூதன் முகம்போல்' ஒளிமயமாக இருந்ததை நீதி பதிகள் கண்டார்கள். விண்ணின் தூதர்கள் என்பதெல்லாம் பொய் என்கிற சதுசேயர் கூட அன்று ஸ்தேவானின் முகங்கண்டு வியப் படைந்தனர்.

மோசேயின் திருச்சட்டத்திற்குக் கொடுக் கப்பட்டிருந்த இடம் இனி இயேசுவின் புதிய திருச்சட்டத்திற்கே கொடுக்கப்பட விருக்கிறது என தாம் நம்புவதாக ஸ்தேவான் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்தார். யூத வரலாற்றின் தொடக்கத்திலிருந்து முதல் தேவாலயம் கட்டப்பட்ட சாலொமோன் காலம் வரை உள்ள எல்லாச் செய்தி களையும் சொல்லிவந்தார். இதுவரை அவர் பேச்சை எல்லாரும் ஆவலோடு கவனித்துக் கேட்டார்கள். ஆனால், அந்த வரலாற்றோடு ஸ்தேவான் ஒரு புதிய கருத்தைக் கலந்து பேசத்தொடங்கினார். திருச்சட்டமும் நாடும் தேவாலயமும் தனி முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. இவற்றிலும் சிறந்த வைகள் உண்டு; அவை முதலிடம் பெற வேண்டும்; கையினால் கட்டப்பட்ட தேவா லயம் கடவுளுக்குத் தேவையில்லை; இறைவன் எங்குமிருக்கிறார் என்று முழங்கினார். இது சனகரீம் அவையினரின் பார்வையில் இறை பழிப்புப் பேச்சாக இருந்தது. அவர்களின் புனிதமான தேவாலயத்தைத் தாக்கிப் பேசி விட்டார் ஸ்தேவான். எனவே, அவர்கள் கோபமடைந்து அமைதி இழந்தார்கள். ஸ்தேவான் இன்னமும் வரலாற்றுச் சான்று காட்டி, பேசிக்கொண்டே போனார். நீதிபர ரான மேசியாவின் வருகை குறித்துப் பேசிய தீர்க்கர்களைப் பழங்கால யூதர்கள் சித்திர வதை செய்து கொன்ற குற்றத்தை அவர் எடுத்தியம்பினார். அந்த மேசியா வந்து விட்டார்; இந்த சனகரீம் பேரவையினர், தங்கள் முன்னோர்களின் அடிச்சுவட்டில் நின்று, அந்த மேசியாவையே கொன்று தீர்த்துவிட்டனர்; அவரை வேண்டாமெனத் தள்ளிக் கொன்றதோடு அவருடைய தூய ஆவிக்கும் எதிர்த்துநிற்கிறார்கள். இப்பேர வையினர் தங்கள் கடமைகளையும் பொறுப்பு களையும் சரிவர நிறைவேற்றத் தவறி விட்டனர். பழைய இஸ்ரவேலின், அதாவது யூத சமயத்தின் காலம் முடிகிறது. புதிய இஸ்ரவேலின், அதாவது கிறிஸ்தவ சமயத் தின் காலம் தொடங்குகிறது என்று பேசி முடித்தார்.

ஸ்தேவான் தமது ஆற்றல் மிக்க வார்த்தைகளைக் கருவியாகக்கொண்டு, தமது உபதேசத்தால் ஏற்கெனவே, பழைய யூத சமயத்திற்கும், புதிய சமயத்திற் கும் இடையில் ஏற்பட்டிருந்த பிளவை, இன்னும் அதிகப்படுத்தினர். பேரவையினர்



ஸ்தேவான் மேல் கல்லெறிந்தனர்

மூர்க்கம் அடைந்தனர். மீண்டும் கொதித்துக் குமுறி ஸ்தேவானைப் பார்த்து விலங்குகளைப்போல் 'பல்லைக் கடித்தார்கள்'. ஸ்தேவான் இவர்களைப் பார்க்கவில்லை. அவர் இயேசுவின் திருக்கோலத்தைக் கண்டுகொண்டிருப்பதுபோல் இருந்தது. இப்படி அவர் கண்டதாகச் சொல்லியவுடன் நீதிபதிகள் வெறிகொண்டு எழுந்து, நகரத்தின் வாசல்களுக்கு அப்பால் 'கல்லெறியும் இடமான' பள்ளத்தாக்குக்கு அவரை இழுத்துச் சென்றனர் (1 இரா. 21:13). அங்கு அவரைக் கல்லெறிந்து கொன்றனர். சான்று பகர்ந்தவர்களே முதல் கல்லைப் போடவேண்டும்; அந்தப் பொய்யர்கள் கூரிய கற்களை எடுத்து அவர்மேல் எறிந்தனர் (உபா. 17:7). கூட்டத்தினர் நினைத்தால் எதையும் செய்யலாம் என்பது அவர்கள் வகுத்துக்கொண்ட சட்டம். இந்தத் தடவை உரோமப் படையினர் தலையிடத் தாமதித்துவிட்டனர்.

சாகுந்தறுவாயில் ஸ்தேவான் 'ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்' என்று இறைவனிடம் மன்றாடிய மன்றாட்டு அவருடைய குருநாதரின் மன்றாட்டை ஒத்திருந்தது (லூா. 23:34). இவ்வண்ணம் கி.பி. 32ம் ஆண்டு கிறிஸ்தவத்தின் முதல் இரத்தசாட்சியாக நித்திரை அடைந்தார் ஸ்தேவான்.

கல்லெறிபவர்களின் மேலாடைகளைப் பத்திரமாகப் பார்த்துக்கொண்டு இருந்தார் தர்சு பட்டணத்து சவுல். கல்லெறிவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்களில் இவரும் ஒருவர். எனவே கல்லெறிந்தவர்கள் செய்த கொலைக் குற்றத்தில் இவருக்கும் பங்கு உண்டு எனலாம். ஸ்தேவான் கல்லெறியப் படவேண்டும்; இது நியாயம்தான் என்று இவர் அப்போது மனதார எண்ணிக்கொண்டிருந்தார். இன்னுங் கொஞ்ச காலத்தில் 'இக்கொடு நிகழ்ச்சியை என்னால் மறக்கவே முடியவில்லை' என அவரே பேச வேண்டியதிருக்கும் என்று அப்போது அவர் கொஞ்சமும் நினைத்திருக்கமாட்டார். ஸ்தேவான் செய்த நற்பணியில் தொடர்ந்து பங்கேற்று யூத சமயத்திற்கும் புதிய சமயத்திற்கும் உள்ள பிளவைப் பெரிதாக்கி, யூத சமயத்திற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு புதிய சமயம் உருவாக சவுலாகிய தாம் காரணமாயிருக்கப் போகிறார் என்று அவர் அப்போது கனவிலும் நினைத்திருக்கமாட்டார். தூய அகஸ்தின் பெரியார் குறிப்பிட்டதுபோல் 'ஸ்தேவானின் விண்ணப்பமே நமக்கு பவுலைத் தந்தது'.

## தர்சு பட்டணத்து சவுல்

இப்புத்தகத்தின் நிகழ்ச்சிகளின் தலைவராக விளங்கப் போகிறவரை இப்போது நாம் சந்தித்துவிட்டோம். இனி இவரைப்பற்றி சிறிது விளக்கமாகக் காண்போம். அப்போது தான் சில நிகழ்ச்சிகளைக் குறித்து சவுல் எப்படி, ஏன் அவ்விதம் உணர்ந்தார்? அந்த உணர்வைத் தொடர்ந்து எவ்விதம் செயலில் இறங்கினார்? என்பது போன்ற கேள்விகளுக்கு நாம் விடைகாண முடியும். சவுல் ஓர் இளைஞர் என்று லூக்கா குறிப்பிடுகிறார். ஆகவே, அவருக்கு முப்பது வயதிருக்கலாம். சிலிசியாவிலுள்ள ஒரு முக்கிய பட்டணம் தர்சு (42ம் பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள்). அங்குதான் சவுல் பிறந்தார். சித்னஸ் நதி ஓரத்தில் கடற்கரையிலிருந்து சில கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பட்டணம் இது. பல வருடங்களுக்கு முன் கி.மு. 41ல் எகிப்து நாட்டின் புகழ்பெற்ற அரசி கிளியோபாத்ரா தங்கப் படகேறி இந்த நதியின் வழியாகத் தான் மார்கு அந்தோனியைச் சந்திக்க வந்தாளாம். இதுபற்றி சவுலின் தந்தை அவருக்கு ஒருகால் சொல்லியிருக்கலாம். கி.மு. 175 முதல் 164 வரை ஆட்சி செய்த அந்தியோகு எப்பிபானஸ் அரசர் காலத்தில் இப்பட்டணம் ஒரு கிரேக்க தலைநகராயிருந்தது (புத்தகம் 2). இங்கு யூதர்கள் அதிக அளவில் வசித்துவந்தார்கள். கி.மு. 64ல் பாம்ப்பே என்ற உரோம வெற்றிவீரர் படையெடுத்துப் பிடித்து இதை உரோமரின் குடியிருப்பு ஆக்கிவிட்டார். அங்கு வசித்தவர்களுக்கு அவர் உரோமக் குடி உரிமையும் வழங்கினார். சவுலின் தந்தையும் இந்த உரிமையை எப்படியோ பெற்றிருந்தார். அதை அவர் விலைகொடுத்து வாங்கியிருக்கலாம் அல்லது உரோம ஆட்சியாளருக்குச் செய்த ஒப்பற்ற சேவை காரணமாகவும் அதைப் பெற்றிருக்கலாம். வழிவழியாக இந்த உரிமை சவுலுக்கு வந்தது (அப். 22:25–28).

## தர்சு பட்டணம்


கல்விக்குப் பெயர்போன பட்டணம் தர்சு. அத்தேனே, அலெக்சாந்திரியா, அந்தியோகியா என்னும் இடங்களில் இருந்ததற்கு நிகரான பல்கலைக் கழகம் அங்கிருந்தது. பல்வேறு கல்லூரிகளையும் பெரிய கட்டிடங்களையும் கொண்டதுமான பல்கலைக்கழகங்களை இன்று நாம் அறிவோம். தர்சுவில் உள்ள 'பல்

கலைக்கழகம்' அதுபோல் இருக்கவில்லை. மேதைகள், புலவர்கள், தத்துவ ஞானிகள், பேராசிரியர்கள் இப்படிப் பல்வேறு புலமை படைத்தவர்கள் அங்கு தங்கியிருந்து தங்கள் மாணாக்கர்களுக்குக் கல்வியளித்து வந்தனர். மாணவர்களோடு விவாதித்தும், அவர்களுக்குப் போதித்தும், அவர்களைப் பயிற்றுவித்தும் அங்கே கல்வி கற்பிக்கப்பட்டது. ஸ்தோயிக்கர் என்னும் தத்துவ ஞானிகள் பலர் அங்கிருந்தனர். பிற்காலத்தில் அத்தேனே பட்டணத்தில் ஒருமுறை ஸ்தோயிக்கர்களோடு பவுல் உரையாட நேர்ந்ததைக் காண்கிறோம் (அப். 17:18).

பட்டணத்தைச் சுற்றி வடக்குப் பகுதியிலுள்ள மலையடிவாரத்தில் இருந்த குன்றுகள் மேல் பைன் மரக்காடுகள் நிறைந்திருந்தன. உரோம கப்பல்களுக்கும் கட்டிடங்களுக்கும் தேவைப்பட்ட மரங்களை தர்சு பட்டணமே கொடுத்து வந்தது எனலாம். இவ்வாறு மர வியாபாரத்திற்கும் தர்சு பெயர் பெற்றிருந்தது. பட்டணத்திற்கு வடக்கே தாரஸ் மலைத் தொடர் உயர்ந்து நின்றது. உயர்ந்த மலைகளுக்கும் பயங்கரமான செங்குத்துப் பாறைகளுக்கும் ஊடாக 'சிலிசியாவின் வாயில்' என்று அழைக்கப்படும் கணவாய் ஒன்றிருந்தது. இந்த இடத்தில் புலிகளும் கரடிகளும் ஓநாய்களும் பதுங்கியிருந்தன. கொள்ளைக் கூட்டத்தினரும், திருட்டுக் கும்பலைச் சேர்ந்தவர்களும் இங்கு ஒளிந்து வாழ்ந்து வந்தனர். இக் கணவாய் சரித்திரப் பெருமை படைத்தது. கி.மு. 333ல் மாவீரர் அலெக்சாந்தர் இக்கணவாயைக் கடந்து சென்றிருக்கிறார். வடக்கேயிருந்த சின்ன ஆசியா பீடபூமியிலிருந்து ஒட்டகங்களில் வரும் வணிகர்களுக்கு இதுவே பாதை. சீனத்துப் பட்டும், இந்தியாவின் தந்தமும், பெரிசியாவின் கம்பளமும் வாசனைப் பொருட்களும், சீரியாவின் பாண்டங்களும், கலிலேயாவின் மீன்களும், தமஸ்குவின் பழங்களும் இக்கணவாய் வழியாகவே வந்தன. இவை தர்சு சந்தைக்குக் கடல் வழியாக வந்திறங்கும் எகிப்தின் தானியம், இத்தாலியப் பளிங்கு, சீதோனியக் கண்ணாடி, சீப்புரு தீவின் செம்பு, யோப்பா பட்டினத்துக் கேதுரு மரங்கள், டஸ்கனியாவின் பாண்டங்கள் முதலியவற்றுக்குப் பண்டமாற்றுச் செய்யப்பட்டன. தர்சு பட்டணத்தில் உற்பத்தியாகும் பொருட்களும்கூட அச்சந்தையில் விற்பனைக்கு வரும். கரிய முரட்டு உரோமத்திற்கென்று மலைச்சரிவுகளில் வெள்ளாடுகளை வளர்த்து வந்தார்கள். கூடாரங்கள், கப்பற் பாய்கள், கோணிகள், மூட்டை கட்டும் துணிகள் போன்றவை இந்த உரோமத்தில் நெய்யப்பட்டன. காற்றுக்கும் குளிருக்கும் பாதுகாப்பான உறுதியான மேல் அங்கிகளையும் சட்டைகளையும் உற்பத்தி செய்வதற்கும் இந்த உரோமத்தை மக்கள் பயன்படுத்துவார்கள் (2 தீமோ. 4:13).

## சவுலின் வளர்ப்பு

இளவயதில் இயேசு சந்தைகளிலும் தெருக்களிலும் உள்ள மக்களை நன்கு கவனித்து அறிந்து வந்ததுபோல் சவுலும் (பவுலின் யூதப் பெயர் இது) தம் இளம்பிராயத்தை மக்கள் மத்தியில் கழித்து வந்தார். துறைமுகங்களில் சரக்கேற்றும் இடங்களிலும் பண்டகசாலைகளிலும் வெயில், மழை, காற்றில் அடிபட்டு வரும் செம்படவர்களோடும், மரக்கட்டைகளை அடுக்கும் வெயில் காய்ப்பேறிய கூலியாட்களோடும், செம்பட்டை நிறமான எகிப்தியக் கப்பலாட்களோடும், வளைந்த மூக்குடைய பெனிக்கேயர்களோடும், வெளிறிய பழுப்பு நிற இத்தாலியர்களோடும், கருகலான ஸ்பெயின் நாட்டவரோடும் பேசி சவுலுக்கு நல்ல பழக்கமுண்டு. கடற்பயணத்துக் கதைகளையும் காட்டுவழிக் கதைகளையும் அவர்களிடமிருந்து கேட்டிருக்கிறார். துறைமுகப் பகுதிகளில் பயணம் செய்திருக்கிறார்; பைன் மரக்காடுகளில் அலைந்து திரிந்திருக்கிறார். இந்த




சிலிசியாவின் வாயில்


இடங்களுக்கு வரும் வியாபாரிகள் பேசும் பேச்சுகளையும் அவர்கள் பரப்பிய வதந்திகளையும் நன்கு கவனித்துக் கேட்டிருக்கிறார். தங்கள் தாய்மொழிகளோடு கிரேக்க சொற்களைக் கலந்து பேசும் வியாபாரப் பேச்சுகளை அவர்கள் தங்களுக்கே உரிய பாணியில் பேசுவார்கள்; சவுலும் அப்பேச்சுகளைக் கற்றுக் கொண்டிருந்தார். ஆமோசையும், இயேசுவையும் போல் அங்கு நடைபெற்று வந்த ஏமாற்று வேலைகளையும் பொய் பித்தலாட்டங்களையும் ஏனென்று தெரியாமலே அவர் நன்கு கவனித்திருக்கிறார். யார் நாணயக்காரன், யார் எத்தன் என்ற வேறுபாட்டை அவர் அறிந்து வைத்திருந்தார். இந்த அறிவு எந்த அளவுக்கு பிற்காலத்தில் பயன்படப் போகிறது என்று ஆமோசுக்கோ, இயேசுவுக்கோ, சவுலுக்கோ அந்த இளமைப் பருவத்தில் தெரிந்திருந்ததோ என்னவோ!

தர்சு பட்டணத்தில் கிரேக்க உடற்பயிற்சிக் கழகத் திடல் ஒன்று இருந்தது. அங்கு போட்டியிடுகிறவர்கள் ஓடுவதையும் மல் யுத்தம் செய்வதையும் மற்றும் பல்வேறு விளையாட்டுகள் விளையாடுவதையும் அவர் நன்றாகக் கவனித்திருந்தார் (எபே. 6:12; 1 கொ. 9:24–27). தம்முடைய கடைசி நாட்களில் தம் வாழ்க்கைபற்றி அவர் வருணித்த போது 'நல்ல போராட்டத்தைப் போராடினேன்' என்றும், 'ஓட்டத்தை முடித்தேன்' என்றும் கூறுகிறார் (2 தீமோ. 4:6–8; பிலி. 3:12–14). யூதராகப் பிறந்து வளர்ந்த போதிலும் கிரேக்கர்களுடைய பழக்க வழக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் நன்கறிந்து வைத்திருந்தார். அவர்கள் வணங்கும் தெய்வங்களின் பெயர்களும் உருவங்களும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

1.



2.



1. கிரேக்க மல்யுத்த விளையாட்டு அரங்கு
2. உடற்பயிற்சிக் கழகத் திடல்




காப்புநாடா அணிந்த யூத இளைஞர்

சவுலின் பெற்றோர்கள் வசதிபடைத்தவர்களாயிருந்திருக்க வேண்டும். தர்சு பட்டணத்தில் யூதர்கள் குடியிருப்பில் அவர்கள் வீடு இருந்தது. மிகச் சிறிய இனமான பென்யமீன் இனத்தில் பிறந்த கண்டிப்பான பரிசேயராய் இவர் இருந்தாலும் (பிலி. 3:5; 2 கொ. 11:22) உரோமக் குடியுரிமை பெற்றிருந்தார் (அப். 22:27,28); அவருக்கு இது பெருமையாக இருந்ததோடு பெரும் உதவியாகவும் இருந்ததை நாம் பிறகு காணப் போகிறோம். இயேசுவையும் மற்ற யூதப் பையன்களையும்போல் அவர் ஜெப ஆலயப் பள்ளிக்கூடத்திற்குச் சென்று, தம் இனத்தவரின் வரலாற்றுச் செய்திகளைக் கற்றார். 'எபிரேயரில் பிறந்த எபிரேயனாக' புனித வேத பாடங்களில் நல்ல பயிற்சி பெற்றார். பதின்மூன்று வயதானபோது பவுல் 'திருச்சட்டமகன்' ஆனார். அப்போது ஜெப ஆலயத்தில் தொழுகைக்குச் செல்லும்போது அவர் காப்புநாடாவைக் கட்டிக்கொண்டு, தாலீத்தைப் போட்டுக்கொண்டார். வேத வாக்கியங்கள் பலவற்றை ஐயம்திரிபறக் கற்றுத் தெளிந்தார் (அப். 9:22). இன்று எழுத்து

வடிவம் பெற்றுள்ள அவருடைய பேச்சுகளில் கிட்டத்தட்ட எல்லா பழைய ஏற்பாட்டு நூல்களையும் அவர் எடுத்தாண்டிருப்பதைக் காண்கிறேம். தாம் எழுதிய கடிதங்களில் வேத நூல்களிலிருந்து ஏறத்தாழ நூற்றுத் தொண்ணூற்றெட்டுப் பகுதிகளை எடுத்தாண்டிருக்கிருர்.

எவ்வளவு செல்வர்களாயிருந்தாலும் யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஏதேனும் தொழிற்பயிற்சி கொடுப்பார்கள். அக்காலத்தில் அங்கு நடைபெற்ற தொழில்களில் கூடாரத் துணி நெய்வதே சிறந்த தொழிலாயிருந்தது. இதுவே அப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்களின் தொழிலாகும் (அப். 18:3). சிலிசியா என்ற பெயரைக் கொண்டு இக் கூடாரத் துணி 'சிலிசியம்' என்றழைக்கப் பட்டது.




கூடாரத் துணி நெய்தல்

சவுலின் தாயார்பற்றிய குறிப்பெதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனல் ஒரு கடிதத்தில் (ரோ. 16:13) 'அவள் எனக்கும் தாய்' என்று ரூபு என்பவரின் தாயைக் குறித்து பவுல் எழுதியிருப்பதைக் காண்கிறேம். தம்முடைய தாயார் இறந்த பிறகு அத்தகைய அன்புகாட்டி ஆதரித்த அம்மாளைப்பற்றி பவுல் இப்படிப் பேசியிருக்கலாம். சவுலின் சகோதரி உயர்ந்த சமூக நிலையிலுள்ள குருக்கள் தலைவருடைய குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தார் எனத் தெரிகிறது (அப். 23:16). அவர் மாணவப் பருவத்தில் இச்சகோதரியின் வீட்டில் தங்கியிருந்து தம்முடைய கல்வியைக் கற்று முடித்திருக்கலாம். பஸ்கா பண்டிகைக்கென்றும், மற்ற பண்டிகைகளைக் கொண்டாடுவதற்கென்றும் ஆலயத்தில் வழிபட, சிதறிக் கிடந்த யூதர்களில் வைராக்கியமானவர்கள் எருசலேமுக்குச் சென்றதுபோல் சவுலும் அங்கு பலதடவை சென்றிருக்கலாம். ஆனல், அவர் இயேசுவைப் பார்த்திருப்பாரா? அவர் பேச்சைக் கேட்டிருப்பாரா? எதுவும் நமக்குத் தெரியாது.

### 'கமாலியேலின் பாதத்தில்' அமர்ந்தார்

தர்சு பட்டணம் கல்விக்கு மையமாக இருந்தபோதிலும், அப் பல்கலைக் கழகம் யூதரான சவுலை அனுமதிக்காமலிருந்திருக்கலாம். குருவாகப் பணியாற்ற சவுல் ஏற்கெனவே பயிற்சி பெற்றிருந்ததால் அவர் தம்முடைய கல்வியில் முழுமை பெற எருசலேமுக்கே செல்வது அவசியமாயிற்று. ஜெப ஆலயப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறும்போது அவருக்குப் பதினேழு அல்லது பதினெட்டு வயதிருக்கும். எருசலேமின் தேவாலயக் கூடங்களில் தொழுதுகொள்வதற்காகச் செல்லும் ஒரு பயணிபோல் அவர் இப்போது அங்கே செல்லவில்லை. ஒரு மாணவராக நுழையப் போகிருர். பெருமகிழ்ச்சியோடும் பொங்கிவரும் உற்சாகத்தோடும் அக்கறையோடும் மாபெரும் நகரான எருசலேம் சென்ருர். பலஸ்தீனுவின் புகழ்பெற்ற பரிசேய ரபீயான கமாலியேலின் பாதத்தில் அமர்ந்துபாடம்கேட்கும்வாய்ப்பு அவருக்குக் கிட்டிற்று (அப். 22:3; 5:34). இந்த அறிஞரிடம் பாடம் கேட்க வாய்ப்புக் கிடைத்ததென்ருல்சவுல் ஒரு சிறந்த மாணவராக இருந்திருக்கவேண்டும். ஆர்வமும் சுறுசுறுப்பும் நுண்ணறிவும் படைத்து, 'திருச்சட்டத்தில் வைராக்கியங் கொண்டவராக' சவுல் திகழ்ந்திருக்கவேண்டும். யூத சமயத்தில் ஆழ்ந்த பற்றுக்கொண்டவராய், 'பரிசேயர் மரபில்' தோன்றிய தம் வாழ்க்கையில், அப்பற்றினுல் ஏற்படக்கூடிய விளைவு குறித்து உறுதி உள்ளவராயும் இருந்தார் (அப். 23:6; 26:5). 'என் வயதுள்ள அநேகரைப்பார்க்கிலும் யூத மார்க்கத்தில் தேறினவனுனேன்; சமய அறிவில் நான் மிகுந்தும் விளங்கினேன்' என்று தம்மைக் குறித்து அவர் பேசுவதைக் கவனியுங்கள் (கலா. 1:14; பிலி. 3:6). மற்றவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்கும் சகிப்புத் தன்மையுடைய ஒரு நேர்மை



வெற்றி பெற்றவர்க்கு இலைக்கிரீடம் அணிவித்தல்

யாளர் கமாலியேல். ஆனல், தம்முடைய இள மாணுக்கரோ சற்றுத் தீவிர குணமும் அவசர புத்தியும் உடையவராயிருக்கக் கண்டிருக்க லாம். இந்த அறிஞருடைய மாணவரா யிருந்து சவுல் யூத வேதத்தில் நன்ருகப் பாடம் கேட்டார். தாம் கற்றவைகளைக் குறித்து தர்க்கிக்கவும், வாதிக்கவும், தம் முடிவுகளை மெய்ப்பித்துப் பேசவும் திருச் சட்டத்தில் நல்ல திறமை பெற்றிருந்தார். இறுதியில் உரோமப் பேரரசின் ஆட்சிக்குள் இருந்த ஜெப ஆலயங்களில் அதிகாரத்தோடு உரையாற்றப்போகிற ரபீயாகப் பயிற்சி பெற்ருர். 'கமாலியேலின் பாதத்தில் அமர்ந்து' பாடங் கற்றவர் என்பதைக் கவனி யுங்கள். இது முற்றிலும் சரி. அக்காலத்தில் மெல்லிய பாய்களை விரித்துத் தரையில் அமர்ந்தபடியேதான் மாணவர்கள் ஆசிரியர் களிடம் பாடம் கற்று வந்தனர்.

சவுல் சனகரீம் பேரவையில் உறுப்பினர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குப் போதிய ஆதாரம் இல்லை. திருச்சட்ட மாணுக்கராக, அப்பேரவைக் கூட்டங்களுக்கு ஒரு பார்வையாளராகப் போய் இவர் அமர்ந் திருந்திருக்கலாம். பேதுருவும் ஸ்தேவானும் விசாரிக்கப்பட்ட சமயங்களில் இவர் அங்கு இருந்திருக்கலாம். இயேசு சிலுவையில் அறையப்பட்ட காலத்தில் சவுல் எருசலேமில் இல்லை என்ருல் அவர் அதுபற்றிய செய்திகளை குருக்கள் பணியில் ஈடுபட்டிருந்த யாராவது ஒருவரிடம் கேட்டுத் தெரிந்திருக்கக்கூடும். அப்படிச் சொன்னவர்கள் ஒருவேளை இயேசு ஓர் எத்தன் என்றும், யூதர்களின் மேசியா வாக இருப்பதற்கு எவ்விதத் தகுதியும் அற்ற வர் என்றும் அவரிடம் செய்திகளைத் திரித்துக் கூறியிருக்கலாம். இத்தகைய தவருன செய்திகளைக் கேட்டிருந்ததால்தான் அவர் இயேசுவோடு தொடர்புகொண்ட அனை வரையும் தொலைத்துக்கட்டுவதில் ஆர்வம் காட்டினர். யூத சமயத்தையும் அதன் திருச் சட்டத்தையும் மரபையும் காப்பதற்கென்று தம் முழு வாழ்க்கையையும் இக்காலத்தில் அவர் அர்ப்பணித்திருந்ததே இதற்குக் காரணமெனலாம்.

### கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தத் தொடங்குகிருர் சவுல்

சவுல் உரோமக் குடிமகனுய்ப் பிறந்து, கிரேக்கப் பண்பாட்டுத் தொடர்பைப் பெற்

4

திருந்ததோடு சரியான பரிசேய வளர்ப்பையும் பெற்றிருந்தார். மோசேயின் திருச்சட்டமும் அதற்கு வேத அறிஞர்கள் கொடுத்திருந்த விளக்கங்களும் வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் அவரைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தன. ஸ்தேவானிடம் ஏன் அவ்வளவு வெறுப்புக் காட்டினர் என்பது இப்போது நமக்குப் புரிகிறது. அவர் வழக்கமாகச் செல்லும் சிலிசியர் ஜெப ஆலயத்தில் ஸ்தேவான் பேசும்போது மோசேயின் திருச்சட்டத்தால் இனிப் பயனென்றுமில்லை என்றும், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே மேசியா என்றும் சொன்ன கருத்துக்களைச் சவுல் எப்படிப் பொறுத்துக் கொள்வார்? சிலுவையில் அடிக்கப்பட்ட ஒரு குற்றவாளி மேசியாவென்று யூதர்கள் எங்ஙனம் ஒப்புக் கொள்ள முடியும்? 'மரத்திலே தூக்கப்பட்டவன் தேவ சாபத்திற்குள்ளானவன்' என்று திருச்சட்டம் கூறுகிறது (உபா. 21:22, 23; கலா. 3:13). ஸ்தேவானோடு தர்க்கித்துப் பேசும்போது ஒருகால் சவுலும் அங்கு இருந்திருப்பார். 'தூய ஆவியானவரால் நிறைந்து' பேசிய ஸ்தேவானைப் பேச்சில் வெல்ல முடியாது போயிருக்கலாம். தூய ஆவியானவருக்கு எதிராக யார் நிற்கக் கூடும்? தமக்குள் ஏற்பட்ட குமுறல் காரணமாகவும் வாதங்களில் கண்ட தோல்வி காரணமாகவும் ஸ்தேவான் உரையாற்றிய போது அவர்மேல் சவுலுக்கு ஏற்பட்ட கோபம் இன்னும் அதிகமாகியிருக்கலாம்.


ஸ்தேவான் கொண்டிருந்த நம்பிக்கை இறைபழிப்புச் செய்யும் அர்த்தமற்ற பேச்சாக இருந்தது. எனவே, அவர் கல்லெறிந்து கொல்லப்படவேண்டும் (உபா. 13:6–10). அவர் சேர்ந்திருந்த அந்த முழுக்கூட்டமும் பூண்டோடு அழிக்கப்படவேண்டும். 'அவர்களை அழித்தொழிக்க வேண்டும்' என்ற வெறி சவுலுக்கு இருந்ததால் அவர் அதைச் செய்து முடிக்க எண்ணினர். இதைச் செய்து முடித்தால்தான் தம்முடைய முன்னோர்களின் யூத சமயம் எருசலேமிலும் பலஸ்தீனவிலும் அழியாது பாதுகாக்கப்படும் என்று எண்ணினர்.

இவ்விதமாக அவர் அவர்களை முதல் முறையாகத் துன்புறுத்தத் தொடங்கினர். யூத சமயத்திற்கும் புதிய சமயத்திற்கும் இடையே ஸ்தேவானல் உண்டாக்கப்பட்டிருந்த பிளவு சவுலின் செயல் மூலம் அவருக்குத் தெரியாமலேயே இன்னும் அதிகமாயிற்று. ஏனெனில் அவர் முறைப்படி தொழுகை நடத்திக் கொண்டு எருசலேமில் வாழ்ந்திருந்த அப்போஸ்தலர்களை அழிக்கத் தொடங்கவில்லை; இயேசுவைப் பற்றிய புது நம்பிக்கையை ஆர்வத்தோடு ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றத் தொடங்கியிருந்த மற்றப் பகுதிகளிலிருந்து வந்த யூதர்களையும் புறவின மக்களையும் அவர் ஒழிக்கத் திட்டமிட்டார். அந்தப் 'புதிய நெறி'யைப் பின்பற்றி வந்த நசரேயர்கள்மேல் அவர் கண்வைத்திருந்தார்.

சில போக்கிரிகளையும் ஆயுதம் தாங்கிய சில வீரர்களையும் சேர்த்துக்கொண்டு தம் விருப்பப்படி மேற்கொண்டிருந்த அழிவுவேலையைத் தொடங்கினர். நசரேயர்கள் பலரைச் சிறையில் தள்ளினர். சிலரை அவர் கொன்றிருக்கலாம், இன்னும் பலரைக் கசையால் அடித்தார். ஹெலனிய யூதர்கள் எருசலேமை விட்டு யூதேயாவின் மற்ற இடங்களுக்கும் சமாரியாவுக்கும் அதற்கப்பாலும் ஓடிப் போனர்கள். இவர்களில் பலர் தங்கள் சொந்த ஊர்களுக்கே திரும்பிச் சென்றனர் (அப். 11:19,20). எங்கெல்லாம் சென்றார்களோ அங்கெல்லாம் தங்கள் நற்செய்தியை எடுத்துச் சென்றார்கள். இப்படி ஓடியவர்கள் உரோமப் பேரரசில் அடங்கியிருந்த மற்ற நாடுகளில் உள்ளவர்களும் திருச்சபையில் நுழைய வழி வகுத்தார்கள். உரோம ஆட்சியின் மூன்ருவது பெரிய நகராக நின்ற அந்தியோகியா, தமஸ்கு வரையிலும் இவர்கள் நற்செய்தியை எடுத்துச் சென்றனர். புதிய சமயத்தை ஒடுக்க முயற்சி எடுத்துக் கொண்ட சவுல் உண்மையில் அது நன்கு பரவுவதற்கே உதவி செய்தார்!

### நற்செய்தியாளர் பிலிப்பு

ஆதித் திருச்சபையில் நிருவாகத்தைக் கவனிக்க ஏற்பட்டிருந்த எழுவர் குழுவில் பொறுப்பேற்றிருந்த பிலிப்புவும் சவுலின் கோபத்திற்குத் தப்பி ஓடவேண்டியதாயிற்று. சமாரியாவுக்கு அவர் ஓடினர். புத்தகங்கள் 2, 3ல் யூதர்களும் சமாரியர்களும் ஒருவரை ஒருவர் பகைத்து வந்ததற்கான காரணத்தைக் கண்டோம். அழிக்கப்பட்ட தேவாலயம் மீண்டும் கட்டப்படுவதற்கு சமாரியர்கள் உதவ முன்வந்தபோது அவர்கள் கலப்பினத்தவர்கள், எனவே அவர்கள் வேண்டாம் என்று ஆகாய் தீர்க்கர் அவர்களைக் குறைவுபடுத்திவிட்டார். இயேசுவோ சமாரியர்களை எப்போதும் கனப்படுத்தினர். பிலிப்பு இப்போது தம் ஆண்டவர் இயேசுவைப் போல், பிணி தீர்க்கும் ஆற்றலுடன் சமாரியாவின் தலைநகருக்குத் திருவுரையாற்ற வந்திருக்கிறார். யாரைப்பற்றி அவர் பேச


தூதுப் பணியாளர் மூலமாகத்
திருச்சபை விரிவடைகிறது
கிலோ மீட்டர்
0 25 50
சீரியா
கலிலேயாக் கடல்
கலிலேயா
செசரியா
தெக்கப்போலி
சமாரியா
சமாரியா
யோப்பா
லித்தா
பெரேயா
எருசலேம்
அஸ்தோத்
உப்புக் கடல்
காத்சா
யூதேயா
இதுமேயா

வந்திருக்கிறாரோ அம்மனிதரைப்பற்றி அப் பட்டணத்தின் மக்கள் சிலருக்கு நன்றாகத் தெரியும். சீகாரில் உள்ள ஒரு கிணற்றண்டை இயேசு ஒரு சமாரியப் பெண்ணோடு உரையாடியது அவர்கள் நினைவில் இருந்தது. அவர் அடிக்கடி சமாரியாவின் வழியாகப் போனதையும் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். இப்போது அதை நினைவுபடுத்திக் கொண்டார்கள். தாமே வாக்குப் பண்ணப்பட்ட மேசியா என்று தம்மைக் குறித்து அவர் பேசிவந்ததைக்கூட அவர்கள் நினைவுக்குக் கொண்டுவந்திருக்கலாம் (யோ. 4:25, 26).

ஓம்ரி, ஆகாப் என்ற அரசர்கள் சமாரியாவில் அழகிய அரண்மனை ஒன்றை அமைத்திருந்தார்கள் (புத்தகம் 2). இப்பட்டணம் கி.மு. 722ல் அழியப்போவதுபற்றி தீர்க்கர்கள் முன்னுரைத்திருந்தார்கள். பல ஆண்டுகள் கழித்து அகுஸ்து சீசரின் புகழை நிலைநாட்ட பெரிய ஏரோது அரசர் இப்பட்டணத்தைத் திரும்பக் கட்டி அதற்கு செபஸ்தே (அகுஸ்து என்ற பெயருக்கு இணையான கிரேக்கச் சொல் இது) என்று பெயரிட்டார். இந்த அரண்மனையையும் தேவாலயத்தையும் உரோமர்கள் அமைத்த மதிலையும் இடிந்துபட்ட நிலையில் இன்றுகூடக் காணலாம். அங்கு நிற்கும் மொட்டைத் தூண்களும் சுவர்களும் பழங்காலத்தில் சிறந்து விளங்கிய இத்தகைய பட்டணங்களின் பெருமையை நமக்கு நினைப்பூட்டிக்கொண்டு நிற்கின்றன. சமாரிய யூதர்கள் பிலிப்புவின் பேச்சைக்கேட்க ஆயத்தமாயிருந்தார்கள். தங்கள் சமயத்திலுள்ள சடங்காச்சாரங்களின் பயனற்ற தன்மையை ஒருவேளை அவர்களும் உணர்ந்திருக்கலாம். பிலிப்புவின் செய்தியில் உண்மையும் பயனும் இருப்பதைக் கண்டனர். இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்த எல்லோரும் திருமுழுக்காட்டப்பட்டு புதிய திருச்சபையில் சேர்ந்தனர். இதுவரை யூதர்கள் மட்டுமே திருச்சபையில் இருந்து வந்தார்கள். இப்போது முதன்முதலாக யூதரல்லாதவர்களும் அதில் சேரும் வாய்ப்புப் பெற்றனர். சமாரியர்கள் ஆபிரகாமின் வழி வந்தவர்களானதால் அவர்கள் புற இனத்தாரெனக் கருதப்படவில்லை. அதே சமயம் யூதர்கள் அவர்களை அன்னியர்களாகவே மதித்தனர்.

## செப்படி வித்தைக்காரனின் வித்தை

புதிய சமயத்திற்கு மாறியவர்களில் ஒரு செப்படி வித்தைக்காரனும் இருந்தான். அவன் சமாரியன். அவன் பெயர் சீமோன் மாகு. இவனைப்பற்றி அக்காலத்திலுள்ள மற்ற வரலாற்றுக் குறிப்புகளிலும் நாம் வாசிக்கிறோம். இவன் மாந்திரீகம் என்ற செப்படி வித்தையில் அக்காலத்தில் சிறந்து விளங்கினான். இவற்றைப்பற்றி எழுதப்பட்டுள்ள பாப்பைரஸ் துண்டுகளையும் தாயத்துக்களையும் மந்திரத்தொடர்கள், மாந்திரீகச் சூத்திரங்களையும் மற்றும் பல குறிப்புகள் அடங்கிய பல்வேறு சுவடிகளையும்அண்மையில் கண்டெடுத்திருக்கின்றனர். அக்காலத்தில் உள்ள மந்திரவாதிகளும் செப்படி வித்தைக்காரர்களும் மந்திரங்கள் என்ற பெயரில் அர்த்தமற்ற எழுத்துக்களையும் சொற்களையும் மிகவும் தந்திரமாகப் பயன்படுத்தி வந்ததை இவை வெளிப்படுத்துகின்றன. மூட நம்பிக்கையும் பயந்த இயல்புமுடைய மக்களாய் வாழ்ந்தவர்களிடம் சீமோன்மாகு, எலிமா (அப்.13:6—11),எபேசுவில் உள்ள மந்திரவாதிகள் (அப். 19:13.20) எல்லோரும் தங்கள் செப்படிவித்தைகளில் இப்படிப்பட்ட பொருளற்ற மந்திரங்களையே பயன்படுத்தியிருக்கக்கூடும். இதோ பொல்லாத ஆவிகளைத் துரத்துவதற்கு ஒரு மந்திரம்! ‘ஒலிவக்காய் எண்ணெய் தயாரித்து, அத்துடன் தாமரை நடுத்தண்டின் சோறு எடுத்து, அவற்றோடு மணப்பூண்டுச் செடியைச் சேர்த்து, யோவேல், ஒசாரித்தியோமி, எமோரி, தியாக்கிச் சோயித், சித்தேமியோக, சோத்தே, ஜோ, மிமிப்தோத்தியோப், பெர்சாத்தி, கசட தபற ஓம், கிரீம், டிரீம் ஓடிவா வெளியே இவனைவிட்டு’ என்று சொல்லிக் காய்ச்சி இறக்கினால் அதனால் அந்தப் பொல்லாத ஆவியை ஓட்டிவிடலாம்!

சில சமயங்களில் இத்தகைய வித்தைக்காரர்கள் தங்கள் மந்திரங்களைச் சொல்லி மூட நம்பிக்கையில் உழலும் மக்களைப் பயமுறுத்தி, சீடர்களின் திருப்பணிக்கு ஊறுவிளைவித்திருந்ததை நாம் காண்கிறோம். கடவுளிடமிருந்து சில சிறந்த ஆற்றல்களை நேரடியாகத்தான் பெற்றிருக்கிறதாக சீமோன்மாகு தம்பட்டம் அடித்துக்கொண்டாலும், பிலிப்பு தன்னைவிடச் சிறந்த மந்திரவாதியாக இருக்க வேண்டும் என்று நினைத்தான். புதிய சமயத்தை தழுவியவர்களுக்கு தூய ஆவியானவர் அருளப்பட்டதற்கான அடையாளம் ஒன்றும் இன்னும் காணப்படவில்லை; புதிய நம்பிக்கையைப் பற்றிய பேருற்சாகமும் அறிவாற்றலும், அவர்களுக்கு இன்னமும் அருளப்படவில்லை. இதைப் பேதுருவும் யோவானுமே இவர்களுக்குக் கொடுக்கமுடியும். பிலிப்பு செய்யும் பணிகுறித்து அறியவும் அவருக்கு உதவவும் இவர்கள் இப்போது வந்திருந்தார்கள். ஆழமான ஜெபமும் ஆசீர்வாதமும் தேவை என்று கண்டார்கள். இந்தப் புதிய

வர்கள் கூடிவந்து இப்படிப்பட்ட ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தபோது தூய ஆவியானவர் முழு ஆற்றலோடு அவர்கள்மேல் வந்தமர்ந்தார். இவர்கள் பெற்றமாற்றம் வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்தவுடன் சீமோன் மாகு 'கைகளை மேலே வைத்த' காரணத்தால் இது நடந்தது என்று நினைத்தான். மந்திரங்களைப் பற்றியே யோசித்து வந்த அவன் மனதில் இதுவும் ஒரு மந்திரசக்தி போலவே தெரிந்தது. இந்த ஆற்றல் தனக்கும் இருந்தால் நன்றாயிருக்கும் என்று நினைத்தான். மந்திரவாதியாகிய அவன் விலை கொடுத்து இவ்வாற்றலை வாங்க எண்ணினான். அப்படிச் செய்வது தவறு என்று அவன் நினைக்கவில்லை. ஆனால், இதை அவ்விதம் வாங்க முடியாது என்று சீமோன் பேதுரு நன்கு எடுத்தியம்பினார். சீமோன்மாகு உடனே பேதுருவுக்குப் பகைவனாகிவிட்டான் என்றும் பல ஆண்டுகளுக்குப் பிறகு உரோமிலும் பகைவனாக இருந்து வந்தான் என்றும் ஒரு பழங்கட்டுக் கதை உண்டு. கி.பி. 41 முதல் 54 வரை பேரரசன் கிலவுதியு உரோமில் ஆண்டபோது இவனும் உரோமாபுரியில் இருந்தான். இன்றுகூட திருச்சபையில் ஏதேனும் ஒரு புதிய அந்தஸ்தை அல்லது ஒரு புதிய ஆற்றலை அல்லது சலுகையை விற்க அல்லது பணம் கொடுத்து வாங்க முயல்வதை ஆங்கிலத்தில் சீமோனியம் (Simony) என்று சொல்லுகிறார்கள். அது சீமோன்மாகுவின் விருப்பத்திலிருந்து வந்த ஒரு சொல்லாகும்.

எருசலேமுக்குத் திரும்பும் வழியில் பேதுருவும் யோவானும் சமாரியாவில் உள்ள கிராமங்களில் திருவுரையாற்றினார்கள். இவ்விதமாக சமாரியர்களுக்கும் நற்செய்தி சொல்லி அவர்களைச் சபையில் பிலிப்பு சேர்த்துக்கொண்டது சரி என்று ஒப்புக்கொண்டார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. ஏற்கெனவே யூதேயாவுக்கு அப்பாலும் புதிய சமயம் பரவியது பற்றி நாம் அறிகிறோம். சமாரியர்களும் மேசியாவை எதிர்பார்த்திருந்த யூதர்களே என்பதை இங்கு நாம் கருத்தில் கொள்ளவேண்டும் (புத்தகம் 2, அத்தியாயம் 10). ஆனால், புதிய சமயத்தில் இன்னும் புற இனத்தவர் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

### பிலிப்புவும் எத்தியோப்பியா நாட்டு மந்திரியும்

பிலிப்பு காத்சாவுக்குப் போகும்பாதையில் இப்போது தெற்கு நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். (33ம் பக்கத்திலுள்ள படத்தைப் பாருங்கள்.) பழம்பெருமை வாய்ந்த இந்தப் பெலிஸ்தியபட்டணம் கி.மு. 96ல் தரையோடு தரையாய் தகர்க்கப்பட்டது. 'பெலிஸ்தியர்களின் வழி' என்ற பழங்காலத்துப் பாதை வழியாக எகிப்துக்குப் போகிற முக்கிய சாலை இதன் வழியாகச் சென்றாலும் இப்பகுதி பாலையாகவே இருந்தது. காத்சா என்ற புதிய பட்டணம் கடற்கரைக்கு மிக அருகாமையில் கட்டப்பட்டிருந்தது. வழியில் சுமை ஏற்றிக் கொண்டு கூட்டங்கூட்டமாகச் சென்று கொண்டிருந்த ஒட்டகங்களையும் கழுதைகளையும் பிலிப்பு கண்டார். இவை தெற்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தன. ஒரு திறந்த இரதத்தில் கறுப்பு நிற ஆப்பிரிக்க நாட்டினர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் எத்தியோப்பியாவின் அரசியான கந்தாகேயின் நிதி அமைச்சர். அந்நாட்களில் எத்தியோப்பியா எகிப்துக்குத் தெற்கே பல நாடுகளில் பரவிக் கிடந்தது. கந்தாகே என்பது பார்வோன், சீசர் என்பதுபோல் எத்தியோப்பியாவை ஆண்ட அரசர்களின் 'குடும்பப்' பெயர். இது அவருடைய இயற்பெயரல்ல (புத்தகம் 1, அத்தியாயம் 5). இவ்வமைச்சர் கடவுளுக்குப் பயந்தவர்; ஒருவேளை யூத சமயத்தை ஏற்றுக்கொண்ட புறவினத்தவராய், கூடாரப் பண்டிகையை ஆசரிக்க அவர் எருசலேம் சென்று திரும்பியிருக்கலாம். செப்துவஜிந்தின் பாப்பைரஸ் சுருளிலிருந்துகூடாரப்பண்டிகைக்கான வேத பாடத்தை அவர் படித்துக்கொண்டிருந்தார் —ஏசா. 53:7, 8. பாடுபடும் தொண்டனைக் குறித்த நான்கு பாடல்களில் இதுவும் ஒன்று (புத்தகம் 2, அத்தியாயம் 9). பண்டிகை நாட்களில் எருசலேமில் இருந்தபோது அவர் இதைப் புரிந்து கொள்ளவில்லை. எனவே, இப்போது பயணம் செய்யும்போது சத்தமாய் வாய்விட்டுப் படித்து கொஞ்சமாவது புரிந்து கொள்ள முயலுகிறார். இரதத்தின் பக்கமாக நடந்துகொண்டிருந்த பிலிப்பு இதைக்கேட்ட மாத்திரத்தில் இதற்கு விளக்கம் தர முன் வந்தார். இத் தீர்க்கவுரை, சிலுவையில் அடிக்கப்பட்டு உயிர் மீண்டெழுந்த மேசியாவைக் குறித்ததாகும் என்றார். பிலிப்பு சொன்னதை அந்த எத்தியோப்பியர் உடனே நம்பினார். ஒரு நீரூற்றண்டை வந்தபோது விலங்குகளுக்குத் தண்ணீர்காட்டி சற்று இளைப்பாறினார்கள். உடனே 'நான் திருமுழுக்குப் பெறலாமா?' என்று பிலிப்புவிடம் யோசனை கேட்டார் அவர். பிலிப்பு இதற்கு இசைந்து அவரைத் திருமுழுக்காட்டினார். மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்தோடு எத்தியோப்பியர் தம் பயணத்தைத் தொடர்ந்தார். கந்தாகே அரசியின் அரண்மனை வந்து சேர்ந்தபோது அவருக்கு என்ன நடந்தது என்று நாம் அறியோம். அரண்மனையில் நடைபெற்றிருக்கக் கூடிய உரையாடல்களை நாம் ஊகித்து சற்று அறியலாம். யூதர்கள்

குடியிருப்பில் இருந்த ஜெப ஆலயத்தைத் தேடிப்போய் அவர் தொழுதிருக்கக்கூடும். அங்குகூட பொறுமை உள்ளம் படைத்த யூதர்கள் சிலுவையில் அறையுண்ட மேசியாவின்மேல் அவருக்கிருந்த நம்பிக்கையை மறுத்துப் பேசி இருப்பார்கள் அல்லது சிதறிக் கிடந்த யூத இனத்தின் இயல்பிற்கேற்ப திறந்த உள்ளத்தோடு அவர்கள் அவரை வரவேற்றும் இருக்கலாம். அவர் பிலிப்புவைச் சந்தித்தது முதல் நடந்த யாவற்றையும் அவர்களுக்குச் சொல்லியிருப்பார். என்ன நடந்திருந்தாலும் அதினால் நிறைந்த நன்மை உண்டாகியிருக்கவேண்டும்.

பிலிப்பு ஆசோத்தஸ் (அஸ்தோத்) என்ற பெலிஸ்தியர்களின் மற்றொரு புகழ்வாய்ந்த பட்டணத்திற்கு (புத்தகம் 1) நடத்திக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து யோப்பா பட்டினம் சென்றார். அங்கு திருவுரையாற்றிவிட்டு பிறகு செசரியாவுக்குப் போனார். அதுதான் அவர் சொந்த ஊர் (அப். 21:8, 9). நாம் மீண்டும் பிலிப்புவைச் சந்திப்போம்.

## விளக்கப் பயிற்சி

1. ஸ்தேவானுக்கும் சவுலுக்கும் நடக்கும் ஓர் உரையாடலைத் தயாரியுங்கள்.

2. ஸ்தேவான் 'குற்றச்சாட்டுகளுக்கு எதிராகக் கூறிய பதிலை' இன்றையத்தமிழில் கூறுங்கள்.

3. ஸ்தேவானின் உரையைப் படித்து பல்வேறு பகுதிகளுக்கும் தலைப்புகள் இடுங்கள். அவர் எடுத்துரைத்த புத்தம் புதிய கருத்துக்கள் எவை?

4. ஸ்தேவான் கல்லெறியப்பட்டதை சவுல் அல்லது ரோதை (அப். 12:12—15) தங்களுடைய நண்பர்களுக்கு விளக்கிக் கூறும்வகையில் சொல்லுங்கள்.

5. பிலிப்பியர் 3:13,14; 4:6—8 வசனங்களை மனப்பாடம் செய்துகொள்ளுங்கள்.

6. கி.பி. 33ல் தர்சுவைச் சுற்றிப் பார்க்கச் சென்றிருப்பதாக வைத்துக்கொண்டு, அங்கு பார்த்தவைகளை உங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கு எழுதித் தெரிவியுங்கள்.

7. தறிபோடும் ஒரு மனிதனைப் படம் வரைந்து அல்லது பொம்மை செய்து காண்பியுங்கள்.

8. 'ஸ்தேவானின் விண்ணப்பமே நமக்குப் பவுலைத் தந்தது'—இக்கூற்றின் பொருள் என்ன?

9. கமாலியேலுக்கும் சவுலுக்கும் (ஆசிரியருக்கும் மாணவருக்கும்) இடையே நடந்திருக்கக் கூடிய உரையாடலை ஆயத்தம் செய்து அல்லது ஆயத்தம் செய்யாமலேயே பேசிக் காட்டுங்கள்.

10. கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பவுல் செயல்படக் காரணம் என்ன? புதிய சமயத்தைத் தடுத்து நிறுத்த அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எங்ஙனம் அது பரவுவதற்கு உதவியாக அமைந்து விட்டன?

11. சீகாரில் உள்ள கிணற்றண்டை இயேசு சந்தித்த அதே பெண்ணை (புத்தகம் 3, பக்கம் 42; யோ. 4:5—42) பிலிப்பு சந்திப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அவர்களுக்கு இடையே நிகழக் கூடிய உரையாடலை எழுதுங்கள்.

12. இரதத்தில் உட்கார்ந்திருக்கும் எத்தியோப்பியரோடு பிலிப்பு பேசிக்கொண்டிருப்பதைப் படம் வரைந்து காண்பியுங்கள்.

அல்லது

எத்தியோப்பியர் நாடு திரும்பி அரசியரின் அவையிலுள்ள யாவருக்கும் எங்ஙனம் நற்செய்தியைக் கூறியிருக்கக் கூடும் என்பதை ஒரு வானொலி செய்திக் கதிராகத் தயாரியுங்கள்.

*　*　*　*

அத்தியாயம் 5

# தமஸ்குவுக்குச் சென்ற பாதையில்

*(9:1–30)*

நடபடிகளின் புத்தகம் 8ம் அத்தியாயம் 1–3 வசனங்களில் சவுல் சபையைத் துன்புறுத்தத் தொடங்குவதிலிருந்து இப்போது நாம் மீண்டும் தொடர்கிறோம். முதல் வெற்றியால் பெருமிதமடைந்த சவுல் வெகு தொலைவிலுள்ள சீரியா நாட்டுப் பட்டணமாகிய தமஸ்குவிற்குச் செல்ல முன் வந்தார். சுமார் இரு நூற்று நாற்பது கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்தாகவேண்டும். 'புதிய நெறி' மக்கள், அங்கு பலம் வாய்ந்த ஒரு இயக்கமாகி வருவதாக அவர் கேள்விப்பட்டிருந்தார். குருக்கள் தலைவரிடம் அவர் கடிதங்கள் வாங்கி வைத்திருந்ததாக நாம் வாசிக்கிறோம் (அப். 9:1,2). அவை இயேசுவைப் பின்பற்றுவோரைத் துன்புறுத்த இசைவளிக்கும் கடிதங்களாக இருக்கமுடியாது. ஏனென்றால் குருக்கள் தலைவர்கூட வெளிநாட்டு ஜெப ஆலயங்கள்மீது ஆணை செலுத்தமுடியாது. அவைகள் ஜெப ஆலயத் தலைவர்களுக்கு அறிமுகக் கடிதங்களாக இருந்திருக்கலாம். இயேசுவைப் பின்பற்றும் மக்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களை எருசலேமுக்கு சனகரீம் பேரவை முன்பு விசாரணைக்குக் கொண்டுவர இப்பரிசேய இளைஞருக்கு அவர்களால் இயன்ற உதவியைச் செய்ய முன்வரவேண்டுமென்று, ஜெப ஆலயத் தலைவர்களுக்கு எழுதப்பட்ட சிபாரிசுக் கடிதங்களாக இருக்கவேண்டும். (அப். 22:5ஐ ஒப்பு நோக்கவும்.)

'புதிய நெறி'யினர் என்று புதிய சமயத்து உறுப்பினர்களைக் குறித்து லூக்கா பேசும்போது (அப். 9:2) அவர் 'ஜீவ நெறி'யை அல்லது 'மீட்பு வழி'யைத்தான் குறிப்பிடுகிறார். 'நானே வழி'யென்று இயேசு கூறியது உங்களுக்கு நினைவிருக்கும்.

### தமஸ்குவுக்குச் செல்கிறார்


சமாரியா வழியாகச் செல்லும் அந்தச் சாலையில் சீடரைப் 'பயமுறுத்தவும், கொலை செய்யவும் எத்தனித்து' தம் அழிவுப்பணி பயணத்தை சவுல் தொடங்கினார். அவரிடம் பெரும் உற்சாகமும் கொடுமகிழ்ச்சியும் காணப்பட்டன. தாம் மேற்கொண்ட பணியில் வெற்றியை ருசி பார்த்துவிட்டார். மேலும் மேலும் வெற்றி காண விரும்பினார். யூத சமயத்தில் அவருக்கு அளவுக்கு மீறிய வைராக்கியம் உண்டு. இயேசுதான் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்ட மேசியா என்ற பைத்தியக்கார எண்ணங்கொண்டு அலையும் இந்த நசரேய சமயத்தினரைப் பூண்டோடொழிக்க தம்மாலானதை அவர் செய்யப் போகிறார். தமஸ்குவிலே தாம் செய்ய இருப்பதையும், விரைவில் தம் புகழ் பலஸ்தீன எங்கும் பரவ இருப்பதையும் குறித்த சிந்தனைகளை மனதில் உலவ விட்டபடி சென்றுகொண்டிருந்தார். தமஸ்கு, பயணிகளும் வணிகர்களும் நிரம்பிய ஒரு பட்டணம் என்பதை அவர் நன்கறிவார். ஈசாக்குக்கு இல்லாள் தேடி எலியேசர் காரானுக்குச் சென்றபோது இங்குதான் வழித் தங்கினர் (புத்தகம் 1); எலிசாவுக்கு நாகமான் கீழ்ப்படிந்து தம் தொழுநோய் நீங்கப் பெற்றதும் இப்பட்டணத்தில் தான் (புத்தகம் 2). இப்பட்டணத்தைச் சூழ மலைகளும் ஓரத்தில் பாலை நிலமும் உண்டு. நகரத்தில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தோட்டங்களும், இடையிடையே கால்வாய்களும் சிற்றாறுகளும் அவற்றில் ஓடும் உல்லாசப் படகுகளும் சரக்கேற்றிச் செல்லும் படகுகளும் எங்கும் நிறைந்து காணப்படும். கடைகளிலும் கடை வீதிகளிலும் சந்தைகளிலும் பட்டு, இரத்தினம், தந்தம், கம்பளங்கள், வாள் ஆகிய அனைத்தும் விற்கப்படும். லீபனோன் மலைகளின் பனிக்கட்டியினால் குளிர்ச்சியாக்கப்பட்ட எலுமிச்சம் பழச்சாறு வாங்கிக் குடித்து, பயணிகள் தங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொள்வார்கள். தமஸ்கு பட்டணத்தின் மதில்களிலும் கோபுரங்களிலும் இடை இடையே பெரிய வளைவுகளும்

வாயில்களும் நிறைந்திருக்கும். இந்த வாயில்களில் ஒன்ருன 'கிழக்கு வாயில்' வழியாக அவர் கனவில்கூட நினைத்துப் பார்க்கமுடியாத அந்த நிகழ்ச்சி நடக்கவிருக்கிறது. அவர் துன்புறுத்தும் ஒரு பயங்கரவாதியாக அல்ல—பலத்த ஒளியால் தாக்கப்பட்டுக் குருடராகவும் குழம்பிய மனநிலை உள்ளவராகவும் அவ்வழியாக அழைத்துச் செல்லப்பட இருக்கிருர்.

## அவர் சிந்தனைகள்

தமஸ்கு என்ற ஒரு பெரிய பட்டணம் செல்கிறேன் என்ற சிந்தனையில் மூழ்காமல் ஸ்தேவானைப்போன்ற 'மூடர்களை'ப் பிடித்துக் கைது செய்யப்போவதுபற்றியும், அவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்பது குறித்தும், அவர் சிந்தித்துக்கொண்டிருந்தார். இயேசுவைப்பற்றி ஸ்தேவான் பேசியது அவர் நினைவுக்கு வந்தது! ஐயமின்றி கலிலேயாவில்தானே இயேசு திருவுரை ஆற்றி வந்தார். இப்போது அந்தக் கலிலேயா வழியாகத்தான் சவுலும் சென்றுகொண்டிருக்கிருர். ஏரிக்கரையோரமாக கப்பர்நகூமைக் கடந்து கலிலேயாவின் குன்றுகளுக்கு ஊடாக இப்போது பயணம் செய்துகொண்டிருக்கிருர். இங்குதான் இயேசு என்ற அம்மனிதர் பேசியும், நடந்தும் திரிந்தார். 'வேதனைகள் நிறைந்தவராய் . . . அடிக்கப்பட்டவராய் . . . துன்பம் அனுபவித்தவராய் . . .' தமக்கு நன்ருகத் தெரிந்த வேத வாக்கியங்களை சவுல் நினைத்துப்பார்த்தார். கடவுளின் தொண்டரைப் பற்றிய வேத பாடல்களில் வாக்குப்பண்ணப்பட்டிருந்த மேசியாவைக் குறித்து ஏசாயா தீர்க்கர் இப்படித்தான் பேசியிருந்தார். ஸ்தேவான் என்ன பேசினர்? அடிக்கப்பட்ட அந்தத் தொண்டர் இயேசு . . . அவர் துன்பப்பட்டவர் . . . வேதனைகளைச் சுமந்திருந்தவர் . . . அந்த அற்புதமான நம்பிக்கையில் ஸ்தேவான் உயிரிழந்தார். எவ்வளவு தைரியமாகச் சாவை வரவேற்ருர்! சவுல் அதை இப்போது ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று. ஸ்தேவானின் மரணம் வீர மரணம். கல்லெறிந்தவர்களின் ஆடைகளைக் காத்துக் கொண்டிருந்த நிகழ்ச்சி அவர் நினைவிற்கு வந்தது. மீண்டும் ஒருமுறை கற்கள் பாய்ந்து கிழிக்க, இரத்தமொழுகும் ஸ்தேவானின் தெய்வீக முகத்தைப் பார்க்கிருர். மீண்டுமொரு முறை ஸ்தேவானின் அந்த அருமையான ஜெபத்தைக் கேட்கிருர் . . . இரத்தம் கசியும்உதடுகளை அசைத்துச் சாவை அணைத்தபடி அவர் செய்த இறுதி விண்ணப்பம் சவுலுக்குநினைவிருக்கிறது . . . 'ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்.' ஆச்சரியமான விண்ணப்பம்! . . . பகைவருக்காக வேண்டுதல் . . . யார் இந்த ஆண்டவர்? அதுதான் அவர் குறிப்பிட்டுப் பேசினரே அந்த இயேசுவா? அவர்மேல் வைத்த நம்பிக்கையில் இவ்வளவு ஆழமான உறுதிப்பாடு இவருக்குக் கிடைத்திருந்ததா? ஒருவேளை சவுலாகிய இவர் செய்வது பிழையாகி . . . அந்த ஸ்தேவானுடைய நம்பிக்கை சரியாக இருந்துவிட்டால்? கமாலியேல்கூட அந்தப் பேரவையினரிடம் கடவுளோடு போர் செய்யக்கூடாது என்று கூறியிருந்தாரே! . . . ஸ்தேவான் என்ன சொன்ஞர்? இயேசு கடவுளின் மகன் என்ருர்.


தமஸ்குவுக்குச் செல்லும் அந்தச் சாலையில் அவர் என்னென்ன சிந்தித்துக்கொண்டு போயிருப்பார் என்று நமக்கு உறுதியாகத் தெரியாது. ஆனல் அவர் மனதில் எத்தனையோ கேள்விப் புயல்கள் எழுந்திருக்க வேண்டும். சிறுகச் சிறுக அவர் செய்யப் போகும் காரியம் தவறு என்றும் அவர் உணர்ந்திருக்கவேண்டும். முன்பின் தெரியாததும், தனிமையானதும் வெப்பமானதுமான அந்த இடத்தில், சாலையில் வழிகள் பிரியும் சந்தியில், இயேசு அவரோடு பேசுவதற்குமுன் இவ்விதம் அவர் உணர்ந்தார். கதிரவன் ஒளியைவிட வலிமையாய்க் கண்ணைப் பறிக்கும் ஒளியால் அவர் தாக்கப்பட்டுத் தரையில் விழுந்தார். அவர் கேட்ட குரல் வேறு யாருடையதுமல்ல. இயேசுவின் குரலே! அவர் மனதில் எழுந்த அந்தக் கேள்விகளை அவரும் கேட்டார். எப்படியும் அவர் இவற்றிற்குப் பதில் கூறவேண்டும் என்று அறிந்தார். 'என்னை ஏன் துன்புறுத்துகிருய்? முன்னேறிச் செல்ல வற்புறுத்தும் தார்க்குச்சியின் முள்ளில் தன் கால்களையே உதைத்துக்கொள்ளும் புத்தியில்லாத மாட்டைப்போல், பழக்குவிக்கப்படாத குதிரையைப்போல் ஏனப்பா நடந்துகொள்கிருய்? உன் மனச்சான்ருேடு மோதி, நீயே உன் தலையை உடைத்துக் கொள்ள வேண்டாம்.' சவுலின் பதிலடங்கிய கேள்வியை நன்ருகக் கவனியுங்கள் . . . 'நீர் யார் ஆண்டவரே?' அது இயேசுதான் என்று அவர் உணர்ந்தார்—நாசரேத்தில் வளர்ந்த இயேசு; கலிலேயாவில் வாழ்ந்த இயேசு. அவருடைய ஆற்றலை அன்று ஸ்தேவானிடம் கண்டார்; அவரைப் பின்பற்றினவர்களாய் ஏற்கெனவே எருசலேமில் தாம் துன்புறுத்தினவர்களிடமும் கண்டிருக்கிருர். பின்பு ஒரு நாள் தாம் இயேசுவைக் கண்டதாக உரிமை பாராட்டி அவரே பேசப்போகிருர் (2 கொ. 12:1—4; அப். 23:11; 2 தீமோ. 1:12).



பேரொளியால் தாக்குண்ட சவுல்

## தமஸ்கு பட்டணத்தில்

பேரொளியால் பார்வையிழந்து, நடக்க முடியாமல் மனம் உடைந்த நிலையில் சவுல் யூதாவின் வீட்டுக்குக் கொண்டுபோகப்பட்டார். தமக்கு ஏற்பட்ட இந்த வியத்தகுஅனுபவம் குறித்து மூன்று நாட்கள் இரவும் பகலும் சிந்தித்துக் கொண்டேயிருந்தார். யூதாவின் வீடு நேர்த்தெரு என்னப்பட்ட தெருவில் இருந்தது. இத்தெரு நகரின் மையமாகச் சென்றது என்றும், ஒன்றரை கிலோமீட்டர் நீளம் இருந்தது என்றும் நாம் அறிகிறோம். இது முப்பது மீட்டர் அகலம் கொண்ட ஒரு தெரு. நடுவில் இரதங்களும் குதிரை வீரர்களும் செல்வதற்கான பாதை. இரு மருங்கிலும் நடை பாதைகள். அனனியா என்பவர் (இவர் முன்பு குறிப்பிடப்பட்ட அனனியா அல்ல) திருச்சட்டம் மீறாத ஒரு யூதர். எருசலேமில் வாழ்ந்து வந்த இயேசுவின் தம்பியான யாக்கோபுவைப்போல் இவரும் 'புதிய நெறி'யினர். சவுல் தமஸ்குவுக்கு வந்த நோக்கம்பற்றி ஏற்கெனவே சந்தைவெளியில் வணிகர்கள் பேசிக்கொண்டனர். அந்தச் செய்தி இயேசுவில் நம்பிக்கை கொண்டிருந்த எல்லோருக்கும் இப்போது தெரிந்துவிட்டது. ஆகையால் அனனியாவுக்கும் அச்சம் இருந்தது இயல்பே (அப். *9:10–14*). அனனியா போன்றவர்களை முதலில் சிறையில் தள்ளக் காத்திருந்தவர் சவுல்.



நேர்த் தெரு

சவுல் இயேசுவால் 'தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி'. அவர் தமது சிறந்த ஊழியக்காரர்; தூதுவர்; உலகிலுள்ள மக்களுக்கெல்லாம் தம்மைக் குறித்து சான்று பகரப் போகிறவர் என்று அனனியாவிடம் இயேசு சொன்னார். அனனியா தமக்குச் சொல்லப்பட்டபடியே செய்தார். சவுலுக்குப் பார்வை மீண்டும் கிடைத்தது; திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தார்; தூய ஆவியானவரின் ஆற்றலையும் பெற்றுக்கொண்டார்.


சவுல் மனம் மாறிய நிகழ்ச்சி குறித்து மூன்று இடங்களில் கொடுக்கப்பட்ட செய்திகளையும் நாம் ஒருசேர இப்பொழுது படித்துப் பார்ப்பது நல்லது. லூக்கா கூறியதைவிடச் சற்று விளக்கமாக சவுலே விவரிக்கிறார் (அப். *9:1–19; 22:3–16; 26:9–18*).

## தமஸ்குவில் கண்ட தோல்வி

உடனே சவுல் ஜெப ஆலயம் சென்றார். அவர் யூதர். அதுமட்டுமல்லாமல் கமாலியேலிடம் திருச்சட்டம் குறித்து உரையாற்றவும் அதற்கு விளக்கம் கூறவும் நன்கு பயிற்சி பெற்ற ஒரு ரபீயாகவும் இருந்தார். எனவே அவருக்கு ஜெப ஆலயம் செல்ல எல்லா உரிமையும் இருந்தது. ஆனால், அங்கிருந்த கிறிஸ்தவர்கள் அவரைச் சந்தேகக் கண்களோடுதான் பார்த்தார்கள். ஒருவேளை தாங்கள் யார் என்று கண்டுபிடிக்க வந்து உட்கார்ந்திருக்கிறாரோ என்று திகைத்தார்கள். சமயப் பற்றுடைய யூதர்கள் குழப்பம் அடைந்தனர். அவர்மீது கோபமும் கொண்டனர். ஏதோ ஒன்று சரியாய் இல்லை என்று சவுல் உணர்ந்தார். தம்மைப்பற்றி முன்பு ஏதேதோ கேள்விப்பட்டிருந்த இவர்கள் இப்பொழுது தம்மை ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது நியாயமல்ல என்று அறிந்தார். தம்முடைய புதிய பணியைச் செய்ய ஆழ்ந்த அனுபவமும் தம்மிடம் இல்லை என்றும் உணர்ந்தார். தம்முடைய வேலை என்ன? அதற்கான நல்லதொரு திட்டம் எது? தாம் என்ன செய்யலாம்? இவைகளைப் பற்றிச் சிந்திக்கக் கொஞ்சம் நேரம் தேவை எனக் கண்டார். மோசேயும் எலியாவும் திருமுழுக்கன் யோவானும், இயேசுபெருமானும்கூட இதுபோன்ற ஆயத்த காலம் தங்களுக்கு அவசியமென உணர்ந்தனர். எனவே சவுல் அரேபியா சென்று மூன்று ஆண்டுகள் தங்கினார். இக்காலத்தில் அமைதியாகத் தியானம் செய்யவும், விண்ணப்பம் செய்யவும் நன்கு திட்டமிடவும் அவரால் முடிந்தது (கலா. *1:17,18*).

தமஸ்குவுக்குத் திரும்ப வந்தபோது கிறிஸ்தவ யூதர்களில் பலர் இன்னும் தம்மைக் கண்ட மாத்திரத்தில் ஒருவகை அச்சத்திற்குள்ளாவதை அவர் அறிய வந்தார். ஸ்தேவான் திருவுரையில் கூறியவற்றையே சவுலும் கூறி இயேசுவே மெய்யான மேசியா என்று பேசத் தொடங்கினுர். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் ஸ்தேவானுடைய சொற்களை அவரால் நினைவிற்குக் கொண்டு வரமுடிந்தது. ஆகவே, ஸ்தேவான் சொன்னவைகளை அறியாமலேயோ அல்லது வேண்டுமென்றே அவர் சொல்லி வந்ததோடு ஸ்தேவானுடைய பேச்சு முறைகளையும் அவர் பயன்படுத்திய சொற்களையும்கூட அப்படியே கையாண்டார். அவரைக் கேட்ட யாவரும் வியப்புக்குள்ளானுர்கள். எனினும் இப்படிப் பேசி, கிறிஸ்தவ சமயத்தின் தலைவர்களைக் கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்து கொண்டுபோக வந்திருக்கிருரோ என்று ஐயுற்ருர்கள். அவரை எப்படியும் ஒழித்துவிட வேண்டும். அவசியமானுல் கொன்றுவிடவும் வேண்டும் எனத் தீர்மானித்தார்கள். தமஸ்குவின் ஆளுநரும்கூட சவுல் வெளியே தப்பி ஓடிவிடாதபடி கோட்டை வாசல்களுக்கு இரவும் பகலும் காவல் வைத்திருந்தார் (2 கொ. 11:32).

மதிலைத் தாண்டித் தப்புவதுதான் இனி ஒரே வழி. அக்காலத்துப் பட்டணங்களில் உள்ள மதில்களின்மேல் வீடுகளும் காவற் கோபுரங்களும் கட்டியிருந்தார்கள். இந்த வீடுகள் ஒன்றில் இருக்கும்போதுதான் சவுலின் சில நண்பர்கள் அவரை ஒரு கூடையில் வைத்துக் கோட்டை மதிலுக்கு வெளியே இறக்கிவிட்டனர். சவுல் பின்பொரு சமயம் வலையில் வைத்து இறக்கிவிடப்பட்டதாக வருணிக்கிருர். ஆகவே அக்கூடை இடம் விட்டுப் பின்னப்பட்டதாயிருக்க வேண்டும் அல்லது பாதுகாப்பாக வலையில் வைத்து அதை இறக்கியிருக்கவேண்டும் எனத் தெரிகிறது (அப். 9:25; 2 கொ. 11:32,33).




சவுல் தமஸ்குவிலிருந்து தப்பித்து ஓடுதல்

எருசலேமிலும் தோல்வி

சவுல் எருசலேமுக்குப் பயணமானுர். அதிகத் தொலைவு கால் நடையாகவே சென்ருர். இப்போது யாருக்கு உதவ அவர் கால்கள் விரைகின்றனவோ அவர்களை அழிப்பதற்கு முன்பு வடக்கு முகமாகச் சென்ற பயணத்தை நினைவில் கொண்டபடி அவர் நடந்து சென்றிருக்கலாம். தமஸ்குவில் அவர் முயற்சி தோல்வி அடைந்துவிட்டது. இப்போது அவர் செல்லுமிடமோ சிங்கங்கள் வாழுமிடம் போன்றது! யாருடைய ஒப்புதலைப்பெற்று நசரேயர்களை அழிக்கஅவர் சென்ருரோ அந்த சனகரீம் பேரவையினரையே அவர் இப்போது சந்திக்கப்போகிருர்!

எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவ யூதர்களுங்கூட இவரைச் சந்தேகக் கண்களோடு பார்த்தார்கள். தங்களை வேவு பார்க்க வந்திருக்கிருரோ என்று அவர்கள் அஞ்சியிருக்கக் கூடும். ஒரு பரிசேயராக அவர் அங்கிருந்து சென்று மூன்று ஆண்டுகள் ஆகின்றன, அன்று தாம் அழிக்கப்போன புதிய சமயத்தை





சவுல் ஆரம்பத்தில் செய்த பயணங்கள்

இன்று ஏற்றுக்கொண்டவராய்த் திரும்பி வந்திருப்பதாகச் சொல்லுகிறார். இப்போது பிரதான ஆசாரியர் அவர்மேல் கோபம் கொண்டுள்ளனர். பேரவையினர் ஆத்திரம் கொண்டிருக்கின்றனர். சிலிசியாவிலும்சின்ன ஆசியாவிலும் உள்ள அவருடைய ஹெலனிய நண்பர்களும்கூட இப்போது அவரிடம் பகைமை காட்டி நிற்கிறார்கள். எனவே அவரை 'வா' என்று வரவேற்க யாருமில்லை. கடைசியாக அவர் சொல்வதைக் கேட்கவும் தமஸ்குவின் சாலையில் அவருக்குச் சம்பவித்ததை நம்பவும் மனதாயிருந்த பர்னபா என்ற ஒரு நண்பரைக் கண்டுபிடித்தார். அவரிடம் எல்லாவற்றையும் கூறினார். பர்னபா பேதுருவுக்கும், யாக்கோபுக்கும் சவுலைப் பற்றிச் சொன்னார். அவர்களும் அவரை ஏற்றுக்கொண்டனர். பதினைந்து நாட்கள் பேதுருவோடு தங்கினார் சவுல். அவர்கள் இருவரும் பேசிக்கொண்டவை பற்றி எந்த விவரங்களும் இன்று நமக்குக் கிடைக்கவில்லை. பேதுரு தம்முடைய குருநாதரை மறுதலித்த செய்தியை சவுலுக்கு நிச்சயம் கூறியிருப்பார். தம்முடைய ஆண்டவரான அவரைக் குறித்து பல செய்திகளும் சொல்லியிருக்கக்கூடும் என்று நாம் ஊகிக்க இடமிருக்கிறது.


ஹெலனியர்கள் அவரைச் சந்தித்தபோது, அவரைத் தங்கள் மதத்துரோகி என்று நினைத்தார்கள். ஏனென்றால் இவர்கள் யூத சமயத்தை 'நுனித்தோல் நீக்கும் சடங்கு' வரை அப்படியே ஏற்றுக்கொண்டிருந்தவர்கள். ஸ்தேவான் போதித்த அதே சிலிசிய ஜெப ஆலயத்தில் அவர் ஆற்றிய திருவுரையைக் கேட்க மறுத்து, அவரைக் கொல்வதற்கும் சதி பண்ணினார்கள். எருசலேமில் சவுலின் முயற்சி இங்ஙனம் தோல்வி கண்டது.

### தர்சு பட்டணம் திரும்புகிறார்

'சகோதரர்கள்' சவுலை செசரியா துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கிருந்து அவர் தம் சொந்த ஊரான தர்சு பட்டணத்திற்குக் கப்பலேறிச் சென்றார். சவுல் தம் தந்தையை எவ்விதம் சந்தித்திருப்பார்? தம் வாழ்க்கையில் ஏற்பட்ட புதிய



வணிகக் கப்பல்



கி.மு. 6–கி.பி. 4க்கு இடைப்பட்ட காலத்து நாணயத்தில் பொறிக்கப்பட்டிருந்த செசரியா துறைமுகப் படத்திலிருந்து பெரிதாக்கப்பட்ட படம்

திருப்பம் குறித்து அவரிடம் எவ்விதம் பேசியிருப்பார் என்றெல்லாம் நாம் அறிய ஆர்வம் உள்ளவர்களாய் இருக்கலாம். சவுல் சிலிசியாவிலும் சீரியாவிலும் பத்தாண்டுகள் தங்கி, திருவுரை ஆற்றி வந்தார் என்பது பின் குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது (அப். 11:25; கலா. 1:11—2:10). இக்கட்டத்தில் 2 கொ. 11:23–30 வரை உள்ள வசனங்களில் அவர் நமக்குச் சொல்லுகிற அந்த அனுபவங்கள் அவருக்கு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அவைபற்றிய செய்தி எதுவும் நடபடிகள் நூலில் இல்லை.

ஏறத்தாழ கி.பி. 34ல் சவுல் தம் சொந்த ஊரான தர்சு பட்டணம் வந்து சேர்ந்தார். அதே ஆண்டில் உரோமப் புலவர் ஒருவர் எழுதிய செய்யுள் ஒன்றில் சவுலின் சிந்தனையின் எதிரொலியை நம்மால் கேட்கமுடிகிறது:

இயேசுகிறிஸ்து ஒரு மனிதர்
மனிதரேயானாலும்—அவர்
ஒருவரே போதும், எவரும் வேண்டாம்
அவரையே பற்றிக் கொள்வேன் நான்.

இயேசுகிறிஸ்து ஒரு தெய்வமானாலும்
ஒரே தெய்வமானாலும்
சொர்க்கம், நரகம், வானம், கடல்
எங்கும் செல்வேன் அவரோடே!

## விளக்கப் பயிற்சி

1. சவுலாக எண்ணிக்கொண்டு, நசரேயர்களைத் துன்புறுத்த தமஸ்குவுக்குச் செல்வதற்கான அனுமதி வேண்டும் என்று குருக்கள் தலைவரிடம் வாய்மொழியாகக் கேளுங்கள்.
2. எருசலேமில் சவுல் 'புதிய நெறி'யினரைத் துன்புறுத்திய விதத்தை தமஸ்குவிலுள்ள வணிகர்கள் கூறும் பாவனையில் சொல்லுங்கள். இதை அனனியா (அப். 9) ஒற்றுக்கேட்டு தமஸ்குவில் சவுல் செய்ய எண்ணியுள்ள காரியங்கள் குறித்து மற்றவர்களோடு உரையாடுவதுபோன்ற உரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.
3. நீங்கள்தான் சவுல். குதிரையேறிதமஸ்குவிற்கு விரைகிறீர்கள். உங்கள் எண்ணங்களை உரக்கப் பேசுங்கள்.
4. சவுலோடு போன தேவாலயக் காவலர் பிரதான ஆசாரியரிடம் வந்து தமஸ்குவின் சாலையில் நடந்தவற்றை விவரிப்பதுபோல் விவரித்துச் சொல்லுங்கள்.
5. தமஸ்கு ஜெப ஆலயத்தில் சவுல் திருவுரையாற்ற முயலும் காட்சியை நடித்துக் காட்டுங்கள்.
6. சவுல் தமஸ்கு மதில் வழியாக இறக்கப்பட்டு, தப்பிச் செல்லும் காட்சியைப் படம் வரைந்து காண்பியுங்கள்.
7. (அ) தமஸ்குவில் (ஆ) எருசலேமில் சவுல் தோல்வி கண்டதற்குக் காரணம் என்ன?
8. அத்தியாயத்தின் இறுதியில் உள்ள உரோமப் புலவரின் செய்யுளை மனப்பாடம் செய்துகொள்ளுங்கள்.
9. கீழ்க்கண்டவர்களுக்கு இடையே நடக்கும் உரையாடல்களில் ஒன்றைத் தயார் செய்யுங்கள்:
   (அ) அனனியா—யூதா,
   (ஆ) பேதுரு—சவுல்,
   (இ) சவுல்—அவர் தந்தை.
10. சீப்புரு தீவில் உள்ள தம் உறவினருக்கு புதிய சமயத்தையும் தம் புதிய நண்பரையும் விளக்கி, பர்னபா எழுதுவதுபோல் கடிதம் ஒன்று எழுதுங்கள்.
11. சவுல் தம்மிலே நிகழ்ந்த மாற்றம்குறித்து மூன்று இடங்களில் விவரிக்கிறார். இம் மூன்று இடங்களிலும் சில விபரங்கள் வேறுபடுகின்றன. எங்கு, எவ்விதம் அவை வேறுபடுகின்றன என்று கண்டு பிடியுங்கள்.
12. 'தொண்டு செய்ய அழைக்கப்பட்டோம்' என்ற பொருளில் காலைக் கூட்டத்திற்கான ஆராதனை முறை ஒன்று தயார் செய்யுங்கள். அதில் இன்றைய நற்செய்தித் தூதுவர் ஒருவர் வாழ்க்கை பற்றி சொல்வதையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.




பவுல் (உரோம அடிநிலக் கல்லறையில் வரையப்பட்டிருந்த படம்)

அத்தியாயம் 6

# புற இனத்தவரை சபை ஏற்கிறது

*(9:31—12:23)*

இப்போது தொல்லையற்ற ஓர் அமைதியான சூழ்நிலையில் திருச்சபை இருந்துவந்தது. 'திருச்சபை தொல்லையின்றி அமைதியுடனிருந்தது' என்ற வரியை லூக்கா எழுதும்போது அவர் முகத்தில் கோணலான ஒரு புன்முறுவல் தோன்றியிருக்கவேண்டும். சபைக்குத் தொல்லை கொடுப்பவராக சவுல் இருந்த காலத்தில் திருச்சபையினர் நிம்மதியுடன் இருக்கவில்லை. அவர் நற்செய்தி உரைக்கத் தொடங்கியபோதும் அவர்களுக்கு நிம்மதி இல்லை! இப்போது அவர்களைவிட்டு அவர் சென்றுவிட்டார். இனி சபைகள் அமைதியான சூழ்நிலையில் வளரலாம்; நன்கு கட்டப்படலாம்.

## பேதுருவின் திருவுரைப் பயணம்

நற்செய்தியை உரைக்கும் திருப்பணியில் பேதுரு மக்களோடு அளவளாவி எங்கும் சுற்றித் திரிந்தார். யூதேயாவின் மலையடிவாரத்தில், செழிப்பான சமவெளியில் இருந்த லித்தா என்ற கிராமத்தில் பேதுரு நுழைந்தார். இங்கு அவர் ஐனேயா என்ற முடக்குவாதக்காரரைச் சுகப்படுத்தினார். அவரிடம், 'இயேசுகிறிஸ்து உம்மைக் குணமாக்குகிறார்' என்று சொல்லுகிறார். 'எழுந்து, உம் படுக்கையை நீரே சுருட்டிவையும்' என்றும் சொல்லுகிறார். 'நான் உம்மைக் குணப்படுத்துகிறேன்' என்று சொல்லவில்லை என்பதைக் கவனிக்கவும். ஐனேயாவின் படுக்கை இலேசான ஒரு மெத்தையாகவோ, பின்னப்பட்ட ஒரு பாயாகவோ இருந்திருக்கலாம். பேதுரு செய்த இந்த அற்புதம் இயேசு செய்திருந்த இரு அற்புதங்களின் எதிரொலி போன்றது. பேதுருவின் சொற்களும் இயேசுவின் சொற்களை நமக்கு நினைப்பூட்டுவனவாய் அமைகின்றன (மா. 2:11; யோ. 5:8).

இங்கிருந்து பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவில், மத்தியதரைக் கடலோரம் ஆரஞ்சுத் தோப்புகளுக்கு நடுவே யோப்பா பட்டினம் இருந்தது. சாலொமோன் காலத்தில் இப்பட்டினம் நன்கு புகழ்பெற்றிருந்தது. அக்காலத்தில் லீபனோனின் கேதுரு மரங்கள் தீருவின் கரையில் மிதக்கவிடப்பட்டு இங்கு வந்து கரைசேர்ந்தன. இங்கிருந்து அவைகளை நிலவழியாக எருசலேம் தேவாலயக் கட்டுமானத்திற்கென்று அனுப்பினார்கள். இங்குதான் தொர்க்காள் வசித்து வந்தார் (தபீத்தாள் என்ற அரமியச் சொல்லுக்கு இணையான கிரேக்கச் சொல் தொர்க்காள்). இவர் 'புதிய நெறி'யினரால் நேசிக்கப்பட்ட ஒரு முக்கிய உறுப்பினர். இவர் இறந்தபோது நிறையப் பேர் கண் கலங்கினார்கள். பேதுருவுக்கு உடனே ஆள் அனுப்பினார்கள். அவர் அங்கு வந்தபோது, முன்னொருநாள் தம் குருநாதரோடு யவீருவின் வீட்டிற்குச் சென்றபோது தங்களுக்கு முன்னதாகவே மாரடித்து அழும் கூட்டத்தினர் வந்திருந்ததுபோல இப்போதும் வந்திருந்ததைக் கண்டார். வழக்கம்போல் அவர்கள் அழுது அரற்றிக்கொண்டு இருந்தார்கள். இக்கூட்டத்தை அன்று இயேசு விரட்டியவண்ணம் பேதுருவும் விரட்டினார். இயேசு ஜெபித்தவண்ணமாகப் பேதுருவும் ஜெபித்தார். பிறகு 'தபீத்தாளே, எழுந்திரு' என்றார். அவர் மரணத் துயில் நீங்கி எழுந்தார். தொர்க்காள் உயிர்மீண்ட செய்தி காட்டுத்தீ போல் எங்கும் பரவியது. விரைவாக வளர்ந்துவரும் திருச்சபையில் இயேசுவை நம்புகிறவர்கள் பலர் புதிதாகச் சேர்ந்தனர்.

பேதுரு யோப்பாவில் தங்கிவிட்டார். சீமோன் என்ற தம் பெயரைக்கொண்ட வேறொரு மனிதர் வீட்டில் அவர் தங்கியிருந்தார். இவர் தோல் பதனிடும் வேலை

செய்பவர். தண்ணீர் துருத்திகளுக்கும் திராட்சைரசத் துருத்திகளுக்கும் தேவைப் படும் முழு அளவான தோலைத் தயாரித்து வந்தார். ஆடுகளின் தோலை உரித்து எடுத்த பின் கால்களையும் கழுத்தையும் மூடியிருந்த தோலில் உள்ள துவாரங்களை நன்ருக மூடி, ஒவ்வொன்ருக அடக்கமாய் எரியும் நெருப்புப் புகையில் வாட்டப்படுவதற்காகத் தொங்க விட்டுவிடுவார் (சங். 119:83). ஆட்டுத்தோல் இவ்வாறு ஓரளவு பதனம் செய்யப்படும். இவ்விதம் தோல்கள் நெருப்பில் அசைவாட் டப்பட்டு முறுக்கிக்கொள்ளும்போது இவை பெரிய புட்டிபோல் தோன்றும். தண்ணீரால் அல்லது இரசத்தால் நிரப்பப்பட்டிருக்கும் இந்தத்தோல் துருத்திகளின் தோற்றத்தை புத்தகம் 3, 75ம் பக்கத்தில் உள்ள படத்தில் நாம் பார்க்கலாம். இவைகள் இன்றும் எபிரோனில் பயன்படுத்தப்படுவதைக் காண லாம்.

பொதுவாக, இதுபோன்ற வேலைசெய்யும் ஒருவர் வீட்டில் ஒரு யூதர் தங்கவே மாட் டார். ஏனென்ருல் ஒன்று தோல் பதனிடும் சீமோன் யூதர் அல்லர்; புற இனத்தவர். இன் னென்று இவர் இறந்துபோன விலங்குகளின் உடலைத்தொட்டு வேலைசெய்ய வேண்டிய திருந்தது. இது ஒரு தீட்டான வேலை. கலிலேயரும், இயேசுவின் சீடருமான பேதுரு இப்போது ஓர் உண்மையை அறிந்துகொள் ளத் தொடங்கினுர். அது தீட்டான தொழிலை மேற்கொண்டிருக்கும் காரணத்திற்காக இயேசு ஒருவரை வேண்டாமென்று சொல்ல மாட்டார் என்பதே. தம் குருவின் அரசில் வாழும் மக்களைப்பற்றிய தம் கருத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகத் திருத்திக்கொண்டு வந்தார்பேதுரு.புறவினமக்களும்சபையாகிய தொழுவத்திற்குள் விரைவில் கொண்டுவரப் படலாம் என்பதை அவர் காணத் தொடங்கி ஞர். யூதர்களின் திருச்சட்டத்தில் சொல்லப் பட்ட சடங்காச்சாரங்களைக் கைக்கொள்ள வேண்டியது அவசியம் இல்லை என்றும் அவர் கருதினுர். ஸ்தேவான் கூறியதுபோல், மோசே யின் திருச்சட்டத்தைக் காட்டிலும், இயேசு வின் திருச்சட்டம் முக்கியமானது என்ற உண்மையை நன்ருக அறிந்துகொண்டார்.

## பேதுருவும் கொர்நேலியுவும்

பேதுரு இந்தப் பாடத்தை உறுதியாகக் கற்றுத் தெளியத் தருணம் வந்துவிட்டது. நாற்பத்தைந்து கிலோமீட்டர் தொலைவி லுள்ள உரோமக் கோட்டைக் காவற்படை யிருந்த செசரியாப் பட்டினத்தில் கொர்நேலியு என்னும் நூற்றுவர் தலைவர் ஒருவர் இருந்தார். 600 படைவீரர்கள் கொண்ட இத்தாலியப்படை அந்தத் தலைநக ரில் இருந்தது. அதற்குப் பொறுப்புத் தலைவர்களாக அறுவர் நியமிக்கப்பட்டிருந்த னர். அவர்களில் கொர்நேலியுவும் ஒருவர். கப்பர்நகூமில்இருந்த ஒரு நூற்றுவர் தலைவரை நாம் கண்டோம். அவர் யூதர்களுக்கு ஓர் அழகான ஜெப ஆலயத்தைக் கட்டிக் கொடுத் திருந்தார் (புத்தகம் 3, பக்கம் 39,40). அவ ரைப் போலவே இந்தக் கொர்நேலியுவுக்கும் யூதசமயத்தில் நம்பிக்கை இருந்தது.செசரியா வில் இருந்த ஜெப ஆலயம் சென்று இவர் தொழுதுவருவார். கப்பர்நகூம் நூற்றுவர் தலைவருக்கு இயேசு அறிமுகமானவர். இவ ருக்கோ இயேசுவைத் தெரியாது. ஆனுலும் கடவுளுக்குப் பயந்து நடக்கும் ஒரு பண்பாளர். பழைய சமயத்தையும், புதிய சமயத்தையும் இணைக்கும் பாலம் போன்றவர் களில் இவரும் ஒருவர். சிறிது சிறிதாக இவர் யூத சமயத்தின் எல்லாச் சடங்குகளையும் ஏற்று நுனித்தோல் நீக்கப்பெற்று ஒரு யூத ராக மாறிவிடுவார் என்று இவரைக் குறித்துப் பல யூதர்கள் எண்ணிக்கொண் டிருந்திருக்கலாம். ஆனுல், யூத சமயத்தைத் தழுவியிருந்த மற்றவர்களைப்போலவே இவ ருக்கும் புதிய சமயத்தில் இப்போது ஆர்வம் உண்டாயிற்று. யூதராக மாருமலேயே யூதர் களின் மேசியாவைப் பின்பற்றும் புதிய சபை யில் இவர் அங்கம் வகிக்கப் போகிருர்.

பேதுரு ஆற்றிய திருவுரைகள், நடத்திய அற்புதங்கள் ஆகியவை குறித்து இவர் கேள்விப்பட்டிருக்கவேண்டும். ஒரு கனவால் தூண்டப்பட்டு, யோப்பாவுக்கு ஆள் அனுப்பி தம்மை வந்து பார்த்துப் போகும்படி பேதுரு வைக் கேட்டுக்கொண்டார். பேதுருவை அழைத்து வரும்படி தம் கீழ் பணியாற்றிய நம்பிக்கைக்குகந்த இரண்டு அடிமைகளையும் ஒரு போர்வீரரையும் அனுப்பினுர்.

இதற்கிடையில், சமாரியாவில் பிலிப்பு ஆற்றிவந்த திருப்பணி குறித்தும், அவர் எத்தியோப்பிய நிதி அமைச்சரைத் திருமுழுக் காட்டியது குறித்தும் பேதுரு சிந்திக்கத் தலைப்பட்டிருக்கலாம். இவற்றிற்கும் இயேசு வின் அரசுக்கும் என்ன தொடர்பு இருக்க லாம் என்றும் அவர் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். அவர் இவற்றைப்பற்றிச் சிந்திக்க மொட்டை மாடிக்குச் சென்றிருந்தார். அப் போது ஆறு மணி—நம் கணக்குப்படி நண் பகல் 12 மணி—மத்தியான உணவுக்குரிய நேரம். நல்ல பசி நேரம். இப்படிப்பட்ட வேளையில் அவர் உணவுபற்றிய சிந்தனையில் ஈடுபடுவது வியப்பல்ல. மாடியில் இருந்தபடி

துறைமுகத்தில் நின்ற கப்பல்களின் வெண்ணிறப் பாய்மரங்களை அவர் கண்டார். அவர் கண்ட காட்சியில் இந்தப் பாய்மரத் துணிகளே துப்பட்டியாக மாறி விலங்குகள் அதில் அமர்ந்திருப்பதுபோல் அவருக்குக் காட்சியளித்தன. அப்போது 'அடித்துச் சாப்பிடு' என்ற குரல் கேட்டது. யூதர்கள் சாப்பிடக் கூடாது என்று விலக்கப்பட்டிருந்த விலங்குகளையே தமக்குண்டான காட்சியில் பேதுரு கண்டார். அவைகள் 'தீட்டான', 'அசுத்தமான' மிருகங்கள் (லேவி. 11:1–32,46,47). இன்றுங்கூட இதே காரணங்களுக்காக வைராக்கிய யூதர்கள் இவைகளைச் சாப்பிட மாட்டார்கள். அவர்கள் யூதர்களின் மரபுச் சட்டப்படி இரத்தமில்லாத இறைச்சியைத் தான் சாப்பிடுவார்கள். பேதுரு இவைகளைச் சாப்பிடமாட்டேன் என்றபோது, 'கடவுள் சுத்தமாக்கியவைகளை நீ தீட்டாக எண்ணாதே' என அந்தக் குரல் அவரை எச்சரித்தது. இப்படி மூன்று முறை நடந்தது.




உரோம நூற்றுவர் தலைவர்

இதன் பொருள் என்னவாயிருக்கும் என்று எண்ணிய நிலையிலேயே வீட்டிற்கு வெளியே இருந்த படிக்கட்டுகள் வழியாய் இறங்கி முற்றத்திற்கு வந்தார் பேதுரு. அங்கு யூதரல்லாத மூன்றுபேர் அவருக்காகக் காத்து நின்றனர். கடவுள் வழிகாட்ட, தங்கள் தலைவரின் ஆணைப்படி பேதுருவைப் பார்க்க அவர்கள் வந்திருந்தனர். அப்போது பேதுரு கடவுள் தமக்குச் சொல்ல விரும்பியது இன்னதென்று அறிந்துகொண்டார். புற ஆசாரத்துக்கான சட்டத்தைத் தளர்த்தலாம். அதாவது, அதை ஒதுக்கி வைக்கலாம் அல்லது பொருட்படுத்தாமல் விட்டுவிடலாம். புற இன மக்கள் 'தீட்டானவர்கள்' என்று அவருக்குப் போதிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்கள் அவரைப் போன்றவர்களே என்று அறிந்துகொண்டார். அவர்களையும் படைத்தது இறைவன்தான். அவரே அவர்களை ஏற்றுக்கொள்ளுகிறார். இப்பெரிய உண்மையை இப்போதுதான் பேதுரு அறிந்துகொண்டார். காய்பா என்ற அந்தத் தலைமை குருகூட ஒருநாளில் பொந்தியு பிலாத்து என்ற அந்த உரோமர் அருகில் செல்லத் தயங்கினார். அதற்குக் காரணம், அப்படிச் சென்றால், பஸ்கா பண்டிகையை ஆசரிக்க முடியாதவாறு 'தீட்டாகி'ப் போவார் என்ற அச்சம் அவருக்கிருந்தது. இப்போது பேதுரு ஓர் உரோமருடைய வீட்டிற்குள் போய் அங்கே திருவுரையும் ஆற்றப்போகிறார். இதுவரை நற்செய்தி யூதர்களுக்கு மட்டுமே கூறப்பட்டு வந்தது. இனி தடையின்றி புற இனத்தாருக்கும் அது கூறப்படப்போகிறது.

### செசரியா பட்டினத்தில்

மறுநாள் பேதுரு சில நண்பர்களுடன் செசரியாவுக்குப் புறப்பட்டார். அங்கே கொர்நேலியு தம் வீட்டாரோடு பல நண்பர்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு ஆயத்தமாக இருந்தார். பேதுரு மறுநாள் வந்து சேர்ந்தார். கடவுள் அனுப்பியவராகக் கருதி, கொர்நேலியு, பேதுருவை வரவேற்று வாழ்த்தினார். தம்முடைய உரோமத் தெய்வங்களின் முன் மண்டியிட்டு மரியாதை காட்டுவதுபோல், பேதுருவுக்கும் மரியாதை காட்டினார். தாம் ஒரு மனிதனே என்பதைப் பேதுரு அவருக்குச் சொல்லி, யூதர் என்ற



இப்படிப்பட்ட ஒரு வீட்டில் கொர்நேலியு வாழ்ந்திருக்கலாம்

முறையில் கொர்நேலியுவின் வீட்டிற்குள் வர இயல்பான தயக்கம் தமக்கு உண்டு என்பதையும் எடுத்துக் கூறினர். அந்த அறையைப் பார்த்தார் பேதுரு. பளிங்குத் தரை. உரோம மேஜைகளும், திண்டு மெத்தைகளும் இருக்கைகளாகப் போடப்பட்டு, பட்டுத் திரைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. ஆண்களும் பெண்களும் உரோம நாகரிக முறைப்படி உடை அணிந்திருந்தனர். போர்வீரர்கள் சீருடைகளில் கம்பீரமாக நின்றனர். எட்டி எட்டிப் பார்த்தவண்ணம் அடிமைகள் வாசல் தோறும் காணப்பட்டனர். பேதுரு இவைகளினல் எவ்வித மலைப்பும் அடையவில்லை. இப்புற இனத்தவர் வீட்டில், தாம் 'தீட்டாகி'ப் போனதாக அவரால் நினைக்கவும் முடியவில்லை. ஒருவித தெய்வீகச் சூழ்நிலை அங்கு நிறைந்திருப்பதாகவும், தம் குருவும் ஆண்டவருமான இயேசுவின் பிரசன்னம் அங்கிருப்பதாகவும் அவர் உணர்ந்தார். 'நீங்கள் என்னை அழைத்த காரணம் என்ன?' என்று பேதுரு கேட்டார். கொர்நேலியு தம் தரிசனத்தை விளக்கிச் சொன்னர். பேதுருவுக்கு நன்ருகப் புரிந்துவிட்டது. புதிய சமயத்தில் புற இனத்தவர் நுழைவதைத் தடுத்த கடைசித் தடுப்புச் சுவரை இப்போது அவர் உடைத்தெறியப் போகிருர். அதில் அவர்கள் இனித் தாராளமாக நுழையலாம். 'புதிய நெறி'யில் அவர்களுக்கும் இடமுண்டு.

பேதுரு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் குறித்து அவர்களிடம் பேசினர். அவர் இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது தூய ஆவியானவர் பேராற்றலோடு எல்லோர் மேலும் வந்திறங்கினர். புது அனுபவத்தின் மகிழ்ச்சியில் அவர்கள் 'பல்வேறு மொழிகளில் உரையாடினர்கள்'; கடவுளின் புகழ் பாடினர்கள். புற இனத்தவரும் தூய ஆவியானவரைப் பெற்ற இந்த நிகழ்ச்சி, பேதுருவுக்கும் அவரோடிருந்த நண்பர்களுக்கும் ஓர் அற்புத நிகழ்ச்சியாக இருந்தது. பேதுருவுக்கு இப்போது நல்ல உறுதி பிறந்துவிட்டது. செயல்வீரரான அவர் செயலில் இறங்கினர். உரோமராகிய இவர்கள் திருச்சபையில் சேர்க்கப்பட்டதற்குப் புற அடையாளமாக, இவர்கள் எல்லோரும் திருமுழுக்குப் பெற வேண்டும் எனக் கட்டளை கொடுத்தார்.

## பேதுரு எருசலேமுக்கு வந்தார்

பேதுரு எருசலேமுக்குத் திரும்பியபொழுது, எருசலேம் சபையில் உள்ள யூதர்கள் அவர் மேல் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். இது குறித்து நாம் வியப்படையவில்லை. யூதச் சட்டத்தை மீறியதாக அவர்மீது குற்றஞ் சாட்டினர். நுனித்தோல் நீக்கப்படாத மற்ற இன மக்களோடு கலந்துறவாடுவது தீட்டாகவே எப்பொழுதும் கருதப்பட்டு வந்தது. யூதர்கள் சாப்பிடுமுன் முழங்கை வரை கைகளைக் கழுவுவார்கள். இது ஏதோ சுகாதாரத்திற்காகச் செய்யப்படும் ஒரு செயலன்று. வீதிகளிலும், ஆலயத்தின் கூடத்தி

லும், சந்தைவெளிகளிலும் புற இனத்தவரைத் தொட்ட தீட்டு நீங்கவே இந்தச் சுத்திகரிப்பு.

பேதுரு அவர்களுக்கு விளக்கம் ஒன்றும் கொடுக்கவில்லை. தாம் கண்ட காட்சியையும், அதைத் தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகளையும் அப்படியே எடுத்துச் சொன்னார். ஆண்டவரின் திருமுழுக்கான தூய ஆவியானவரின் முழுக்கை உரோமார்களும் பெற்றுவிட்டதை எடுத்துக்கூறி, 'கடவுளைத் தடுக்க நான் எம்மாத்திரம்?' என்ற கேள்வியைக் கேட்டு முடித்தார். இப்போது திருச்சபையில் கடவுள் மற்ற மக்களுக்கும் இடமளித்துவிட்டார் என்பதற்கான அடையாளமாக இதை யூதர்கள் எடுத்துக்கொண்டனர். ஆனாலும் பலருக்கு இன்னும் ஐயப்பாடு இருந்தது; மனவருத்தமும் இருந்தது. இச்சம்பவங்கள் அனைத்தும் எருசலேமுக்கு அண்மையிலேயே நடந்தன. இது மற்ற இடங்களுக்கும் பரவமுடியும் என்பதற்கான அறிகுறிகள் அப்போது காணப்படவில்லை.

### சிரியாவில் உள்ள அந்தியோகியா

இதற்கிடையில் துன்புறுத்தப்பட்டு சிதறுண்ட யூதர்கள் பெனிக்கேயா, சீப்புரு, சீரியா போன்ற பகுதிகளில் உள்ள பட்டணங்களில் நல்ல பணி செய்திருந்தனர். அந்தியோகியா சீரியாவின் தலைநகரமாயிருந்தது. சிலை வணக்கத்திற்கும், மூடநம்பிக்கைக்கும் பெயர்போனபட்டணம் இது. அங்குள்ள கிறிஸ்தவ சமயத்தினருக்கு இது மிக முக்கியமான ஒரு பட்டணமாகிவிட்டது. இப்பட்டணம் 'கிழக்கத்திய அரசி', 'அழகிய அந்தியோகியா', 'உரோமப் பேரரசின் மூன்றாவது பெரிய பட்டணம்' எனப் பல விதமாக வருணிக்கப்பட்டது. கி.மு. 300ல் முதலாம் அந்தியோகு அரசருடைய பெயரில் ஒரு கிரேக்கப் பட்டணமாக இந்த அந்தியோகியா திகழ்ந்தது (புத்தகம் 2, அத்தியாயம் 11). உரோமர்கள் கி.மு. 64ல் இதைப் பிடித்து விரிவுபடுத்தினர். எனவே, இது மிகப் பெரிய ஒரு பட்டணமாயிருந்தது. இங்குள்ள மக்களில் பலர் பணம், படாடோபம், தன்னலம் என்பவற்றைப் பற்றியே எண்ணி, சிற்றின்பப் பிரியர்களாய் வாழ்ந்துவந்தனர். சிலருக்கு வாழ்க்கை பற்றிச் சீரிய கருத்து இருந்தது. இவர்கள் சிறந்தமுறையில் கடவுளை வழிபட்டு வந்தனர் என்று நாம் காண்போம்.

மத்தியதரைக் கடலில் இருந்து இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் ஓடும் ஓரொந்தீஸ் நதிக்கரையில் அமைந்துள்ள பட்டணம் இது. இதன் துறைமுகமாக செலூக்கியா விளங்குகிறது. எல்லோராலும் வெறுக்கப்பட்ட அந்தியோகு எப்பிபானஸ் அரசன் ஆணைப்படி மலையின் ஒரு பகுதியில் பெரிய சிலை ஒன்று வடிக்கப்பட்டிருந்தது. இறந்தவர்கள் வாழும் இடமான பாதாளத்தில் (Hades) ஓடும் 'ஸ்டிக்ஸ்' என்ற நதியைக் கடந்து செல்ல உதவும் படகோட்டி என நம்பப்பட்ட கேரொனுடைய சிலை அது. இச்சிலைக்கு எதிரே எட்டு கிலோமீட்டர் நீளத்திற்கு கிழக்கு மேற்காக ஒரே நேர் கோட்டில் தூண்கள் நிறைந்ததும் வெள்ளைப் பளிங்காலானதுமான உரோமச் சாலை ஒன்று இருந்தது. பட்டணத்தின் மதில்கள் பிரமாண்டமான அளவில் இருந்திருக்கவேண்டும். இன்று அழிந்து கிடக்கும் அதன் சில பகுதிகள் மூன்று மீட்டர் அகலங்கொண்டதாய், பன்னிரண்டு மீட்டர் உயரத்தில், நாற்பத்தைந்து மீட்டர் தூரத்திற்கொன்றாக அமைந்த காவற்கோபுரங்களோடு காணப்படுகின்றன. டிரேஜன் கட்டிய கால்வாய்ப் பாலத்தின் தூர்ந்துபோன பகுதிகள், வாட்போருக்கும் இரத ஓட்டப் பந்தயத்திற்கும் உபயோகப் படுத்தப்பட்ட ஒரு மாபெரும் திறந்தவெளி விளையாட்டு அரங்கின் இடிபாடுகள் ஆகியவை உரோமரின் கட்டிடக் கலைத்திறனையும், பொறியியல் திறனையும் நமக்கு நினைவூட்டுகின்றன. உரோம ஆடம்பரங்களும், கிரேக்கச் சிறப்பும் அந்தியோகியாவில் காணப்பட்டன: குளிக்கும் பொது இடங்கள், அறைகளைச் சூடாக்கும் வெப்ப அமைப்புகள், தெரு விளக்குகள், கழிநீர் வடிகால்கள், நீரூற்றுகள், அரங்கங்கள், ஆலயங்கள், பூங்காக்கள், சிற்பங்கள் ஆகியவை அங்கு இருந்தன. அப்பட்டணத்தில் நன்கு அமைக்கப்பட்ட மாளிகை போன்ற கட்டிடங்களில் செல்வர்கள் வசித்தார்கள். சற்றுக் குறைந்த நிலையில் வாழ்ந்தவர்கள், இன்று நடுத்தர மக்கள் வசிப்பதுபோல் அடுக்கு வீடுகளில் வாழ்ந்து வந்தனர்.

அந்தியோகியாவின் தெருக்களில் அகில உலகத்தையும் காணலாம். சீரியர்கள், யூதர்கள், கிரேக்கர்கள், உரோமர்கள், பெனிக்கேயர்கள், பிரிகியர்கள், எகிப்தியர்கள்— இவ்வாறு உலகின் பல பாகங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு நடமாடினார்கள். பேரரசருடைய தலைமை ஆளுநர் அங்கே தங்கியிருந்தார். வணிகர்கள் பெரும் கூட்டமாக ஒட்டகங்களில் சரக்கேற்றிக்கொண்டு தொலைதூரத்து நாடுகளிலிருந்தெல்லாம் அந்தியோகியாவுக்கு வருவார்கள். அதன் சந்தை வெளிகளிலும், கடைவீதிகளிலும், கடைகளிலும் இவர்கள் கூட்டந்தான் நிறைந்திருக்கும். இவ்வணிகர்


கள் உலோகத்தினால் பொருட்கள் செய்வோர், தோலினால் பொருட்கள் செய்வோர், சாயக்காரர், பட்டுகள், துணிமணிகள், வாசனைத் திரவியங்கள், மட்பாண்டங்கள் வாணிகம் செய்வோர் முதலியவர்களுடன் பண்டமாற்று செய்தனர். இந்த நெருக்கமான பட்டணத்து வீதிகளில் நசரேயர்களும் காணப்பட்டனர். இவர்களில் சிலர் கரைக்கப்பாலுள்ள சீப்புரு தீவிலிருந்தும், பலர் எருசலேமிலிருந்தும் வந்திருந்தார்கள். இவர்களுடைய போதனையின் மூலமாய் இயேசுவினுடைய அரசின் நற்செய்தி இங்கும் கொண்டுவரப்பட்டது. அவர்கள் பேச்சைக் கேட்ட மக்கள் இயேசுவில் நம்பிக்கை வைத்தனர். தங்கள் தெய்வங்களையும், மந்திரங்களையும் வேண்டாமென்று துறந்துவிட்டு, புதிய சமய போதனை தங்களுக்கு அளித்த மகிழ்ச்சியையும் களிப்பையும் ஏற்றுக்கொண்டனர்.

### அந்தியோகியாவில் 'கிறிஸ்தவர்கள்' என்று அழைக்கப்பட்டனர்


அந்தியோகியாவில் கிறிஸ்துவை நம்புகிறவரை யாரோ 'கிறிஸ்து அவன்' என்று குறிப்பிட்டிருக்கலாம். அவன் இகழ்ச்சியாகவோ, கேலியாகவோ அவ்விதம் குறிப்பிட்டிருக்கலாம். 'கிறிஸ்தவன்' என்பது கேலிப் பெயர். அன்று முதல் இயேசுவைப் பின்பற்றுவோர் இப்பெயரை வைத்துக் கொண்டனர். இன்றுவரை அந்தப் பெயராலேயே நாம் அழைக்கப்படுகிறோம் (அப். 26:28; 1 பே. 4:16).

திருச்சபையின் எதிர்பாராத வளர்ச்சி எருசலேமில் வாழ்ந்த யூதர்களை மிகவும் சங்கடப்படுத்தியது. சிலுவையில் அடித்துக்கொல்லப்பட்ட இயேசுவே கிறிஸ்து அதாவது வாக்குப்பண்ணப்பட்ட மேசியா என்பதை அவர்கள் இன்னமும் ஒத்துக்கொள்ள மறுத்தனர். எனவே இவர்களை நசரேயர்கள் என்றே யூதர்கள் அழைக்க எண்ணினர். ஆனாலும் 'கிறிஸ்தவன்' என்ற பெயரே நிலைத்துவிட்டது.

எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் வேறு காரணத்திற்காக நசரேயர்களின் இப்பிரிவினர் வளர்ச்சி அடைவது குறித்துக் கலக்கமடைந்தார்கள். எருசலேமில் இருந்த குழுவினருக்கு இது ஒரு பெரிய உரிமைப் பிரச்சினையாய் இருந்தது. யூதரல்லாதாரும் கிறிஸ்



உரோமப் பேரரசில் அந்தியோகியாவின் முக்கியத்துவம்




அந்தியோகியா

தவர்களாக மாறுகிறார்களே! இஸ்ரவேல் மக்கள்தானே கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட இனம். இந்த நெடுநாளைய நம்பிக்கை இப்போது தகர்க்கப்படுகிறதே! புற இன மக்கள் நுனித்தோல் நீக்கப் பெறாதவர்கள்; எனவே 'தீட்டானவர்கள்'. இவர்களைச் சபை ஏற்றுக்கொள்வதென்றால், முதற்கண் அவர்கள் திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து முழு யூதர்களாக மாறவேண்டாமா? தேவாலயத்தில் இவர்களுக்கென்று குறிக்கப்பட்ட கூடத்தைக் கடந்து உள்ளே வந்துவிட்டால் மோசேயோடு கடவுள் செய்த உடன்படிக்கையில் என்றைக்குமாக ஒரு முறிவு ஏற்பட்டுவிடுமே *(அப். 21:27—30, 106ம் பக்கம் பார்க்கவும்).*

கொர்நேலியுவைப் பேதுரு ஏற்றுக்கொண்டது இருக்கட்டும். எருசலேமில் உள்ள சபை மூப்பர்கள் இதற்கான காரணத்தை நன்கு உணர்ந்து இதை ஒரு தனி நிகழ்ச்சியாக அனுமதித்துவிட்டனர். ஆனால் அந்தியோகியாவில் வளர்ந்துவரும் இயக்கத்தைக்குறித்து அசட்டையாக இருக்கக்கூடாது. இது பற்றிச் சரியாக விசாரித்தறிய வேண்டும். அந்தியோகியாவுக்கு இவர்கள் போகவில்லை. இவர்கள் சார்பாக பர்னபாவை அனுப்பினார்கள். இவர் சவுலின் நண்பராகவும், 'நல்ல மனிதராகவும்; தூய ஆவியானவரை நிறைவாகப்பெற்றவராகவும் இருந்தார்'. இவர் சீப்புரு தீவுக்காரர். ஆகையால் தம் நாட்டவரோடு சரளமாய்ப் பேச முடியும். இவர்களே சீரியாவிலே நற்செய்தி கூறி கிறிஸ்தவ இயக்கத்தை ஆரம்பித்திருந்தார்கள். அந்தியோகியாவில் கிறிஸ்தவர்கள் கூடும் இடத்தைத் தேடி பர்னபா சென்றார். கொஞ்சநாட்களுக்குப்பின், தம்மைவிடப் பேச்சாற்றல் உள்ளவரும், வேதவாக்கியங்களில் சிறந்த பயிற்சி உடையவரும், தலைமை ஏற்று நடத்தும் திறம் படைத்தவருமான ஒருவர் தமக்கு உதவிக்கு வந்தால் நல்லது என உணர்ந்தார். அவர் உயிர்த்தெழுந்த ஆண்டவரிடத்து நம்பிக்கையுடைய யூதராகவும் அந்தியோகியா பட்டணத்தையும், அதன் மக்களையும் நன்கு அறிந்தவராகவும் இருந்தால், தாம் எடுத்துக்கொண்ட பணிக்கு இன்னமும் உதவியாக இருக்குமே என்று நினைத்தார். இத்தகைய திறமைகள் பொருந்திய ஒரே ஆள் தர்சு பட்டணத்து சவுல் என்று கண்டார் பர்னபா.

எனவே தர்சு பட்டணம் சென்று சவுலைக் கண்டார் பர்னபா. இது ஏறத்தாழ கி.பி.

45ல் நடந்த நிகழ்ச்சி. சவுல் தம் சொந்த ஊர் திரும்பி பத்து ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்போது என்ன பணியானாலும் அதைச் செய்ய அவர் தயாராகிவிட்டார்! நற்செய்தியை உலகம் எங்கணும் எடுத்துச் செல்ல அவர் தமது ஆண்டவரால் 'தேர்ந்தெடுக்கப்பட்ட கருவி'. சவுலும் பர்னபாவுமாகச் சேர்ந்து அந்தியோகியா வந்து அங்குள்ள கிறிஸ்தவர்களோடு தங்கிவிட்டார்கள். அங்கு திருவுரையாற்றி திருப்பணியில் ஓராண்டு ஈடுபட்டிருந்தனர்.

### யூதேயாவில் பஞ்சம் உண்டாயிற்று

இச்சமயத்தில் அகபு என்ற ஒரு கிறிஸ்தவத் தீர்க்கர் எருசலேமிலும் யூதேயாவிலும் பஞ்சம் உண்டாகப்போவதாய் முன் அறிவித்தார். கிலவுதியு என்ற உரோமப் பேரரசரின் ஆட்சியின் (கி.பி. 41—54) தொடக்கத்தில் இப்பஞ்சம் ஏற்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. பணமாகவும் உணவாகவும் அந்தியோகியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் அன்பளிப்புகளைக் கொடுத்து அதை எருசலேமில் உள்ள அப்போஸ்தலர்களுக்கு எடுத்துச் செல்லுமாறு பர்னபாவையும், சவுலையும், தீத்துவையும் கேட்டுக்கொண்டனர் (அப். 11:30; கலா. 2:1). எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, கழுதைகளிலும் ஒட்டகங்களிலும் ஏற்றிக்கொண்டுவரப்பட்ட இந்தத் தானியமூட்டைகளையும், உலர்ந்த திராட்சைப் பழங்களையும், அத்திப்பழங்களையும் துருத்திகளில் இருந்த ஒலிவ எண்ணெயையும் திராட்சை ரசத்தையும் கண்டபோது பெருமகிழ்ச்சியாயிருந்திருக்கும். எருசலேமில் இருந்த சபையின் மூப்பர்களிடம் சின்ன ஆசியாவில் உள்ள பட்டணங்களில் திருவுரையாற்ற பயணம் செய்யத் தாங்கள் திட்டமிட்டிருப்பதாக சவுலும், பர்னபாவும் ஒருக்கால் சொல்லியிருக்கக்கூடும் (கலா. 2:1—10). அந்தியோகியாவுக்குத் திரும்பிச் செல்லும்போது அவர்கள் மாற்குவை அழைத்துச் சென்றனர். மாற்கு பர்னபாவின் உறவினர் (கொலோ. 4:10); மிகக் குறைந்த வயதினர்; இந்த இரு பெரியவர்களோடும் வீரச் செயல்களும் பரபரப்பும் நிறைந்த பணி ஒன்றில் ஈடுபட ஆர்வம் உள்ளவராய் இருந்தார். இவர் தாயாரின் வீட்டில்தான் அப்போஸ்தலர்கள் அனைவரும் கூடுவது வழக்கம் என்பதும் இயேசுவும் இங்குதான் தம்முடைய இறுதி இராவிருந்தைப் புசித்தார் என்பதும் உங்களுக்கு நினைவு இருக்கலாம். எனவே மாற்கு என்ற யோவானுக்கு இயேசுவை நன்ருகத் தெரியும்; அவர் கைது செய்யப்பட்டதையும் பார்த்திருந்தார் (மாற்கு 14:51,52). தம்முடைய குருவாகிய இயேசுவைக் குறித்து மற்றவர்களுக்குச் சொல்லக்கூடிய இப்படிப்பட்ட ஒரு நல்ல வாய்ப்பை அவர் வெகு நாட்களாக எதிர்பார்த்துக் கிடந்தார்.

### எருசலேமில் சபை துன்புறுத்தப்பட்டது

ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டு, ஹெலனிய யூதர்கள் துன்புறுத்தப்பட்டு, சிதறி ஓடிப்போன பிறகு ஓரளவு குழப்பமற்ற அமைதியான சூழ்நிலை காணப்பட்டது. தங்கள் யூத சமயத்தின் அமைப்புக்குள் தங்களுடைய புதிய போதனைகளைப் பொருத்த அப்போஸ்தலர்கள் அரும்பாடு பட்டுக்கொண்டிருந்தபோது யாரும் அவர்கள் வேலையில் குறுக்கிடவில்லை. யூத சமயத்தில் இருந்தபடியே அவர்கள் தங்கள் கூட்டங்களையும், ஆராதனைகளையும், வழிபாட்டு முறைகளையும் அமைத்துக் கொண்டார்கள்.

திருமுழுக்கன் யோவானைக் கொன்ற ஏரோது அந்திப்பாவின் பதவிக்கு முதலாம் ஏரோது அகிரிப்பா, கி.பி. 39ம் ஆண்டில் வந்தார். இவர் பெரிய ஏரோதின் பேரர்; ஏரோது அந்திப்பாவின் மருமகன் (புத்தகம் 2,3). பிலிப்புவும், அந்திப்பாவும் ஆண்டுவந்த மாவட்டங்களாகிய பெரேயாவையும், கலிலேயாவையும் உரோமப் பேரரசர் களகுலா உரோமில் அகிரிப்பாவின்மேல் கொண்ட நல்லெண்ணத்தின் காரணமாக அவருக்குக் கொடுத்துவிட்டார். பின் கிலவுதியு யூதேயா, சமாரியா மாவட்டங்களையும் அகிரிப்பாவுக்குக் கொடுத்தார். அவருக்கு அரசர் என்ற பட்டத்தையும் சூட்டிவிட்டனர். அகிரிப்பா சிலுவையில் அறையப்பட்ட இயேசு மேசியாவாக இருக்கலாம் என்ற கருத்தை ஒரு யூதர் என்ற முறையில் தீவிரமாய் எதிர்த்தார். பேரரசரின்நட்பைப் பெற்றிருந்த காரணத்தால், வேறுயாரையும்அரசர்என்றுஏற்றுக்கொள்ள அவர் மனம் இடம் தரவில்லை. எனவே இயேசுவை நம்பும் எவரையும் நாட்டில் விட்டு வைப்பதில்லை என்ற ஆவேசத்தோடு அப்படிப்பட்டவர்களை நசுக்கத் தலைப்பட்டார். பரிசேயரும் சதுசேயருமாவது இதில் தமக்கு ஆதரவாயிருப்பார்கள் என்று அறிந்திருந்தார்.

பஸ்கா பண்டிகை சமயந்தான் இந்த அழிவு வேலைக்கு ஏற்ற சமயம் எனக்கருதி, அகிரிப்பா பண்டிகை தொடங்கும் முன்னதாக இயேசுவின் 'அன்புச் சீடரான' யோவானின் சகோதரராகிய யாக்கோபைக் கைது செய்துவரப்

போர்வீரர்களை அனுப்பினர். பேதுருவும் செபதேயுவின் மகன்களான யாக்கோபும் யோவானும் இயேசுவோடு மிகவும் நெருங்கிப் பழகியிருந்த சீடர்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். பஸ்கா பண்டிகை மிகவும் நெருங்கிவிட்டதால், யாக்கோபு அவசரமாக விசாரிக்கப்பட்டார். நீதி விசாரணை இருந்ததோ என்னவோ—இயேசுவுக்கு நடந்த விசாரணைபோல் விரைவாக நடந்துமுடிந்தது—அதுவும் நீதிக்குப் புறம்பான விசாரணையாயிருந்தது. வாள்கொண்டு யாக்கோபின் தலை சீவப்பட்டது. இயேசுவுக்காக உயிர் நீத்த முதல் அப்போஸ்தலர் இவரே ஆவார்.

அடுத்து, அகிரிப்பா விரைவாகப் பேதுருவைக் கைது செய்தார். அந்தோனியாக் கோட்டைக்குக் கீழே இருந்த சிறைக் கிடங்கில் அவரை அடைத்தார். பஸ்கா பண்டிகை முடிந்தவுடன், பேதுருவையும் கொல்ல அகிரிப்பா எண்ணியிருக்கலாம். முன்பொரு சமயம் பேதுரு சிறைச்சாலையிலிருந்து தப்பிவிட்ட காரணத்தால், இப்பொழுது அவரை இரு போர்ச் சேவகர்களுக்கு இடையில் வைத்து பாதுகாப்புடன் விலங்கிட்டிருந்தார்கள். அறைக்கு வெளியேயும் இரு போர் வீரர்கள் காவல் நின்றனர். இப்படி நான்கு பேர் கொண்ட காவலுக்கு 'நான்கு பேர் கொண்ட காவல் பிரிவு' (quaternion) என்று பெயர்.

## பேதுரு தப்பிவிட்டார்

ஆச்சரியமான முறையில் பேதுரு மீண்டும் விடுதலை பெற்றார். அப். 12:3—19ம் வசனங்களில் லூக்கா இந்நிகழ்ச்சியினை விரிவாக எடுத்துரைக்கிறார். அவர் எழுதியபடியே நாம் இந்நிகழ்ச்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது அவருடைய எண்ணம். சிலர் 'தூதன்' என்ற சொல் தேவதூதனைக் குறிக்கவில்லை, சாதாரணமாக வந்த ஒரு தூதுவனை, அதாவது மனிதனைக் குறிப்பிடுகிறதென்றும், எனவே ஒரு மனிதன் யாரும் பார்க்காதபடி அங்குவந்து பேதுருவைக் கடத்திச் சென்றுவிட்டான் என்றும் கூறுகிறார்கள். எப்படி தப்புவிக்கப்பட்டிருந்தாலும், பேதுரு தப்புவிக்கப்பட்டவிதம் ஓர் அற்புதம்தான். பேதுரு மேலறை நோக்கி விரைந்தார். அங்கு நண்பர்கள் கலக்கத்தோடு கூடியிருந்து ஜெபித்துக்கொண்டிருப்பார்கள் என்பது அவருக்குத் தெரியும். பணிப் பெண் ரோதை கதவிடுக்கின் வழியாக முதலில் பார்த்தாள். மற்றைய அப்போஸ்தலர்களையும் தேடிப்பிடிக்க போர் வீரரும், கைது செய்ய காவலரும் ஒருவேளை வந்து நிற்பார்களோ என்ற அச்சத்தோடு அவள் அவ்விதம் செய்தாள். மகிழ்ச்சிப் பெருக்கால் கதவைத் திறந்து பேதுருவை உள்ளே அழைக்கவேண்டும் என்ற எண்ணமில்லாமல், அவள் ஓடிவந்து மற்றவர்களிடம் செய்தியைச் சொல்லுகிறாள். அவர்கள் 'அது அவருடைய தூதனாயிருக்கவேண்டும்' என்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் துணையாக ஒரு தூதன் எப்போதும் இருக்கிறான் என்ற நம்பிக்கை ஏற்கெனவே மக்களிடம் இருந்து வந்தது (மத். 18:10). இந்த நம்பிக்கையை பெர்சியர்களிடமிருந்து யூதர்கள் பெற்றிருந்தனர் (புத்தகங்கள் 2, 3). முதலில் மற்றவர்கள் நம்பவில்லை. பிறகு அமைதியாக அவரை உள்ளே ஏற்றுக்கொண்டார்கள். தாம் தப்பி வந்தவிதத்தைப் பேதுரு அவர்களுக்கு விளக்கினார்.

இப்போது எருசலேம் சபையில் உள்ளவர்களுக்கு, இயேசுவின் தம்பியாகிய யாக்கோபு தலைவராயிருந்தார். பேதுரு அவருக்குச் செய்தி சொல்லி அனுப்பச் சொன்னார். மறுநாள் காலையில் பேதுருவைக் காவல் புரிந்தவர்கள், பேதுரு ஆச்சரியமாகத் தப்பிவிட்டதற்கு 'விளக்கம்' கூறவேண்டியதிருந்தது. அவர்கள் கூறிய விளக்கம் அகிரிப்பாவுக்கு மன நிறைவளிக்கவில்லை. கடமையில் தவறிவிட்டதற்காக அவர்களுக்கு மரண தண்டனை விதித்து விட்டார்.

## அகிரிப்பா இறந்தார்

பின்னர் அகிரிப்பா செசரியா சென்று தீரு, சீதோனுக்கும் தமக்கும் இடையில் நிலவிய தகராறு ஒன்றைத் தீர்த்துக்கொண்டார். இந்த இரு பகுதிகளிலும் உள்ளவர்கள் அகிரிப்பாவின் மாவட்டமாகிய கலிலேயாவுக்குச் சென்று தானியம் வாங்கிவருவார்கள். எனவே இவ்விரு பட்டினங்களும் அகிரிப்பாவின் சொல்லுக்கு அடங்கி இருக்கவேண்டியதாயிற்று. அகிரிப்பாவைப் பகைத்துக்கொண்டால் அவர்கள் பட்டினி கிடக்கவேண்டிய நிலைவரும். தம்முடைய அரச பெருமையையும் ஆடம்பரத்தையும் காண்பிக்க பகட்டான காட்சிகளுக்கும், விளையாட்டுகளுக்கும் அகிரிப்பா ஏற்பாடு செய்வதுண்டு. பெரிய திறந்தவெளி விளையாட்டு அரங்கில் வாட்போர் வீரர்களும், உடற்பயிற்சியாளர்களும் செப்பிடு வித்தைக்காரர்களும், தேர் ஓட்டிகளும் பற்பல போட்டிகளில் கலந்துகொண்டு திறமையாக விளையாடினர். அகிரிப்பாவும் நல்ல விலையுயர்ந்த ஆடைகளாலும், இரத்தினங்களாலும், அணிகலன்களாலும் தம்மை

அலங்கரித்துக்கொண்டு மக்கள் முன்னே காட்சி அளித்தார். மக்கள் அவரைத் தெய்வம் என்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் உரத்த குரலில், 'இதோ, தெய்வம், தெய்வம்' என்று அகிரிப்பாவை நோக்கிக் கத்தினார்கள். அவர்களுடைய போலியான புகழ்ச்சொற்களையும், பசப்பான வாழ்த்தொலிகளையும் அகிரிப்பா ஏற்றுக்கொண்டார். அந்நாட்களில் வாழ்ந்த யோசிபாஸ் என்ற எழுத்தாளர், அகிரிப்பா ஒரு கெட்ட அறிகுறியைக் (தலைக்குமேல் கயிற்றில் ஒரு ஆந்தை இருந்த காட்சியை) கண்டதாக எழுதுகிறார். ஆனால் அகிரிப்பாவுக்கு பயங்கர வலி ஏற்பட்டு, மூன்றே நாட்களில் இறந்துவிட்டதாக லூக்கா எழுதுகிறார். அவர் தம்மைத் தெய்வமாக எண்ணிய அக்கிரமத்திற்கு ஏற்ற தண்டனை அதுவென மக்கள் பேசிக்கொண்டார்கள்.

இதில் முக்கிய செய்தி என்னவென்றால், கிறிஸ்தவ சபையின் முதல் பயங்கர எதிரி தொலைந்துபோனார். சபையைத் தொடர்ந்து துன்பப்படுத்த அவர் வாழ்ந்திருந்தால் ஒருவேளை திருச்சபையின் வரலாறு எழுதப்படாமலேயே போயிருக்கும். இது கி.பி. 44ல் நடந்தது. அதற்குப்பின் அகிரிப்பா ஆண்ட பகுதிகள் உரோமப் பேரரசின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டன. அதற்குப் பிறகும் குழப்பங்கள், கிளர்ச்சிகள், புரட்சிகள் யாவும் நடந்ததாக வரலாற்றில் காண்கிறோம். ஏறத்தாழ கி.பி. 46ல் யூதேயாவில் பஞ்சம் வந்தது. இது தீர்க்கவுரையாக முன்னறிவிக்கப்பட்ட பஞ்சம். அதைத் தொடர்ந்து மக்கள் அதிக அவதிக்குள்ளாயினர். மக்கள் சண்டையிட்டு இரத்தம் சிந்தவேண்டியதாயிற்று.

## விளக்கப் பயிற்சி

1. யவீருவின் மகளையும், முடக்கு வாதத்தால் பீடிக்கப்பட்டிருந்த மனிதரையும், இயேசு சுகப்படுத்திய நிகழ்ச்சிகள் பற்றிய வருணனைகளைப் படியுங்கள். பேதுருவின் அற்புதங்கள் இவற்றோடு என்னென்ன விதங்களில் ஒத்திருக்கின்றன?

2. சீமோன் தோல் பதனிடும் காட்சியைப் படமாகத் தீட்டுங்கள்.

3. பேதுரு, கொர்நேலியு பற்றிய நிகழ்ச்சியை வானொலி அல்லது தொலைக்காட்சி செய்திக் கதிராகத் தயாரியுங்கள்.

   அல்லது

   அதைத் தொடர் சித்திரமாக (strip cartoon) வரைந்து காட்டுங்கள்.

4. கப்பர்நகூம் நூற்றுவர் தலைவர் கொர்நேலியுவைச் சந்திக்கிறதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அவர்கள் என்ன பேசியிருக்கக்கூடும்?

5. கொர்நேலியு வசித்த உரோம இல்லத்தைப்போன்று உருவம் அமைத்தோ அல்லது படம் வரைந்தோ காண்பியுங்கள்.

6. பேதுரு கற்றுக்கொண்ட பாடம் என்ன? அது முக்கியமானதா? ஏன்? 'புற இன மக்களுக்குத் திருச்சபையின் கதவைத் திறந்துகொடுத்தார் பேதுரு. பவுல் அக்கதவை மேலும் விரிவாகத் திறந்து வைத்துவிட்டார்.' இக்கூற்றை விளக்குங்கள்.

7. அப்போஸ்தலர் 11:17ல் பேதுரு சொல்லும் வார்த்தைகளின் பொருள் என்ன?

8. சீரியாவிலுள்ள அந்தியோகியா பட்டணம் கிறிஸ்தவத்தின் மையமாகத் (அ) திகழ்ந்தது வியப்பானது (ஆ) திகழ்ந்ததில் வியப்பொன்றுமில்லை—இக்கருத்துக்களை விளக்குக.

9. அந்தியோகியாவிலும் மற்றும் இடங்களிலும் நடந்தவை குறித்து எருசலேமில் வாழ்ந்த யூதக் கிறிஸ்தவர்கள் ஏன் குழப்பமடைந்தனர்? பர்னபா அந்தியோகியாவுக்கு அனுப்பப்படக் காரணம் என்ன?

10. 'பேதுரு தப்பிய நிகழ்ச்சியை' ஊமை நாடகமாக நடித்துக்காட்டுங்கள்.

    அல்லது

    பக்கத்து வீட்டு சிநேகிதரிடம் ரோதை இந்த நிகழ்ச்சியை விவரிப்பதுபோல் சொல்லிப்பாருங்கள்.

11. முதல் ஏரோது அகிரிப்பா கிறிஸ்தவ சபையின் முதல் பயங்கர எதிரி எனப் படக் காரணம் என்ன?

12. புதியநெறியினர் கிறிஸ்தவர்கள் என்னும் பெயர் பெறக் காரணம் என்ன? எந்த இடத்தில் இம் மாற்றம் நிகழ்ந்தது?

அத்தியாயம் 7

# முதல் தூதுப் பயணம்

*(13; 14)*

### திருப்பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்

அந்தியோகியாவில் அப்போஸ்தலர் எவரும் இல்லை. எனவே ஐவர் கொண்ட குழுவொன்று சபைக் காரியங்களைக் கவனித்து வந்தது. அதில் மூன்றுபேர் வெள்ளை நிறத்தவர்; இரண்டு பேர் கறுப்பு நிறத்தவர்; ஒருவர் சீமான். இவர் ஏரோதின் ஒன்று விட்ட சகோதரர். அவர்கள் நற்செய்திப் பணி குறித்துப் பேசி அது தொலைவிடங்களுக்கும் எடுத்துச் செல்லப்படவேண்டும் என்று தீர்மானித்தார்கள். யார் அதை எடுத்துச் செல்வது? கடவுள் (தூய ஆவியானவர்) தங்களை வழிநடத்த வேண்டுமென வேண்டினர். பர்னபாவும் சவுலும் இப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது ஒரு விதத்தில் விநோதமாயிருந்தது. ஏனெனில் இருவருமே அந்தியோகியாவில் இருந்த குழுவில் தொடக்க முதலே இருந்தவர்கள் அல்லர். ஒருவர் எருசலேமிலிருந்து அப்போஸ்தலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்ட பிரதிநிதியாகவும் மற்றொருவர் திருவுரைப் பேச்சாளராகவும் வந்துள்ளார்கள். அவர்களின்பேரில் சீட்டு விழுந்ததால் கடவுளின் திருவுளம் அதுவே என அந்தியோகியக் கிறிஸ்தவர்கள் நம்பினார்கள். அதுமட்டுமல்ல, அவ்வேலையைச் சிறப்பாகச் செய்ய இவர்கள் இருவருமே தகுதிவாய்ந்தவர்கள் என்று அவர்கள் உணர்ந்தார்கள்.

### பேராயர் இன்னாசியார்

பர்னபாவும் சவுலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அக்கூட்டத்தில் பதினைந்து வயது நிரம்பிய இளைஞர் ஒருவர் இருந்திருக்கலாம். முப்பதாண்டுகளுக்குப் பின் இவர் அந்தியோகியாவின் முதற்பேராயர் ஆனார். பேராயர் இன்னாசியார் தமது எழுபத்தைந்தாம் வயதில் தம் சமய நம்பிக்கை காரணமாக இரத்த சாட்சியாக உயிர்விட்டார். டிரேஜன் என்ற பேரரசரின் ஆணைப்படி கி.பி. 108ல் இவர் உரோமுக்கு அனுப்பப்பட்டு அங்கே விளையாட்டரங்கில் சிங்கங்களுக்குமுன் தூக்கியெறியப்பட்டுக் கொல்லப்பட்டார். 'கொடும் விலங்குகளுக்கு என்னை இரையாக விட்டுவிடுங்கள். அவை மூலமாக நான் இறைவனை அடையலாம். நான் கடவுளின் கோதுமை மணி. நான் கிறிஸ்துவின் மாசற்ற அப்பமாகும்படி கொடும் விலங்குகள் என்னை மாவாக அரைக்கட்டும்' எனப் பேசி, பேராயர் இன்னாசியார் சாவை அணைத்துக்கொண்டார்.

### பர்னபாவும் சவுலும்

இவ்விருவரும் பார்வைக்கு எப்படித் தோற்றமளித்தனர்? இதுபற்றி முழு நிச்சயமாக நாம் எதுவும் சொல்லமுடியாது. பவுலின் கூற்றுகளிலிருந்தும் கடிதங்களிலிருந்தும் அவர்கள் தோற்றத்தைப்பற்றி ஓரளவு நாம் கண்டறிய முயலலாம்.

இருவரிலும் வயதில் மூத்தவர் பர்னபா. இவர் லேவியராகப் பயிற்சி பெற்றவர். வைராக்கியமான யூதர். நல்ல உடற்கட்டுள்ளவர். எடுப்பான தோற்றம்; கண்களில் கள்ளங்கபடற்ற ஒளி; உறுதியான வாய்; நல்ல மோவாய்க்கட்டு உள்ளவர். லிஸ்திராவின் மக்கள் இவரை யூப்பித்தர் என்றனர். இது உரோமரின் சிறப்பு வாய்ந்த தெய்வங்களில் ஒன்று. இதிலிருந்து பர்னபா அழகிய உடற்கட்டோடு விளங்கியிருக்க

வேண்டும் என நாம் அறிகிறோம். ஆதித் திருச்சபையிலுள்ள வசதியற்றோருக்கு உதவும் வகையில் தம் நிலங்களை விற்று அந்தப் பணத்தை முதன் முதலாகக் கொண்டுவந்து கொடுத்தவர்களில் இவரும் ஒருவர் (அப். 4: 36,37). இச்செயல்மூலம் கிறிஸ்தவ சமயம் இவருக்கு அர்த்தமுள்ளதாக இருந்ததென்று நாம் அறிகிறோம். அமைதியான பண்பாளர்; தாராள சிந்தையுடையவர்; யாரிடமும் பரிவு காட்டுவார்; எவருக்கும் எளியவர்; எல்லோருக்கும் உதவுபவர்; மொத்தத்தில் **சகாய சீலர்** (Son of Consolation) என்றழைக்கப்பட்டவர்; மற்றவர்களின் சிறப்பியல்புகளைக் கணிப்பதில் திறமை பெற்றவர். சவுலைக் கண்ட மாத்திரத்தில் அவர் நன்கு திருவுரையாற்றுபவர் என்றும், கடவுளின் திருப்பணியாளர் என்றும் கண்டுகொண்டார். திரை மறைவில் நின்றுகொண்டிருந்த சவுலை உலக அரங்கில் ஏற்றி, கிறிஸ்தவ சமயப்பணியில் ஈடுபடவைத்த பெருமை இந்தப் பர்னபாவையே சாரும். சவுலைப் போன்ற ஒரு திருப்பணியாளர் அதன்பிறகு உலகில் தோன்றவேயில்லை எனலாம் (அப். 9:27; 11:25,26).

பிற்காலத்தில் **பவுல்** என்று பெயர் பெறவிருந்த **சவுலுக்கு** இப்போது நாற்பத்தைந்து வயது. பர்னபாவைவிட மிகவும் வேறுபட்ட உடற்கட்டும் தோற்றமும் உள்ளவர். இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட குறிப்பொன்றில் கீழ்க்கண்ட இணங்கிப்போகாத வருணனையைக் காண்கிறோம்: 'சிறு உருவம், இணைந்து நிற்கும் புருவங்கள், தடிப்பான மூக்கு, வழுக்கைத்தலை, வளைந்த கால்கள்; ஆனால் வைரம் பாய்ந்த உடல், அருள் வடிவம், சில சமயங்களில் மனிதனாகவும், சில சமயங்களில் ஒரு தேவ தூதனைப்போலவும் காணப்படுவார்.' உடல் எப்படியிருந்ததோ தெரியவில்லை. ஆனால் அடிக்கடி வலி எடுத்துக்கொள்ளும், ஜுரமும் கண்டுவிடும். சவுல் எவரையும் கவரும் முகமும் குரலும் உடையவர். லிஸ்திராவில் உள்ள மக்கள் பவுலை மெர்க்குரி என்று வருணித்தனர். மெர்க்குரி தெய்வங்களின் தூதுவர். சிறிய உருவம், துரித நடை, நாவன்மை ஆகியவை மெர்க்குரியின் பண்புகள். சவுலின் உடல் வலிமைபற்றி 2 கொரி. 11:24–27ல் படிக்கிறோம். மனமாற்றம் நிகழ்ந்த சமயம் அவர் கண்களில் பாய்ந்த பேரொளி காரணமாக (அப். 9:3) அவர் கண்கள் பழுதடைந்திருக்கலாம் (கலா. 6:11 பு.மொ.) என்று சிலர் கருதுகிறார்கள். பயங்கரமான தலைவலியால் அவர் அவதிப்பட்டு வந்ததால், கண்கள் கெட்டிருக்கலாம் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். அவருக்கு அடிக்கடி மலேரியாக் காய்ச்சல் வந்திருக்கலாம், அல்லது உடற்கூறு குறைகள் ஏதேனும் இருந்திருக்கலாம். அவருக்கு மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. உடலைக் குத்திக்கொண்டிருந்த அந்த முள் எதுவாயிருந்தாலும் அது (2 கொரி. 12:7–10) அவரை மிகவும் வாட்டிக்கொண்டிருந்தது. எனினும் அவருடைய வீரத்தையும், எவை குறித்தும் தீர்ப்புச் சொல்லும் ஆற்றலையும், கடமையாற்றுவதில் அவருக்கிருந்த நாட்டத்தையும் பற்றி, அவருடைய தூதுப் பணி குறித்துக் காணும் போதும், அவர் கடிதங்களைப் படிக்கும் போதும் நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

### பவுல் கையாண்ட முறைகள்

பணிகளைச்செய்ய தாம் கடைப்பிடிக்கும் முறைகளை எவ்வளவு தெளிவாகப் பவுல் சிந்தித்திருந்தார் என்று காண்கிறோம். அவருடைய முறைகள் நன்கு ஆய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. அவற்றில் தற்செயலாக நேர்ந்தவை என்று எவையும் கிடையாது. அவருடைய தூதுப் பயணங்களைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தால், காரியங்களை ஒழுங்காகச் செய்வதில் அவருக்கிருந்த வியத்தகு பேராற்றலை நாம் கண்டுகொள்வோம். எடுத்த எடுப்பில் பார்த்தால் அவருடைய பயணங்கள் ஒழுங்கற்ற முறையில் நடைபெற்றவைபோல் தோன்றும். ஆனால் உண்மையில் அவர் மிக ஒழுங்காகக் காரியங்களைச் செய்து முடிப்பார். மாகாணம் மாகாணமாக, முக்கிய பட்டணங்களுக்குச் சென்று தம்முடைய தலைமையகங்களை ஏற்படுத்தியிருந்தார். அங்கு கிறிஸ்தவர்களின் குழுக்களை—சபைகளை—ஏற்படுத்தி அவற்றைக் கண்காணிக்கப் பெரியோர்களையும் ஒழுங்கு செய்திருந்தார். இந்தப் பெரியோர்களின் வேலை என்ன தெரியுமா? கிறிஸ்தவ மக்களை எல்லாம் ஒன்றாகக் கூட்டி ஒரு 'தாய்ச் சபையை' உருவாக்குவதே. அது தன்னளவில் உறுதிவாய்ந்ததானவுடன் சுற்று வட்டாரத்திலுள்ள மற்ற மாவட்டங்களுக்கும், சிறிய பட்டணங்களுக்கும் அதன் வேலை பரவும். இதற்கு நல்ல எடுத்துக்காட்டாக எபேசுவில் உள்ள தாய்ச் சபையைச் சொல்லலாம். கொலோசே சபைதான் அதன் குழந்தை. பவுல் இந்தச் சபைகளுக்கு மறுமுறையும் சென்றார். தாம் போக இயலாத சமயம் தம்மிடம் பயிற்சி பெற்ற உதவியாளர்களை அங்கு அனுப்புவார்; அல்லது கடிதங்கள் எழுதி அவர்களுக்குக் காரியங்களை விளக்குவார், உற்சாகமூட்டுவார், வழிகாட்டுவார், அவர்களைக் கடிந்துகொள்வார், புகழ்ந்து பாராட்டுவார்.



பவுலின் முதல் தூதுப் பயணம். கி.பி. 47-49


பவுல் ஒரு சிறந்த அறிஞர். ஆழ்ந்த சிந்தனையாளர். இதை நாம் விரைவில் காணப்போகிறோம். இயேசுவைப்போல் அதிகநேரத்தை ஜெபத்திலும் தியானத்திலும் கழித்தார். அவர் பேச்சு நடைமுறைக் கேற்றதாயிருந்தது. அத்தேனே பட்டணத்தில் தத்துவ ஞானிகளோடு பேசும்போது, ஒரு தத்துவ ஞானிபோல் உரையாடினார். லிஸ்திராவில் அவர்கள் குறிப்பிட்ட சிருஷ்டிகரைப்பற்றி எளிதில் விளங்கும் கிரேக்கமொழியில் அவர் பேசினார். பிசிதியாவைச் சேர்ந்த அந்தியோகியாவில் உள்ள யூதர்களிடம் ஒரு யூதர் பேசுவதுபோல் பேசினார். எருசலேமில் நடந்த விவாதக் கூட்டத்தில் தர்க்கித்துப் பேசி வெற்றி கண்ட பிறகு அவர் 'உலகத் திருச்சபையை' அமைக்கத் தலைப்பட்டார் (கலா. 3:28). அச்சபையில் உள்ள வெவ்வேறு பிரிவினர்களுக்கு ஏற்ற வகையில் தம் பேச்சை அவர் அமைத்துக்கொண்டார்.

பவுலை நன்றாக அறிந்துகொள்ள அவர் 'சென்ற இடங்களையும் அங்கு நடந்த நிகழ்ச்சிகளையும்' மட்டும் வரிசையாக எடுத்துக் கொண்டு படிப்பது சிறந்த முறையன்று. சோர்ந்துவிடாமல் ஆற்றலோடு பணியாற்றும் ஒரு மனிதராக, ஒரு தீரராக, வீரராக, துணிவான செயல்களில் ஆசை உள்ளவராக, அஞ்சா நெஞ்சராகப் பவுலை எண்ணிப் பாருங்கள். தாம் எடுத்துக்கொண்ட பணிக்கு அவர் ஆண்களையும் பெண்களையும் ஈர்த்து அப்பணியில் அவர்கள் ஈடுபடவும், தம்மோடு சேர்ந்தும் தமக்காகவும் செயல்படவும் அவர்களுக்கு ஊக்கமூட்டி நின்றார். அவர் கடவுளின் தூதுவர். கடவுளின் தூயவர். கிறிஸ்தவ சபையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பவுலைவிடச் சிறந்த பணியாற்றி நின்றோர் எவருமில்லை. நாம் காணப்போகும் நிகழ்ச்சிகள் எல்லாம் இந்த அற்புத மனிதரை நமக்குப் பல்வேறு கோணங்களில் காட்டப்போகின்றன. பிலிப்பி பட்டணச் சபை மக்களுக்கு எழுதிய கடிதத்தில் தம்மைப்பற்றிய இரகசியத்தை விளக்கினார்: 'என்னைப் பலப்படுத்துகிறவருக்குள், எல்லாவற்றையும் செய்ய எனக்கு வல்லமை உண்டு' என்று மார்தட்டினார் (பிலி. 4:13).

### தூதுப் பயணம் தொடங்குகிறது

பர்னபாவும், சவுலும், மாற்கு என்ற யோவானும் ஏறத்தாழ கி.பி. 47ல் தங்கள் முதல் வீரப்பயணத்தைத் தொடங்கினார்கள். சீப்புரு தீவை நோக்கிப் புறப்பட்டனர். அதுவே அருகிலிருந்த புதிய இடம்; அது மட்டுமல்லாமல் அது பர்னபாவின் சொந்த இடம். அவர் தம் தீவிலுள்ள மக்களுக்கே நற்செய்தியை முதலாவது கொடுக்க விழைந்தார். 'செம்பு' என்ற அர்த்தமுடைய ஒரு சொல்லிலிருந்து 'சீப்புரு' என்ற சொல் வருகிறது. இத்தீவின் உட்பகுதிகளில் செப்புச் சுரங்கங்கள் நிறைய உண்டு.

மூவரும் ஓரொந்தீஸ் என்ற நதியில் இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவு படகில்



சீப்புரு தீவுக்குச் செல்லும் பாய்மரக் கப்பல்

சென்று, செலூக்கியா துறைமுகத்தை அடைந்தனர். அங்கு மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதியைக் கடந்து இத்தீவை அடைய ஒரு சிறிய படகில் ஏறினுர்கள். (பெரிய படகுகள் இத்துறைக்குள் வரமுடியாது.) இத்தீவின் வணிகப் பெருநகரமான சாலமி என்னும் நகரில் வந்து இவர்கள் இறங்கினுர்கள். (57ம் பக்கத்தில் உள்ள நிலப் படத்தைப் பாருங்கள்.) செம்பு, ஒலிவ எண்ணெய், திராட்சை ரசம், பழங்கள் ஆகியவற்றின் விற்பனைக்குப் பெயர்பெற்ற இடம் இது. தேயுஸ் என்ற தெய்வத்தின் பெரிய கோயில் இங்கு இருந்தது. நகரில் மூன்று இடங்களில் பெரிய சந்தைகளும், குளிக்கும் பொது இடங்களும், தூண்கள் நிறைந்த பெரிய கட்டிடங்களும் இருந்தன. 'தூய பவுலின் தூண்கள்' என்றழைக்கப்படும் கருங்கல் தூண்களும் இடிந்துபோன கோயிலின் எஞ்சிய பகுதிகளும் அக்காலத்தில் இருந்தபடி இன்னும் இங்கு காணப்படுகின்றன. மற்ற கட்டிடங்களெல்லாம் இன்று மண்மூடிக் கிடக்கின்றன. பலமான நில நடுக்கங்கள் ஏற்பட்டு இவைகள் தரையோடு தரையாகத் தகர்க்கப்பட்டன. சாலமி என்ற இந்த இடத்தில் பிற்காலத்தில் பர்னபா கல்லெறிந்து கொல்லப்பட்டதாகவும், பட்டணத்திற்கு வெளியே அவர் உடலை எடுத்துச் சென்று, மாற்கு அடக்கம் செய்ததாகவும் ஒரு மரபுச் செய்தி உண்டு.

எங்கு சென்ருலும் தம்முடைய சொந்த மக்களாகிய யூதர்களுக்கே முதலில் நற்செய்தியைக் கூறுவது பவுலின் வழக்கம். எனவே ஜெபாலயம் சென்று தாம் வந்த நோக்கத்தை விளக்கினுர். சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே தங்கள் புதிய நம்பிக்கையின் மேசியா என்று பேசினுர். செய்யப்பட்ட பணியை முன் நின்று நடத்தியது பர்னபாவே. மாற்கு வாலிப உதவியாளராகப் பணிபுரிந்தார்.

இந்தத் தீவின் வழியாகப் பயணம் செய்து மேற்கு முனையை அடைந்தார்கள். அங்குதான் பாப்போ பட்டினம் இருக்கிறது. தீவின் தலைநகரம் இது. இங்குதான் செர்கியு பவுல் என்ற உரோம அரச அதிகாரி குடியிருந்தார். இந்த ஆளுநரின் குடும்பத்தினர் பற்றிய செய்திகளை அறிவிக்கும் கல்வெட்டுகள் பல இந்தப் பாப்போ நகரில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. அவருடைய மனைவியும் ஒரு மகனும் கிறிஸ்தவர்களாக மாறினுர்கள் என்றும், இன்னொரு மகன் தந்தைக்குப்பின் அத்தீவின் உரோம அரச அதிகாரியானுர் என்றும் பல செய்திகள் இந்தக் கல்வெட்டுகளிலிருந்து நமக்குக் கிடைக்கின்றன.

### எலிமா

எலிமா (பர்—இயேசு = இரட்சிப்பின் மகன்) என்பவன் ஒரு செப்படி வித்தைக்காரனுக அல்லது மந்திரவாதியாக இருந்தவன். சீமோன் மாகுவைப்போல இவன் அதிக செல்வாக்குடையவனுக இருந்தான். எனவே இவன் சவுல்மீது பொருமை கொண்டு அவர் தன்னேடு போட்டியிட வருவதாகக் கருதினுன். சவுல் சொல்வதை உரோம அதிகாரி கேட்கத் தொடங்கிவிட்டால், பிறகு தன் பிழைப்பு கெட்டுவிடும் என்று அஞ்சினுன். சவுல் உரோமக் குடி உரிமை பெற்றவர்; படித்தவர்; பண்பட்ட மனிதர். சமூக நிலையில் பவுல் செர்கியுவுக்கு ஒப்பானவர். எனவே அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மதித்துப் பழகினர். பல உரோமர்களைப்போல் இந்த உரோம ஆளுநரும் புதிய சமயத்தில் ஆர்வங் காட்டினுர். அத்தீவில் மிகுந்த நிலபுலன்களுக்கு உடைமைக்காரராயிருந்த பர்னபாவையும் அங்கு பலருக்குத் தெரியும். ஆகவே, எலிமா கொஞ்சம் பதட்டமடைந்தான். அவன் பிறர் மனதைக் கட்டுப்படுத்தும் மனவசிய முறையை அறிந்து வைத்திருந்தான். மருத்துவராகிய லூக்கா எழுதும் போது, எலிமாவின் முறைகளையே பயன்படுத்தி அவனுக்கு சவுல் வைத்தியம் செய்தார் என்று கூறுகிருர். அதாவது 'அவனையே உற்றுப்பார்த்து நின்ருர்.' சவுலின் பார்வையிலிருந்த சக்தியை எலிமாவால் தாங்க முடியவில்லை. எலிமா குருடனுகி, நாளடைவில் செல்வாக்கிழந்து போனுன். இந்த நாள் முதலாய்ப் பவுல் தம்முடைய உரோமப் பெயரைப் பயன்படுத்தத் தொடங்கினுர். இப்போது எந்தக் கூட்டத்திலும் அவர்தான் முக்கியமான பேச்சாளர். பர்னபா அவருக்கு அடுத்தபடியாகவே இருக்கிருர். லூக்காவும் கூட அவர்களைப்பற்றிக் கூறும்போது தம் பழக்கத்தை மாற்றி 'பவுலும், பர்னபாவும் . . .' என்று எழுதத் தொடங்குகிருர். இங்கு சொல்லப்பட்ட நிகழ்ச்சிகளால் பலர் கிறிஸ்தவ நம்பிக்கை உடையவராக மாறினர். அவர்களும், செர்கியு பவுலும், ஆண்டவர் இயேசுவைப்பற்றி பவுல் போதித்தவைகளைக் கேட்டு திகைப்புக்குள்ளானுர்கள்.

### மாற்கு திரும்பிச் செல்கிருர்

செம்பு, பழம் (எலுமிச்சை, ஒலிவம்), ஒலிவ எண்ணெய், திராட்சைரசம் ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு வணிகக் கப்பல் ஒன்று பாப்போ பட்டினத்திலிருந்து சின்ன ஆசியாவின் கரைக்குப் புறப்பட்டிருக்கலாம்.



மாற்கு திரும்பிப்போதல்

மூன்று நண்பர்களும் அதில் ஏறிக்கொண்டனர். வடக்கு நோக்கிக் கப்பல் சென்றது. நதி வழியாகப் பன்னிரண்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள பெர்கே பட்டினத்தில் கப்பல் சில நாட்கள் நின்றது. அந்நாட்களில் மலேரியா ஜுரம் கண்டிருந்ததால் ஏற்பட்ட விளைவுகளைப் பவுல் அனுபவிக்கத் தொடங்கியிருக்கலாம். அது ஒரு தாழ்வான சதுப்பு நிலம். எனவே தொலைதூரத்தில் இருந்த உயர்ந்த மலைப்பகுதிகளுக்குச் சென்றுவிடப் பவுல் எண்ணினர். அவர் உடல் நலத்திற்கு அது ஏற்றதாயிருக்கும் என்று நினைத்தார். இதற்குள்ளாகப் பவுலுக்குச் சில ஏமாற்றங்கள் காத்திருந்தன. மாற்கு தம் ஊர் திரும்ப எண்ணங்கொண்டார். அதன் காரணம் நமக்குத் தெரியவில்லை. பல காரணங்கள் இருந்திருக்கலாம். இளைஞரான அவருக்கு வீட்டு நினைவு வந்திருக்கலாம். அல்லது மலைநாட்டுப் பயணத்தின் பயங்கரங்களை எண்ணி அவர் அஞ்சியிருக்கலாம். அடுத்து அண்மையிலிருக்கும் பட்டணம் செல்லவேண்டுமென்றால், பயங்கரமான மலைப்பகுதிகளில் தனித்த சாலைகளில் நூற்று அறுபது கிலோமீட்டர் தொலைவு பயணம் செய்தாகவேண்டும். மலையடிவாரத்தில் உள்ள பைன் மரக்காடுகளில் காட்டு விலங்குகளும், கொலைக்கஞ்சா கள்ளர்களும் பதுங்கிக் கிடப்பார்கள். ஒருகால் இவைகளை எண்ணிப் பார்த்து மாற்கு பயந்து பின்வாங்கியிருக்கலாம்.

பவுலுக்குக் கிடைத்துள்ள வெற்றிகளைக் குறித்தும் மாற்கு பொறுமை கொண்டிருக்கலாம். தம் இனத்தாராகிய பர்னபா இரண்டாவது நிலைக்கு இறங்கிவிட்டது இவருக்கு சங்கடத்தைக் கொடுத்தது. இப்போது தம்முடைய முக்கியத்துவமும் குறைந்துவிட்டதாக அவர் எண்ணியிருக்கக்கூடும். மாற்குவின் தீர்மானத்தைக் குறித்து பர்னபா அவரைக் குறை சொல்லவில்லை. பவுலைவிட பர்னபா மாற்குவிடம் இரக்கத்துடன் நடந்துகொண்டார். இது பலவீனம், கோழைத்தனம் என்று பவுல் கோபமாகப் பேசினர். இந்த விவரங்களை நாம் பின்னல் காணப் போகிறோம். பவுல் தமது இரண்டாவது தூதுப் பயணத்திற்குத் திட்டமிட்டபோது மாற்குவைத் தம்முடன் அழைத்துச் செல்ல மறுத்துவிட்டார் (அப். 15:36-41; இத்துடன் 2 தீமோ. 4:11ஐயும் வாசிக்கவும்). செசரியாவுக்கோ, யோப்பாவுக்கோ செல்லும் வேறொரு கப்பலில் ஏறி மாற்கு எருசலேம் திரும்பிவிட்டார்.

## பிசிதியாவில் உள்ள அந்தியோகியாவுக்குப் போகிறார்கள்


பவுலும் பர்னபாவும் மற்றும் நண்பர்களும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தார்கள். ஆபத்து நிறைந்த பயணம். தாரஸ் மலைகளைக் கடந்து செல்ல சாதாரணமாக எவரும் அஞ்சுவார்கள். கொடு விலங்குகளிடத்திலிருந்தும், கொடிய மனிதர்களிடத்திலிருந்தும் அடிக்கடி ஆபத்து வரக்கூடும். இப்படிப் பயணம் செய்து அந்தியோகியா பட்டணம் வந்து சேர்ந்தார்கள். மற்ற இரு அந்தியோகியா பட்டணங்களிலுமிருந்து வேறுபடுத்த இதைப் பிசிதியாவில் உள்ள அந்தி

யோகியா என்கிறோம். மற்ற இரண்டில் ஒன்று பவுல் தம் பயணத்தை ஆரம்பித்த இடமான சீரியாவில் உள்ள அந்தியோகியா. சரியானபடி இப்பட்டணம் பிரிகியாவைச் சேர்ந்ததே. ஆனால் பக்கத்து மாவட்டமான பிசிதியாவின் எல்லைக்கு மிக அருகாமையில் இருப்பதால் இது பிசிதியாவில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டது. ஒரு காலத்தில் இது கிரேக்கப் பட்டணமாக இருந்தது, ஆனால் இப்பொழுது இது ஓர் உரோமக் குடியேற்றப் பட்டணம். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட உரோமர் செய்திருந்த அருமையான ஏற்பாட்டின்படி இங்கு ஏற்கெனவே ஓய்வுபெற்ற படைவீரர்கள் குடியேற்றப்பட்டிருந்தனர். இவர்களுக்கு உதவியாக உரோமர்களின் கோட்டை அரண்காவற்படைகள் இங்கு வைக்கப்பட்டிருந்தன. அது கலாத்தியா என்ற உரோம மாகாணத்தில் உள்ள முக்கிய பட்டணம். கலாத்தியாவில் பிரிகியா, பிசிதியா போன்ற மற்றும் சில சிறு பகுதிகளும் அடங்கியுள்ளன. உரோமர்கள் அமைத்த அழகான கால்வாய்ப்பாலம் வழியாக மலைகளிலிருந்து இப்பட்டணத்திற்குத் தண்ணீர் கொண்டுவரப்பட்டது. இன்று இப்பட்டணம் இல்லை. அந்தக் கால்வாய்ப் பாலம் கல்லும் மண்ணும் மூடிக் கிடக்கிறது.



சிபிலி

அந்தியோகியா, பண்டை நாட்களில் செழிப்பாயிருந்த ஒரு பட்டணம். பெரிய பட்டணங்களில் இருந்ததுபோல் யூதர்களின் குடியிருப்பு இங்கும் இருந்தது. வாணிபம் செய்யவும் பணம் திரட்டவும் இவர்கள் அந்தியோகியாவுக்கு வந்திருந்தனர். இவர்களுக்கென்று சொந்தமாக ஜெப ஆலயம் ஒன்றும் இருந்தது. உரோமர்கள் சிபிலி என்ற தங்கள்



உரோமக் கால்வாய்ப் பாலம்

தேவதையை வழிபட்டு வந்தனர். இத் தேவதைக்கு தியானுள் அல்லது அர்த்தெமி என்றும், எல்லாருக்கும் பெரிய தாய் என்றும் பெயர்கள் உண்டு. இத்தேவதைக்கு மிக சிறப்பு வாய்ந்த ஆலயம் ஒன்றையும் கட்டி இருந்தனர்.

பவுலுக்குப் பிரயாணக் களைப்பு தீர்ந்து, நோயிலிருந்தும் நல்ல சுகம் கிடைத்தவுடன் வழக்கம்போல் ஜெப ஆலயத்திற்கு அவர்கள் சென்றனர். யூதர்களின் ஜெப ஆலயங்கள் எங்கிருந்தாலும், ஒரே வகையான வழிபாடு தான் அங்கு நடக்கும். எனவே ஒரு யூதர் எந்த ஜெப ஆலயம் சென்றாலும், அங்குள்ள வழிபாட்டில் எளிதாகக் கலந்துகொள்ள முடியும். ஜெப ஆலயத்திற்கு வந்தவர்களில், யூத சமயத்தைத் தழுவியிருந்த, 'கடவுளுக்குப் பயந்தவர்கள்' எனப்பட்ட புற இன மக்களும் இருந்தனர். பவுலும் பர்னபாவும் எங்கு சென்றாலும், ஜெபத்திற்கு அணிந்து கொள்ளும் தங்கள் 'தாலீத்துக்களை' கூடவே எடுத்துச் சென்றிருக்கவேண்டும். (இந்நாட்களில் யூத ஜெப ஆலயங்களில் தாலீத்துக்களுக்குப் பதிலாக, ஜெப சால்வைகளை உபயோகிக்கிறார்கள்.) இவர்கள் இருவரும் வெளியே இருந்துவந்த நிபுணர்கள் என்று கண்டு, முக்கிய ரபீயும் ஜெப ஆலயத் தலைவருமான 'சாத்சன்' இவர்களை அழைத்துப் பேசச் சொன்னார். பவுலுக்கும் பர்னபாவுக்கும் தங்கள் திருச்சட்டத்தில் நல்ல அறிவுண்டு. அதிலும் பவுல் ஒரு ரபீக்குத் தேவையான பயிற்சியை ஏற்கெனவே பெற்றிருந்தார். எனவே அவர் முதலில் பேசினார்.

### பவுலின் பேச்சு

இங்கு பேசிய பேச்சுதான் முதன் முதல் நமக்கு எழுத்து வடிவத்தில் கிடைக்கும் பவுலின் பேச்சு. இது ஒரு முக்கியமான பேச்சு. ஏனெனில், பெரும்பாலும் பேதுரு, ஸ்தேவான் என்பவர்களின் பேச்சை இது ஒத்திருக்கிறது. சில இடங்களில் ஸ்தேவான் பேசுகிறாரோ என்று நாம் மருள வேண்டியதிருக்கிறது. பவுல் பேசும்போது, அவர் சிந்தனையில் ஸ்தேவான் இருந்திருக்கவேண்டும் என்று நமக்கு நினைக்கத் தோன்றுகிறது. முதலாவது யூதர்களுக்கும் பிறகு யூத சமயத்தைத் தழுவியவர்களுக்குமாக அவர் இப்போது பேசுகிறார்—'இஸ்ரவேலரே, கடவுளுக்குப் பயந்து நடக்கிறவர்களே, கேளுங்கள்' என்று தொடங்குகிறார். அவர் இஸ்ரவேல் மக்களின் வரலாற்றைப் படிப்படியாகக் கூறுகிறார். வேதாகமத்தின் பற்பல பாகங்களிலிருந்து சான்றுகள் காட்டிப் பேசி, தம் வேத அறிவாலும் பேச்சாற்றலாலும் அவர்களைக் கவர்ந்துவிட்டார். மேசியா வந்துவிட்டார் (அப். 13:23,24) என்று கூறி, அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்றார். இந்தச் செய்தி அவர்களைத் திடுக்கிட வைத்திருக்கவேண்டும். கடவுள் மரித்தோரிலிருந்து அவரை எழுப்பினார் ... என்றார். இச்செய்தி அவர்களுக்குப் புரிந்ததோ, என்னவோ? இதுவே இயேசுவை மேசியாவென்று மெய்ப்பித்துவிட்டது என்றும், அவருக்குக்கீழ்ப்படிவது திருச்சட்டத்துக்குக் கீழ்ப்படிவதைவிடச் சிறந்தது என்றும் பேசினார் பவுல். இந்த யூதர்களுக்கு உண்மையிலேயே இது புதிய போதனை. திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலம் அவர்கள் கடவுளுக்கு நேர்மையாய் நடந்துகொள்ள அரும்பாடுபட்டார்கள். இது மிகவும் கடினமான காரியமாயிருந்தது. எனவே, ஒருபோதும் கடவுளைப்போல் மேம்பாடு அடைய முடியாது என்று நினைத்திருந்தனர். ஆனால், கிறிஸ்தவ சமயத்தினால் கடவுளண்டை தங்கள் வலுக்குறைவோடு மக்கள் வருவது சாத்தியமாகிறது; அவர் அவர்களுக்குப் பலமூட்டுவார் என்று பவுல் போதித்தார். அவர்கள் திருச்சட்டம் குறிப்பிடும் ஒழுக்கநிலையை அடைய முடியாமல் பாவங்களைச் செய்து தவிக்கும் மக்களுக்குப் பாவ மன்னிப்பைக் கொண்டுவந்தார் இயேசு. மீட்பு அடைய கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைத்தால் மட்டும் போதும். கிறிஸ்தவன் கடவுளுக்குப் பிரியமாய் இருக்கவேண்டும் என்ற நோக்குடன் கடவுளுக்குச் சேவை செய்வதில்லை. இயேசு தனக்காகவே உலகத்தில் வாழ்ந்து, மரித்து, மீண்டும் உயிர்பெற்றெழுந்ததினால் அவன் மகிழ்ச்சி அடைந்து கடவுளைச் சேவிக்கிறான். யூதர்கள் இப்புதிய செய்தியில் அக்கறை காட்டினார்கள். யூத மதத்தைத் தழுவி நின்ற மற்ற இன மக்கள் இச்செய்தியை ஆர்வத்துடன் மனதில் நன்றாய்ப் பதித்துக் கொண்டனர். இதோ, யூதர்களின் கஷ்டமான சடங்குகளையும், முறைமைகளையும் ஏற்றுக்கொள்ளாமலேயே தாங்கள் பின்பற்றக்கூடிய ஒரு புதிய சமயம். இன்னும் சிறப்பான ஒரு காரியம் என்னவென்றால், இச்சமயத்தை எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இதில் கூறப்படுவனவற்றை நம்புவதும் கடினமான காரியம் அல்ல. சிதறுண்ட ஹெலனிய யூதர்கள் எருசலேமிலிருந்து வெகு தூரத்தில் வாழ்ந்து வந்தனர். ஒருவேளை இவர்களில் சிலர் பண்டிகைகளை ஆசரிக்க எருசலேம் சென்றிருக்கலாம். ஆனால், இயேசு சிலுவையில் அறையப்பட்டதையும், உயிரோடெழுந்ததையும் பற்றிய உண்மை விவரங்களை அறியாதவர்களாய் இருந்திருக்கலாம். எனவே, பவுல் ஆற்றிய திருவுரை எல்லா விதத்திலும் இவர்களுக்கு வியப்பைத் தந்

தது. இவர் சொல்லியவற்றைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்க சிறிது அவகாசம் வேண்டியதாயிருந்தது. எனவே, மறுவாரம் ஓய்வுநாளிலும் இவ்விதம் வந்து திருவுரை யாற்றுமாறு அவரைக் கேட்டுக்கொண்டனர்.

## 'இதோ, புற இனத்தவரிடம் செல்கிறோம்'


மறு ஓய்வுநாள் வரும்வரை வைராக்கிய மான யூதர்கள் சிலர் பவுலின் உரைபற்றிச் சிந்தித்து அவர் தம்செய்தியைப் புற இன மக்களுக்கும் வழங்கியுள்ளார் என்று உணர்ந் தார்கள். மேசியா தங்களுக்கு மட்டுமே சொந்தம்; கடவுள் தெரிந்துகொண்ட மக்கள் யூதர்கள் மட்டுமே என்ற எண்ணம் கொண்ட இம்மக்கள் பொறாமைப்பட ஆரம்பித்தனர். மறுவாரம் ஓய்வுநாளில் பவுல் பேசத் தொடங்கியவுடன், இவர்கள் குறுக்கிட்டு அவரைத் தடுத்து நிறுத்த முயன்றதில் ஆச்சரியமில்லை. முதலில் பவுல் குழப்பமடைந் தார், பின் வருத்தமடைந்தார், இறுதியில் கோபம் அடைந்தார். ஆனாலும் அவர் நிதானம் இழக்கவில்லை. அதன்பின் அவர் கூறியவை பரபரப்புடன் கூறியவையல்ல. இன்று அவர் பேசப்போகும் விவரங்களைக் குறித்துப் பல ஆண்டுகள் அவர் சிந்தித்து வந் திருக்கிறார். இதைப் பர்னபாவோடும் அவர் பேசி விவாதித்திருக்கவேண்டும். அவரும் ஒரு வைராக்கியமான யூதராயிருந்தாலும் இயேசு தம்முடைய எல்லா மக்களுக்காகவும் மரித் தார் என்பதைத் தொடக்கத்திலிருந்தே நன் கறிவார். எருசலேமில் உள்ள அப்போஸ்தலர்க ளுடைய அறிவுரையின்படி, அவர் யூதர்க ளுக்கு மட்டுமே திருவுரையாற்ற வந்தார். ஒருவேளை நற்செய்தி கேட்டு புறவினத்த வரும் இயேசுவின்மேல் நம்பிக்கை வைக்க லாம். இன்றைய நிலையில் நற்செய்தியைப் பரப்புவதற்கு யூதர்களே தடையாயிருந் தார்கள். அவர்கள் அவரை எதிர்த்தும், வெறுத்தும் பேசுகிறார்கள். இயேசுவின் புனித நாமத்தைக்கூட பழித்துப் பேசுகிறார்கள். சரி. இவர்கள் செய்வதைச் செய்யட்டும் என்று அமைதியாயிருந்தார். யூதர்கள் நிலைத்த பெருவாழ்வுக்குத் தகுதியற்றவர்கள் என்று கண்டவுடன் 'இனி நாங்கள் புறவினத் தாரிடம் நற்செய்தி கூறப்போகிறோம்' என்று சொன்னார்.

யூதர்கள் அதிர்ச்சி அடைந்தனர். புற இன மக்களோ பவுல் கூறியவற்றை ஆவலோடும் மகிழ்ச்சியோடும் கேட்டு வந்தார்கள். பவுல் புற இனத்தவருக்கு நற்செய்தி கூற முன் வந்தது கிறிஸ்தவத் திருச்சபையின் வர லாற்றில் முக்கிய திருப்பம் எனலாம். ஒரு புரட்சி என்றுகூடக் கூறலாம். ஏனெனில், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை கொண்ட எல்லா புறவினத்தாரும் இப் பொழுது அவரை ஏற்றுக்கொள்ளக்கூடும். திருச்சபையும் சட்ட திட்டங்களோ, யூத சடங்குகளோ இல்லாமல் அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடும். கிறிஸ்தவம் அன்பின் சமயம். விதிகளையும், சட்டங்களையும் கைக் கொண்டு தொல்லைப்படுவதற்குப் பதிலாக ஒருவருக்கு மட்டும் கீழ்ப்படிந்து அவரிடம் அன்புசெலுத்தினால் போதும்.

திங்கள் ஒன்று சென்றது. யூதர்கள் இவர் களை ஒழிக்கத் திட்டம் தீட்டிக்கொண்டிருந் தனர். யூத மதத்தை ஏற்றுக்கொண்டிருந்த உரோமப் பெண்களாகிய பணம் படைத்த செல்வாக்குள்ள உரோமர்களின் மனைவி களும், மகள்களுமாயிருந்தவர்களை ஆத்திர மடைந்திருந்த யூதர்கள் தூண்டிவிட்டுப் பவுலையும் பர்னபாவையும் அங்கிருந்து விரட்ட எண்ணினர். நகரில் குழப்பம் உண் டாகிவிடக் கூடாது என அரசியல் நகர நீதிபதிகள், இவர்கள் இருவரும் அப் பட்டணத்தை விட்டு உடனே வெளியேற வேண்டுமென ஆணை பிறப்பித்தனர். பவுலும் பர்னபாவும் ஆணைக்கு அடங்கி அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நகரின் வெளிகளில் வந்து நின்றபோது, தங்கள் காலணிகளைக் கழற்றி, அப்பட்டணத்தின் தூசியை உதறிப் போட்டார்கள். இப்படிச் செய்ததின் மூலம் யூதர்கள் தங்கள் பணிக்கு இடையூறாக இருந் தவர்கள் என்று கூறாமல் கூறினார்கள் (மத். 10:14; லூ. 9:5 பார்க்கவும்).

## கீழ்திசை நோக்கிச் சென்றனர்

கடவுளின் தூதுப் பணியாளர்கள் அழ கான புதிய சாலை ஒன்றின் வழியாக சுமார்




உரோமர் சாலை அமைத்த விதம்



உரோமப் பெருஞ்சாலையில் போக்குவரத்து

நூற்று நாற்பத்து நான்கு கிலோ மீட்டர் நடந்து லிக்கவோனியா எல்லைகளிலிருந்த பிரிகியாவைச் சேர்ந்த கிரேக்கப் பட்டணமான இக்கோனியா வந்து சேர்ந்தனர். சின்ன ஆசிய பீடபூமியின் உச்சியில் இப்பட்டணம் அமைந்திருந்தது. மலைகள் வடமேற்காக உயர்ந்து நின்றன (42ம் பக்கத்தில் உள்ள நிலப்படத்தைப் பாருங்கள்). இப்பயணம் கொஞ்சம் எளிதாகவே இருந்தது. இங்கு வாகன வசதி உண்டு. ஒரு கோவேறு கழுதையின் மேலோ அல்லது ஏதாவது ஒரு வண்டியிலோ ஏறிக்கொண்டு இங்கு வந்து சேரலாம். சாலையில் போர்வீரர்கள் அணிவகுத்துச் செல்வார்கள். பயணிகளும் வணிகர்களும் செல்வார்கள். சரக்கேற்றிக்கொண்டு ஒட்டகங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாகச் செல்லும். பயணிகளும் சென்றவண்ணமிருப்பார்கள். வெகு தொலைவில் உள்ள கடற்கரைப் பட்டினங்களிலிருந்து உரோமச் செல்வர்கள் உல்லாசமாக அங்குமிங்கும் போவதுண்டு. சாலை எப்போதும் சுறுசுறுப்பாயிருக்கும். வழியிலுள்ள பயணிகள் தங்கும் விடுதிகளிலும், உணவு விடுதிகளிலும் மக்கள் இளைப்பாறி, உணவருந்தி, உரையாடி மகிழ்ந்திருந்து செல்வார்கள். வணிகர்களோடும், தேவாலயம் செல்லும் மக்களோடும் பழகி, பவுலும் பர்னபாவும் அவர்களிடமிருந்து நிறைய விஷயங்களை அறிந்துகொண்டிருப்பார்கள். பதிலுக்குத் தங்கள் இயேசுவைப்பற்றி அவர்களுக்கும் சொல்லியிருப்பார்கள். இவர்கள் எதிர்பாராத அளவுக்கு இவ்வணிகர்கள் மூலம் இயேசுவைக் குறித்த நற்செய்தி வெகுதூரம் எட்டிவிட்டது.


அப். 14:1ல் யூதர்களில் பலர் பவுல் பேசுகிறதை ஏற்றுக்கொண்டனர் என்று சொல்லியிருக்கிறது. இவர்கள் பேச்சில் அதிக ஆர்வங்காட்டிய கிரேக்கர் மேல் ஜெப ஆலயத் தலைவர்கள் பொறாமை கொண்டனர். தர்க்கம் அதிகமாகவே, அது வன்முறையில் முடிந்துவிடுமோ எனப் பவுலும் பர்னபாவும் அஞ்சி உடனே அப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு லிஸ்திராவுக்குப் போனார்கள்.

## லிஸ்திராவில்


முப்பத்திரண்டு கிலோ மீட்டர் தொலைவில் தென்மேற்காகச் சென்று லிஸ்திரா வந்து

சேர்ந்தனர். இது ஓர் உரோமக் குடியேற்றப் பட்டணம். யூதர்களும் கிரேக்கர்களும் வெவ்வேறு பகுதிகளில் வசித்து வந்தனர். பவுலுக்கும் பர்னபாவுக்கும் நல்ல வரவேற்பு இருக்கவே, இங்கு நான்கைந்து மாதகாலம் தங்கினர். அகுஸ்து சீசரை ஒரு தெய்வமாக்கி அவருக்கென்று இங்கு ஒரு பலிபீடம் கட்டப்பட்டிருந்ததைப் பவுல் பார்த்திருக்கலாம். எனவே, எதிர்காலத்தில் பேரரசர் வழிபாட்டை எதிர்த்துப் போராடவேண்டிவரும் என்று பவுல் உணர்ந்தார். அதாவது பேரரசர் வழிபாடு தவறு என்று விளக்க வேண்டும். இதை அரசருக்கு எதிரான நாட்டுத்துரோகக் குற்றமாக அவர்கள் எண்ணிவிடுவார்கள். அதற்கு மரண தண்டனை கிடைக்கும்! இன்றும்கூட இப்பலிபீடம் லிஸ்திராவுக்கு வெளியேயுள்ள குன்றில் இருக்கிறது.

பவுல் செய்ததாக எழுதப்பட்டுள்ள முதல் அற்புதம் இங்குதான் நடந்தது. 'இயேசுவின் திருப்பெயரில்' நொண்டி ஒருவர் குணப்படுத்தப்பட்டார். லிஸ்திராவில் ஒரு கட்டுக்கதை சொல்லிவந்தார்கள். அவர்களுடைய தெய்வங்கள் தலைவர் தேயுசும் (உரோமரின் யூப்பித்தர்), தெய்வங்களின் தூதுவன் ஹெர்மேசும் (உரோமரின் மெர்க்குரி) ஒரு முறை இங்கு தோன்றியபோது பிலேமோன், பாக்கஸ் என்ற இரண்டுபேரைத் தவிர மற்றவர்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லையாம். எனவே, அத்தெய்வங்கள் இப்பட்டணத்து மக்கள் அனைவரையும் வெள்ளத்தால் அழித்தபோது பிலேமோனும், பாக்கசும் மட்டும் தப்பிவிட்டனராம். பவுல் செய்த அற்புதத்தைக் கண்டு அவ்விரு தெய்வங்களை மீண்டும் தங்கள் முன் தோன்றி



யூப்பித்தரும மெர்க்குரியும்




பவுலும் பர்னபாவும் தெய்வங்களாகக் கருதப்பட்டனர்

விட்டதாக லிஸ்திராவின் மக்கள் எண்ணி விட்டனர். அவர்கள் கத்திக் கூச்சல் போட்டுக்கொண்டு, தங்கள் லிக்கோனிய மொழியில் ஏதேதோ கூறிக்கொண்டு பெரு மகிழ்ச்சியோடு பவுலிடமும் பர்னபாவிடமும் வந்தனர். பவுலுக்கு லிக்கோனிய மொழி தெரியாது. எனவே அவர்கள் என்ன செய்யப் போகிறுர்கள் என்று அறியவில்லே. ஊருக்கு வெளியில் இருந்த யூப்பித்தர் கோயிலின் வாசலில் பலியிடுவதற்கு ஏற்பாடுகள் நடப்பதை அறிந்தவுடன்தான் இன்னது செய்யப் போகிறுர்கள் என்று அறிந்துகொண்டார். பவுலும் பர்னபாவும் சந்தைவெளியிலிருந்து ஓடி, பூசாரிகளேத் தடுத்து நிறுத்தி, தங்கள் துக்கத்தையும் வேதனேயையும் வெளிப்படையாகக் காண்பிக்கும்பொருட்டு உடுத்தியிருந்த ஆடைகளேக் கிழித்துக்கொண்டனர்.

அவர்கள் எல்லோருக்கும் தெரிந்த கிரேக்க மொழியில் பவுல் உரையாடலேத் தொடங்கிஞர். இயற்கை அனேத்தையும் படைத்தவர் கடவுள். எனவே, அவர்கள் தங்கள் வாழ்க்கை முறைகளே மாற்றிக்கொள்ள வேண்டும் என்ருர். தாங்கள் அவர்களுக்குச் செய்ய எண்ணியிருந்த காரியங்களே எல்லாம் விட்டுவிட்டு உணர்ச்சி அடங்கிய நிலேயில் பவுல், பர்னபா இருவரும் மனிதர்களே என்று உணர்ந்தார்கள். இது அவர்களுக்குத் தாங்க முடியாத ஏமாற்றமாயிருந்தது. இந்த ஏமாற்றம் கோபத்திற்குத் துணே செய்தது.

இக்கோனியாவிலிருந்தும் அந்தியோகியாவிலிருந்தும் வந்த பொருமை மிக்க யூதர்கள் இந்த நேரத்தைத் தங்களுக்குச் சாதகமான வகையில் எளிதாகப் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. முதலாவது ஒரு கல்லேப்போடவும் கற்கள் மள மளவென்று அவரை நோக்கி வீசப்பட்டன. ஸ்தேவான் இரத்த சாட்சியாக உயிர்விட்டதைப் பவுல் பார்த்திருந்தார். இப்போது அவரும் மூர்ச்சையடைந்து அப்படியே விழுந்துவிட்டார். கூர்மையான கற்கள் அவரைக் குத்திக் காயப்படுத்தி விட்டன. இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. அவர் இறந்துபோனதாக மக்கள் நினேத்தனர். எனவே, கழுகுகள் கொத்தித் தின்னட்டும் என்று அவர் உடலே அப்படியே போட்டுவிட்டுச் சென்றனர். இதுபோன்ற நிலேயில் ஸ்தேவான் உயிரிழந்தார். ஆளுல், பவுல் பிழைத்துக் கொண்டார். இன்னும் தம் ஆண்டவருக்கு ஆற்றவேண்டிய அரும் பணி இருக்கும்போது, அவர் இறந்து மடிவாரோ?

பேய்கள்போல் வெறியாட்டம் போட்ட மக்கள் கூட்டத்தில் நெருக்கித் தள்ளப்பட்டு அச்சமுள்ளவராயும், பவுலுக்கு என்ன நேர்ந்ததோ என்று அறிய ஆவல் உள்ளவராயும் ஓடிவந்தார் ஓர் இளேஞர். தீமோத்தேயு என்ற அந்த இளேஞரின் மனதில் இக்காட்சி எத்தனேயோ ஆண்டுகளுக்கு அப்படியே பதிந்திருந்தது (அப். 16:1; 2 தீமோ. 3:10,11,14,



பவுல் மேல் கல்லெறிந்தனர்

15). அவர் தாய் ஐனிக்கேயாளும், பாட்டி லோவிசாளுமே பவுலுக்குக் காயங்கட்டி, இரகசியமாய் மறைத்துவைத்து, அவரைக் கவனித்து வந்திருக்கக்கூடும். இந்தத் தீமோத்தேயு பற்றி நாம் மீண்டும் படிக்க இருக்கிறோம்.

### அந்தியோகியாவுக்குத் திரும்பினார்கள்

அவர்கள் தெர்பைக்குச் சென்று அங்கு சில நாட்கள் தங்கினர். அங்கே காயு என்ற ஒருவர் கிறிஸ்தவரானார். தெர்பைக்கருகில், இன்றும்கூட, ஆயிரம் காலடித் தொலைவுக்கு ஒரு கல்லாக உரோமர்களால் நிறுத்தப்பட்ட கற்கள் இருக்கின்றன. குவிந்து கிடக்கும் மண் ஓட்டுச் சில்லிகள், கற்கள், பளிங்குத் துண்டுகள் இவைகளுக்கிடையில் கிரேக்கப் பலிபீடங்கள் காணப்படுகின்றன. இன்னும் கிழக்கு நோக்கி வெகுதூரம் செல்ல பவுலும் பர்னபாவும் நினைக்கவில்லை. ஒருவேளை உரோமப் பேரரசின் எல்லைக்குள்ளாகவே பவுல் தம் பணியைச் செய்ய விரும்பியிருக்கலாம். பவுலைத் தேடிக்கொண்டு யூதர்கள் தெர்பைக்கு வரவில்லை. பவுல் அன்றே இறந்திருக்கவேண்டும் என்று இவர்கள் ஒருவேளை நினைத்திருக்கலாம். பவுலும் பர்னபாவும் அஞ்சாநெஞ்சர்களாக லிஸ்திரா, இக்கோனியா பட்டணங்கள் வழியாக மீண்டும் சென்றனர். அவர்கள் அங்கு வெளிப்படையாக நின்று யாரிடமும் எதுவும் பேசாததால், அவர்களால் அங்கு தங்கியிருக்க முடிந்தது. பவுலும் பர்னபாவும் கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களை (விசுவாசிகளை) ஒன்றுகூட்டி சபைகள் அமைத்து,அவர்களைச் சபைப் பெரியோரின் பொறுப்பில் விடும் வேலையைச் செய்தார்கள். இந்தச் சபை அமைப்புப் பணியை அமைதியாகச் செய்து முடித்தனர். அங்கிருந்து பிசிதியாவிலுள்ள அந்தியோகியா பட்டணத்திற்குப் புறப்பட்டனர்.

இந்த இடத்திலிருந்து லூக்கா விஷயங்களை வேகமாக எடுத்துரைக்கிறார். தகவல்கள், விவரங்கள் அதிகம் தருவதில்லை. பவுலும் பர்னபாவும் இப்போது 'அப்போஸ்தலர்' என அழைக்கப்பட்டனர். அப்போஸ்தலர்கள் இருவரும் இப்போது பிசிதியாவிலும், பம்பிலியாவிலும் திருவுரையாற்றிவிட்டு அத்தாலியாவில் கப்பல் ஏறி, தென்கிழக்காக செலூக்கியா வந்து அங்கிருந்து சீரியா நாட்டிலுள்ள அந்தியோகியாவை அடைந்தனர். ஏறத்தாழ 2000 கிலோமீட்டர் தொலைவு நீண்டதொரு பயணம் செய்து இரு ஆண்டுகள் கழித்து, இப்போது தங்கள் சொந்த நாட்டைப் போன்ற நாட்டில் கால் வைத்தனர்.



உரோமரின் தொலைக்கல்

### யூதர்களும் புற இனத்தவரும்

அந்தியோகியா வந்தவுடன் அங்குள்ள சபையோரிடம் சென்று தங்கள் கடினமான பயணங்கள் குறித்தும், வீரப் பணியில் தாங்கள் அடைந்த வெற்றி குறித்தும் எடுத்துரைத்தனர். இவர்கள் சொல்லிய யாவற்றையும் மகிழ்ச்சி பொங்கக் கேட்டனர் சபையினர். இறைவன், 'விசுவாசத்தின் வாசலைப் புறவினத்தவருக்கும் திறந்துவிட்டார்' என்ற செய்தி அவர்களை வெகுவாய்க் கவர்ந்தது. யூதத் திருச்சட்டத்தையும், அதன் மரபையும் புறவினத்தவர் பெருஞ்சுமையாகச் சுமக்காமலேயே அவர்களைச் சபை ஏற்றுக்கொண்டதை 'விசுவாசத்தின் வாசல்' என்கிறோம். இது யூதர்கள் கொண்டிருந்த நம்பிக்கை அல்ல. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவையே உயிர் மீண்ட மேசியாவாக நம்பிய நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்ட புதிய கிறிஸ்தவ நம்பிக்கை! இந்நம்பிக்கையைப்பற்றி எருசலேமில் உள்ள கிறிஸ்தவ யூதர்கள் கண்டிப்பாகக் கேள்வி எழுப்புவார்கள். இவர்கள் சபையில் சேர விரும்பின புறவினத்தவர், மோசேயின் திருச்சட்ட முறைப்படி நுனித்தோல் நீக்கப்பட்டு யூதர் ஆகவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். நுனித்தோல் நீக்குதல் கடவுளுக்கும், அவர் தெரிந்துகொண்ட மக்களுக்கும் ஏற்பட்ட புனித உடன்படிக்கையின் ஒரு வெளிப்படைச் சின்னம். எட்டுநாள் குழந்தைகளாக இருக்கும்போது எல்லா ஆண் குழந்தைகளின் பாலுறுப்பிலும் ஒரு சிறிய அறுவை சிகிச்சை செய்து நுனித்தோல் நீக்கப்படும். மக்கள் கண்டிப்பாகக் கீழ்ப்படியவேண்டிய மோசேயின் சட்டம் இது (ஆதி. 17:10–13; லேவி. 12:3; லூ. 2:21). எனவே, புறவினத்தவரும் கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக வேண்டுமென்றால், நுனித்தோல் நீக்குதல் என்ற விருத்தசேதனத்தின் மூலம் முதலாவது அவர்கள் யூதர்களாக மாற

வேண்டும் என்பதுதான் சரி என்று யூதர்கள் வாதாடினார்கள். இந்தக் கருத்தைத் திட்ட வட்டமாகக் கூறிவிட எருசலேமிலிருந்து அந்தியோகியா திருச்சபைக்கு பிரதிநிதிகள் குழு ஒன்று அனுப்பப்பட்டது (அப். 15:1,2). இதில் பேதுருவும் ஒருவராய் இருந்திருக்க வேண்டும். கலா. 2:11—14 வசனங்களில் பவுல் இது குறித்துப் பேதுருவோடு தர்க்கித்து, ஏற்கெனவே பேதுருவும் அப்புற வினத்தவரை (எ. கா. கொர்நேலியுவை) ஏற்றுக்கொண்டு, அவர்களோடு விருந்துண்டதையும் சுட்டிக் காட்டினதாகக் கூறுகிறார். தாம் செய்யாததை மற்றவர்களைச் செய்யச் சொல்ல அவருக்கு உரிமையில்லை என்று பவுல் கடிந்து பேசும்வரை பேதுருவுக்கு எருசலேமிலுள்ள மற்ற யூதர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயம் இருந்தது. இது எருசலேமில் விவாதத்திற்கு வந்தபோது, பவுலை ஆதரித்துப் பேதுரு பேசத்தொடங்கியதற்குப் பவுலின் இந்த முன்னெச்சரிப்பு காரணமாயிருக்குமோ?

### கலாத்திய சபைக்குக் கடிதம்

தங்கள் பயணம் குறித்துப் பவுலும் பர்னபாவும் எருசலேமில் உள்ள சபைக்குச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எப்படியானாலும் புறவினத்தவர் நிலைமைபற்றி இப்போதே ஒரேயடியாக முடிவு செய்துவிட வேண்டும் என்று பவுல் எண்ணினார். எருசலேமுக்குப் போகும் வழியில் வைத்தே கலாத்தியாவில் தாம் சந்தித்த சபைகளுக்குப் பவுல் கடிதம் எழுதினார் என்ற கருத்தை திருமறை ஆராய்ச்சியாளர் பலர் ஒப்புக்கொள்கின்றனர். இது கி.பி. 48—49ல் எழுதப்பட்டிருக்கலாம் (அப். 11:1—18; 15:1—29; கலா. 1:15—2:14). மற்ற ஆராய்ச்சியாளர் இதனை கி.பி. 52 என்கின்றனர். பல தெய்வ வணக்க மக்களாயிருந்து பவுலும் பர்னபாவும் ஏற்படுத்தியிருந்த சபைகளில் சேர்ந்தவர்களுக்காகவே பவுல் இக்கடிதத்தை எழுதினார். கலாத்தியக் கடிதம் சற்றுச் சூடாக எழுதப்பட்ட கடிதம். எருசலேமில் இருந்த யூதக் கிறிஸ்தவர்கள் இம்மக்களிடம் திருவுரைப் பேச்சாளர்கள் சிலரை அனுப்பி, பவுல் போதித்தவைகள் தவறென்றும், எருசலேமில் உள்ள அப்போஸ்தலர்களைப்போல் இம்மக்களும் விருத்தசேதனத்தை ஏற்றுக்கொண்டு முதற்கண் யூதர்களாக மாற வேண்டும் என்றும் சொல்லி அவர்களைக் குழப்பமடையச் செய்துவிட்டனர். பவுலுக்கு அதிகமான கோபம் உண்டாயிற்று. இப்படிப் பொய் பேசித் திரிபவர்களும், அவர்களை நம்புகிற மக்களும் இன்னமும் இருக்கிறார்களே என்று எண்ணி அப்படியே அதிர்ந்து போனார். கிறிஸ்தவ சபை தொடர்ந்து வாழ்வதற்கு இடர் ஏற்பட்டுவிட்டது என்று நினைக்கவும் தலைப்பட்டார் (கலா. 6:15). கோபத்தையும் அன்பையும் குழைத்துக் குழைத்து எழுத ஆரம்பித்தார். கொஞ்ச நேரம் காரசாரமாகத் திட்டுவார், பிறகு அன்பொழுகப் பேசுவார். இக்கடிதம் தம்முடையதே என்று காண்பிக்கக் கடைசியில் தமது கையொப்பத்தையும் போட்டார் (கலா. 6:11). அவர் பார்வை கெட்டிருந்ததால், பெரிய எழுத்தாகக் கையொப்பமிட்டிருக்கிறார். இவர் எழுதிய கடிதத்தைப் புதிய மொழிபெயர்ப்பில் படித்துமகிழுங்கள்.



இக்கோனியாவுக்கும் லிஸ்திராவுக்கும் இடையிலுள்ள நிலக்காட்சி

## விளக்கப் பயிற்சி

1. சவுல், பர்னபா, மாற்கு ஆகியவர்கள் தங்கள் முதல் பயணம் குறித்துத் திட்டங்கள் தீட்டி கலந்துரையாடும் உரையாடல் ஒன்றைத் தயாரியுங்கள்.

2. எலிமா, மாற்கு, செர்கியு பவுல், அங்குள்ள வீட்டில் வாழும் அடிமை இவர்களில் எவரேனும் ஒருவர் சொல்லுவது போல பாப்போ பட்டினத்து நிகழ்ச்சிகளைக் கூறுங்கள்.

3. தாம் எருசலேமுக்கு மீண்டும் செல்ல நினைப்பதற்கான காரணத்தைப்பர்னபாவிடம் மாற்கு கூறும் பாவனையில் கூறுங்கள்.

அல்லது

'எருசலேம் செய்திகள்' என்ற பத்திரிகைக்காக மாற்குவைப் பேட்டி கண்டு எழுதுங்கள்.

4. அந்தியோகியாவில் இருந்த இன்னுசியார் என்பவரைப்பற்றித் தகவல்கள் சேகரித்து வகுப்பில் உள்ளவர்களுக்கு ஒரு சொற்பொழிவாற்றுங்கள்.

5. பவுலின் உரைக்கும், ஸ்தேவானின் உரைக்கும் உள்ள (அ) ஒற்றுமை, (ஆ) வேற்றுமைக் குறிப்புகளைக் கண்டு பிடியுங்கள்.

6. 'இதோ, புற இனத்தவரிடம் செல்கிறோம்!' இக்கூற்றின் முக்கியத்துவத்தை விளக்குங்கள்.

7. பவுலும், பர்னபாவும் இக்கோனியாவுக்குச் செல்வதைக்காட்டும் படம் வரையுங்கள்.

8. லிஸ்திராவில் நடந்த நிகழ்ச்சிகளை நாடகமாகத் தயாரியுங்கள்.

9. காலைக் கூட்டத்திற்கு 'சகோதரத்துவம்' என்ற தலைப்பில் ஆராதனை ஒழுங்கு ஆயத்தம் செய்யுங்கள்.

10. கலாத்தியர் 5:22,23,25; 6:7 ஆகிய வசனங்களை மனப்பாடம் செய்யுங்கள்.

11. கலாத்தியர் 3:28ம் வசனத்தை விளக்கிக் கூறுங்கள்.

12. முதல் தூதுப் பயணத்தில் நடந்த நிகழ்ச்சிகளைத் தொடர்சித்திரமாக வரைந்து விளக்குங்கள்.

அல்லது

களிமண்ணிலோ சிமென்டிலோ மத்திய தரைக்கடல் படம் ஒன்று தயாரித்து, அதில் பவுல் சென்ற முக்கிய இடங்களைக் குறிப்பிட்டு, அங்கு நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை ஆங்காங்கே எழுதி ஒட்டுங்கள்.



எலிமா குருடனுகிறான்

அத்தியாயம் 8

# எருசலேமில் நடந்த விவாதக் கூட்டம்

*(15)*

### கருத்து வேறுபாடு

எருசலேமில் உள்ள அப்போஸ்தலர்கள் சொல்லிய காரியங்களுக்குப் பவுல் உடன்பட வில்லை என்பது தெளிவாகிறது. இருதிறத்தாருக்கும் உடன்பாடான ஒரு தீர்வு காண அவர்களுக்கு இயலவில்லை என்றால் அவர்கள் கூடிவரும்போது விவாதங்களும், மன வருத்தங்களும்தான் மிச்சமாக இருக்கும். அவர்கள் ஒருநாள் சந்தித்தனர். எங்கே சந்தித்துப் பேசினார்கள் என்று நமக்குத் தெரியாது. மாற்குவின் வீட்டில் வழக்கமாகக் கூடும் அந்த மேலறையில் ஒருவேளை அவர்கள் கூடிப் பேசியிருக்கலாம்.

இப்போது இயேசுவின் தம்பியாகிய யாக்கோபு எருசலேமுக்குப் பேராயராக இருந்தார். இங்கு 'பேராயர்' என்ற சொல் தற்காலத்தில் உள்ள பேராயரைக் குறிப்பதைப்போல் பயன்படுத்தப்படவில்லை. கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைத்திருந்த யூதர்களின் கிறிஸ்தவச் சபையின் தலைமை அப்போஸ்தலராக அல்லது தலைவராகவே அவர் இருந்தார். யாக்கோபு வைராக்கியமான யூதர். அவர் யூத முறைமைகளை வழக்கம்போல் கடைப்பிடித்து வந்தார். அங்ஙனமே கிறிஸ்தவக் கூட்டங்களையும், வழிபாடுகளையும் நடத்திக்கொண்டிருந்தார். கிறிஸ்தவர்களின் இந்த யூதக் கட்சிக்கு அவர் தலைவராக விளங்கினார். எதிர்க்கட்சித் தலைவர்போல் பவுல் விளங்கினார். இவரும் (வளர்ப்பின்படி) வைராக்கியமான யூதர். அந்தியோகியாவிலிருந்த கிறிஸ்தவர்களுக்குத் தலைவராகப் பவுல் விளங்கினார். அவர் பெற்றிருந்த விரிவான அனுபவம், விசாலமான அறிவு காரணமாகப் பவுல் எருசலேமில் உள்ள யூதர்களைக் காட்டிலும், புறவினத்தவர் குழுக்களிடம் அதிகமான பரிவுகாட்டி வந்தார். இருகட்சித் தலைவர்களும் தாங்கள் செய்வதே சரியென்றும், தாங்கள் அப்படிச் செய்வதற்குக் கடவுளின் இசைவு தங்கள் பக்கமே இருக்கிறது என்றும் நினைத்தார்கள். இருவரும் கருத்தளவில் மோதிக்கொண்டேயிருந்தால் சபை இரு கூறாகிவிடலாம். எனவே, அப்படி எதுவும் நடைபெறாமல் தடுத்துவிடக்கூடும் என்று இருவரும் நம்பினார்கள்.

பவுலின் பக்கமே நியாயம் இருந்தது என்று நாம் அழுத்தமாகக் கூறலாம். அதே சமயம் எருசலேம் யூதர்கள் கவலைப்படவும் காரணங்கள் இருந்தன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எண்ணிக்கையில் புற இனத்தவர் அதிகமாவதை அவர்கள் விரும்ப வில்லை. யூதரல்லாதார் சில வணக்கத்திலும், தங்கள் முறைகேடான வழிபாட்டிலும் ஊறிப்போயிருந்தவர்கள். தங்கள் புதிய நம்பிக்கையை நாளடைவில் மறந்து, தங்கள் வழிபாட்டில் பழைய சீர்கேடான வழிபாட்டு முறைகளையும் சபைக்குள் கொண்டுவந்து விடலாமல்லவா? கிறிஸ்தவ யூதர்கள் இன்னொரு காரியத்தையும் நினைவில்கொண்டிருந்தனர். தங்கள் குருவாகிய இயேசுவும் தாங்களும் (அவர் சீடர்கள்) யூதர்கள். தங்கள் நம்பிக்கை மோசேயின் திருச்சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டது. அதற்குக் கீழ்ப்படிவது, கடவுளின் அரசைக் கொண்டு வருவதற்காகவே என்று நினைத்தனர்.

### பிரச்சினை விவாதத்திற்கு வந்தது

அவர்கள் விவாதிக்கவேண்டிய முக்கிய கேள்வி இதுவே: புதிய திருச்சபை என்பது

மோசேயின் திருச்சட்டத்தோடு இணைக்கப் பட்ட பழைய யூத சமயத்தின் ஒரு பகுதியா அல்லது கிறிஸ்துவை நம்பும் யூதரும், யூத ரல்லாதாரும், எவரும் கிறிஸ்துவைப் பின் பற்றுவதற்கு வாய்ப்பளிக்கும் ஒரு புதிய அமைப்பா? வேறு விதமாகச் சொன்னால் தூய ஆவியானவரின் திருமுழுக்குக்கு முக்கியத் துவம் அளிக்கப்படவேண்டுமா? அல்லது நுனித்தோல் நீக்கும் சடங்குக்கு முக்கியத் துவம் கொடுக்கப்படவேண்டுமா? இக் கேள்விகளுக்கு அடியில் மறைந்திருந்த ஒரு பெரும் உண்மையை இரு சாராரும் உணரத் தொடங்கினர். மோசேயின் திருச்சட்டமே முக்கியம் என்றால் கிறிஸ்து வாழ்ந்ததும், இறந்ததும் யாவும் பயனற்றுப் போய்விடும் என்று கண்டுகொண்டனர்.

விவாதத்தில் பவுல் அதிகம் பேசவில்லை. தொடக்கத்தில் பவுல் சில காரியங்களை விவாதம் செய்த பிறகு, பேதுருவே முழு மூச்சோடு பேசினார். அவர் பவுலை முன்பு சந்தித்துத் தெளிவு பெற்றிருந்ததால் இப் போது எந்தக் கருத்தைச் சொல்லவேண்டும் என்றும், யாருக்காகப் பேசவேண்டும் என்றும் அறிந்திருக்கலாம். கொர்நேலியுவோடு தனக் கேற்பட்ட அனுபவத்தை நினைத்துப் பார்த்து, யூதர்களாகப் பிறந்த தங்களுக்கே சுமப்பதற் கரிய பெருஞ்சுமையாக இருக்கும் திருச் சட்டத்தை புறவினத்தவரும் கண்டிப்பாகக் கைக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தி னால் அது அவர்களுக்குச் சுமக்கமுடியாததாகி விடும் என்று விவாதித்தார். இது கடவுளின் திருச்சித்தத்திற்கு உகந்ததல்ல. ஆண்டவ ராகிய இயேசுவின் திருவருள் ஒன்றே போதும். மேலும், நற்செய்தி உலகுக்குப் பொதுவான செய்தி. ஒவ்வொரு மனிதனுக் கும் அதை ஏற்றுக்கொள்ள உரிமை உண்டு என்றார் (கலா. 3:28; கொலோ. 3:11). பேதுரு பேசிய பிறகு பர்னபாவும், பவுலும் தங்கள் தூதுப் பயண அனுபவங்களை எடுத்துச் சொல்லி, புதிதாக அமைக்கப்பட்டு வரும் சபைகள் குறித்தும் விளக்கினார்கள். தூய ஆவியானவரின் தூண்டுதலோடும், கடவுள் தந்த ஆற்றலோடும் மட்டுமே தாங்கள் இப் பணிகளைச் செய்து வருவதைத் தெளிவு படுத்தினார்கள். இங்கு லூக்கா பெயர்களைச் சொல்லும் வரிசையில் மாற்றம் செய்வதைக் காண்கிறோம். பர்னபா தங்கள் பிரதிநிதி என்பதால் எருசலேமில் அவருக்கு அதிக செல்வாக்கு உண்டு. இன்னமும் அப்போஸ் தலர்கள் பவுலைத் தங்களில் ஒருவராய் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. நேர்மையான முறையில் யாக்கோபும், பேதுருவும், மற்றும் சிலரும் பவுலை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால், எருசலேமில் வலிமை வாய்ந்த ஒரு சிறு கூட்டம் பவுலுக்கு எதிராகவே இருந்தது.


### திருச்சபை எடுத்த சிறப்பான முடிவு

இந்த விவாதம்பற்றி வருணிக்கும் வசனங் களை நீங்கள் படித்து, உங்கள் மனத்திரையில் இப்படிப்பட்ட முக்கியமான தலைவர்கள் கூடிப் பேசுங்காட்சியைக் கற்பனை செய்து பார்க்க முனைவீர்களானால், அங்கு அவர்களுக் கிடையே நிலவிய விரைப்பான சூழ்நிலையை நீங்கள் ஒருவாறு உணரக்கூடும். அத்துடன் யாக்கோபு தம்முடைய முடிவை அறிவித்த போது அவர்கள் நிம்மதியான பெருமூச்சை விட்ட நிலையை நீங்களும் அனுபவித்திருப் பீர்கள். எல்லோருக்கும் வியப்பூட்டும் வகை யில் பேதுரு, பவுல் என்பவர்கள் கூறிய வாதங்களை யாக்கோபு ஒத்துக்கொண்டு அவர்களுடைய அனுபவங்களையும் ஏற்றுக் கொண்டார். தூதுப் பணியாளர்கள் சொல்லியவைகளைக் காதில் வாங்காமல் தம் குறிப்புகளை வலுப்படுத்த வேத வாக்கியங் களையே (ஆமோஸ் 9:11,12) ஆதாரமாகக் கொண்டு பேசுகிறார் என்றுதான் யாக்கோபைக் குறித்து எவருக்கும் எண்ணத் தோன்றும். புற இனத்தவர் விருத்த சேதனத்தை ஏற்றுக்கொள்ள அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார். இருசாராரும் உடன்பட்டுப் புன்முறுவல் செய்ததை நம்மால் நன்றாகக் கற்பனைசெய்ய முடிகிற தல்லவா? ஆனால், புற இனத்தவரின் வாழ்க்கை தூய்மையடைந்து அவர்கள் தங்களை இயேசுவுக்கு ஒப்புக்கொடுக்கத்தக்க தாக அவர்கள் கைவிடவேண்டிய முறை கேடான வழிபாட்டு முறைகள் சில இருந்தன என்று சொன்னார். அவர்கள் கைக்கொள்ள வேண்டிய மூன்று விதிகளையும் குறிப்பிட் டார். அவை பின்வருமாறு:—

1. புற இனத்தவரின் முறைகேடான பல தெய்வ வழிபாட்டிலும், பலிசெலுத்து வதிலும் பங்கேற்கக் கூடாது.

2. அப்படிப்பட்ட வழிபாட்டில் காணப் படும் தவறான நடத்தைகள் எதுவும் இனி அவர்களிடம் காணப்படக்கூடாது.

3. இரத்தம் வடியாமல் செத்த உயிரினங் களின் உடலைப் புசிப்பதையும், சிலை களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதையும் தவிர்க்கவேண்டும் (லேவி. 17:10; 7:26).



எருசலேமில் நடந்த விவாதக் கூட்டம்


இந்தத் தீர்மானங்களை 'யூதரல்லாத சகோதரருக்கு அப்போஸ்தலர்களும், மூப்பர்களும்' எழுதிய கடித வடிவில் தூதுப் பணியாளர்களான பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவுக்கு எடுத்துச் சென்றனர். எருசலேமில் நடந்த விவாதக் கூட்டத்தில் தங்களுக்குக் கிடைத்த வெற்றி குறித்து அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். யூதாசும், சீலாவும் அவர்களோடு பயணப்பட்டனர். எருசலேமில் முடிவு செய்யப்பட்டதைக் குறித்து கடிதத்தில் உள்ளவற்றிற்கு இன்னும் விளக்கம் வேண்டுமானால் எடுத்துச் சொல்லித் தெளிவுபடுத்துவதற்கென்று இவர்களும் சென்றனர். சீலா அந்தியோகியாவில் தங்கிவிட்டார்.

பவுலின் கடிதங்களை ஆழ்ந்து படிப்பவர்களுக்கு, எருசலேமில் உள்ள யூதக் கிறிஸ்தவர்கள், தங்கள் கருத்துக்களில் இன்னமும் திடமான நம்பிக்கை வைத்திருந்தது தெரியவரும். இந்த முடிவு ஒருவகையாக இருதிறத்தாரையும் ஒன்றுபடுத்தும் ஒரு நல்ல முயற்சி. இருதிறத்தாருக்கும் முற்றிலுமாக மனநிறைவளிக்கவில்லைதான். திருச்சபை மக்களில் யூதர்கள் என்றும், புற இனத்தவர் என்றும் இரு பிரிவினர் உண்டு என்பதை இது தெளிவுபடுத்தி இருந்தது. வேறுபாடுகளை எண்ணுமல் யூதர்கள் புறவின மக்களோடு சேர்ந்து ஆராதிக்க எத்தனையோ வருடங்கள் பிடித்தன. ஏனெனில், யூதர்கள் புறவினத்தவரோடு கலப்பது முக்கியமாக உணவு உண்பது 'தீட்டானது' என்ற போதனை சிறு வயதிலிருந்தே யூதர்களிடம் ஆழமாகப் பதிந்துள்ள ஒரு போதனையானதால் அதிலிருந்து அவர்கள் விடுபடுவது அவ்வளவு எளிதான காரியமாக இருக்கவில்லை. அந்தியோகியாவிலும் இப்படி தனிப்பட்ட பிரிவுகள் இருந்து வந்ததைக் காண்கிறோம் (கலா. 2:11–13). எருசலேமில் இருந்த கிறிஸ்தவச் சபை, யூத சமயச் சார்புடையதாயும், பவுலுக்கு எதிராக செயல்படுவதாயும் இருந்தது (அப். 21:20,21; ரோ. 15:31). இவர்களில் பலர் கி.பி. 65ல் நடந்த அடக்குமுறை

காரணமாக, யோர்தானின் கீழ்க்கரையில் இருந்த பெல்லா நகருக்கு ஓடிப்போனார்கள். அங்கு பாதுகாப்பாக இருக்கலாம் என்று அவர்கள் உணர்ந்தார்கள். பெல்லா ஒரு கிரேக்கப் பட்டணம். எனவே, அவர்கள் அங்கு ஹெலனிய யூதர்களைச் சந்தித்திருப்பார்கள். அவர்களோடு எப்படிப் பழகினார்களோ? துன்புறுத்தலுக்கு அஞ்சி அவர்களோடு ஒருமைப்பட்டிருந்தார்களோ? இதற்கு ஐந்து ஆண்டுகள் கழித்து இயேசு முன்னறிவித்தபடியே கி.பி. 70ல் எருசலேம் மண்மேடாயிற்று. ஆனால், அதற்குள் கிறிஸ்தவ சமயம் பல இடங்களிலும் பரவி விட்டது. உரோமர்களால் திருச்சபையை ஒடுக்கி அழிக்க முடியாமற்போயிற்று.

## பேதுருவுக்கு நிகழ்ந்தது என்ன?

பேதுருவைப்பற்றி நாம் இறுதியாகக் கேள்விப்படுவது இங்கேதான். அவர் உரோமுக்குச் சென்றதாக ஒரு பழங்கதை உண்டு. கடந்த முப்பது ஆண்டுகளாக இயேசுவைக் குறித்துத் தாம் கூறிவந்த செய்திகளையெல்லாம், கி.பி. 64ல் மாற்குவிடம் அவர் சொன்னதாக நம்பப்படுகிறது. கண்டதைக் கண்டபடியே உரைக்கும் பேதுருவின் பேச்சு நடையை மாற்கு நற்செய்தி நூலில் நாம் காண்கிறோம். கி.பி. 42ல் பேதுரு உரோமில் இருந்ததாகவும், அங்கு மாந்திரீகத்தில் புகழ் பெற்று விளங்கிய தம் பழைய பகைவனை சீமோன் மாகுவைக் கண்டதாகவும் இன்னொரு கதையும் உண்டு. உரோமில் கிறிஸ்தவ சபையை ஏற்படுத்தி அதன் பேராயராக பேதுரு இருபத்தைந்தாண்டுகள் இருந்து வந்ததாகவும் கூறப்படுகிறது. தமது முதலாம் கடிதத்தை உரோமில் இருந்து கி.பி. 63ல் பேதுரு எழுதியிருக்கலாம். நீரோ, கிறிஸ்தவ சபைகளை அடக்கி ஒடுக்கிய காலத்தில் பேதுரு சிறையில் போடப்பட்டதாகவும், அங்கிருந்து தப்பி ஓடியபோது இயேசுவை வழியில் சந்தித்து 'எங்கே செல்கிறீர்?' என்று கேட்டதாகவும், 'மீண்டும் ஒருமுறை சிலுவையில் அறையப்படுவதற்காக நான் உரோமுக்குச் செல்லுகிறேன்' என்று இயேசு கூறியதாகவும் சொல்லப்படுகிறது. உடனே பேதுரு உரோமுக்குத் திரும்பிச் சென்று பவுலோடுகூடச் சிறையில் அடைக்கப்பட்டார். இருவரும் கொலை செய்யப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார்கள். பவுலிடம் விடை பெற்றுக்கொண்டு பேதுரு சென்றார். அவர் விருப்பப்படியே தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன. அவர் ஏன் தலைகீழாக அறையப்பட வேண்டும் என்று விரும்பினார் தெரியுமா? இயேசு சிலுவையில் நேராக அறையப்பட்டிருந்தார். எனவே, தம் குருவைப்போல் அறையப்படும் தகுதி தமக்கில்லையென்று சொன்னாராம். அவருடைய கல்லறையின் மேல் புகழ்வாய்ந்த தூய பேதுருவின் ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது.



கி.பி. 70ல் எருசலேம் அழிந்தது

## விளக்கப் பயிற்சி

1. (அ) பேதுருவும் பவுலும் தனித்து உரையாடுவதுபோலவும் (கலா. 2:6—17), (ஆ) யாக்கோபும் பவுலும் தனித்து உரையாடுவதுபோலவும் (கலா. 1:18,19), இரு உரையாடல்களைத் தயார் செய்யுங்கள்.

2. கிறிஸ்தவ சபை புற இனத்தவரை (அ) ஏற்றுக்கொள்ளக்கூடாது, (ஆ) ஏற்றுக்கொள்ளலாம் என்பதற்கான வாக்குவாதங்களைக் குறிப்புகளாக எடுத்து எழுதுங்கள்.

3. பேதுருவைப் பேட்டி காணுவதுபோல் நடித்துக்காட்டுங்கள்.

4. அப்போஸ்தலர் 15:6—29ல் உள்ள வசனங்களை எருசலேமில் பலஸ்தீன யூதர்களின் குழுவில் நடந்த முறையான ஒரு விவாதமாக அமையுங்கள். உங்கள் வாக்குவாதங்களையும், குறிப்புகளையும் பொருத்தமாக இணைத்துக்கொள்ளுங்கள். (எ.கா. வசனம் 7ல் 'நெடுநேரமாக வாக்குவாதம் நடந்தபின்' என்று வருகிறதைப் பார்க்கவும்.) இந்த விவாதக் கூட்டத்தைச் சனகரீம் பேரவையோடு குழப்பிக்கொள்ளாதேயுங்கள்.

5. அப்போஸ்தலர் 10:44,47; 11:15—18; 15:8 வசனங்களைப் படித்துப் பார்க்கவும். இவ்வசனங்களில்வரும் பொதுவான குறிப்புகளைக் கண்டுபிடிக்கவும். பேதுரு அவற்றை விவாதக் கூட்டத்தின்போது எங்ஙனம் பயன்படுத்தினர்?

6. ஏசாயா 61:1ம் வசனத்தை மனப்பாடம் செய்துகொள்ளவும். கலா. 2:20; 6:2 (முற்பகுதி) வசனங்களை அழகான எழுத்துக்களாக எழுதுங்கள்.

7. பேதுரு, யாக்கோபு, பவுல் இவர்களில் ஒருவர் விவாதக் கூட்டத்தில் பேசுவதைப் படம் போட்டுக் காண்பியுங்கள்.


8. அப்போஸ்தலர் 15:10ம் வசனத்தை விளக்குங்கள்.

9. நுனித்தோல் நீக்க விதியைக் கடைப்பிடிக்கவேண்டும் என வற்புறுத்தக்கூடாது என்று பேதுரு சொல்லக் காரணம் என்ன? பவுலும் அவ்விதமே நினைக்கக் காரணமென்ன? கலா. 3:26—29; அப். 13:47,48; 15:8—11; 26:16,17 வசனங்கள் உங்கள் விடைக்கு உதவியாயிருக்கும்.

10. நீங்கள் புறவின மக்களில் ஒருவர்; கலாத்திய சபையில் புதிதாகச் சேர்ந்து இருக்கிறீர்கள் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். எருசலேமிலிருந்து வந்த கடிதத்தை விவாதிப்பவர்களோடு சேர்ந்து விவாதியுங்கள்.

11. பவுல், பர்னபா, மாற்கு, சீலா, யூதாஸ் என்பவர்களாக உங்களை நினைத்துக்கொண்டு, அந்தியோகியாவுக்குச் செல்லும் வழியில் எருசலேமில் நடந்த விவாதக் கூட்டம்பற்றி உரையாடுங்கள்.

12. பேதுருவைப்பற்றிய பழங்கதைகளைக் கண்டறியுங்கள்; அவருடைய வாழ்க்கை வரலாற்றை நற்செய்தி நூல்களிலிருந்து திரட்டி எழுதுங்கள்.



பேதுருவும் பவுலும் (உரோம அடிநிலக் கல்லறையில் வரையப்பட்டிருந்த படம்)

அத்தியாயம் 9

# இரண்டாம் தூதுப் பயணம்

*(15:36—18:23)*


கி. பி. 49ம் ஆண்டு. தாங்கள் முதல் தூதுப் பயணம் சென்றபோது கலாத்தியாவில் அமைத்த சபைகளுக்குச் சென்று பார்த்து வர பவுலும் பர்னபாவும் திட்டமிட்டனர். ஆனால், மாற்குவைப் பற்றி இருவருக்குமிடையே நல்ல உடன்பாடில்லை. பர்னபா மாற்குவை உடனழைத்துச் செல்ல நினைத்தார். ஆனால், பெர்கேயில் மாற்கு தங்களை விட்டுச் சென்றதால் ஏற்பட்ட கோபம் பவுலுக்கு இன்னும் ஆறவில்லை. இந்த இரண்டாம் தூதுப் பயணத்தில் மாற்குவைச் சேர்த்துக்கொள்ள பவுல் மறுத்துவிட்டார். (ஆனால், 2 தீமோ. 4:11 பார்க்க.) எனவே பர்னபா மாற்குவை அழைத்துக்கொண்டு சீப்புரு தீவுக்குப் புறப்பட்டு விட்டார். பவுல் சீலாவைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டார். இவரைப்பற்றி நாம் முன்னமே கேள்விப்பட்டிருக்கிறோம். சீலாவும் உரோமக் குடியுரிமை பெற்றவரே. சில்வானு என்பது அவருடைய உரோமப் பெயர் (1 தெச. 1:1; 2 தெச. 1:1; 1 பே. 5:12). பர்னபாவும் மாற்குவும் சென்ற திசைக்கு எதிரான வடக்குத் திசையில் இவர்கள் பயணம் செய்து சீரியாவுக்கும் சிலிசியாவுக்கும் போனார்கள்.

## தீமோத்தேயு

தெர்பையைக் கடந்து லிஸ்திராவுக்கு வந்தனர். இது தீமோத்தேயுவின் ஊர் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? பவுலுக்கு தீமோத்தேயுவை மிகவும் பிடித்திருந்தது. அவர் பிற்காலத்தில் நல்ல நற்செய்திப் பேச்சாளராகவும், இயேசுவுக்கு நல்லதொரு தொண்டராகவும் திகழப்போகிறார் என்பதைப் பவுல் அப்போதே கவனித்திருந்தார். தீமோத்தேயுவின் தாய் யூத இனத்தவர், ஆனால் தந்தை கிரேக்கர்,அதாவது புற இனத்தவர். இவரை ஒரு தூதுப் பணியாளராக்குவதற்கு வேண்டிய பயிற்சி கொடுக்கப் பவுல் தீர்மானித்தார். இதற்கென இவருக்கு விருத்தசேதனமும் பண்ணி இவரை ஒரு முழு யூதராக்கிவிடத் தீர்மானித்தார். இப்படிச் செய்துவிட்டால் தீமோத்தேயுவும் வைதீக யூதர்களோடு தங்கி உறவாடத் தடையேதுமிருக்காது; அவர்களோடு உட்கார்ந்து சாப்பிடமுடியும்; அவர்கள் ஜெப ஆலய ஆராதனைகளில் இவரும் தாராளமாகப் பங்குகொள்ள முடியும் என்று நினைத்தார் (1 தீமோ. 1:18; 4:14; 2 தீமோ. 1:6; கலா. 5:11 ஐயும் பார்க்கவும்).

## சின்ன ஆசியா வழியாகச் சென்றார்கள்

பவுலும் சீலாவும் தீமோத்தேயுவும் எருசலேம் விவாதக் கூட்டத்தில் எழுதப்பட்ட அந்தக் கடிதத்தின் பல நகல்களைத் தயாரித்து எடுத்துக்கொண்டு ஒவ்வொரு சபைக்கும் அதைக் கொடுத்தார்கள். பிற்காலத்தில் ஏற்பட்ட சபைகளுக்கும் இக்கடிதத்தைக் கொடுத்தார்களா இல்லையா என்பதற்கு ஆதாரமில்லை. பிரிகியா, கலாத்தியா (தென் கலாத்தியா) மாவட்டங்களில் உள்ள இக்கோனியா, அந்தியோகியா பட்டணங்களின் வழியாய் மேற்கு முகமாக மிசியா சென்றார்கள். அங்கிருந்து பித்தினியாவுக்குச் சென்றுவிடலாம் என்றிருந்தார்கள். (77ம் பக்கத்தில் உள்ள நிலப் படத்தைப் பார்க்கவும்.) சின்ன ஆசியாவின் மேற்குக் கரையில் உள்ள ஒரு முக்கியமான கடற்கரைப் பட்டினமாகிய துரோவா வந்து சேர்ந்தார்கள். இங்கிருந்த கிரேக்கரின் பெரிய நாடக அரங்கை அவர்கள் பார்த்திருக்கவேண்டும். கிரேக்கர்களின் இன்பியல் நாடகங்களும், துன்பியல் நாடகங்களும் அதில் நடிக்கப்பட்டு வந்தன. நாடகங்களைப் பார்க்கவும் நடிகர்களை உற்சாகப்படுத்தவும் அங்கு மக்கள் திரளாகக் கூடுவார்கள். ஓட்டப் பந்தயங்களைக் காணவும், மல்யுத்தங்களைக் காணவும், காட்சிச்சண்டை வீரர் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு மடி




பவுலின் இரண்டாம் தூதுப் பயணம் (கி.பி. 49—52)

வதைக் காணவும்கூட சில சமயங்களில் பெருங்கூட்டம் கூடுவதுண்டு. கடற்கரைக்கு அருகே உடற்பயிற்சிக் கழகத்தில் நடந்த பந்தயங்களில் கலந்து வெற்றி பெற்றுப் புகழடைவதற்காக கிரேக்க வாலிபர்கள் நிர்வாணமாகவே ஓடுவார்கள். வெற்றி பெற்றவர்களுக்குக் கிடைக்கும் பரிசு ஒலிவ இலைகளினால் அல்லது புன்னைவகை இலைகளினால் ஆன கிரீடமே (31ம் பக்கத்தில் உள்ள படத்தைப் பார்க்கவும்). இக்காலத்தில் கூட 'வெற்றி வாகை சூடுதல்' என்று சொல்லுகிறோம். இங்கு மல்யுத்தம், ஈட்டி எறிதல், வட்டு எறிதல்போன்ற விளையாட்டுகளும் நடந்தன. கிரேக்கக் கதைகளில் வரும் திராய் பட்டினம் தான் இந்தத் துரோவா பட்டினம்.

### பவுல் லூக்காவைச் சந்திக்கிறார்

பவுலின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய லூக்காவை இங்குதான் அவர் முதன் முதல் சந்திக்கிறார் என்பது நாம் கவனிக்கவேண்டிய ஒரு முக்கிய விஷயம். லூக்கா ஒரு கிரேக்க மருத்துவர். பவுல் இரவில் ஒரு காட்சி கண்டதாகவும், அதில் மக்கெதோனியா நாட்டிற்கு அவர் வரவேண்டும் என்று ஒருவர் அவரை அழைத்ததாகவும் நடபடிகளின் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது கிரேக்க நாட்டிற்குச் செல்வதன்மூலம் சின்ன ஆசியாவிலிருந்து பவுல் ஐரோப்பா செல்லவேண்டும் என்ற பொருளில் இக்காட்சி அமைந்திருக்கலாம். பவுல் மிசியாவுக்குச் செல்லாமல், துரோவாவுக்குப் போகவேண்டும் என்று தமக்குள்ளாகவே ஒரு உணர்ச்சியால் உந்தப்பட்டிருந்தார். அதற்கு அவர் கீழ்ப்படியாமல், ஒருவேளை அவர் விருப்பப்படி பித்தினியாவுக்குச் சென்றிருப்பாரேயானால் அவருடைய திருப்பணி வரலாறும், திருச்சபையின் வரலாறும், எழுதப்படாமலே இருந்திருக்கலாம்! வரலாறும் வேறு விதமாக அமைந்திருக்கக்கூடும். புதிய நண்பராகிய லூக்கா, பவுலை உற்சாகப்படுத்தி அழைத்துச் சென்

றிருக்கவேண்டும் என்றும் அவருக்கும் அவர் பேச்சுக்கும் பவுல் அதிக மதிப்பளித்திருக்க வேண்டும் என்றும் திருமறை ஆராய்ச்சி யாளர்கள் நம்புகிறார்கள். கடலைக் கடந்து கிரேக்க நாடு செல்ல அவர் தீர்மானித்தார். பிலிப்பி பட்டணம் லூக்காவின் சொந்த ஊராக இருந்திருக்கலாம். அவரும் ஊர் திரும்ப எண்ணியிருந்திருக்கலாம். இவர்க ளிடையே ஏற்பட்ட நட்பு காரணமாகப் பவுல் தம்மோடு வரவேண்டும் என்று லூக்கா வற்புறுத்தினார்.


லூக்காவின் எழுத்தில் சில சுவையான பகுதிகள் உண்டு. அதில் ஒன்று சில இடங் களில் அவர், 'நாங்கள்' என்று குறிப்பிட்டு எழுதுவார். இப்பகுதிகள் 'நாங்கள்' பகுதி கள் எனப்படுகின்றன. இப்படிக் குறிப் பிடப்படும் நிகழ்ச்சிகள் நடைபெறும்போது லூக்காவும் பவுலோடு இருந்தார் என்று அர்த்தம். (முகவுரையைப் படித்துப் பாருங் கள்.) பவுல் கண்ட காட்சிக்குப் பிறகு, முத லாவதான 'நாங்கள்' பகுதி வருகிறது. அது அப். 16:10ம் வசனத்தில் தொடங்கி, 17ம் வசனத்தில் முடிவடைகிறது.

லூக்கா ஒரு மருத்துவராக இருந்த கார ணத்தால், பவுலைக் கவனிக்கவும், அவர் 'மாம்சத்தில் உள்ள முள்ளால்' ஏற்பட்ட வலிக்குச் சிகிச்சை செய்யவும் அவரால் முடிந் தது. தீமோத்தேயுவுக்கு எழுதும் இரண் டாம் கடிதத்தில் லூக்காவின் அன்பையும், கவனிப்பையும் குறித்துப் பவுல் உபயோகிக் கும் சொற்றொடர் மிகவும் உருக்கமான ஒன்றாகும். அந்த வாக்கியத்தை நன்றாகக் கவனியுங்கள். 'லூக்கா மாத்திரம் என்னோடு இருக்கிறார்.' பவுல் உரோமச் சிறையில் வாடிக் கிடந்தபோது அவருடைய மற்ற நண் பர்கள் எல்லோரும் அவரை விட்டு ஓடிப் போய்விட்டார்கள்.

லூக்காவோடு செல்லப் பவுல் தீர்மானித்த தால், கிறிஸ்தவ சமயம் ஐரோப்பாவில் பர விற்று. ஒரு சிறிய சரக்குக் கப்பலைப் பிடித்து, காற்று வசதியாக இருந்ததால் விரைவாகச் சென்று இரண்டே நாட்களில் கரைவந்து சேர்ந்துவிட்டனர். மீண்டும் இவ்வழியாய்த் திரும்பும்போது (அப். 20:6), இப்பகுதியைக் கடக்க ஐந்து நாட்கள் பிடித்தது. நடுவில் சமொத்திராக்கே என்ற தீவு இருந்தது. அவர்கள் நெயாப்பொலி என்ற இடத்தில் இறங்கினர். இது ஒரு மலையடிவாரத்தில் உள்ள துறைமுகம். இதன் அருகில் உள்ள ஒரு குன்றில் வீனஸ் கோயில் இருந்தது; அங்கிருந்து பன்னிரண்டு கிலோ மீட்டர் தொலைவு அவர்கள் சென்று பிலிப்பி என்ற கிரேக்க பட்டணத்தை அடைந்தனர்.

### பிலிப்பி பட்டணம்


இது ஒரு உரோமக் குடியேற்றப் பட்டணம். 'இந்த மாகாணத்தின் பிரதான பட்டணம்'




உரோமைக் கிழக்கு நாடுகளுடன் இணைக்கும் வயா எக்னேஷியா என்னும் சாலை



பிலிப்பியின் சந்தைவெளி



இரத்தாம்பர வியாபாரம்

என்று லூக்காவால் பெருமிதத்தோடு இப்பட்டணம் வருணிக்கப்படுகிறது. உரோமப் பேரரசின் தொடக்கத்தைக் குறிக்க அகுஸ்து சீசர் இப்பட்டணத்தைக் கட்டத்தொடங்கினர். இங்குதான் ஆக்டேவியசும் அந்தோனியாவும் புரூட்டசையும் காசியசையும் தோற்கடித்தனர். இன்று இப்பட்டணம் பல மீட்டர் ஆழத்தில் புதையுண்டு கிடக்கிறது. இதைத் தோண்டிப்பார்த்து இங்கு பல வண்ணக் கட்ட அமைப்புள்ள நடைபாதைகள், பொது அங்காடியின் சிதைவுண்ட பகுதிகள், 'வயா எக்னேஷியா' என்ற பெயர்போன உரோமப் பெருஞ்சாலையின் சில பகுதிகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

பிலிப்பி பட்டணத்தில் ஜெப ஆலயம் இல்லை. அந்த இடத்தில் மிகக் குறைவான யூதக் குடும்பங்களே இருந்ததால் ஒரு ஜெப ஆலயத்திற்குப் போதுமான ஆட்கள் இல்லாமற்போயிற்று. ஜெப ஆலயம் இல்லை என்று தெரிந்தவுடன் பவுலும் அவர் நண்பர்களும் அங்குள்ள யூதர்கள் ஜெபம் செய்யும் இடத்தைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டனர். ஊருக்கு வடக்கே ஆற்றங்கரை ஓரமாக ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் சென்றபோது அங்கு சில யூதர்களைக் கண்டார்கள். அவர்கள் எல்லோரும் பெண்கள். அங்கு சடங்கு முறைப்படி சுத்திகரிப்புக்கும் திருமுழுக்குக்கும் வேண்டிய தண்ணீர் இருந்ததால் அது யூதர் கூடுவதற்குத் தகுந்த இடமாயிருந்தது. அங்கு முன்னணியில் நின்ற பெண்ணின் பெயர் லீதியாள்.

அவர் கடவுளுக்கு பயந்தவர். இரத்தாம்பர வியாபாரியாக இருந்ததால், அவர் பணக்காரராயிருந்தார். சாயங் காய்ச்சுவதற்குப் பெயர்போன இடமான தியத்தைரா ஊரைச் சேர்ந்தவராக இருந்திருக்கலாம். இந்தக் கருஞ்சிவப்பு சாயம் காய்ச்சுவதற்குத் தேவையான கடற்சிப்பிகளை பெனிக்கேயாவிலிருந்து இறக்குமதி செய்திருக்கலாம். அவற்றை நன்ருகத் தூள்பண்ணிக் காய்ச்சி இந்தச் சாயம் இறக்குவார்கள். இவர் தயாரித்த கருஞ்சிவப்பு பட்டாடைகளையும் மெல்லிய நூலாடைகளையும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் பிரபுக்களுமே வாங்கி உபயோகித்ததால் இவர் அரண்மனைகளிலும், பிரபுக்கள், செல்வந்தர்கள் வீடுகளிலும் நன்கு பழகி இருந்தார் (லூ. 16:19; 23:53; மா. 15:17). பவுலை உபசரிக்க இவர் முன்வந்தார். இயேசுவைப்பற்றி அவர் வழங்கிய நற்செய்தியை ஏற்றுக்கொண்டு தம் வீட்டாரனைவரோடும் இவர் திருமுழுக்கும் பெற்றுவிட்டார்.


### காவலில் வைக்கப்பட்டார்கள்

தொடர்ந்து சில நாட்களே அப்போஸ்தலர்கள் நற்செய்தியைக் கூறி வந்திருப்பார்கள். அதற்குள் இவர்களைப் பார்த்து அடிக்கடி கூச்சல் போட்டுக்கொண்டு வந்த குறிசொல்ல ஏவுகிற ஆவியையுடைய ஒரு பெண் இவர்களுக்கு ஓயாமல் தொந்தரவு கொடுத்தாள். இவள் தன்னிடமுள்ள அந்தப் பொல்

லாத ஆவியைக்கொண்டு, வருங்காலம் பற்றிக் கணித்து, மக்களுக்கு நடக்கப்போவதை அறிவித்துவிடுவாள். அவளுடைய குறிசொல்லும் ஆற்றல் மூலம் அவள் முதலாளிகள் பெரும் பணம் திரட்டி வந்தார்கள். பவுலும் அவர் நண்பர்களும் அவளைவிடச் சிறந்த ஆற்றல் உள்ளவர்கள் என்றும், அவர்கள் கடவுளுடைய மனிதர்கள் என்றும், அவளுடைய நூதனமான அந்த மூளையில் ஏதோ ஒன்று சொல்லியது—அவள் போட்ட சத்தத்தைக் கேட்டுக் கேட்டு அலுத்துப்போன நிலையில் பவுல் அவளைக் கவனித்தார். பைத்தியம் பிடித்தவர்களுக்குள்ளே பொல்லாத ஆவிகள் இருப்பதாக இன்னும் மக்கள் எண்ணிவந்தனர். பல ஆண்டுகளுக்குமுன் இயேசு கட்டளையிட்டதுபோல் பவுலும் பொல்லாத ஆவியிடம் 'வெளியே வா' என்று ஆணை பிறப்பித்தார். அவர் 'இயேசுவின் திருப்பெயரில்' இப்படி ஆணையிட்டார். அதே இயேசு தன் மனதைத் தெளிவாக்கி, தனக்கு விடுதலை கொடுப்பதை அவள் உணர்ந்திருக்கலாம். அவள் பைத்தியம் தெளிந்து, நல்ல இயல்பான மனநிலை அடைந்தாள். இப்பெண்ணை வேலைக்கு அமர்த்தி இவள் குறி சொல்லுவதை வைத்துப் பெரும் பணம் சம்பாதித்துக்கொண்டிருந்த மனிதர்கள் இவள் குறிசொல்லும் ஆற்றலை இழந்து சாதாரணப் பெண்போல் மாறிவிட்டதைக் கண்ட மாத்திரத்தில் பவுல்மேல் சீற்றங்கொண்டார்கள். காவல் அதிகாரிகளின் முன்பாகப் பவுலையும் சீலாவையும் இழுத்துக் கொண்டுபோய்ப் புகாரும் கொடுத்துவிட்டார்கள். எல்லா உரோமப் பட்டணங்களிலும் ஒரு செனட் ஆட்சிக்குழுவும், அமைதி காக்கும் இரண்டு அதிகாரிகளும் இருந்தனர். அவர்களுக்கு பிரிட்டோர் (praetor) என்று பெயர். பேசஸ் (fasces) என்ற பிரம்புக் கட்டொன்றை சுமந்து செல்லும் லிக்டர்கள் (lictors) என்ற பணியாட்களும் அங்குண்டு. தவறிழைத்தவர்களும் சட்டத்தை மீறும் குற்றவாளிகளும் இப்பிரம்புகளால் அடிக்கப் படுவார்கள். (இரண்டாவது உலகப் போரில் இத்தாலிய சமதர்மக்கட்சி (Fascist) இந்தப் பிரம்புக் கட்டையே தன் சின்னமாக வைத்திருந்தது.)

கோபங்கொண்ட இந்த முதலாளிகள் தங்கள் புகாரைச் சொன்னார்கள். மிகவும் சாமர்த்தியமாகத் தங்களுக்கு வந்த இழப்பு குறித்து எதுவும் சொல்லவில்லை. பவுல் நகரில் குழப்பம் விளைவித்ததாகச் சொன்னார்கள். உரோமர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாத கொள்கைகளைச் சொல்லி, மக்களை மதம் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள யூதர் அவர் என்று குற்றம் சாட்டினார்கள். அமைதியையும் ஒழுங்கையுமே உரோமர்கள் முக்கியமாக எண்ணினார்கள். அவற்றை நிலைநாட்ட பயன்படுத்திய முறைகளைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. இதை அறிந்தேதான் உரோமஅதிகாரிகள் ஏற்றுக்கொள்ளக்கூடியதான ஒரு குற்றச்சாட்டை இவர்கள் தயாரித்துவிட்டார்கள். அப்பட்டணத்தில் யூதர்களைப் பொதுமக்கள் அதிகமாக விரும்புவதில்லை. அதனால்தானோ என்னவோ, அங்கு யூதர்கள் பெருமளவில் குடியேறவில்லை. அதுமட்டுமல்லாமல் உரோமருக்கு தங்கள் உரோமக் குடியுரிமை பற்றிய பெருமை உண்டு (அப். 16:21). பவுலும் சீலாவும் உடனே தண்டிக்கப்பட்டார்கள். அவர்கள் ஆடையுரிக்கப்பட்டு வெற்று உடலில் பிரம்பால் அடிக்கப் பட்டார்கள். உரோமக் குடியுரிமை பெற்றிருந்தவராகப் பவுல் தம் உரிமையைப் பயன்படுத்த 'சிவிஸ் உரோமானுஸ் ஸும்' (நான் ஒரு உரோமக் குடிமகன்), என்று ஒருவேளை கூச்சலிட்டிருப்பார். ஆனால், மக்கள் போட்ட கூச்சலில் அதிகாரிகளின் செவிகளுக்கு இந்தச் சத்தம் எட்டியிருக்கமுடியாது. பாதாள அறைச் சிறையில் இருவரையும் தள்ளி, தொழுமரத்தில் இவர்கள் கால்கள் மாட்டி வைக்கப்பட்டன. அதுபற்றிக் கொஞ்சமும் கவலை கொள்ளாமல், சிறு வயதில் கற்று, ஜெப ஆலயங்களில் அடிக்கடி பாடி வந்த சங்கீதங்களை இவர்கள் பாடத்தொடங்கினர்.

இரவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்தப் பலத்த நிலநடுக்கத்தால் அவர்கள் கால்கள் மாட்டப்பட்டிருந்த தொழுமரமும் சங்கிலிகளும் உடைந்துபோனதும் பெரிய சிறைக் கதவுகள் தாமாகத் திறந்துகொண்டதும் நன்கு விவரிக்கப்பட்டுள்ளது. அது கிளர்ச்சியூட்டுவதாயும் இருக்கிறது (அப். 16:25—முடியும் வரை). கைதிகள் தப்பினால் சிறைக் காவலர்களின் உயிர் தப்பாது. எனவேதான் அங்கிருந்த காவலர் தம் உயிரைக் கண்ணியமாக மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்தார். பவுல் அவரைத் தடுத்து நிறுத்தினார். அவர்கள் மெய்யாகவே கடவுளின் மனிதர்கள் என நம்பி, அந்தச் சிறை அதிகாரியும், அவர் மனைவி பிள்ளைகளும் பவுல் சொன்ன யாவற்றிலும் முழு நம்பிக்கைகொண்டு, திருமுழுக்கும் பெற்றுக்கொண்டனர். தூய ஆவியானவர் ஆற்றலோடு அவர்கள் மேலும் வந்திறங்கினார். கடவுள் அவர்களை ஏற்றுக் கொண்டார் என்று பவுல் உணர்ந்தார். இதற்குப்பின் சிறை அதிகாரி செய்த முதல் செயல் கிறிஸ்தவரின் தொண்டு என்பதைக் கவனியுங்கள். அவர்கள் காயங்களைக் கழுவி, எண்ணெய் பூசி, அவர்களுக்கு உணவும் கொண்டுவந்து கொடுத்தார்.



பவுல், சீலாவின் கால்களைத் தொழுமரத்தில் மாட்டி சிறையில் வைத்தனர்

இந்த நிகழ்ச்சியில் காணப்படும் திருப்பம் வேடிக்கையானதாய் இருக்கிறது. பவுலையும் சீலாவையும் சிறையிலே தள்ளிய வீறாப்பான நகர அதிகாரிகள் இப்போது அஞ்சி நடுங்குகிறார்கள். ஏன் தெரியுமா? உரோமக் குடியுரிமை பெற்ற இருவரை அவர்கள் பிரம்பால் அடித்துவிட்டனர். அதுவும் விசாரணை செய்யாமலேயே அவ்விதம் செய்துவிட்டனர் (அப். 22:25; 25;11). அவ்விதம் செய்ததை எச்சரிக்கைக்குரிய சான்றாகப் பயன்படுத்த தீர்மானித்தார் பவுல். பெருமிதத்துடன், ‘அதிகாரிகள் தங்கள் நிலையை விட்டு இறங்கி, சிறைச்சாலைக்குள் வந்து, எங்களை இங்கிருந்து வெளியே போகும்படி எல்லோருடைய முன்னிலையிலும் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ள வேண்டும்’ என்று சொல்லியனுப்பினார்! இக்காட்சி உங்கள் கண்முன் வருகிறதா? அந்த அதிகாரிகள் வெட்கத்தால் முகம் சிவந்து தலைகுனிந்து நிற்க, கூட்டத்தினர் அவர்களைப் பார்த்து சிரிப்பதை நம்மால் கற்பனை செய்யமுடிகிறதல்லவா?

## தொடர்ந்து பயணம் செய்கிறார்கள்

தாங்கள் இன்னமும் அனாவசியமான குழப்பத்திற்குக் காரணமாக இருக்கக்கூடாது என்று நினைத்துப் பவுலும் சீலாவும் லீதியாளிடம் விடைபெற்றுக்கொண்டு அப்பட்டணத்தினின்று வெளியேறினார்கள். லூக்கா அங்கேயே தங்கிவிட்டார். ஒருவேளை அங்கு தம்முடைய மருத்துவத் தொழிலைத் தொடர்ந்து நடத்துவதற்காகத் தங்கியிருக்கலாம். புதிய சபை அங்கு உருவாகத் தீமோத்தேயுவுடன் சேர்ந்து, லூக்காவும் அரும்பாடுபட்டார். பவுலும் சீலாவும் மற்ற நண்பர்களும் அந்த அழகான ‘எக்னேஷியா சாலை’ என்ற சாலை வழியாக அடுத்துள்ள பட்டணங்களுக்குச் சென்றனர். அவர்களோடு அச்சாலையில் சென்றவர்களில் வணிகர்கள், தேவாலயம் செல்பவர்கள், விளையாட்டு வீரர்கள், உரோம மெய்க்காப்பாளர்கள் ஆகியோரும் இருந்தனர். அவ்வப்போது, உரோமுக்குச் செல்லுகிற சீமான்கள் விலையுயர்ந்த துணி

களால் நன்கு அலங்கரிக்கப்பட்ட பல்லக்குகளில் அல்லது வாகனங்களில் அவ்வழியே சென்றனர். கூடவே அவர்கள் உடைமைகளையும் நண்பர்களுக்கு அவர்கள் எடுத்துச் செல்லும் பரிசுகளையும் சுமந்து சென்ற கோவேறு கழுதைகளும் அவைகளை நடத்திச் சென்ற அடிமைகளும் சென்ருர்கள். ஐம்பது கிலோ மீட்டர் சென்றவுடன் அம்பிபொலி பட்டணம் வந்தது. அதன் வழியாகச் சென்றனர். இன்னும் ஐம்பது கிலோ மீட்டர் தொடர்ந்து பயணம் செய்து அப்பொலொனியாவுக்கு வந்து சேர்ந்தனர். கடைசியாக அவர்கள் தெசலோனிக்கேயை (சலோனிக்காவை) அடைந்தனர். இது மக்கெதோனியா நாட்டின் தலைநகர். நீலக் கடலைப் பார்த்தபடி உயர்ந்த மலையின் மேல் அழகாக இப்பட்டணம் அமைந்திருந்தது.

பவுல் உடனே ஜெப ஆலயம் சென்று அங்கே வழக்கம்போல் யூதர்களுக்கு முதலாவது பேசிவிட்டு, பிறகு கிரேக்கருக்குப் பேசினுர். இங்கு இவர் மூன்று வாரகாலம் தங்கியிருந்ததாக நடபடிகள் நூலில் எழுதப்பட்டிருக்கிறது. அதைவிடப் பல நாட்கள் பவுல் இங்கு தங்கியிருந்திருக்கக்கூடும். இங்கு தீமோத்தேயுவும் வந்து அவர்களோடு சேர்ந்துகொண்டார். பிலிப்பி பட்டணச் சபையார் திருப்பணிச் செலவுகளுக்குப் பணம் அனுப்பி வைத்தனர் (பிலி. 4:16). பவுலும் கூடாரத்துணி நெய்யும் தம் வேலையைச் செய்து, அதன்மூலம் தம் உணவுக்கும் வீட்டு வாடகைக்கும் போதுமான பணத்தைச் சம்பாதித்துக்கொண்டார் (1 தெச. 2:9).

மேசியா பாடனுபவிக்கவும், மரிக்கவும், உயிரோடெழவும் அவசியமாயிற்று என்று போதித்தார். இவையாவும் இயேசு செய்து முடித்துவிட்டார். அவர்கள் மேசியா வந்தாயிற்று; அவரே இயேசு. அவரில் நம்பிக்கை வைக்கவேண்டும் என்று அவர்களுக்குப் போதித்தார். ஆனுல் யூதர்கள் பொருமைப் பட்டுப் புழுங்கினர். பவுலையும் சீலாவையும் உபசரித்த யாசோனுடைய வீட்டைத் தாக்கும்படி சில போக்கிரிகளைத் தூண்டிவிட்டனர். யாசோனையும் அவர் நண்பர்களையும் நகர ஆளுநர்களிடம் இழுத்துக்கொண்டு வந்தனர். பேரரசருக்கு துரோகம் விளைவிப்பவர்களை ஆதரிப்பதாக அவர்கள்மீது குற்றஞ்சாட்டினுர்கள். ஏனென்ருல் அப்போஸ்தலர்கள் இயேசுவை அரசர் என்ருர்கள். 'பேரரசரைத் தவிர வேறுயாரும்அரசராக இருக்கக்கூடாது' என்பது இவர்கள் கருத்து. உரோம அதிபதிகளைத் தங்கள் பக்கம் இழுப்பதற்காக இவர்கள் இதை அரசியல் குற்றம்போல் திரித்துக் கூறியதைக் கவனியுங்கள். பேரரசரைத்தான் வணங்கவேண்டும் என்பது சட்டம். எனவே இயேசுவை வணங்குவது அதற்கு முரண்பாடானது. (லிஸ்திராவில் பேரரசர் வணக்கத்திற்கென்று கட்டப்பட்டிருந்த பலிபீடத்தைப் பற்றிய குறிப்புக்கு 65ம் பக்கத்தைப் பார்க்கவும்.) இனி இப்படி அரசருக்கெதிராகக் குற்றம் செய்வதில்லை என்று வாக்குறுதியும் நன்னடத்தை ஈடும் ('ஜாமீன்' என்று நாம் சொல்வதுண்டு) கொடுத்தபின் (அப். 17:5—9) யாசோன் விடுதலை செய்யப்பட்டார். 1 தெச. 2:18ல் சொல்லப்பட்டிருப்பதுபோல் பவுல் நண்பர்களை ஆபத்துக்கு உள்ளாக்கக்கூடாது என்ற எண்ணத்தால் அப்பட்டணத்தைவிட்டு உடனே வெளியேற வேண்டியதாயிற்று. திரும்பவும் பட்டணத்திற்குள் வருவதாயிருந்தால் மறுபடியும் நண்பர்களைத் தொல்லைக்குள்ளாக்குவதாக அது முடியும் என்று அறிந்திருந்தார். இச்சம்பவத்தைத் தொடர்ந்து பெருங் குழப்பமும் சபைக்குத் தொல்லையும் உண்டாயிற்று (1 தெச. 2:14—16; 3:1—5; 2 தெச. 1:6). ஆனுல் இங்கு பவுல் ஆரம்பித்த சபை மிக வேகமாக வளரத் தொடங்கியது (1 தெச. 1:8). அதை இணைத்து உருவாக்கும் பொறுப்பு தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்டது.

### அத்தேனே பட்டணத்திற்குச் சென்ருர்கள்

இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் இரகசியமாகப் பவுலும் சீலாவும் அங்கிருந்து வெளியேறினர். சுமார் அறுபத்தைந்து கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்து பெரோயா பட்டணத்தை அடைந்தார்கள். இது சமவெளிக்கு 180 மீட்டர் உயரத்தில் உள்ள ஒரு பட்டணம். வழக்கம்போல் ஜெப ஆலயம் சென்ருர்கள். அங்கு வாய்மையும் பரந்த உள்ளமும் கொண்ட யூதர்களும், பண்பால் சிறந்து விளங்கிய கண்ணியமான கிரேக்கர்களும் அவர்களை நன்கு வரவேற்றனர் (அப். 17:11, 12). பவுல் இயேசுவைப்பற்றிக் கூறும் செய்திகளுக்கு ஆதாரம் உண்டா என்று காண அவர்கள் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கக்கூடத் தொடங்கினர். அங்கு கிறிஸ்தவர்களாக மாறியவர்களில் சோபத்தர் ஒருவர். நாம் ஊகிப்பதுபோல் வெகு சீக்கிரத்தில் பொருமைகொண்ட தெசலோனிக்கேய யூதர்கள் இங்கு வந்து அப்போஸ்தலர்களுக்கு எதிராகக் குற்றங்கள் சாட்டி குழப்பத்தை உண்டாக்கிவிட்டனர். அன்புள்ளம் படைத்த

பெரோயா மக்கள் சிலர் பவுலை துறைமுகத்திற்கு அழைத்துவந்தார்கள். சரக்குக் கப்பலொன்று அவரையும் அவர் நண்பர் சிலரையும் ஏற்றிக்கொண்டு பழம்புகழ்பெற்ற அத்தேனே பட்டணத்திற்குச் சென்றது. தீமோத்தேயு தெசலோனிக்கேய யூதர்கள் தரவிருக்கும் தொல்லை குறித்து பவுலுக்கு முன்னதாகவே எச்சரிப்பு கொடுக்க பெரோயா பட்டணம் வந்திருந்தார். இப்போது அவரும் சீலாவும் பெரோயாவில் தங்கினார்கள். அங்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சபையின் பெரியவர்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய பணியில் துணைபுரிந்தார்கள்.


மூன்று நாளளவும் அந்தக் கப்பல் அக்கரையோரமாக அடுத்தடுத்து உள்ள துறைமுகங்களிலும், வளைகுடாக்களிலும் தாமதித்து நின்று நின்று சென்றது. ஓசா, பெலியோன் என்ற கிரேக்க தெய்வங்களின் குடியிருப்பிடம் இருந்த ஒலிம்பஸ் மலையைக் கடந்து கிரேக்கப்புராணங்களிலும், வரலாறுகளிலும் வரும் புகழ் சான்ற மராத்தான், தெர்மாபைலே என்ற உயரமான மலைகள் இருந்த கரைகளின் வழியாகக் கப்பல் சென்றது. இவைகளைப் பார்த்தபோது பவுலுக்கு, தாம் கற்ற கல்வியும் பழங்கால வீரர்களின் வீரச் செயல்களும், நினைவுக்கு வந்திருக்கலாம். அவர் இழந்த உடல் ஆற்றலைக் கதிரவன் ஒளியினாலும் கடல் காற்றினாலும் மீண்டும் பெற்றார்.

### அத்தேனே பட்டணத்தில்

அத்தேனே பட்டணம் வீரர்களுக்கும், தத்துவ ஞானிகளுக்கும் பேச்சாளர்களுக்கும் கவிஞர்களுக்கும், உலகப் புகழ் பெற்ற ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சொந்த இடமாக அக்காலத்தில் விளங்கி நின்றது. இப்போது வலிமை இழந்த பட்டணமாக இருப்பினும், பழம்பெருமை ஓரளவு இன்னும் இதற்கு இருந்தது. இதற்குள்ளாகவே பவுலின் கண்களுக்கு வானை அளாவி நின்ற கட்டிடங்கள் தெரியலாயின. தேயுஸ், அப்பொல்லோ, மினர்வா, தியொனீசியு போன்ற பெரிய தெய்வங்களுக்கும் மற்றும் சில குட்டித் தேவர்களுக்கும் தேவதைகளுக்குமான பல கோவில்கள் இருந்தன. நாடக அரங்குகள், விளையாட்டு அரங்குகள், போட்டி நடக்குமிடங்கள், 'காற்றுக் கோபுரம்' யாவும் சம இடைவெளியில் நிறுத்தப்பட்ட தூண்கள் வரிசையோடு அமைக்கப்பட்டிருந்தன. இவைகளுக்கெல்லாம் மகுடம் வைப்பதுபோல் கி.மு. 480ல் கட்டப்பட்ட ஞான தேவதை அத்தீனாளின் பார்த்தினன் ஆலயம் அக்ரோபோலி குன்றின்மேல் வெண்மையாகவும் பொன்நிறத் தோடும் எடுப்பாக அமைந்திருந்தது. இவ்வாலயத்தின் இடிபாடுகளில் கண்டெடுக்கப்பட்ட அழகான அகன்ற பட்டையுள்ள சிற்பங்களும் வேறு சிறப்பு வேலைப்பாடுகளும் இங்கிலாந்திலுள்ள தொல் பொருள் அரங்கில் வைக்கப்பட்டு அழியாமல் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

பட்டணத்திற்குள் நுழைந்தவுடன் பவுல் அதன் தெருக்களிலும் நாற்சந்திகளிலும் சென்று சுற்றிப் பார்க்கத் தொடங்கினார். அவர் சென்றவிடமெல்லாம் தெய்வங்களின் சிலைகள் என்ற பெயரில் நூற்றுக் கணக்கில் ஆள் உயரமான பகட்டான போலித்தோற்றமுடைய உருவங்கள் பல வர்ணங்கள் தீட்டப்பட்டு, கோயில்களில் நிற்பதைக் கண்டார். அர்த்தமற்ற அச்சத்தினாலும் மூட நம்பிக்கையினாலும், இச்சிலைகளை வணங்கி வந்த மக்கள் அச்சிலைகளைப்போலவே கையறு நிலையில் வலிமையற்றுக் கிடப்பதாகப் பவுல் உணர்ந்தார். இடி இடித்தால் தேயுசுக்கு என்ன கோபமோ என்று நினைப்பார்கள்; அறுவடை சரியாக இல்லையா? தெமேத்தருக்கு என்ன தொந்தரவு கொடுத்துவிட்டோமோ என்று அஞ்சுவார்கள். தெய்வங்களை எப்படியும் திருப்திப்படுத்தவேண்டும் என்பதே இவர்கள் நோக்கம். மடமை நிறைந்ததாகவும், பொய்யானதாகவும் இவர்களின் தெய்வ வழிபாடிருந்தது (அப். 17:16). குருட்டு நம்பிக்கை கொண்டு மூடத்தனமாகக் கீழ்ப்படிந்து சிலைகளின்மேல் மயக்கம் கொண்டிருந்தார்கள். கையினால் செய்யப்பட்ட தெய்வங்கள் முன்பாக விழுந்து விழுந்து பணிந்து கொண்டார்கள் (யாத். 20:3–5).

பவுல் மத்தியதரைக் கடலின் கோடைகால வெம்மையில் நின்றபடி, அந்தப் பல தெய்வ வணக்கத்தில் ஈடுபட்டிருந்த மக்களின் பண்டிகைகளையும், ஊர்வலங்களையும், அவர்கள் பலிகள் கொடுப்பதையும், இன்னும் அசுத்த ஆவிகளிடம் கொண்ட மூட நம்பிக்கையினால் ஏற்பட்ட அச்சங்கள் காரணமாக அவர்கள் நடத்தும் விழாக்களையும், கொண்டாட்டங்களையும் பார்த்துக்கொண்டேயிருந்தார். தெசலோனிக்கே பட்டணத்தை விட்டு அவசரமாக வெளியேற நேர்ந்ததைக் குறித்து அவர் மிகவும் சோர்ந்த உள்ளத்தோடு ஒருவேளை இருந்திருக்கலாம். அதைப்பற்றி சிந்தித்தபடியே ஒருநாள் வீதியில் நடந்து




அத்தேனே பட்டணம்

1. பார்த்தினன்
2. அக்ரோபோலி குன்று
3. உரோமச் சந்தை
4. ஸ்டோவா என்னும் மண்டபம்
5. அகோரா என்ற சந்தைவெளி
6. இசை அரங்கம்
7. அரையோப்பாகு
8. ஆரேயின் ஆலயம்
9. அப்பிரோதித்துவின் ஆலயம்
10. அத்தினள்

கொண்டிருந்தபோது, அங்கே ஒரு பூலிபீடத்தைக் கண்டார். இது ஒன்றும் வழக்கத்திற்கு மாறானது அல்ல. ஆனால் இதில் ‘அறியப்படாத தெய்வத்துக்கு’ என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஏதோ ஒரு பயங்கர ஆபத்து உண்டான சமயம் எந்தத் தெய்வத்துக்குக் கோபம் வந்துவிட்டது, யாரை நாம் திருப்தி செய்யவேண்டும் என்று மக்கள் அறியாமல் தவித்தபோது, இப்படி ஒரு பலிபீடத்தைக் கட்டி, பலியிட்டிருப்பார்கள் போலும்! பெர்கமு என்னுமிடத்திலும் இதைப்போன்ற பலிபீடம் ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காட்சி பவுலின் சிந்தனையைக் குடைந்து கொண்டிருந்தது. அவர் ஏற்கெனவே நகரின் முக்கிய இடமான சந்தை வெளியில் நின்று பேசியிருந்தார். இதுதான் நகரம் சார்ந்த முக்கிய இடம். இங்கேதான் ஆட்சிப் பேரவை கூடும் இடமும் நீதிமன்றக் கட்டிடங்களும், நகர மண்டபமும் இருந்தன. இங்கு உரோம விவாத அரங்குகளில் நடப்பதுபோல் மக்கள் கூடி மெய்ப்பொருள், வாழ்க்கை இலட்சியங்கள், ஞானம், நல்லொழுக்கம் முதலியவற்றைக் குறித்து விவாதங்களும் உரையாடல்களும் நடத்துவதுண்டு. பார்த்தினன் ஆலயத்தில் உள்ள அத்தினளை மக்கள் வழிபட்டனர். அவள் சிலை பொன்னாலும் அணிகலன்களாலும் தந்தத்தாலும் அலங்கரிக்கப்பட்ட பன்னிரண்டுமீட்டர் உயரமான அழகிய சிலை. இம்மக்கள் குறைபாடற்ற வாழ்க்கை, மறுமை வாழ்க்கை, தெய்வங்களின் ஆற்றல், மனிதர்களின் ஆற்றல், அரசியல் என்பவை குறித்து மிக்கஆர்வங்காட்டினர்கள். ஸ்தோயிக்கர்களோடும், எப்பிக்கூரர்களோடும் பவுல் வாதம் செய்திருந்தார். இத்தத்துவ ஞானிகள் பிரபஞ்சத்தின் தன்மை குறித்த முக்கிய கேள்விகளான மனிதன் எத்தகையவன்? அவன் ஏன் பூவுலகில் இருக்கிறன்? போன்றவற்றிற்கு விடைதேடி அலைந்துகொண்டிருந்தனர். தங்கள் கொள்கைகளுக்கு விளக்கம் தரவும், குறைபாடற்ற வாழ்க்கை வாழ்வதற்கான மாதிரிகளை மக்களுக்கு அமைத்துக் கொடுக்கவும் இவர்கள் முயற்சி செய்துகொண்டிருந்தனர்.

## தத்துவ ஞானிகளும் பவுலும்

கி.மு. 300ம் ஆண்டில் எப்பிக்கூரஸ் என்ற ஒரு சிந்தனையாளர் தோன்றினர். இவர்

கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்களே இந்த எப்பிக்கூரர். வாழ்க்கையின் பிரச்சினைகள் தீர ஒரே வழி எந்த வகையிலும் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்வதேயாகும் என்று இவர்கள் நம்பினுர்கள். 'இன்று புசித்துக் குடித்து மகிழ்ச்சியடைவோம். ஏனெனில் நாளைக்கு சாவோம்' என்பது இவர்கள் கொள்கை (1 கொ. 15:32). ஸ்தோயிக்கர் என்று இன்னெரு கூட்டத்தார் இருந்தார்கள். இவர்கள் கி.மு. 300லேயே தோன்றிய சீனே என்ற தத்துவ ஞானியைப் பின்பற்றி வந்தார்கள். 'ஸ்தோவா' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து 'ஸ்தோயிக்கர்' என்ற பெயர் வந்தது. இச் சொல்லுக்கு 'மண்டபம்' என்று பொருள். மண்டபத்தில் கூடிவந்ததால் இப்பெயர் இவர்களுக்கு வந்தது. வாழ்க்கையைக் குறித்து இவர்களுடைய மனப்பான்மை எப்பிக்கூரரைக் காட்டிலும் பண்பட்டதாய் இருந்தது. மனிதரும் தெய்வங்களும் கடவுளின் ஒரு கூறே ஆனபடியால், கடவுள் தத்துவத்தில், மனிதத்துவமும் தெய்வத்துவமும் அடங்கியிருப்பதால் மனிதர்கள் கடவுளின் விதிகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்; துன்பங்களையும் தொல்லைகளையும் தைரியத்துடன் சகித்து, மனச்சான்றுக்குச் செவிமடுத்து அமைதியாக வாழவேண்டும் என்ற கருத்தைச் சொன்னுர்கள் இவர்கள். எப்பிக்கூரர் உணவிலும் வாழ்க்கையிலும் மட்டுக்குமிஞ்சி இன்பம் நுகர்பவர்கள். ஸ்தோயிக்கர் மனத்துயரைக் குறித்து அக்கறையற்றவர்கள்.

இந்த இரு பிரிவினரும் இரு வேறுபட்ட கருத்துடையவர்கள் என்பதை நாம் தெளிவாகக் காணமுடிகிறது. 'அகோரா' (Agora) என்ற சந்தை வெளியில் பவுல் நின்று பேசிய போது, இருசாராரும் மிகவும் அடக்கத்துடன் கேட்டார்கள். பவுல் படித்த மனிதர்; சரளமாய்ப் பேசுகிருர் என்று இவர்கள் உணர்ந்தார்கள். வாழ்க்கைபற்றி புதிய கருத்துக்களையும், புதிய கொள்கைகளையும் கூறுகிருர் என்றும் இவர்கள் கண்டு கொண்டனர். ஆனல் அவருடைய தத்துவங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லை. தங்கள் கொள்கைகளைப்பற்றிய தலைக் கர்வம் அவர்களுக்கு அதிகம் இருந்தது. பவுலை ஏளனமாகப் பார்த்தார்கள். அவர் பேச்சுக்களை நன்றுகக் கேட்டுமுடித்த பிறகு அவரை வாயாடி என்றுர்கள். கிரேக்க மொழியில், தெருவில் பாரம் ஏற்றிச் செல்லும் வண்டியிலிருந்து சிந்துகிறவைகளைப் பொறுக்குபவனுக்கு பயன்படுத்தும் ஒரு கேவலமான பதத்தை அவருக்குப் பயன்படுத்தினுர்கள். அதாவது பவுலின் கருத்துக்கள் அவருடையவை அல்ல. வேறு யார் யாரோ சொன்னவை என்று கருதினுர்கள். ஆயினும் அவர்



அறியப்படாத தெய்வத்துக்கான பலிபீடம்

இயேசு என்ற 'தனிப்பட்ட தன்மையுடைய தெய்வத்தை'ப்பற்றி பேசினபோது அதிகாரத்தோடு பேசினுர் என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டியதாய் இருந்தது. இந்த இருகூட்டத்தினருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. சாவுக்குப்பின் மறுவாழ்வு இல்லை என்று நினைப்பவர்கள் இவர்கள். மறுவாழ்வு உண்டு என்று பவுல் சொன்னதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவே இல்லை.

## 'அறியப்படாத தெய்வத்துக்கு'

புதிய பேச்சாளர்கள் வந்தால், அவர்கள் தங்கள் தத்துவங்களை மக்கள் முன் விளக்கிச் சொல்ல வாய்ப்பு அளிப்பது அவர்கள் வழக்கம். எனவே கரடுமுரடான பாறுங்கல் மேடை ஒன்றன்மேல் நின்றுகொண்டு புகழ் பெற்ற அரையோப்பாகு மன்றத்தினரை நோக்கிப் பவுல் பேசினுர். கல்வி சமய போதனைக்கான பொறுப்பை இம்மன்றம் ஏற்றிருந்தது. இம்மன்றத்தினர் சிறந்த அறிஞர்கள். உயர்பதவிகளில் இருந்த இவர்கள் கல்வியால் மேம்பட்டவர்கள். இவர்கள்


உட்கார்ந்திருந்த நீண்ட கல் இருக்கைகளை இன்றும்கூட நாம் காணலாம். என்ன நடக்கிறது என்றறிய ஆவல் நிரம்பியவர்களாய் அத்தேனே பட்டணத்து சாதாரண மக்களும் அங்கே கூடிவிட்டனர். அப். 17:22ம் வசனத்திலிருந்து படித்துப் பார்த்தால் இந்நிகழ்ச்சி ஆரே (கிரேக்கப் பெயர்) அல்லது மார்ஸ் (உரோமப் பெயர்) மேடையில் நடந்ததாக நினைக்கத்தோன்றுகிறது. ஆனால் அது அநேகமாக 'செனட்' என்ற ஆட்சிப் பேரவைகூடும் இடத்தில்தான் நடந்திருக்கவேண்டும்.

மக்கள் சந்தை வெளியில் பேசும் பேச்சு நடையிலே பவுல் இங்கு பேசுகிறார். சிலை வணக்கத் தத்துவத்தைக் குறிப்பிட்டுப் பேசுகிறார். 22ம் வசனத்தில் பவுல் அவர்களை நன்றாகப் பாராட்டியே பேசியிருந்தார். 'அத்தேனரே, நீங்கள் நல்ல சமயப்பற்று கொண்டவர்கள்' என்று அவர்களைப் புகழ்ந்தார். அவர் பார்த்த பலிபீடங்களையும், சிலைகளையும், கோயில்களையும், ஆலயங்களையும் சிந்தனையில் கொண்டு அவர் இப்படிப் பேசியிருக்கலாம். இவைகளில் ஒன்று அந்த 'அறியப்படாத தெய்வத்துக்கு' வைக்கப்பட்டிருந்த பலிபீடம் என்றும் இவர்கள் அறியாத அந்தக் கடவுளைப் பற்றிப் பேசி அவர்களுக்குப் புது அறிவூட்டப் போவதாகவும் சொல்கிறார். நானூறு வருடங்களுக்கு முன் புகழ் பெற்ற தத்துவமேதை சாக்ரடீசும், பவுலைப்போலவே பேசினார் என்பது ஒருவேளை சிலருக்கு ஞாபகம் வந்திருக்கக்கூடும். பேருலகு முழுமையும், அதில் உள்ள யாவற்றையும் படைத்த ஒரே மெய்யான கடவுளே பவுல் கூறப்போகும் அந்தக் கடவுள். 'நாமும் அவருடைய சொந்தப் பிள்ளைகளே' என்றும் பவுல் சொன்னார். தர்சு பட்டணத்துப் பள்ளியில் பவுல் பாடமாகக் கற்றிருந்த அரத்து என்ற அவர்கள் ஸ்தோயிக்க ஞானியின் கூற்று இது. ஆனால் அறியாமையினால் அவர்கள் முன்னோர்கள் நினைத்ததுபோல, கடவுள் தங்கத்தாலும் வெள்ளியாலும் கல்லாலும் சமைக்கப்பட்ட ஒரு உருவம் என்று சிந்திப்பது அறியாமை என்று சுட்டிக் காண்பித்தார். பார்த்தினன் ஆலயத்தில் உள்ள அத்தீனாளைப்போல், அந்த மெய்யான கடவுள், கையினால் கட்டப்பட்ட ஆலயங்களில் அமர்ந்திருக்கமாட்டார். எல்லாவற்றையும் படைத்தவர் அவரே. எல்லா நாட்டு மக்களையும் உண்டாக்கினவரும் அவரே. இப்போது அவர் மறைபொருளாயில்லை, வெளியரங்கமாகிவிட்டார். பூமியில் தம்முடைய நீதிபதியாகக் கடவுள் அனுப்பினவரை பவுல் கண்டிருக்கிறார். அவருடைய சொந்த இனத்தவரான யூதர்கள் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றுவிட்டனர். கடவுளோ அவரைச் சாவிலிருந்து மீட்டெழச் செய்தார் . . . இவ்வளவு பேசினபின் பவுல் நிறுத்தவேண்டியதாயிற்று. ஏனெனில் கூட்டத்தில் சிரிப்பும், கூச்சலும், கிண்டல்பேச்சும் அதிகமாயிற்று. கடைசியில் கூட்டம் கலைந்து போயிற்று. பவுலின் ஆர்வத்தால் கவரப்பட்ட நகராண்மைக் குழுவினர், அவர் மீண்டும் பேசவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

இங்கு பவுலுக்குத் தோல்வியே ஏற்பட்டது எனலாம். இதுபோல் எத்தனையோ தோல்வி கண்டுவிட்டார்; இன்னும் எத்தனையோ காணப்போகிறார். அத்தேனே ஞானிகளின் மனதை அன்று பவுலால் அசைக்கமுடியாமற் போனது உண்மைதான் (1 கொ. 1:23, 24; 2 கொ. 2:1, 2). ஒருநாள் பார்த்தினன் ஆலயமே கிறிஸ்தவ ஆலயமாக விளங்கப் போகிறது என்று கனவிலும் அவர் நினைக்கவில்லை. பவுலின் பேச்சைக்கேட்டு கிறிஸ்தவர்களாக மாறியவர்கள் மிகச் சிலரே. அவர்களில் இருவரின் பெயர்களை நாமறிவோம். ஒன்று தாமரி என்ற பெண். மற்றொன்று நகராண்மைக் கழக உறுப்பினராயிருந்த தியொனீசியு. இந்தத் தியொனீசியுவைப் பிரான்சுக்குச் சென்று கிறிஸ்தவ சமயத்தை அறிவித்துவருமாறு உரோமிலிருந்த பேராயர் கிளமன்ட் அனுப்பிவைத்ததாக ஒரு கதை உண்டு. அவர் பாரிஸ் மாநகரின் பேராயர் ஆனார். பின் கிறிஸ்துவுக்காக இரத்தச் சாட்சியாக இறந்தார். அவர்தான் பிரான்ஸ் நாட்டின் மரபாதரவுப் புனிதர் (patron saint); புனித டென்னிஸ் என்று அவர் அழைக்கப்படுகிறார்.


### கொரிந்து பட்டணம் செல்கிறார்

நமக்குத் தெரிந்தவரை அப்போது அத்தேனே பட்டணத்தில் சபை எதுவும் தோன்றியதாகத் தெரியவில்லை. 'பவுலைச் சேர்ந்தவர்கள்' என்று சிலர் இருந்தார்கள் என்றுமட்டும் நாம் பின்பு வாசிக்கிறோம் (அப். 17:34). ஏறத்தாழ கி.பி. 50ல் அத்தேனே பட்டணத்திலிருந்து பவுல் பயணம் செய்து எண்பது கிலோ மீட்டர் தொலைவிலிருந்த கொரிந்து பட்டணம் சென்றார். கொரிந்து பெரிய வணிகத் துறைமுகம். ஒடுக்கமான பூசந்தியில் இரு பக்கங்களிலுள்ள கடலையும் இணைக்கும் ஒரு கால்வாய் வெட்டும் வேலை முன்காலத்திலேயே ஆரம்பமாயிற்று. வெகு காலத்திற்குமுன் மாவீரன் அலெக்சாந்தர் அதை வெட்டும் முயற்சியில் கவனம் செலுத்தினார். பிறகு பேரரசர் ஜூலியஸ் சீசர் அவ்வேலையைத் தொடர்ந்தார். பின்னொரு நாளில் நீரோ மன்னர்கலிலேயாவில்இருந்துகொண்டு




பூசந்திக்குக் குறுக்காக அமைக்கப்பட்ட வழி

வரப்பட்ட அடிமைகளை வைத்து வேலைவாங்கி இக்கால்வாயை வெட்டிமுடிக்க அரும்பாடு பட்டார். ஆனல் அவ்வேலை முடிவடைய வில்லை. ஆறு கிலோ மீட்டர் தூரத்திற்கு கப்பல்களை உருளைகள்மேல் வைத்து தரையில் உருட்டிக்கொண்டு போவதைப் பவுல் கவனித் திருக்கலாம். இது கடினமான வேலையானு லும், ஒரு வளைகுடாவிலிருந்து மறு வளைகுடா விற்கு கடலில் முன்னூறு கிலோ மீட்டர் கப்பல் செல்வதைவிட இது சுலபமாகத்



உருளைகள்மேல் வைத்துக் கப்பலைத் தரையின்மீது உருட்டிச் செல்லுதல்

தான் இருந்திருக்கவேண்டும். உரோமர்கள் நிறைந்த ஒரு முக்கிய பட்டணமாகக் கொரிந்து நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருந்தது. இதைக் கண்டபோது பவுலுக்குத் தம் சிறு வயதில் தர்சு பட்டணத்தில் இருந்த நாட்கள் நினைவுக்கு வந்தன. தர்சு பட்டணத்தில் அவர் எகிப்தியர்கள், பெனிக்கேய மாலுமிகள், வியாபாரிகள், வணிகர் கூட்டங்கள், உரோமப் போர்வீரர்கள், கிரேக்க விளையாட்டு வீரர்கள் எனப் பலரைச் சந்தித்துப் பழகியிருக்கிறார். அத்தேனே பட்டணத்தில் கிடைக்காத வெற்றி அவருக்கு இங்கு கிடைக்க வாய்ப்பிருக்கிறது. சிதறுண்ட யூதர்களில் பலர் இங்கும் வாழ்ந்து வந்தார்கள். இங்கு பவுல் கூறியவைகளை நம்பின குழுவினருக்கு இவர்கள் உயிர்க்கருவாக விளங்கியிருக்கக்கூடும் (அப். 18:4). அவர்கள் ஜெப ஆலய வாயிலின் மேற்சட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்கு வாழ்ந்த கிரேக்கர்கள், உரோமர்கள், எகிப்தியர்கள், யூதர்கள் ஆகிய எல்லோரும் புதிய புதிய சிற்றின்பங்களைத் தேடி அலைபவர்களாகவும் பணப்பித்து பிடித்தவர்களாகவும் ஆடம்பரப் பிரியர்களாகவும் இருந்ததோடு தீய நடத்தைக்காரர்களாகவும், சுயநலமிகளாகவும் இருந்தனர். இவர்களுக்கு மூடநம்பிக்கை அதிகம். பான், கடல் அணங்குகள் போன்ற தெய்வங்களை இவர்கள் வழிபட்டுவந்தனர். விருந்துகள் சாப்பிடாமலும் குடித்து வெறிக்காமலும் இருக்கும் சமயங்களில் பூசந்தி விளையாட்டுப் பந்தயங்கள் எனப்படும் விளையாட்டுப் பந்தயங்களைப் பார்த்துக் காலங்கழிப்பார்கள். அங்கு புன்னை வகையைச் சேர்ந்த ஒரு மரத்தின் இலைகளாலான கிரீடத்தைப் பரிசாகப் பெறவும் தற்காலிகமான புகழை அடையவும் வீரர்கள் நிர்வாணமாக ஓடினார்கள்; மல்யுத்தம் செய்தார்கள்; இரதங்கள் அரங்கைச் சுற்றி ஓடின; வாட்போர் வீரர்கள் ஒருவரை ஒருவர் கொன்றனர் (1 கொ. 9:24—27).

பழைய கொரிந்து பட்டணம் பாழடைந்து கிடக்கிறது. ஆக்ரோ—கொரிந்து எனப்படும் மலை 600 மீட்டர் உயரத்தில் பழுப்பேறிய மஞ்சள் நிறத்தில் இன்றும் காட்சி அளிக்கிறது. இந்த மலைக்கு முன்பக்கத்தில் தோண்டியபோது ஆலயங்கள், குளிக்கும் இடங்கள், சதுக்கங்கள், அகன்ற தெருக்கள், நீரூற்றுகள், வெற்றிச் சின்னங்களாக நிற்கும் வளைவுகள் ஆகியவை இருந்த இடங்கள் காணக்கிடக்கின்றன. இவைகளின் நடுமையத்தில் அத்தீனாளின் ஆலயம் கம்பீரமாய் ஒரு காலத்தில் நின்றிருந்தது. காதல்



கொரிந்துவிலிருந்த அப்பொல்லோவின் ஆலயத்தின் இடிபாடுகள்

தேவதையான அப்பிரோதீத்துவின் ஆலயமும் அங்கிருந்தது. ஒளிக்கும் ஆற்றலுக்குமான தெய்வமாக வணங்கப்பட்ட அப்பொல்லோவின் ஆலயத்தின் மிகப் பெரிய ஏழு தூண்களை அங்கே நாம் இன்றும் காணலாம்.

### கொரிந்து பட்டணத்தில் பவுல் ஆற்றிய பணி

இங்கு பவுல் பல நாட்கள் தங்கியிருக்க எண்ணிவிட்டாலும் (1 தெச. 2:17,18) தங்கியிருந்த நாட்களில் தம் சாப்பாட்டிற்காகவும் வீட்டு வாடகைக்காகவும் ஏதேனும் வேலை செய்ய வேண்டியதாயிற்று. படகுகள் நிற்கும் இடங்களில் வேலை செய்யும் மக்கள் இருந்த பகுதிக்குச் சென்று கூடாரத்துணி நெய்யும் ஒருவரைக் கண்டுபிடித்தார். பவுலின் தொழிலும் இதுதான். இந்த நண்பரின் பெயர் ஆக்கிலா. இவர் பொந்து நாட்டிலிருந்து வந்த யூதர். உரோமில் தீவிர சமயப்பற்றுடைய யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையே 'கிறெஸ்தூஸ்' குறித்து அடிக்கடி கலகம் உண்டானது. (கிறெஸ்தூஸ் இயேசுவுக்கிருந்த ஒரு பழமையான பெயர். பின்பு இது கிறிஸ்து என மாறியது.) இக்கலகங்களினால் மனமுடைந்துபோன கிலவுதியு என்ற உரோமப் பேரரசர் ஆக்கிலாவை உரோமிலிருந்து வெளியே அனுப்பிவிட்டார். இந்த ஆக்கிலாவும் அவர் மனைவி பிரிஸ்கில்லாளும் பவுலைத் தங்கள் வீட்டில்

தங்குவதற்கு அனுமதித்து, அவர் நற்செய்தியை ஆவலுடன் கேட்டார்கள். (பிரிஸ்கில்லாள் உரோமப் பெண்ணாக இருந்திருக்கலாம். ரோமர் 16:3ம் வசனத்தில் இவர் குடும்பத்தின் உரோமப் பெயரான பிரிஸ்கா என்பது உபயோகிக்கப்பட்டிருக்கிறது.) பவுலுக்கு உரோமைப்பற்றியும் அங்கு இருந்த பேதுருவைப்பற்றியும், அவர் செய்த திருப்பணி குறித்தும் இவர் கூறினர். அன்றே பவுலும் எப்படியாவது ஒரு நாள் உரோமுக்குச் சென்று, அங்கிருந்து ஸ்பெயின் நாட்டிற்குத் தம் நற்செய்தியை விரைந்து அனுப்ப வேண்டும் என்று மனத்தில் உறுதி பூண்டார். இதற்குள்ளாக பிரிட்டன் (இங்கிலாந்தின் பழைய பெயர்) நாட்டைக் குறித்தும் அவர் கேள்விப்பட்டிருக்கக்கூடும். பிரிட்டனிலுள்ள கால்செஸ்டர் என்னும் இடத்தை உரோமர்கள் பிடித்தபோது கிலவுதியு பேரரசரும் அவர்களோடு இருந்திருக்கிறர். உரோமப் போர்வீரரும் அங்கிருந்து திரும்பி வந்து இந்தப் புதிய நாட்டைப்பற்றிய விபரங்களை பிரபலப்படுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனல் இப்போது உடனடியாக உரோமைப் பற்றியே பவுல் சிந்தித்துக்கொண்டிருந்தார். பாவம்... அங்கு, அவர் விலங்குகள் பூட்டப்பட்டுக் காவலில் வைக்கப்பட இருக்கிறர் என்பதுபற்றி அவருக்கு இப்போது என்ன தெரியும்? அத்தேனே பட்டணத்தில் தம் பணி தோல்வி கண்டதால் கொரிந்து பட்டணத்தில் அவர் ஒன்றும் அதிகமாகச் செய்ய விரும்பவில்லை (1 கொ. 2:3). ஆனல் பணிமனையிலும் தறிக்கூடத்திலும் தம் புதிய நண்பர்களுக்கும் கூடாரத் துணிவாங்கத் தம்மிடம் வருபவர்களுக்கும் நற்செய்தியைச் சொல்லும் பணியில் அவர் ஊக்கமாக ஈடுபட்டிருந்தார்.

ஓய்வுநாளில் அவர் ஜெப ஆலயம் சென்றர். சிலுவையில் அடிக்கப்பட்ட அந்த இயேசுவே வாக்குப்பண்ணப்பட்ட மேசியா (கிறிஸ்து) என்று பவுல் கூறியதை அங்குள்ள யூதர்கள் நம்பமறுத்தார்கள். கி.பி. 29ல் நடந்த பஸ்கா பண்டிகைக்கு இவர்களில் சிலர் எருசலேமுக்கு வந்திருக்கக்கூடும். இருபது ஆண்டுகளுக்கு முன் 'யூதர்களின் ராஜா' சிலுவையில் அடிக்கப்பட்ட நிகழ்ச்சி பற்றி சிலருக்கு ஒரு தெளிவற்ற நினைவு இருந்தது. அந்தக் குற்றவாளி எப்படிக் கடவுளின் மகனாக இருக்கமுடியும்? பிசிதியாவில் உள்ள அந்தியோகியா பட்டணத்தாரைப் போலவே இவர்களும் இயேசுவுக்கு எதிர்த்து நின்று அவரைச் சபித்தார்கள்.

அவர்கள் எதிர்ப்பையும், நம்பிக்கையின்மையையும் அவர்கள் பேசிய பேச்சுக்களையும் எவ்வளவு சகிக்க முடியுமோ அவ்வளவு சகித்துப் பார்த்தார் பவுல். கடைசியில் அவர் பொறுமை இழந்தார். ஒரு நாள் தம் ஆடையை உதறிவிட்டு (அப். 18:6; நெகே. 5:13 உடன் ஒத்துப் பார்க்கவும்) இனி புற இனத்தவருக்கே அவர் நற்செய்தி கூறப்போவதாக முடிவு செய்தார். அவர் பேசுவதை அவர்களாவது கேட்பார்கள். இது யூதர்களுக்கு நிச்சயம் எரிச்சலூட்டப் போகிறது. ஏனென்றல் கடவுளுக்குப் பயந்த நல்ல புறவினமக்கள் எல்லோரும் ஒரு நாள் நுனித்தோல் களைந்து தங்கள் சமயத்தை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று யூதர்கள் எப்போதும் திடமாய் நம்பியிருந்தார்கள். தங்கள் சபையில் அவர்கள் உறுப்பினராகிவிடவேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாய் இருந்தார்கள். இவர்களைப் பவுல் தம் பக்கம், தம் புதிய நம்பிக்கையிடம் இழுத்துக் கொண்டுவிட்டால் என்ன செய்வது என்று கவலைப்பட்டார்கள். பவுல் இன்னெரு விதத்திலும் அவர்களைத் தாக்கிவிட்டார். அவர்கள் ஜெப ஆலயத் தலைவர் கிறிஸ்புவையே தம்முடைய நம்பிக்கையை ஏற்றுக் கொள்ளச் செய்து கிறிஸ்தவராக்கிவிட்டார்! (1 கொ. 1:15 பார்க்கவும்). புதிதாக வந்த ஜெப ஆலயத் தலைவர் சொஸ்தேனேயுக்கும் பவுல்மீது சரியான கோபம் இருந்தது உண்மைதான். அது இயல்பும்கூட. பவுல் அங்கிருந்து கிளம்பி உரோம இனத்தைச் சேர்ந்த தித்தியு யுஸ்து என்ற கிறிஸ்தவர் வீட்டில் போய்த் தங்கினர்.

ஒருநாள் பவுல் ஒரு கனவு கண்டார். கனவின் மூலமாகக் கடவுள் பேசுகிறர் என்ற நம்பிக்கை அந்நாட்களில் மக்களிடம் இருந்தது. தாம் கண்ட கனவின் மூலமாகக் கொரிந்து பட்டணத்தில் தொடர்ந்து அச்சமின்றி நற்செய்திப் பணி ஆற்றவேண்டும் என்றும் ஆண்டவர் தம்மோடு கூடவே இருப்பார் என்றும் உணர்ந்தார். உடனே பவுல் செயல்படத் தொடங்கினர். அத்தேனே பட்டணத்துப் பணியில் கண்ட தோல்வியிலிருந்து சில பாடங்களைப் படித்திருந்தார். இப்போது தம் பேச்சு நடையையும், நற்செய்தி கூறுகிறதற்குத் தாம் பின்பற்றிய முறைகளையும் மாற்றிக் கொண்டார். கொரிந்துபட்டண மக்களும் அத்தேனே பட்டணத்தில் இருந்தவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள். எனவே பெரிய தத்துவ உரையாற்றமல் நேரடியாகச் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்பற்றிப் பேசினர் (1 கொ. 2:2). செய்திகேட்ட மக்கள் பெரிய மேதைகளோ, உயர்ந்த நிலையில் உள்ளவர்களோ அல்லர் (1 கொ. 1:26). அவர்களில் பலர் பட்டணத்தில் அதிகமாகக்

காணப்படும் தரங்கெட்ட கொடிய மக்களாக இருந்தனர் (1 கொ. 6:9–11). தம் பணியை மேலும் தொடர்ந்து செய்ய பவுலுக்குப் பணம் தேவைப்பட்டது. மக்கெதோனியாவிலிருந்து சபை மக்கள் அனுப்பிய ஈவுகள் அவருக்குப் பெரும் உதவியாக இருந்தன (2 கொ. 11:8,9). ஒரு வேளை சீலாவும் பிலிப்பி பட்டணத்திற்குத் திரும்பிச் சென்று சில நாட்கள் இருந்துவிட்டு வந்து இப்போது பவுலோடு சேர்ந்துகொண்டார் போலும். இந்த ஈவுகளைச் சீலா கொண்டுவந்திருக்கலாம். சபைகளில் எல்லாக் காரியங்களும் சரிவர நடைபெறுகின்றனவா என்று கவனிக்க யாராவது அடிக்கடி சென்று கவனித்து வரவேண்டியது அவசியமாய் இருந்தது.

## பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின கடிதம்

பவுல் தம் பணியைக் கொரிந்து பட்டணத்தில் வெற்றிகரமாகச் செய்துகொண்டிருந்த போது, அவர் அதிகமாய் நேசித்த தீமோத்தேயு தெசலோனிக்கே பட்டணத்திலிருந்து மகிழ்ச்சியான செய்தியைக் கொண்டுவந்தார் (1 தெச. 3:6). இப்பட்டணத்திற்குச் சென்று அங்குள்ளவர்களை மீண்டும் சந்தித்து அவர்களோடு உரையாட எண்ணிய பவுலுக்கு அவ்விதம் செய்ய இயலாதுபோயிற்று. எனவே இங்குள்ள சபை மக்களுக்குப் பவுல் ஒரு கடிதம் எழுத எண்ணினார் (1 தெசலோனிக்கேயர்). அதில் பொறுமை கொண்டலையும் யூதர்கள் பிதற்றிய பொய் வார்த்தைகளுக்குப் பவுல் மறுப்புக்கூறினார்; தோழமையோடு ஒன்றித்து வாழும்படி சபையாருக்கு உற்சாகமூட்டி அறிவூட்டினார். பவுல் எழுதினவற்றில் முக்கியமான செய்தி ஒன்றை நாம் கவனிக்கவேண்டும். இறந்த இயேசு மீண்டும் உயிர்பெற்று எழுந்ததுபோல் நாமும் எழுவோம்; சாவைக்குறித்து துக்கப்படவேண்டியது அவசியமில்லை என்று அழுத்தம் திருத்தமாகக் கடிதத்தில் எழுதியிருந்தார் (1 தெச. 4:13,14; 5:9–22).

பவுல் சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் இதுவே முதல் கடிதம் என்றும், கலாத்திய சபையாருக்கு எழுதும் முன்பே பவுல் இதை எழுதியிருக்கவேண்டும் என்றும் சில அறிஞர்கள் கருதுகிறார்கள். கடிதத்தைப் படிக்கும்போது இயேசு மறுபடியும் அதாவது இரண்டாம் முறையாக விரைவில் வரவிருக்கிறார் என்று பவுல் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் என்று நமக்கு நன்றாகத் தெரிகிறது. ஆதிக் கிறிஸ்தவர்கள் எல்லோருமே அப்படித்தான் எதிர்பார்த்தார்கள். பின்னர் கொலோசேயர் நிருபத்தில் நாம் காண்பது போல் (இது குறித்து கலாத்தியருக்கு எழுதின நிருபத்திலும் சில குறிப்புகள் காணப்படுகின்றன) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பூவுலகில் இருக்கும்போதே கடவுளின் அருளாட்சியில் இடம் பெற்றுள்ள புதிய நம்பிக்கையாளர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் கிறிஸ்து பிரவேசிப்பதாகும் என்று அவர் கருதுவதாகத் தோன்றுகிறது. இவருடைய கடிதங்கள் இன்றும் நம்மோடு இருப்பவை. இந்நூலில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட வசனங்களை நீங்கள் எடுத்துப் படித்திருந்தால், இதற்குள் கடிதங்களின் ஒரு பகுதியைப் படித்து முடித்திருப்பீர்கள். தெசலோனிக்கேயருக்கு எழுதிய கடிதமும் கலாத்திய மக்களுக்கு எழுதிய கடிதமும் புதிய ஏற்பாட்டின் ஆரம்ப நூல்கள் எனலாம். ஏனெனில் இதுவரை நற்செய்தி நூல்கள் எதுவுமே எழுதப்படவில்லை. (புத்தகம் 3, முன்னுரை பார்க்கவும்.) பவுல் இக்கடிதத்தை எழுதியபோது சீலா அவருடன் இருந்தார் (1 தெச. 1:1). பவுல் சொல்லச் சொல்ல இந்த சீலாதான் (சில்வானு) பாப்பைரஸ் தாள்களில் எழுதியிருக்கவேண்டும். பவுலின் கண்பார்வை குறைவாயிருந்ததால் நீண்ட கடிதங்களைத் தம் சொந்தக் கையெழுத்தில் அவரால் எழுதக்கூடாமலிருந்தது. பின்னர் தொடர்ந்து நல்ல பணியாற்றுமாறு உற்சாகமூட்டி தெசலோனிக்கேய சபைக்குப் பவுல் இன்னொரு கடிதமும் எழுதினார். இயேசுவின் இரண்டாம் வருகைபற்றி மனத்தை வெகுவாக அலட்டிக் கொள்ளாமல் தங்கள் கடமைகளைச் சரிவர செய்து நிற்கும்படி அவர்களுக்கு அறிவுரை கூறினார். அவர்கள் பிறர் அலுவல்களில் தலையிடுபவர்களாய் இராமல் சுறுசுறுப்புள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று நினைப்பூட்டினார் (2 தெச. 1:3,4; 2:2; 3:7–11).

## கொரிந்துவில் சபை உருவாயிற்று

பவுல் கொரிந்து பட்டணத்தில் தங்கி, அங்குள்ள ஏழைப் புற இனமக்களிடையே ஒரு சபையைத் தொடங்கினார். சபையின் காரியங்கள் தட்டுத்தடங்கல் இன்றி நடந்து வருவதற்குத் தலைவர்கள் தங்கள் கடமைகளைத் தொடர்ந்து சரிவர செய்ய அவர்களைப் பயிற்றுவித்தார். திருவிருந்து ஆராதனையையும் அவர்களிடையே பழக்கத்திற்குக் கொண்டுவந்தார் (புத்தகம் 3, பக்கம் 96). ஆனால் சபையில் ஒற்றுமை குலைந்திருந்தது. கருத்து வேறுபாடுகளும் குழப்பமும் பவுலுக்கு எதிர்ப்பும்கூட இருந்தது. சபையில் நிறையப்பேர் இருந்தனர். அவர்கள் 'பன்மொழி பேசிய'தற்கான சான்று இருந்

தது. எனவே தூய ஆவியானவர் அங்கு தமக்குதவியாகப் பணிபுரிவதைப் பவுல் உணர்ந்தார். சுமார் பதினெட்டு மாதங்கள் அங்கு தங்கிய பிறகு கி.பி. 52ல் அந்தியோகியா சென்று அங்கிருந்து எருசலேம் செல்ல நினைத்தார்.

அவ்வாறு அவர் பயணத்தைத் தொடங்கு முன் பவுல்மீது பொறாமைகொண்ட யூதர்கள் பலர் பெருங் கூட்டமாய்க்கூடி, அவரை அகாயாவிலுள்ள புதிய உரோம அதிபதியான கல்லியோன் முன்பு இழுத்து வந்தனர். கி.பி. 52ல் கல்லியோன்பற்றி எழுதப்பட்டுள்ள கல்வெட்டு ஒன்று டெல்பி என்ற இடத்தில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனைக்கொண்டு இச்சம்பவம் நடந்த காலத்தைத் துல்லியமாக நம்மால் கூறமுடிகிறது. கல்லியோன் என்பவர் புகழ் வாய்ந்த கிரேக்கத் தத்துவ அறிஞரான செனேக்காவின் சகோதரர். இந்தச் செனேக்கா நீரோவுக்கு ஆசிரியராயிருந்தவர். செனேக்காவின் அருமையான கூற்று ஒன்று உண்டு: 'கடவுள் உன்னைப் பார்க்கிறார் என்ற நினைவோடு மனிதர்களிடம் உறவாடு; மனிதர்கள் கேட்கிறார்கள் என்ற உணர்வோடு கடவுளிடம்பேசு' என்று அழகாக அவர் கூறுகிறார். விசித்திரமாக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள இலட்சியம் பவுலின் இலட்சியம் போன்றது.

'பசிலிக்கா' என்றழைக்கப்படும் நீதி மண்டபத்தில் தீர்ப்புக்கூறும் நீதிபதியாக கல்லியோன் உட்கார்ந்திருந்தார். யூதர்களுடைய பொறாமையையும், அவர் உய்த்து உணர்ந்தார். பவுல்மேல் அவர்கள் கொண்டுவந்த தெளிவற்ற குற்றச்சாட்டுகளின் காரணத்தையும் அவரால் கண்டுகொள்ள முடிந்தது. பவுல் ஏதோ ஒரு புதிய மதம்பற்றிப் பேசி வருகிறார் என்பதும், இது உரோம சட்டத்திற்கு விரோதமானது என்பதும் அவர்கள் குற்றச்சாட்டு. அவர்கள் சமயத்தையும் சட்டங்களையும்பற்றிய சண்டைகளைக் குறித்து நியாயம் விசாரிப்பது தம் வேலை இல்லை என்றும் அவர்களே அதைச் செய்து கொள்ளலாம் என்றும் சொல்லி அனுப்பிவிட்டார். அவருக்குத் தெரிந்தவரை பவுல் உரோம அரசுக்கு விரோதமாக எதுவும் போதிக்கவில்லை என்று அறிந்துகொண்டார். கிறிஸ்தவ சமயம் பரவ வேண்டுமென்றால் பரவலாம் என்பது அவர் கருத்து. யூதர்களைக் கல்லியோன் மூக்கறுத்துவிட்டார் என்று கண்டவுடன் (அப். 18: 14–16), கிரேக்கர்கள் யூதர்களின் ஜெப ஆலயத் தலைவரான சொஸ்தேனேயைப் பிடித்து அடிக்கத் தொடங்கினர். கல்லியோன் இதையும் கவனியாதவர்போல் இருந்துவிட்டார்.

### கொரிந்துவை விட்டு பவுல் வெளியேறினார்

ஆக்கிலா பிரிஸ்கில்லாளுடன் பவுல் சீரியாவுக்குச் செல்ல கப்பலேறினார். கெங்கிரேயாவில் சில நாட்கள் கப்பல் நின்றது. கொரிந்து பட்டணத்தின் கிழக்கரையிலுள்ள துறைமுகம் இது. கூரான இரு நிலப்பகுதிகளுக்கிடையே அமைந்த நல்ல துறைமுகம். நிலப்பகுதிகளின் கூரான இரு முனைகளிலும் ஆலயங்கள் இருந்தன. ஒரு முனையில் அப்பிரோதீத்துவின் ஆலயம் இருந்தது. மறுமுனையில் ஐசிஸ் என்ற தெய்வத்தின் ஆலயம் இருந்தது. பவுல் பொருத்தனை ஒன்று செய்திருந்தார் என்பதைக் காண்பிக்க இங்கு தலையை மொட்டை அடித்துக்கொண்டார் (எண். 6). விரிகுடாவைக் கடந்து கப்பல் சென்றது. இவ்விரிகுடாவில் உள்ள பாறை ஒன்றில் கடல் தெய்வமான பொசீதோன் (உரோமர் இதை நெப்டியூன் என்பர்) என்ற தெய்வத்தின் பெரிய சிலை நின்றது. இச்சிலை டால்பின் (dolphin) என்ற கடற்பன்றியின் உருவத்தையும் சூலாயுதத்தையும் கையில் ஏந்தி நின்றது. அவர்கள் எபேசு பட்டினம் வந்து சேர்ந்தபோது, ஆக்கிலாவும் பிரிஸ்கில்லாளும் அங்கேயே தங்கிவிட்டனர். அங்கு நிரந்தரமாகத் தங்க அவர்கள் எண்ணியிருந்தனர். ஒரு தடவை மட்டுமே அங்குள்ள ஜெப ஆலயத்தில் பேச பவுலுக்கு நேரம் இருந்தது. மற்றொரு கப்பல் உடனே புறப்பட்டதால் பிரயாணத்தை முடிக்க விரும்பிய பவுல் அதில் ஏறி கிழக்கு மத்திய தரைக் கடலைக் கடந்து, உரோமத் துறைமுகமான செசரியா வந்து சேர்ந்தார். இன்னொரு சமயம் எபேசுவுக்கு மீண்டும் வருவதாக வாக்குப் பண்ணினார் (அப். 18:21). பவுல் செசரியாவிலிருந்து தெற்கு நோக்கிப் பயணம் செய்து எருசலேம் வந்து சேர்ந்தார். கெங்கிரேயாவில் அவர் பண்ணிக்கொண்ட பொருத்தனையை நிறைவேற்ற இதுவரை வளர்ந்துள்ள தலைமுடியை எருசலேம் தேவாலய பலிபீடத்தின்மேல் அவர் செலுத்தியிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். எருசலேமில் அவருக்கு நல்ல வரவேற்பில்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் அந்தியோகியாவில் உள்ளவர்கள் மகிழ்ச்சி பொங்க அவரை ஏற்றுக்கொண்டனர். கிரேக்க நாட்டில் அதாவது ஐரோப்பாவில் அவர் செய்த இரண்டாவது தூதுப் பயணம் அந்தியோகியாவில் அவர் வந்து சேர்ந்ததோடு முடிகிறது. அப். 18ம் அதிகாரத்தின் நடுவிலிருந்து அவருடைய மூன்றாவது பயணம் தொடங்குகிறது. இம்முறை ஆசியாவுக்குப் போகிறார்.

*   *

## விளக்கப் பயிற்சி

1. அப்போஸ்தலர் 8:9; 13:6; 16:16 வசனங்களை வாசியுங்கள். செப்படி வித்தை பற்றி நீங்கள் அறிந்துகொண்டவற்றை எழுதுங்கள்.

அல்லது

குறிசொன்னவள் குணமடைந்த நிகழ்ச்சியை வைத்து வானொலி செய்திக் கதிர் ஒன்று எழுதுங்கள்.

2. மாற்குவைக் குறித்து பவுலுக்கும் பர்னபாவுக்கும் நடந்த வாய்ச் சண்டையை ஒரு நாடகக் காட்சியாக அமைத்துக் காண்பிக்கவும். இருவருக்கும் இடையே சமரசம் செய்துவைக்க சீலா முயல்வதையும் அதில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

3. தீமோத்தேயுவாகக் கற்பனை செய்து கொண்டு நீங்கள் சென்ற இடங்களில் நடந்த நிகழ்ச்சிகள்பற்றி உங்கள் வீட்டாருக்கு எழுதித் தெரிவியுங்கள்.

அல்லது

பவுலாக எண்ணிக்கொண்டு, துரோவாவிலே லூக்காவைச் சந்தித்ததுபற்றி உங்கள் நண்பர்களுக்குத் தெரிவியுங்கள்.

அல்லது

லூக்காவாகக் கற்பனை செய்துகொண்டு பவுலை நீங்கள் சந்தித்துவிட்டதாகவும், அவரைப் பிலிப்பி பட்டணத்திற்கு அழைத்து வரப்போவதாகவும் உங்கள் வீட்டாருக்குக் கடிதம் எழுதுங்கள்.

அல்லது

லீதியாளாக எண்ணி தியத்தைராவில் உள்ள உங்கள் நண்பர்களுக்குப் பவுலின் பணி குறித்துத் தெரிவியுங்கள்.

4. பவுலும் சீலாவும் சிறையிலிருந்து தப்பி வந்த நிகழ்ச்சியைத் தொடர் சித்திரமாகத் தயார் செய்யுங்கள்.

அல்லது

இந்நிகழ்ச்சியில் உங்கள் மனதைக் கவர்ந்த ஒரு பகுதியைப் படம் வரைந்து காண்பியுங்கள்.

5. கீழ்க்கண்ட ஒருவரை அல்லது அனைவரையும் பேட்டி காணுங்கள்:—
லீதியாள், யாசோன், சிறை அதிகாரி, நீதிபதிகள், தியொனீசியு, ஆக்கிலா, பிரிஸ்கில்லாள்.

6. அத்தேனே பட்டணத்திற்குள் (அ) நுழையுமுன், (ஆ) நுழைந்தபின் பவுலின் சிந்தனைகள் எப்படி இருந்தன?

அல்லது

ஸ்தோயிக்கர்கள், எப்பிக்கூரர் என்று இரு கட்சிகளாக நீங்கள் பிரிந்து, உங்கள் 'வாழ்க்கைத்தத்துவம்' பற்றி விவாதம் செய்யுங்கள். (இது கடினமானது. இதற்குச் சரியான முன் ஆயத்தம் தேவை.)

7. முதல் தூதுப் பயணத்திற்குச் செய்தது போல் இரண்டாம் தூதுப் பயணத்திற்கும் மாதிரி அமைத்து அல்லது தொடர் சித்திரம் வரைந்து விளக்குங்கள். (அத். 10, கேள்வி 8ஐயும் பார்க்கவும்.)

8. 1 தெசலோனிக்கேயர் 3:12,13 வசனங்களை மனப்பாடம்செய்யுங்கள். செனேக்காவின்கூற்றையும் மனப்பாடம் செய்து, அதன் பொருளையும் நீங்களே விளக்கி எழுதுங்கள்.

9. அத்தேனே பட்டணத்தில் பவுல் சமாளிக்கவேண்டியதாயிருந்த தனிப்பட்ட இன்னல்கள் யாவை? அங்கு அவருக்குச் சாதகமாய் இருந்தவை எவை? அவர் பணி அங்கு தோல்வி அடையக் காரணம் என்ன? அது முழு தோல்வியா? அல்லது அங்கு இரண்டுபேர் கிறிஸ்தவர்களாக மாறியதே அவர் முயற்சிக்குக் கிடைத்த போதுமான சன்மானம் என்று நினைக்கிறீர்களா?

10. ஆக்கிலாவையும் பிரிஸ்கில்லாளையும் பவுல் முதல் முதல் சந்தித்ததை விவரியுங்கள் அல்லது நடித்துக் காண்பியுங்கள். அவர்கள் எதைக் குறித்துப் பேசினார்கள்? அத்தேனே பட்டணத்தில் அடைந்த சோர்வு எங்ஙனம் நீங்கப் பெற்றார் பவுல்?

11. பவுலின் உரையை இன்றைய தமிழ் நடையில் எழுதுங்கள். அதை இன்றைய புதிய மொழிபெயர்ப்பு திருமறையோடு ஒப்பிட்டுக் காண்க. அரையோப்பாகுவில் பவுல் பேசியதுபோல் உங்கள் வகுப்பறையில் உள்ளவர்களுக்கு உரையாற்றுங்கள்.

12. கீழ்க்கண்ட வசனங்கள் கொரிந்து சபையில் இருந்தவர்களின் பெயர்களையும் சிலரின் தன்மைகளையும் குறிப்பிடுகின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வரிசைப்படுத்துங்கள்: 1 கொ. 1:26 முதல் . . .; 7:20—24; 12:13; 1:15,16; 1:11; ரோ. 16:1—23. இன்னும் வேறு யாரையும் உங்களால் கண்டுபிடிக்க முடிந்தால் கண்டுபிடித்து வரிசையில் சேர்த்துக் கொள்ளுங்கள்.


அத்தியாயம் 10

# மூன்றும் தூதுப் பயணம்

*(18:23—21:17)*

சில மாதங்கள் கழிந்தன; பவுல் மீண்டும் தம் தூதுப் பயணத்தைத் தொடங்கினர். குளிர் காலத்தில் பெய்த மழை காரணமாக ஒரே சேறும் சகதியுமாய் இருந்த நிலை மாறி இப்போது சாலைகள் மறுபடியும் காய்ந்து உறுதியாய் இருந்தன. முதல் தூதுப் பயணத்தில் தாம் தொடங்கி வைத்த சபைகளைச் சந்தித்துக்கொண்டே கலாத்தியா பிரிகியா பகுதிகள் வழியாகச் சென்ருர். அவர் எபேசுவுக்கு வருவதாக வாக்குப்பண்ணியிருந்தார். எனவே அங்கு செல்ல விரைந்தார். இதற்குள்ளாக எபேசு சபையில் அப்பொல்லோ என்ற ஒரு புதுத் தலைவர் தோன்றியிருந்தார். அவர் நல்ல பேச்சாளர்; மெத்தப் படித்தவர். இவர் சொந்த ஊர் அலெக்சாந்திரியா. இவர் திருமுழுக்கன் யோவானைப் பற்றி சிறிது கேள்விப்பட்டிருந்தார். இயேசுவைப்பற்றி இவருக்கு அதிகம் தெரியாது. ஆகவே இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்ட உறுதி அவர் பேச்சில் இல்லை. தூய ஆவியானவரின் ஆற்றலை அவர் பெற்றிருக்கவில்லை. கிறிஸ்தவ திருமுழுக்கைப்பற்றி அவர் கேள்விப்பட்டதேயில்லை. எபேசுவில் குடியேறிய ஆக்கிலாவும் பிரிஸ்கில்லாளும் கூடாரத் தொழிலைச் செய்துகொண்டு வாழ்க்கை நடத்தி வந்தனர். அவர்கள் அப்பொல்லோவுக்கு மிகவும் உதவியாக இருந்தார்கள். இவர்கள் இவரைப்பற்றி லூக்காவிடம் ஏற்கெனவே சொல்லி இருந்திருக்கலாம். இப்போது கொரிந்துவுக்கு அப்பொல்லோ போனர். அவரைப் பின்பற்றியவர்கள் பலர் அங்கு இருந்தனர். சிலர் பவுலின் பேச்சைவிட அப்பொல்லோவின் பேச்சையே விரும்பினர்கள்.

பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த இரு இளம் பேச்சாளர்களான தீமோத்தேயுவும் தீத்துவும் இப்போது பவுலோடு பயணம் செய்துகொண்டிருந்தனர். எபேசு பட்டினம் சுற்றுவட்டாரத்திற்கெல்லாம் நடுநாயகமாக அமைந்த ஒரு சிறந்த வணிகப்பட்டினம். நிர்வாக அலுவலகங்களும் நிறைய இருந்தன. வெளி. 1:9—3:22 வரை குறிப்பிடப்பட்ட ஆறு சிறந்த பட்டணங்களின் சபைகளோடு அவற்றிற்கு அருகிலுள்ள எபேசு சபையும் இடம்பெற்று நின்றது. சிலை வணக்கத்திற்கும் பெயர்போன இடம் இது. அர்த்தெமி என்ற தியானளை அப்பட்டினத்தார் வழிபட்டு வந்தனர். இந்தத் தியானளின் பிரமாண்டமான ஆலயம் ஒன்று எபேசுவில் இருந்தது. ஒரு காலத்தில் உலக அதிசயங்கள் ஏழில் இதுவும் ஒன்ருக விளங்கிற்று. கி.மு. 330ல் இது கட்டப்பட்டது. இவ்வாலயத்தின் பாழடைந்த சில பகுதிகள் இன்று இங்கிலாந்திலுள்ள தொல்பொருள் அரங்கில் இருக்கின்றன. எஞ்சிய இடிபாடுகளை கொசுக்கள் நிறைந்த சதுப்பு நிலம் இன்று மூடிக்கொண்டிருக்கிறது. கிரேக்கர்களுடைய நாணயங்களில் இக்கோயிலின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. மானேடு, அல்லது பாயப் பதுங்கி நிற்கும் சிங்கங்களோடு அழகிய தியானள் இந்த நாணயங்களில் காணப்படுகிருள். ஆனல் இத்தேவதையின் உருவம் அழகிய உருவம் அல்ல. ஆகாயத்திலிருந்து சிதறி விழுந்த கரடுமுரடான கரும்பாறைத் துண்டையே முதலில் வணங்கினர்கள்; மூடநம்பிக்கையில் ஊறிய எபேசு பட்டினத்தார் விண்ணுலகில் இருந்து இதை யூப்பித்தர் அனுப்பியிருந்ததாக நம்பினர்கள். இந்தத் தியானள் ஒரு பெண்போன்ற வடிவில் ஒழுங்கற்ற வகையில் செதுக்கப்பட்டிருந்த ஒரு மரச் சிலை என்று சில மூல ஆதார ஏடுகள் குறிப்பிடுகின்றன. உருவம் வைக்கப்பட்டிருந்த கோயிலைச் சுற்றிலும் திரைகள் இருந்தன. சுற்றிலும் பளிங்குப் பீடங்கள்மேல் ஒளி வீசும் நூறு மஞ்சள் நிற மணித்தூண்கள் நின்றன. அந்த ஆலயத்தின் கூரையில்சிவப்பு வண்ணமும்பொன்முலாமும் பூசப்பட்டிருந்தது. ஆண் குருக்களும், பெண் குருக்களும், இசைவல்லுநரும் ஆலயத்தில்





பவுலின் மூன்றும் தூதுப் பயணம் கி.பி. 53–56

பணிபுரிந்து வந்தார்கள். நடனம் ஆடுபவர்களும் வித்தை காட்டுபவர்களும் அங்கு தங்கள் திறமைகளைக் காட்டி நின்றனர். மாந்திரிகர்களும், செப்படி வித்தைக்காரருங்கூட அங்குண்டு. இத்தேவதையின் வேலையாட்களைக் குறித்து மக்கள் அஞ்சினுர்கள். அர்த்தெமி என்ற தேவதைக்கு இன்னும் அதிகமாய் அஞ்சி நடுங்கினுர்கள் (எபே. 6:12).

### எபேசு பட்டினத்தாரும் பவுலும்

பயத்திலும் மூடநம்பிக்கையிலும் இருந்து விடுபட்டு, வாழ்க்கையில் சிறந்த பயனை அடைய துடித்துக்கொண்டிருந்த பல எபேசு மக்களைப் பவுல் கண்டார். அவர்களுக்கும் ஒரு விதமான நம்பிக்கை இருந்தது. திருமுழுக்கன் யோவான் கொண்டிருந்தது போன்ற நம்பிக்கை அது. அவர்கள் வாக்குப் பண்ணப்பட்ட மேசியா வருவார் என்று இன்னும் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். தூய ஆவியானவர்பற்றி அவர்கள் எதுவுமே கேள்விப்படவில்லை (அப். 19:2 முதல்). எனவே அவர்களுக்கு இயேசுவைப்பற்றியும் பெந்தெகொஸ்தே நாளின் நிகழ்ச்சிகள்பற்றியும் பவுல் போதித்தார். அவர் கைகளை வைத்து அவர்களை ஆசீர்வதித்த போது தூய ஆவியானவர் ஆற்றலோடு அவர்கள்மேல் வந்தார்.

வழக்கப்படி பவுல் யூதர்களின் ஜெப ஆலயம் சென்றுர். சிலுவையில் அறையப்பட்ட மேசியாவை யூதர் ஏற்றுக்கொள்ளவேமாட்டோம் என்றனர். எனவே அங்கு பவுல் ஒரு பெரிய இடத்தைத் தெரிந்துகொண்டார். அநேகமாக அது உடற்பயிற்சிப் பள்ளியில் ஒரு அறையாக இருந்திருக்கலாம். திறன்னு என்ற ஆசிரியர் ஒருவரின் உதவியால் அந்த இடம் கிடைத்திருந்தது. சூரியன் உதிக்கும் போது தொடங்கி, காலை சுமார் 11 மணி வரை மட்டும் அங்கு சாதாரணமாகப் பள்ளிக்கூடம் நடக்கும். பிறகு மிகவும் வெயிலாக



எபேசுவிலிருந்த திறந்தவெளி விளையாட்டு அரங்கு

இருப்பதால் அங்கு மாணவர்கள் படிக்க முடியாது. பவுல், நாளின் மிகவும் வெப்ப மான நேரத்தில் அதாவது காலை 11 மணியி லிருந்து சூரியன் மறைவதற்கு சிறிது முன்னர்வரை மட்டுமே அவ்விடத்தை உப யோகித்துக் கொள்ளவேண்டியதாயிற்று. வெப்பம் தணிந்து, மாலை வரவும் பள்ளிக் கூடம் மீண்டும் தொடங்கி நடக்கும். இந்த அறையில்தான் பவுல் இரண்டாண்டுக்காலம் திருவுரைகள் ஆற்றி வந்தார் (1 கொ. 16:6, 8). பவுல் நேரடியான எளிய முறையில் நற்செய்தியைக் கூறி வந்தார். மனந்திருந்தி மக்கள் கடவுளிடம் வரவேண்டும்; ஆண்டவ ராகிய இயேசுகிறிஸ்துவில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பதே அவர் கொடுத்த செய்தி யின் சாரம். இயேசுவின்மேல் மக்கள் கொண் டிருந்த அதிகமான நம்பிக்கையின் காரண மாக, இந்நாட்களில் பவுல் பல அற்புதங்களைச் செய்ததாகத் தெரிகிறது. இந்த ஆற்றலைக் கண்டமாத்திரத்தில் யூதரும் குருக்களின் தலைவருமான ஸ்கேவாவின் ஏழு மகன்களும் பவுலைப்போல அற்புதங்கள் செய்ய எண்ணி னார்கள். அற்புதங்கள் செய்யும் மந்திரங்கள் எல்லாம் பெற்றுவிட 'இயேசு', 'பவுல்' என்ற வார்த்தைகளைச் சொன்னால்போதும் என நினைத்தார்கள். அவர்கள் வெற்றி அடைய வில்லை! இவர்களின் தோல்வியைக் கண்ட மக்கள் பவுல் திருவுரையில் கூறிய விஷயங்களை நன்கு கேட்டு அவற்றில் இன்னும் உறுதியான நம்பிக்கை வைத்தனர். மற்றவர்களிடம் இல்லாத ஆற்றல் பவுலிடம் இருப்பதையும் அந்த ஆற்றலை இயேசுகிறிஸ்துவிடமிருந்து அவர் பெற்றிருந்ததையும் அவர்கள் கண் டறிந்தார்கள்.



எபேசுவிலிருந்த தியானாளின் ஆலயம்

'எபேசியரின் தியானுளே பெரியவள்!'

பவுல் தெளிவாகப் போதித்து வந்தார். எபேசு பட்டின மக்களும் அப்படிப்பட்ட ஒரு சமயத்தையே பல ஆண்டுகளாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார்கள். அர்த்தமற்ற சமயச் சடங்குகளேயும், பொய்யான தெய்வங்களின் மந்திர வித்தைகளேயும் செய்து சலித்துப்போன நிலேயில் அவர்கள் இருந்தார்கள். புதிய சமயப்போதனையை ஏற்றுக்கொள்வதற்காக, தங்கள் சிலே வழிபாட்டினே விட்டுவிட்டார்கள். மந்திரவாதிகளும் தாங்கள் செய்யும் காரியங்கள் தவறெனவும், மந்திர வித்தைகள் என்று மக்களே ஏமாற்றித் தந்திர வித்தைகள் செய்வது அறிவீனம் என்றும் உணர்ந்துகொண்டனர். தங்களுடைய மந்திரச் சுருள்களேயும் மந்திர சூத்திரங்களேயும் மந்திரவசியங்களேயும் சந்தை வெளிக்குக் கொண்டுவந்தனர். பெரும் நெருப்புமூட்டி அவற்றை அதில் போட்டு எரித்தார்கள். அந்தச் சுருள்கள் (பாப்பைரஸ்தாள் சுருள்கள்) சுமார் ஐம்பதினுயிரம் வெள்ளி மதிப்புடையனவாயிருந்தனவென்று கணக்கிடப்படுகிறது. இன்றைய கணக்கில் இதை நம்மால் துல்லியமாக மதிப்பிட்டுச் சொல்ல முடியவில்லே. எப்படியும் இலட்சம் ரூபாய்க்கு மேலாக இருந்திருக்கவேண்டும். பளிங்குக் கல்லில் பொறிக்கப்பட்டிருந்த ஒரு வாசகத்தை அவர்கள் அழிக்காமல் விட்டுவிட்டார்கள். எபேசுவில் கண்டெடுக்கப்பட்ட பளிங்குத் துண்டு ஒன்றின்மேல் 'வலப்பக்கமிருந்து இடப்பக்கமாகப் பறவை பறந்தால், உயரப் பறந்தாலும் கண்ணுக்கு எட்டாத தூரம்வரை பறந்து இறங்கினுலும், அது அபசகுனமாகும்' என்று எழுதப்பட்டிருக்கிறது.



தியானுளின் சிலே

பவுலுக்கு இன்னும் முழு வெற்றி கிட்டவில்லே. கி.பி. 55ம் ஆண்டின் மேத்திங்களும் வந்துவிட்டது. அது இளவேனிற் காலம். பல தெய்வ வணக்கத்தோடு தொடர்புடைய பண்டிகைகள் பல கொண்டாடப்படவிருந்தன. மே 24ம் நாள் அர்த்தெமி தேவதையின் பண்டிகை நாள். (தியானுள் என்பது இத்தேவதையின் உரோமப் பெயர்.) மார்த்துக் என்ற தெய்வத்தை பாபிலோன் நகரத்தின் வழியாகப் பெருமகிழ்ச்சியோடு ஊர்வலமாக எடுத்துச் சென்றதைப்பற்றி புத்தகம் 2ல் நீங்கள் படித்திருப்பீர்கள். இவ்விதமான விழாக்களே கீழை நாட்டு மக்கள் அதிகம் கொண்டாடுவார்கள். செழிப்பிற்குத் தேவதையான அர்த்தெமி என்னும் 'சிறந்த தாய்' இப்போது சிறப்பித்துப் பாராட்டப்படப் போகிருள். அவள் சிலேயை தெருக்களில் மான்கள் இழுத்துச் செல்ல மக்கள் அவள் புகழ் பாடிக்கொண்டும், அவள் சிலேமுன் விழுந்து வணங்கிக்கொண்டும் செல்வார்கள். நகரமெங்கும் ஒரே மக்கள் வெள்ளமாயிருக்கும். பல இடங்களிலிருந்து யாத்திரிகர்களும் பார்வையாளர்களும் திரண்டுவந்திருப்பார்கள். அதிர்ஷ்டத்திற்கான வழி வகைகளேயும் பயிர்கள் நன்ருக விளேயவும், பயணங்கள் வெற்றி சிறக்கவும், வீட்டுக் காரியங்கள் துலங்கவும் தேவையான வரத்தைத் தேடிக் கொண்டும் இம்மக்கள் வந்திருப்பார்கள். இவ் விழாக் காலத்தில் தியானுளின் சிறிய உருவங்களே வெள்ளியிலும், மரத்திலும், மண்ணிலும் செய்து அங்குள்ள தட்டார்களும், கைவேலேத்திறன் வாய்ந்த தொழிலாளிகளும் பெரும் பொருள் திரட்டி வந்தனர். மக்கள் இவ்வுருவங்களே நினேவுப் பொருளாகவும், மந்திரப்பொருளாகவும் வாங்கிச் செல்வார்கள். இத்தொழிலாளிகளில் தெமேத்திரியு

ஒருவர். பவுல் ஒரு புதிய சமயத்தைப் பரப்பத் தொடங்கியதால், தம் தொழில் பாதிக்கப்பட்டு வருவதை தெமேத்திரியு கண்டார். இயேசுவில் நம்பிக்கை வைக்கத் தொடங்கிய மக்களுக்கு, இனி உருவங்களும் மந்திரப் பொருள்களும் அவசியமில்லை. எனவே அவர் தொழில் குறையத்தொடங்கிற்று. தியானாளை மக்கள் அலட்சியம் பண்ணத் தொடங்கினர்கள். கோபக்கனல் மூள, இத்தட்டார்களும் தொழிலாளிகளும் பவுலின் இரு நண்பர்களான காயு, அரிஸ்தர்க்கு (கொலோ. 4:10; பிலே. 24) என்பவர்களை இழுத்துக்கொண்டு பொது விளையாட்டு அரங்கிற்கு வந்தனர். அங்கு சுமார் 20,000 மக்கள் கூடியிருக்கலாம். பவுலை அவர்கள் கண்டுபிடிக்க முயன்றார்கள். இதற்குள்ளாக ஆக்கிலா அவரைக் கட்டாயப்படுத்தி வெளியே அனுப்பி வைத்துவிட்டார் (ரோ. 16:3,4).

பவுல் அக்கூட்டத்தைச் சந்திக்க ஆவலாயிருந்தார். அசியார்க்குகள் (Asiarchs) என்ற அங்குள்ள ஆளுநர்கள் அவ்விதம் சந்திக்கவேண்டாம் என்று ஆலோசனை கூறினார்கள். இவர்கள் ஆசிய மாநிலங்கள் என்றழைக்கப்பட்ட உரோமப் பேரரசின் பகுதிகளுக்கு ஆளுநர்களாயிருந்தார்கள். பவுல் படித்த பேச்சாளராகவும், உரோமக் குடியுரிமை பெற்றவராகவும் இருப்பதைக் கண்டு அவருக்கு இவர்கள் சலுகைகாட்டியிருக்கக்கூடும். ஆனால் குழப்பம் விளைவதைத் தடுக்கவும் அவர்கள் விரும்பினார்கள். கூடியிருந்த மக்கள் இரண்டுமணி நேரம்போல் அர்த்தமற்ற சுலோகங்களைக் கத்திக்கொண்டிருந்தார்கள். பலருக்கு ஏன் அவ்விதமாகக் கத்துகிறோம், என்ன கத்துகிறோம் என்று கூடத் தெரியாது. சொன்னதையே திரும்பத் திரும்ப அர்த்தம் புரியாமல் கத்திக்கொண்டிருந்தனர். அலெக்சாந்தர் என்ற ஒரு யூதர் (2 தீமோ. 4:14) நியாயத்தை எடுத்துரைக்க முயன்றபோது அவர்கள் கேட்க மறுத்துவிட்டனர். அவர் குரலை அமிழ்த்திவிடும் அளவுக்கு 'எபேசியரின் அர்த்தெமியே (தியானாளே) பெரியவள்' என்று உரக்கக் கத்தினார்கள். கடைசியாக நகரத் தலைமை அதிகாரி வந்து கண்டிப்பான குரலில் பேசிய பிறகே அவர்கள் கத்துவதை நிறுத்தினார்கள். இதற்குள் கத்திக் கத்தி களைத்துப்போய்விட்டார்கள். ஆகையால் அமைதியாக வீடு செல்ல கிடைத்த வாய்ப்பைக் குறித்து மகிழ்ச்சியடைந்து, எல்லோரும் கலைந்துபோய்விட்டனர் போலும். நகர அதிகாரி பேசும்போது, எபேசுவுக்குத் தியானாளின் ஆலயத்தைப் பராமரிக்கும் பொறுப்பு (சக்ரிஸ்தான்) உண்டு என்பதை அவர்களுக்கு நினைப்பூட்டிப் பேசினார். பேரரசரைத் தெய்வமாக வணங்குபவர்களுக்கு இந்தச் சிறப்புப்பட்டம் அளிக்கப்படுவது வழக்கம். மேலும் அவ்வதிகாரி தொடர்ந்து பவுலும் அவர் நண்பர்களும் நகருக்கு விரோதமான செயலொன்றிலும் ஈடுபடவுமில்லை, கோயிலைக் கொள்ளையிடவுமில்லை (ரோ. 2:22), எனவே மக்கள் கலகம் செய்ததுபற்றி உரோம ஆட்சியாளர்கள் விசாரணை வைத்தால் 'சுதந்திரப் பட்டணமாக' இருக்கும் சிலாக்கியத்தை அவர்கள் ஒருகால் இழந்துபோக நேரிடலாம் (அப். 19:37,38). தெமேத்திரியுவுக்கு அவர்கள்மேல் வழக்குண்டானால் அவர் வழக்காக மக்கள் பிராது கொடுக்கும் நீதிமன்றத்தில் போய்ச் செய்யவேண்டியதைச் செய்யட்டும், என்று பேசினார்.

தங்களுக்கு எதிராகக் கலகக்காரர்கள் திரும்பிவிடவில்லை என்ற அளவில் யூதர்கள் மகிழ்ச்சி கொண்டனர். பவுல் யூதர் என்று அறிந்ததும் இப்படி அவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருக்கலாம். அவர் கிறிஸ்தவ யூதர் என்பது அவர்கள் கவனத்திற்கு வராமல் இருந்திருக்கலாம்.

### கொரிந்து மக்களுக்குக் கடிதம்

இப்பொழுது கொரிந்து பட்டணத்திலிருந்து திரும்பி வந்த அப்பொல்லோ அங்குள்ள சபையில் ஒற்றுமைக்குறைவு ஏற்பட்டு நம்பிக்கை குன்றி சிலர் பின்வாங்கிப் போய்விட்டார்கள் என்ற கவலை தரும் செய்தியை அறிவித்தார். பலர் தங்கள் பழைய அஞ்ஞான நம்பிக்கைகளுக்கும் பழைய வாழ்க்கை முறைகளுக்கும் திரும்பிவிட்டதையும், மற்றவர்கள் தங்கள் புதிய நம்பிக்கை முழு அளவில் நிறைவேறி வராததால் கவலையோடு இருப்பதையும் எடுத்துச் சொன்னார். இயேசு இரண்டாம் முறையாக உலகுக்கு வரும் நிகழ்ச்சி விரைவில் நடக்குமென எண்ணிக்காத்திருந்த பலர் சோர்வடைந்துபோனார்கள் என்றும் தெரிவித்தார். பவுல் அவர்களுக்குக் கடிதம் எழுத எண்ணி, பின்வருமாறு எழுதினார்: 'உங்களைப்பற்றி வேதனை தரும் செய்திகளை நான் கேள்விப்படுகிறேன்; அது குறித்து நீங்கள் நாணுவதில்லை; இப்பொழுது நீங்கள் தீயவழிகளில் நடப்பதையும் குடித்துவெறிப்பதையும் கடவுளின் திருவிருந்தை மற்ற விருந்துகள் போல் ஆக்கிவிட்டதையும் அறிந்து வருந்துகிறேன்; மீண்டும் நீங்கள் சிலை வணக்கத்திற்குத் திரும்பியது என்னைத் திகைப்படையச் செய்துள்ளது; உங்களுக்கிடையே பிரிவுகள் இருப்பது எனக்குத் தெரியும். சிலர் என்னையும், சிலர் அப்பொல்லோவையும் பின்பற்று

வதாகச் சொல்கிறீர்கள். அதில் தவறொன்று மில்லை. நான் நட்டேன்; அப்பொல்லோ நீர்ப் பாய்ச்சினர்; கடவுளோ விளையச் செய்தார். சபையின் முழுவெற்றிக்கு நீங்கள் சேர்ந்து உழைப்பது எவ்வளவு அவசியம் என்ற உண்மையை இது காட்டுகிறது' என்றார். இவ்விதம் அவர் எல்லாவற்றையும் நன்கு மனதில் பதிய வைக்கும் அளவுக்கு அழுத்தந்திருத்தமாகக் கடிதத்தில் எழுதினர். இயேசுவினுடைய அன்பின் ஆற்றலை பதின்மூன்றும் அத்தியாயத்தில் சாறாகப் பிழிந்து கொடுத்துவிடுகிறார்.

பவுலின் கடிதத்தை எடுத்துக்கொண்டு தீத்து கொரிந்து பட்டணம் சென்றார். பவுல் துரோவாவிற்குச் சென்றார் (2 கொ. 3:2,12 13; 7:5—7). அவரோடு லூக்காவும் போனர். பவுல் பேசமுடியாத அளவுக்கு நோய்வாய்ப்பட்டிருந்தார் (2 கொ. 1:8; 4:7—12). அவர்கள் மக்கெதோனியா வழியாகவும் கிரேக்க நாட்டின் மற்ற பகுதிகள் வழியாகவும் போனர்கள். இச்சமயத்தில் ஒருவேளை பவுல் கொரிந்து பட்டணம் சென்றிருக்கலாம் (2 கொ. 2:1; 13:1 முதல்). சபையைக் குறித்து மேலும் சில செய்திகளைக் கேள்விப்பட்டு கவலையுற்றும், தம் ‘மாம்சத்தில் உள்ள அந்த முள்' காரணமாகச் சோர்வுற்றுமிருந்தார் (2 கொ. 1:8; 4:7 முதல்; 12:7,9). தீத்து பிலிப்பி பட்டணத்திற்குத் திரும்பச் சென்று கொரிந்து சபையில் உள்ள சண்டைகள்பற்றி இன்னும் பல செய்திகள் அவரிடம் கூறினர் (2 கொ. 7:6). சபையில் பலர் பவுலுக்கு உண்மையாயிருந்தார்கள். இது அவருக்குப் பெரு மகிழ்ச்சி தந்தது. எருசலேமில் உள்ள யூதர்கள் மற்றவர்களைத் தூண்டிவிட அவர்கள் இவருக்கும் பணத்துக்காக இவர் விடுத்த வேண்டுகோளுக்கும் இவர் போதனைகளுக்கும் விரோதமான திட்டங்களைத் தீட்டிவந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக அவருக்கு கோழைப் பட்டம் சூட்டினர்கள். பவுலைப்போல் துணிவோடு பாடுகள், துன்பங்கள் சகித்த ஒருவருக்கு அவ்விதப் பட்டம் சூட்டுவது எவ்விதத்திலும் தகுதியாகாது. இக்குற்றச்சாட்டுகளுக்கு தகுந்தபதில் அளிக்க அவர் உடனே இன்னொரு கடிதத்தைத் தீட்டினர். இரண்டாம் நிருபத்தின் பின் பகுதி இது. பவுல் தீவிரமாக, கோப உணர்ச்சி கொப்பளிக்க சற்றுக் கடுமையாகவே எழுதுவதை இங்கு காண்கிறோம். பத்தாம் அத்தியாயம் தொடங்கிப் படித்துப் பாருங்கள். அப். 11:24—28 வசனங்களில் தாம் ஒரு கோழையல்ல என்பதை அவர் போதுமான ஆதாரங் காட்டி நிரூபிக்கிறார்.

திமோத்தேயு இப்போது வந்து சேரவும் தீத்து இக்கடிதத்தை எடுத்துக்கொண்டு கொரிந்துவுக்குப் புறப்படுகிறார். தரக்குறைவான முறையில் பவுல்மீது சொல்லப்பட்டிருந்த இக்குற்றச்சாட்டுகள் பொய் என்று எடுத்துக்காட்ட பின்னல் பவுலும் தீமோத்தேயுவுமே அங்கு செல்லுகிறார்கள் (அப். 20:2). கொரிந்து சபைக்கு எழுதப்பட்டவைகளாக இன்று நம்மிடமுள்ள கடிதங்கள் இரண்டும் அச்சபைக்குப் பவுல் எழுதிய நான்கு கடிதங்களின் பகுதிகளால் ஆனவையே என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

## உரோமச் சபையாருக்கு எழுதிய கடிதம்

பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்தபோது உரோமிலிருந்த சபைக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பினர். பவுல் சொல்லச் சொல்ல தெர்தியு இக்கடிதத்தை எழுதினர் (ரோ. 16:22). உரோமில் கிறிஸ்தவர்கள் குழு ஒன்றிருந்தது. பேரரசின் மையமாகிய தலைநகரில் பேதுரு தொடங்கிய கிறிஸ்தவ சபையாக இது இருந்திருக்கலாம். இந்தக் கடிதத்திற்கு நல்ல முகவுரை தேவை என்றால் இந்த அதிகாரங்களை 7,3,12 என்ற வரிசையில் நீங்கள் படிக்கவேண்டும். கடவுளுக்கு உகந்தவர்களாக எப்படி வாழலாம் என்று இவ்வதிகாரங்களில் பவுல் வழி காட்டுகிறார் (லூ. 18:9—14 ஒத்துப்பார்க்கவும்). இயேசு கிறிஸ்துவில் வைக்கும் நம்பிக்கையிலிருந்து நாம் பெறும் ஆற்றலுக்கும், யூத திருச்சட்டத்தையும் அதன் மரபையும் ஏற்றுக்கொள்வதற்கும் உள்ள வேறுபாட்டைப் பவுல் அழுத்தந்திருத்தமாக விளக்குகிறார். இது கலாத்தியருக்கு எழுதின நிருபத்தை நினைப்பூட்டுகிறது. எவ்வளவு கடினமாயிருந்தாலும் இயேசுவின்மேல் கொண்ட நம்பிக்கை, அவர்கள் சரியாக வாழ்வதற்கு எப்படி உதவும் என்பதை அவர் கீழ்க்கண்ட வசனங்களில் எடுத்துக் காட்டுகிறார்: ரோ. 8:31—39; 7:21—25; 5:3,4. மேலும் 3:23—28 வசனங்களையும் படியுங்கள். தாம் இப்போது கடிதத்தில் எழுதியவைகளைக் குறித்து நேரில் பேச அவர்களிடம் செல்ல விரும்புவதையும் சொல்கிறார் — ரோ. 1:14,15; 15:24,25,30—32. 16ம் அதிகாரத்தைப் படித்துப் பார்த்தால் நட்புறவுகொள்ளும் ஆற்றல் பவுலிடம் அதிகமாயிருந்ததை நாம் காணலாம்.

## தொடர்ந்து பணியாற்றினர்

மற்றவர்கள் எவ்வளவு குறை கூறினலும் எருசலேமில் உள்ள சபைக்கு அனுப்புவதற்

காகப் பவுல் பணம் சேகரித்து வந்தார் (1 கொ. 16:1–4; 2 கொ. 8; ரோ. 15:26). மூன்று மாதங்களுக்குப் பிறகு பவுல் திரும்பிப்போகத் தீர்மானித்தார். எருசலேமுக்குப் பஸ்கா பண்டிகை கொண்டாடச் செல்லவிருந்த நூற்றுக்கணக்கான சிதறுண்ட யூதர்களை ஏற்றிக்கொண்டு செசரியாவுக்குப் போக இருந்த யாத்திரைக் கப்பல் ஒன்றில் ஏறிப்போகத் தீர்மானித்திருக்கலாம். பொறாமை கொண்ட யூதர்கள் (20:3) இவரைக் கொல்லத் திட்டமிட்டுக் கொண்டிருப்பதுபற்றி எச்சரிக்கப்பட்டதால் இவரும் தம் திட்டங்களை மாற்றி நிலவழியாக மக்கெதோனியாவைக் கடந்து பிலிப்பி பட்டணத்திற்குச் சென்று, அங்கு பஸ்காவை ஆசரித்தார் (20:6).

துரோவாவிலே—கி.பி. 56போல்—நண்பர் குழுவை மீண்டும் சந்தித்தார். அவர்கள் பெரோயாவைச் சேர்ந்த சோபத்தர், தெசலோனிக்கேயாவைச் சேர்ந்த அரிஸ்தர்க்கு, பிலிப்பியைச் சேர்ந்த லூக்கா, தெர்பையைச் சேர்ந்த காயு, லிஸ்திராவிலிருந்து வந்த தீமோத்தேயு, மற்றும் எபேசுவைச் சேர்ந்த தீகிக்கு, துரோப்பீமு என்பவர்கள். இவர்கள் அனைவரும் எருசலேமுக்கு அனுப்புவதற்காக நன்கொடைப் பணத்தை எடுத்துக்கொண்டு வந்தனர். இங்கு மீண்டும் அப். 20:5–15 வசனங்களில் 'நாங்கள்' என்று பேசும் பகுதி தொடங்குகிறது. அப்படியானால் இப்போது லூக்காவும் பவுலோடு இருக்கிறார். அவர் முன்பே அங்கு சென்றிருக்கலாம். எப்படியென்றாலும் இச்சந்தர்ப்பங்களில் அவர் பவுலோடு இருந்தார் என்பது உறுதியாகிறது. அப். 20:7ம் வசனத்தில் இவர்கள் ஒரு சிறு கூட்டமாய் ஆண்டவருடைய மரணத்தின் நினைவாக (புத்தகம் 3) 'அப்பம் பிட்க'க் கூடினார்கள் என்று வாசிக்கிறோம். ஓய்வு நாள் முடிந்த பிறகு (மாலை ஆறு மணிக்குப் பிறகு) ஒரு வீட்டில் கூடிய கூட்டம் இது. ஜெப ஆலயங்களில் உபயோகிக்கும் ஆராதனை முறையே இங்கும் பின்பற்றப்பட்டது—மன்றாட்டு (1 கொ. 14:16 ஒத்துப் பார்க்கவும்), துதி (எபே. 5:19; ரோ. 15:9), வேதபாடம்—பழைய ஏற்பாட்டின் 'செப்துவஜிந்த்' என்ற கிரேக்க மொழிபெயர்ப்பிலிருந்து பாடம் வாசிக்கப்பட்டது—அதன் பின் இவ்வேதப் பகுதிக்கும் இயேசுவின் திருப்பணி, வாழ்க்கை ஆகியவற்றிற்கும் உள்ள தொடர்பு பற்றி விளக்கவுரை ஒன்று தரப்பட்டது. இந்த விளக்கவுரையைப் பவுல் பொழுது விடியும்வரை பேசினார். மேல் அறையின் ஜன்னலில் உட்கார்ந்தபடி தூக்க மயக்கத்தில் கேட்டுக்கொண்டிருந்த ஐத்திகு விழுந்ததில் வியப்பில்லைதான். அவர் விழுந்தவுடன் பவுல் ஓடிச்சென்று அவர் மயக்கத்தைத் தெளிவித்து அவருக்கு உயிரூட்டினார்.



ஐத்திகு தூங்கிவிட்டார்!

### பவுல் தொடர்ந்து பயணம் செய்கிறார்

அடுத்தபடியாகப் பவுல் தன்னந்தனியாக சுமார் இருபது கிலோ மீட்டர் நடந்து அஸ்ஸோ பட்டினம் வந்து சேர்ந்தார். ஒருவேளை எருசலேமுக்கு உடனே திரும்புவது குறித்து யோசித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வந்திருக்கலாம். ஏற்கெனவே அவரைக் கொலை செய்ய திட்டமான சூழ்ச்சி ஒன்று செய்யப்பட்டிருந்தது. ஆகையால், எருசலேமை நெருங்க நெருங்க ஆபத்தும் நெருங்கி வருகிறது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். முன்னதாகவே கப்பலில் சென்றிருந்த நண்பர்களைக் கண்டுபிடித்து அவர்களோடு பவுல் சேர்ந்துகொண்டார். நீலக் கடலைப் பார்த்தபடி, உயர்ந்த மலையொன்றின் மேல் அழகாக நின்றது அஸ்ஸோ பட்டினம். இந்தப் பட்டினத்தின் பாழான இடங்களைப் பார்க்கும்போது பவுலின் காலத்தில் அங்கு அத்தீனாளின் ஆலயம் ஒன்றும், அகோரா என்னும் அழகான சந்தையும், உரோமர்களால் அமைக்கப்பட்ட குளிக்கும் பொது இடமும் இருந்ததாகத் தெரிய வருகிறது. பகல் நேரங்களில் காற்று பலமாக அடித்தது. இரவில் அது குறையத் தொடங்

கியது. எனவே, அக்காற்றைப் பயன்படுத்தி எல்லாரும் மித்திலேனே பட்டினத்திற்குக் கப்பலில் சென்றூர்கள். அங்கிருந்து கீயு, சாமு என்ற தீவுகளுக்குச் சென்றனர். வழியில் துரோகில்லியோன் என்ற இடத்தில் சற்று தங்கியிருக்கலாம். அங்கிருந்து மிலேத்து பட்டினம் வந்தனர். பெந்தெகொஸ்தே பண்டிகைக்காக விரைவில் எருசலேம்போய்ச் சேரவேண்டுமென்றெண்ணி, பவுல் எபேசு வழியாகச் செல்லாமல் பயணத்தைத் தொடர இருந்தார். சில மாதங்களுக்கு முன்புதான் அவர் எபேசுவிலிருந்து அவசரமாக வெளியேறியிருக்கிறூர். ஆகையால் இவ்வளவு சீக்கிரமாகத் திரும்பவும் அங்கு சென்று புதிய குழப்பங்கள் ஏற்படக் காரணமாயிருக்க அவர் விரும்பாமலுமிருந்திருக்கலாம். அங்குள்ள நண்பர்கள் பவுல் தங்களேப் பார்க்க விரும்பாமல் செல்லுகிறூரே என்று எண்ணிவிடக்கூடாது என்று நினேத்து, சபையிலுள்ள பெரியவர்களுக்குச் சொல்லி அனுப்பினூர். அவர்கள் நாற்பது கிலோ மீட்டர் தூரம் மலேகள் நிரம்பிய கரைவழியாகப் பயணம் செய்து, ஓரிடத்தில் ஆழ்கடலேக் கடந்து வரவேண்டியதிருந்ததால் பவுல் மூன்று நான்கு நாட்கள் மெலித்தாவில் தங்கியிருக்க வேண்டியதாயிற்று. மாலுமிகள் பயணத்திற்கென்று கப்பலே ஆயத்தம் செய்து கொண்டிருந்த சமயத்தில் எபேசு சபையிலிருந்து வந்த அன்பர்கள் கடற்கரையின் மணற்பரப்பில் உட்கார்ந்து பவுலோடு உரையாடி மகிழ்ந்தார்கள்.

அவர்களே விட்டுப் புறப்படும் சமயம் பவுல் பிரிவுரை ஆற்றினூர். தம் சொந்த அனுபவங்களே எடுத்துச்சொல்லி, சபைகளுக்குள் இருக்கும் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், விழிப்போடும் நல்ல மனச் சான்றேடும் திருப்பணியைச் செய்து வரும்படி அவர்களுக்கு அறிவுரை கொடுத்து அனுப்பினூர் (அப். 20:30; 1 தீமோ. 1:3—7). அப். 20:35ல் கூறப்பட்டுள்ளது நற்செய்தி நூல்களில் எழுதப்படாத ஒன்று. நற்செய்தி நூல்கள் அப்போது எழுதப்படவில்லே என்பதை நாம் நினேவில் கொள்ளவேண்டும். இந்த வாக்கியம் பலருக்கு நன்கு தெரிந்த ஒன்ருக இருப்பதால் நற்செய்தி நூல்களிலிருந்து அது எடுக்கப்பட்டிருக்கிறது என்பார்கள். பவுல் இதனேப் பயன்படுத்துவதிலிருந்து இயேசுவின் கூற்றுக்களே சபைகளில் அக்காலத்திலேயே மக்கள் பயன்படுத்திவந்தனர் என்று தெரிய வருகிறது. கடற்கரையில் அமர்ந்து, பவுல் அவர்களோடு பேசிக்கொண்டிருந்த இடத்திற்கு அருகே அப்பொல்லோ தெய்வத்தின் ஆலயம் ஒன்று இருந்தது. அதற்குச் சிறிது தூரத்தில் பிரமாண்டமான உரோம நாடக அரங்கம் ஒன்றும் இருந்தது. அவ்வரங்கத்தில் 'யூதர்களுக்கும் கடவுளுக்கு பயந்தவர்களுக்கும்' என்று தனியிடம் ஒதுக்கப்பட்டிருந்தது. சோகம் நிரம்பிய உள்ளத்தோடு எபேசு பட்டின நண்பர்களிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டார் பவுல். ஆக்கிலாவும், பிரிஸ்கில்லாளும் நிச்சயமாக அங்கிருந்திருக்க வேண்டும். அவர்களுள் எவரும் அவர் முகத்தை இனி மீண்டும் காணப் போவதில்லே என்று அவர் பேசிய வார்த்தைகள் அவர்களேத் துக்கக் கடலில் ஆழ்த்தின. பாரமான உள்ளத்தோடு 'புனிதப் பாதை' என்று அழைக்கப்பட்ட பாதை வழியாக அவரோடு கடற்கரைவரை நடந்து சென்று, தங்கள் அன்புப் பேச்சாளரைக் கப்பல் எடுத்துக்கொண்டு செல்வதைப் பார்த்தபடி நின்றுகொண்டேயிருந்தார்கள். கப்பல் புறப்படவும் பவுல் கைகளேத் தூக்கி அவர்களே நிச்சயம் ஆசீர்வதித்திருப்பார். கப்பல் மறையும்வரை அக்காட்சியைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்திருப்பார்கள்.

### விரைவாகத் திரும்பினூர்கள்

கப்பல் கோஸ், ரோது ஆகிய தீவுகளேக் கடந்து, விரைவாகச் சென்றது. 35 மீட்டர் உயரங் கொண்ட பிரமாண்டமான கொலோசஸ் (அப்பொல்லோ) எனப்படும் வெண்கலச் சிலே ஒரு காலத்தில் ரோதுவில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தது. உலக அதிசயங்கள் ஏழில் ஒன்றென நின்ற இச்சிலே இப்போது துறைமுக நுழைவாயிலில் நொறுங்கிக் கிடந்தது. கி.மு. 224ம் ஆண்டிலேயே ஏற்பட்ட பயங்கர நில நடுக்கத்தால் அது விழுந்து நொறுங்கிற்று. தொள்ளாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு சராசியர்களுக்கு வெறும் உலோகக் கிரயத்திற்கு அது விற்கப்பட்டது.

மூன்றும் தூதுப் பயணத்தை முடித்து அவர்கள் திரும்பிய பாதையை நிலப்படத்தில் நன்கு கவனித்தீர்களானூல், கடற்கரையை ஒட்டியே பயணம் செய்தார்கள் என்பது உங்களுக்குப் புலப்படும். இதிலிருந்து அவர்கள் பயணம் செய்த கப்பல் ஆழமான கடலில் செல்வதற்கேற்ற பெரிய கப்பல் அல்லவென்றும், கரையோரமாகவே செல்லக்கூடிய சிறிய படகே என்றும் கண்டுகொள்ளலாம். பத்தாரா என்ற இடத்தில் அவர்கள் பெரிய வணிகக் கப்பல் ஒன்றில் ஏறி, மத்திய தரைக் கடலின் கிழக்குப் பகுதியைக் கடந்து, சீப்புரு தீவின் தென்மேற்கு முனேவழியாக பெனிக்கேயா நாட்டை நோக்கி வந்து,



எபேசுவிலிருந்து மெலித்தா வரை வந்த சபைப் பெரியவர்களுடன் பவுல் ஜெபித்தல்

இறுதியாகத் தீரு பட்டினத்தை அடைந்தார்கள். கப்பல் சரக்குகளை இறக்கி முடிக்க ஏழு நாளாயிற்று. இங்கிருந்த பவுலின் நண்பர்கள் அவர் எருசலேமுக்குப் போனால் ஆபத்து வரும் என்று சொல்லி அவரைத் தடுத்து நிறுத்த முயன்றார்கள். எவ்வளவோ சொல்லிப் பார்த்துக் கெஞ்சியபோதிலும் பவுல் லூக்காவோடும் மற்றும் நண்பர்களோடும் தம் பயணத்தைத் தொடர்ந்தார். கப்பல் பித்தொலெமாய் (அக்ரே) என்ற ஊர்க்கரை வந்து சேர்ந்தது. இங்கு இறங்கி, மறுநாள் ஐம்பது கிலோ மீட்டர் நடந்து, செசரியா வந்து சேர்ந்தனர். உரோமர்களின் ஆட்சியில் பலஸ்தீனவுக்கு இது அரசியல் தலை நகராக சிறந்து விளங்கிற்று. இங்கு உரோம ஆட்சியாளர்கள் தங்கியிருந்தனர். அகுஸ்து பேரரசரைப் பெருமைப்படுத்த எண்ணி இப் பட்டினத்தை பெரிய ஏரோது கட்டி முடித்தார். இங்கு சிறப்பான துறைமுகம் ஒன்றிருந்தது. நகரின் எல்லாப் பாகங்களுக்கும் எளிதாகச் செல்ல உதவும் வண்ணம் நேர்த்தியான வீதிகளும் சுரங்கப்பாதைகளும் அமைந்திருந்தன. அங்கிருந்த பளிங்குக் கோவில்களும் கம்பீரமான அரண்மனைகளும்,




பெனிக்கேய வணிகக் கப்பல் கல்லறைக்
கல்லின் மேல் செதுக்கப்பட்டிருக்கிறது

கைகளையும் கால்களையும் கட்டி, எருசலேமில் பவுலின் கைகளையும் கால்களையும் இப்படிக் கட்டப்போகிறார்கள் என்று சொன்னார் (எரே. 13:1–11 வசனங்களோடு ஒத்துப் பார்க்கவும்). ஆனால், பவுலோ எருசலேமுக்குச் சென்று சாகவும் துணிந்திருந்தார். அவருடைய ஆண்டவர் இயேசுவும் 'எருசலேமுக்குப் போகத் தம் முகத்தை' திருப்பவில்லையா? அதேபோல் அவருடைய தொண்டர் இவரும் அங்கு செல்லத் துணிந்தார் (ரோ. 15:25–32). எனவே, அவருடைய நண்பர்கள் தங்களையும் எருசலேமிலுள்ள நண்பர்களின் துயர் நீக்கத் திரட்டப்பட்ட பணம், நகைகள் அடங்கிய பெரிய பெட்டியையும் ஏற்றிச் செல்ல குதிரைகளையும், கழுதைகளையும் சேணங்கட்டி, பிரயாணத்திற்கான ஆயத்தங்களைச் செய்தனர். எருசலேம் மாநகர் நோக்கிப் பயணம் தொடங்கிற்று. பெந்தெகொஸ்தே பண்டிகை கொண்டாட அவர்கள் எருசலேமில் இருக்கவேண்டும். அதற்கு இன்னும் இரண்டு நாட்களே இருந்தன. நடந்து சென்றால் போய்ச் சேரமுடியாது. ஆதியில்

செல்வச் செழிப்பிலும் ஆடம்பர வாழ்க்கையிலும் மக்கள் வாழ்ந்து வந்ததைக் காட்டின

'ஓடியன்' என்ற விளையாட்டு அரங்கொன்று குன்றில் வெட்டி அமைக்கப்பட்டிருந்தது. இருபதினாயிரம் மக்கள் ஒரே நேரத்தில் அதில் அமர்ந்து காட்சிகளைக் கண்டு களிக்கலாம். கடல் நீரை உள்ளே கொண்டுவந்து கடற் சண்டைகளையும், நீச்சல் பந்தயங்களையும், மற்றும் அரிதான காட்சிகளையும் அங்கு காண்பிப்பார்கள்.

இங்கும் கிறிஸ்தவர்கள் சபை ஒன்று இருந்தது. கொர்நேலியுவுக்கு பேதுரு திருமுழுக்கு அளித்த இடம் இது. நற்செய்தியாளர் பிலிப்புவின் சொந்த ஊர். இப்போது பவுல் பிலிப்புவின் வீட்டில்தான் தங்கியிருந்தார். செசரியாவில் தங்கியிருந்தபோது, அகபு என்ற யூதேயா நாட்டுத் தீர்க்கரைச் சந்தித்திருந்தார்கள். எருசலேமுக்குப் பவுல் சென்றால் அவருக்கு ஆபத்து உண்டாகும் என்று இவர் எச்சரிக்கை கொடுத்தார். பழைய ஏற்பாட்டுத் தீர்க்கர்கள் செய்து வந்த வண்ணமாக, நடக்கப் போவதை மக்கள் பார்க்கும்படி நடித்துக் காட்டினர். பவுலின் கச்சையை எடுத்து தம் இரு



அப்பொல்லோவின் 35 மீட்டர் உயரமான
வெண்கலச் சிலை

சபை துன்புறுத்தப்பட்டபோது சபையில் இருந்த மினுசோன் என்ற 'ஆதிகாலச் சீடர்' ஒருவர் அவர்களோடு சென்றார். இவர் ஒரு கிரேக்க யூதர். எருசலேமில் தங்கியிருந்த நாட்களில் பவுல் இவருடைய விருந்தினராக இருந்திருக்கலாம் அல்லது பவுல் தம்முடைய சகோதரியின் வீட்டில் தங்கியிருக்கலாம் (அப். 23:16).

## விளக்கப் பயிற்சி

1. ஆக்கிலாவுக்கும் அப்பொல்லோவுக்கும் இடையே நிகழ்ந்திருக்கக்கூடிய உரையாடலை நடித்துப் பாருங்கள் (1 கொ. 3:5; 16:12; 1:10—4:21 வசனங்களைப் படியுங்கள். 2 கொ. 10:7 வசனத்தோடு ஒத்துப் பார்க்கவும்).

2. 'எபேசுவில் மூட்டப்பட்ட பெரு நெருப்பு' என்பதை தினசரி பத்திரிகை ஒன்றுக்கான செய்தியாகத் தயாரியுங்கள்.

3. தியானுள் சில ஊர்வலத்தைப்பற்றி வானொலி நேர்முக வருணனை கொடுங்கள் அல்லது அங்கு சென்றிருந்த ஒருவர் வருணிப்பதுபோல் வருணித்துக் கூறுங்கள்.

4. ஊர்வலத்தின் ஒரு பாகத்தை அல்லது விளையாட்டரங்கில் கூடியிருந்த கூட்டத்தைப் படம் வரைந்து காண்பியுங்கள்.

5. 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தை குழுப்பாடமாக ஒப்புவிக்க மனப்பாடம் செய்துகொள்ளுங்கள்.

6. காலை ஆராதனைக் கூட்டத்தில் அப். 19:20–41 வசனங்களை நாடகமாக வாசித்துக் காட்ட ஆயத்தம் செய்யுங்கள்.

7. பவுலாகக் கற்பனை செய்துகொண்டு அஸ்ஸோ பட்டினத்திற்குத் தனியாக நடந்து செல்லும்போது அவர் சிந்தித்தவைகளை நீங்களும் சிந்தித்து வெளிப்படுத்துங்கள்.

8. மூன்றும் தூதுப் பயணத்தைத் தொடர் சித்திரமாக வரைந்து விளக்குங்கள் அல்லது அதை விளக்க மாதிரி ஒன்று செய்யுங்கள்.

9. எபேசு சபைப் பெரியவர்களாகக் கற்பனை செய்துகொண்டு, மிலேத்துவிலிருந்து திரும்பிய பின் அங்கு நடந்தவற்றை உங்கள் சபையில் உள்ள மற்றவர்களுக்குச் சொல்லுங்கள்.

10. செசரியாவைப்பற்றி எல்லா விவரங்களையும் தெரிந்துகொண்டு விளக்கப் படங்களோடு உரையாற்றுங்கள்.

11. அகபு, தெமேத்திரியு, யாசோன், ஐத்திகு என்பவர்கள் யார்?

12. எபேசியர் 6:10–18 வசனங்களை மனப்பாடம் செய்யுங்கள். அல்லது இவற்றை விளக்கும் வகையில் உரோமப் போர் வீரர் படம் ஒன்று தீட்டுங்கள்.

* * * *

அத்தியாயம் 11

# எருசலேமில் பவுல்

*(21:17—23:35)*

பெரிய பண்டிகைகளுக்கு வழக்கமாய்க் கூடும் ஆன்மீகப் பயணிகள் கூட்டம் எருசலேமை நிறைத்துவிட்டது. உரோமப் பேரரசில் உள்ள எல்லா நாடுகளிலிருந்தும் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு ஆயிரக் கணக்கில் மக்கள் வந்து கூடிவிட்டனர். இவர்களில் சிலர் தூதுப் பயணத்தின்போது பவுல் சென்ற இடங்களிலிருந்து வந்தவர்கள். அவ்விடங்களில் காய்மை உணர்ச்சி மேலிட சில யூதர் அவரைத் தடுத்து நிறுத்தி தொல்லையும் கொடுத்தார்கள். பிசிதியாவைச் சேர்ந்த அந்தியோகியா, இக்கோனியா, அத்தேனே, கொரிந்து இப்படி எத்தனையோ இடங்களிலிருந்து மக்கள் வந்திருந்தனர். இவர்களிலும் சிலர் பவுலுக்குத் துன்பம் விளைவிப்பதற்காகவே அவர் சென்ற இடங்களுக்கெல்லாம் சென்றவர்கள். புறவினத்தாரைக் கிறிஸ்தவ சமயத்தில் சேர்த்ததால் அவரை இப்படி வெறுத்தார்கள். அவர்கள் கண்களில் பவுல் தமது சொந்த யூதசமயத்திற்கே ஒரு மாபெருந் துரோகியாகக் காணப்பட்டார்.

## புற இனத்தவர் கூடத்தில்

பவுல் வந்தவுடன் முதலில் அவரை வரவேற்று, கடவுளுக்குத் துதிசெலுத்தினர்கள். இப்போது யாக்கோபின் தலைமையில் இயங்கி வந்த எருசலேம் சபையைப் பவுல் சந்தித்தார். பழைய சீடர்களுக்கு என்ன நேரிட்டது என்று தெரியவில்லை. அவர்கள் ஒருவேளை உரோமப் பேரரசு எங்கும், அதற்கு அப்பாலும்கூட, சிதறடிக்கப்பட்டு இயேசுவின் நற்செய்தியை மக்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்திருப்பார்கள். எடுத்துக்காட்டாக, தோமா இந்தியாவுக்கு வந்தார் என்றும், பேதுரு உரோமில் இருந்தார் என்றும், பின்னர் மாற்கு அலெக்சாந்திரியாவுக்குச் சென்றார் என்றும் நம்பப்படுகிறது. பவுல் தாம் கொண்டுவந்த உதவிப் பணத்தையும் பொருட்களையும் கொடுத்துவிட்டு, தம்முடைய கடினமான பயண அனுபவங்களை அவர்களுக்கு விளக்கிச் சொன்னார். சபையின் நல்ல வளர்ச்சிபற்றிக் கேட்டு, மகிழ்ச்சிகொள்வதற்குப் பதிலாக அவர்கள் பவுல் சொன்னவைகளில் அக்கறைகாட்டாமல் அவர்மேல் வெறுப்பு காட்டத் தொடங்கினார்கள். பவுல் தன்னிச்சையாகக் காரியங்களைச் செய்ததையும் அவர் கையாண்ட முறைகளையும்எருசலேம் யூதக் கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இப்பொழுது எருசலேமில் இருப்பதால் அவர் ஒரு நல்ல யூதரைப் போல் தேவாலயச் சடங்குகள், பலிகள் ஆகியவற்றில் கட்டாயம் கலந்துகொள்ளவேண்டியதாயிற்று. பொருத்தனைபண்ணிக்கொண்டிருந்த நால்வரின் பலிச் செலவுகளை ஆலயத்திலுள்ள பொக்கிஷத்தில் சேர்த்துவிடுவதால் இதை வெளிப்படையாகச் செய்வது நல்லது என்று முடிவு செய்தனர். (இப்போது பவுலிடம் நல்ல பணப்புழக்கம் இருந்தது என்று தெரிகிறது. எங்கிருந்து இப்பணம் அவருக்குக் கிடைத்தது? அவரால் பின்னர் வாடகைக்கு ஒரு வீட்டைக்கூட அமர்த்திக்கொள்ள முடிந்தது. முன்பு தம் அன்றாட வாழ்க்கைச் செலவுக்கு அவர் கூடாரத்துணி நெய்து வந்ததாகப் பார்த்தோம்.)

எல்லோரும் காணும்படியாகப் பொருத்தனையை நிறைவேற்றுவதற்கு அவர் ஒத்துக்கொண்டு தம் தலையையும் மொட்டை அடித்துக்கொண்டார். தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் தேவாலயத்துக்குச் சென்றார். இறுதி நாளில் எபேசுவிலிருந்து வந்திருந்த ஆசியப் பகைவர்கள் சிலர் அவரை அடையாளம் கண்டுகொண்டனர். அவரும் அவரது புறவின நண்பர் துரோப்பீமுவும் புற இனத்தார் கூடத்தில் இருந்தார்கள். தேவாலயத்தில் இந்த இடத்தில் மட்டுமே புற இனத்தவர் அனுமதிக்கப்பட்டார்கள் (அத்தியாயம் 3, பக்கம் 18 பார்க்கவும்). அடுத்த கூடம் செல்லும் வாசல் முழுமையும் பளிங்குத் தடுப்புச் சுவரொன்று எழுப்பப்பட்டிருந்தது.




தாம் கொண்டுவந்த நன்கொடைப் பொருட்களைப் பவுல் அளித்தல்

அச்சுவரின்மேல் 'புற இனத்தவர் இந்த இடத்தைவிட்டு யூதர்கள் இருக்கும் இடத் திற்கு வந்தால் அவர்கள் உயிரை இழக்க நேரிடும்' என்று எழுதப்பட்டிருந்தது (புத்த கம் 3 பக்கம் 31). ஆத்திரம்கொண்டிருந்த எபேசியர்கள் புறவினத்தாருக்கான எச்ச ரிக்கை எழுதப்பட்டிருந்த இடத்துக்கு அப்பால் பவுல் துரோப்பீமுவை அழைத்துக் கொண்டு சென்றதால், அவர்களுக்கான தடையை மீறிவிட்டார் என்று முடிவுகட்டி விட்டார்கள். தேவாலயத்திற்கும், திருச் சட்டத்துக்கும், மோசேக்கும் எதிராகப் பவுல் முன்னரே பேசித் திரிந்தார் என்றும், இன்று கூட வேண்டுமென்றே தேவாலயத்தைத் தீட்டுப்படுத்திவிட்டார் என்றும் கூச்சலிட் டார்கள் (அப். 24:6ஐ ஒப்புநோக்கவும்).

தேவாலயத்தின் கூடங்களைக் கடந்து அலங்கார வாயிலுக்கு அப்பால் பவுலை இழுத்துச் சென்றுவிட்டார்கள். யூத சட்டத்தை மீறிவிட்டதால் அவரை நகரத் தின் சுவர்களுக்கு அப்பால் கொண்டுபோய்க் கல்லெறிந்து கொன்றுவிடவேண்டும் என்பதே அவருடைய எதிரிகளின் நோக்கம். தேவாலயத்திற்கு எதிரேயுள்ள அந்தோனி யாக்கோட்டையில் இருந்த உரோமப் பெரும் படை தக்க சமயத்தில் தலையிட்டு இவர்களின் கொலை வெறியிலிருந்து பவுலைக் காப்பாற்றி யது. பண்டிகை சமயங்களில் இப்படிப்பட்ட குழப்பங்கள் ஏற்படுகின்றனவா என்று எப் போதுமே இப்படை கவனித்துக்கொண்டே யிருக்கும். அவ்வப்போது கிளர்ச்சிகளும் புரட்சிகளும் நடந்துள்ளன. கி.பி. 7ம்

ஆண்டில் கலிலேயாவில் யூதாஸ் என்பவனின் தலைமையில் அப்படி ஒரு கிளர்ச்சி நடந்தது. அடுத்து அவனுடைய இரண்டு மகன்கள் அப்படிப்பட்ட இன்னொரு கிளர்ச்சியைத் தொடங்கினார்கள். தெயூதாஸ் தன்னை மேசியாவாக எண்ணி, புரட்சியொன்றைத் தொடங்க தன்னுடன் சிலரைக் கூட்டிக் கொண்டு யோர்தான் ஆற்றை நோக்கிச் சென்றான். மோசே செங்கடலைக் கடக்க இஸ்ரவேல் மக்களைக் கூட்டிக்கொண்டு சென்றதுபோல் அவன் யோர்தானைக் கடக்க எண்ணினான். இப்புரட்சி கி.பி. 44ல் நடைபெற்றது. ஆனால் லூக்காவின் கணக்கின்படி (அப். 5:36) இது 29 அல்லது 30ல் நடந்திருக்கலாம். செலோத்தர்களுக்கும், சமாரியர்களுக்கும் அடிக்கடி சண்டை நடப்பதுண்டு. செலோத்தர்களில் ஒரு பிரிவினருக்கு 'சிக்காரிகள்' என்றும், 'கத்திவீரர்கள்' என்றும், 'கொலைகாரர்கள்' என்றும் பல பெயர்கள் உண்டு. உரோம ஆட்சியை




எருசலேம் தேவாலயத்தின் கட்டிட உருவரை படம்


எப்படியும் ஒழிக்கவேண்டும் என்று இவர்கள் ஆர்வங்கொண்டிருந்தனர். பவுல் தொடர்பான இந்த நிகழ்ச்சி நடப்பதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு எகிப்தியன் ஒருவன் தன்னுடைய ஆட்களைச் சேர்த்துக்கொண்டு ஒலிவமலைக்குப் போனான். எரிகோவின் மதில்கள் அன்றொருநாள் விழுந்து அழிந்ததுபோல் எருசலேம் பட்டணத்தின் மதிற்சுவர்களும் விழும் என்றும், அப்படி விழுந்தவுடன் தாங்கள் எருசலேமைக் கொள்ளையிடலாம் என்றும் தன்னோடு இருந்தவர்களுக்கு உறுதி கூறினான். இவர்களை உரோமப் போர் வீரர்கள் துரத்தி அடித்தனர். அவர்களில் நானூறு பேர் கொல்லப்பட்டனர். இருநூறு பேர் பிடிக்கப்பட்டனர். அந்த எகிப்தியத் தலைவன் மட்டும் தப்பி ஓடிவிட்டான். பவுலைப் பிடித்திழுத்துக்கொண்டு வந்தபோது கடைசியில் அந்த எகிப்தியனைப் பிடித்துவிட்டார்கள் எனக் கிலவுதியு லீசியா என்ற உரோமத் தளபதி நினைத்தார்! (அப். 21:38). லீசியா என்பவர் ஒரு சிலியார்க் அதாவது 600 வீரர்கள்கொண்ட 'கோஹாட்' படைத் தலைவர் (பத்து 'கோஹாட்டுகள்' சேர்ந்தால் ஒரு லேகியோன் எனப்படும்). இவர் படைத்தலைவர் வேலையோடு நீதி விசாரணையும் செய்வார். ஆகவே, இவர் டிரிபியூன் அல்லது இராணுவ ஆளுநராக இருந்து வந்தார். தம்மோடு பவுல் கிரேக்க மொழியில் பேசியது இவருக்கு மிகவும் வியப்பைத் தந்தது.

பவுலுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அவரைச் சங்கிலியால் கட்டியிருந்தார்கள். அப்படியே கூட்டத்தினரிடம் தாம் பேச விரும்புவதாகப் பவுல் சொன்னார். எப்படியாவது குழப்பம் அடங்கினால் போதும் என்று லீசியா நினைத்தார். பவுல் எதற்கும் அஞ்சாதவர் என்றும், நன்கு படித்தவர் என்றும் அறிந்திருந்தபடியால் அவரைப் பேச அனுமதித்தார். பவுல் அவர்களுக்குத் தெரிந்த எபிரேய மொழியில் சற்று நேரம் உரை நிகழ்த்தினர் (அவர் அரமிய மொழியிலும் பேசியிருக்கலாம்). அவர் பேச்சு அவர்கள் கவனத்தைக் கவர்ந்தது. அவர் மதப் பித்துபிடித்த யூதராக நசரேய சமயத்தாரைக் கொடுமைப்படுத்த தமஸ்குவின் பாதையில் விரைந்தபோது எங்ஙனம் மனம் மாறினர் என்பதை அவர்களுக்கு எடுத்துரைத்தார். தொலைவிலுள்ள புற இனத்தவரிடம் செல்லுவதற்கென்று இயேசு தம்மை அனுப்பியிருக்கிறார் என்று சொல்லும்வரை கவனித்துக் கேட்டார்கள். புறவின மக்களை யூதர்களுக்கு இணையாக்கி அவர் பேசத் துணியவும் அவர்கள் ஆத்திரமடைந்தார்கள். 'இவன் ஒழியவேண்டும், இவன் உயிரோடிருக்கவே கூடாது' என்று கத்தினார்கள். இவர்களில் சிலருடைய பிதாக்கள், 'இவனைச் சிலுவையிலறையுங்கள்' என்று ஆண்டவரைக் குறித்துக் கத்தினவர்கள். அவர்கள் பிள்ளைகள்தானே இவர்கள்! லீசியா பவுலை மேலே தள்ளி பாதுகாப்பாகக் கோட்டைக்குள் கொண்டுபோகச் செய்தார்.

பவுலின் பேச்சால் உண்டாகக்கூடிய விளைவுகள்பற்றி லீசியா கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். பவுலைத்தமது குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்ய, விசாரணைசெய்யாமல், வழக்கப்படி ஆடைகளை நீக்கிவிட்டு வாரால் அடிக்க ஆணை பிறப்பித்தார். இச்சமயத்தில் பவுல் தம்முடைய உரோமக் குடியுரிமையை நிலைநாட்டிப் பேசினர்; அப்போது அனுவசியமாகத் தண்டனையை ஏற்றுக் கொள்வதில் அர்த்தமில்லை. லீசியாவுக்கும் பவுலுக்கும் உள்ள 'குடி உரிமைகள்' வேறு பட்டவை என்பதைக் கவனியுங்கள். லீசியா அதை விலைகொடுத்து வாங்கியிருந்தார். எனவேதான் அவர் 'கிலவுதியு' என்று தம்முடையபேரரசர் பெயரைப் பெற்றிருந்தார்; பவுல் 'குடிஉரிமை'யோடு பிறந்தவர். லீசியா இதில் தம் பொறுப்பைக் குறித்து மிகவும் கவலைப்பட்டார். உரோமக் குடியுரிமை பெற்ற ஒருவரை தண்டித்துவிட்டதான பெரிய தவறு நடந்துவிடாதபடி சரியான நேரத்தில் தாம் தடுத்து நிறுத்தப்பட்டதை நினைத்து நிம்மதி அடைந்தார். பவுலின் விலங்குகள் அகற்றப்பட்டன.

### பவுலும் சனகரீம் பேரவையினரும்

மறுநாள் யூதர்களின் பேரவையான சனகரீம் அவையினரைப் பவுல் சந்தித்தார். இந்தச் சந்திப்பினுல் தமது பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும் என்று லீசியா நம்பியிருந்தார். பேரவைக்குப் பவுல் புதியவரல்ல. முன்பு கமாலியேலின் மாணவராக இருந்திருக்கிறார். பிடிவாதப் போக்குடைய பழைய மாணவரைப் பார்த்து கமாலியேல் ஒருகணம் திகைத்துப்போயிருக்கக் கூடும். அவையினர் அனைவரும் அவருக்கு எதிராகத் தூண்டப்பட்டிருந்தனர். முப்பது ஆண்டுகளுக்குமுன் இயேசுவைக் குற்றவாளியாகத் தீர்த்த அந்தப் பேரவையினரைப் போன்றவர்களே இவர்கள். பவுலை முகத்தில் அறையும்படி குருக்கள் தலைவரான அனனியாவே தம்மை மறந்து ஆணையிட்டார். அதற்குக் காரணம் பவுல் அவரைப் பார்த்து, 'வெள்ளையடிக்கப்பட்ட சுவரே' என்று கூறியிருந்தார். இக்கூற்று நமக்கு இயேசுவின் வார்த்தை



புற இனத்தவர் கூடத்திலிருந்து அந்தோனியாக் கோட்டைக்குச் செல்லும் படிகள்

களை நினைவுபடுத்துகின்றது (மத். 23:27). கொஞ்ச நாட்களில் அனனியா செலோத்தர்களால் கொலைசெய்யப்பட விருக்கிறார். பவுல் வெகு திறமையாகப் பேரவையினர் எழுபது பேரிடத்தும் பிரிவினையை உண்டாக்கி, அவர்கள் கவனத்தைத் தம்மைவிட்டு திசை திருப்பிவிட்டார். ஒரு பரிசேயராக யூத நம்பிக்கைகளில் தமக்கு உறுதியான பற்று

உண்டென்பதை வெளியிட்டு, இறந்தவர் உயிர்பெற்று எழுவதில் தமக்கிருந்த நம்பிக்கை காரணமாகவே தாம் அங்கு இழுத்து வரப்பட்டதாகக் கூறினர். உடனே சதுசேயரும், பரிசேயரும் உயிர்த்தெழுதலைப் பற்றியும், தேவதூதர்களைப்பற்றியும் சர்ச்சை செய்து சண்டைபிடித்துக்கொள்ளத் தொடங்கினர். அதனல் பேரிரைச்சல் உண்டாயிற்று. இப்போது பவுலுக்கு பரிசேயர்களின் ஆதரவு கிடைத்துவிட்டது. அவரிடம் தேவதூதன் பேசியிருந்தால் கடவுளுக்கு எதிராக நாம் நிற்கக்கூடுமோ? என்று பரிசேயர் சதுசேயரைப் பார்த்துக் கேட்டனர். சதுசேயர்கள் அப்படி ஒன்றும் நடந்திருக்காது என்ருர்கள். பவுல் உரோமச் சிறையில் தள்ளப்பட்டார். அன்று இரவு, அவருடைய ஆண்டவர் இயேசு அவர் எருசலேமில் தமக்குச் சாட்சியாய் வாழ்ந்தவண்ணம் இனி உரோமிலும் இருக்கப்போவதாகக் கூறி 'அஞ்சவேண்டாம்' என்று அவருக்குத் தைரியம் சொன்னதாகக் கனவுகண்டார்.


### எருசலேமிலிருந்து பவுல் தப்பிச் சென்ருர்

பவுலினுடைய ஒரு சகோதரி தலைமைக் குருக்கள் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு எருசலேமில் வாழ்ந்து வந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். அவருக்கு ஒரு மகன் இருந்தார். பவுலின் இந்த மருமகன் சிறைச் சாலைக்கு ஓடிவந்து, நாற்பது பேர்கொண்ட ஒரு கூட்டம் பவுலை ஒழித்துக்கட்டத் திட்டமிட்டிருப்பதால் சனகரீம் பேரவைக்கு மீண்டும் பவுல் செல்லவேண்டாம் என்று எச்சரித்தார். உரோமக் கோட்டையில் இருக்கும்போது பவுலை அணுகமுடியாது என்று அந்த யூதர்களுக்குத் தெரியும். எனவே, குருக்களுக்குத் தெரிந்தே திட்டமிட்டு அவர்கள் முழு ஒப்புதலோடு பேரவையில் அவரைக் கொன்றுபோட எண்ணியிருந்தார்கள். இச்செய்தி லீசியாவுக்கும் சொல்லப்பட்டது. இது குறித்து அவர் வேதனைப்பட்டார். அவர் உரோமக் குடிமகனை பவுலைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் சட்டம் ஒழுங்கு இவற்றையும் நிலை நிறுத்தவேண்டியதிருந்தது. எனவே, தலைநகரான செசரியாவுக்குப் பவுலை அனுப்பிவிட முடிவு செய்தார். செசரியாவில் ஆளுநராயிருந்த பேலிக்ஸ் அங்கே பவுலின் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.

தகுந்த பாதுகாப்புடன் பவுலை லீசியா அனுப்பிவைத்தார். நூற்றுவர் தலைவர் இருவருடைய பொறுப்பில் அவர் விடப்பட்டார். அவர்களோடு இருநூறு காலாட்படை வீரர்களும் இருநூறு ஈட்டி வீரர்களும் கொண்ட படை புறப்பட்டது. பவுல் ஏறிச் செல்லக் கோவேறு கழுதைகளும் சென்றன. சாதாரணமாக யாருக்கும் இவ்வளவு பாதுகாப்பு கொடுக்கப்படுவதில்லை. பவுலின் பகைவர்கள் அவர்மேல் பாய்ந்து கொன்றுவிடக் கூடும் என்றதாலும், கொள்ளைக்கூட்டத்தினராலும், திருடர்களாலும் அபாயம் ஏற்படலாம் என்றதாலும் முன்னெச்சரிக்கையாய் இவ்வளவு ஏற்பாடுகள் செய்திருந்தார். இரவு ஒன்பது மணிக்குப் பயணம் தொடங்கிற்று. ஐம்பத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள அந்திப்பத்திரி என்ற ஊரை நோக்கிச் சென்றனர். மலைப்பாதையின் முடிவில் கொலைகாரர், கொள்ளைக்காரர் மறைந்திருக்கக்கூடிய இடங்களையெல்லாம் கடந்து சமவெளியை அடைந்ததும், காலாட்படை வீரர்களும் ஈட்டி வீரர்களும் எருசலேமுக்குத் திரும்பிவிட்டனர். பவுல் கரையை அடைய மீதமுள்ள ஐம்பது கிலோமீட்டர் தொலைவைக் குதிரைவீரர்கள் பொறுப்பில் கடந்தார். பின் விசாரணை நடைபெறும்வரை மற்ருெரு சிறையில் அடைக்கப்பட்டார். பவுலைக் குறித்து லீசியா எழுதி ஆள்வசம் அனுப்பி வைத்திருந்த கடிதத்தைப் படித்துப் பார்த்து அதோடு உண்மையாக நேரிட்ட நிகழ்ச்சிகளை ஒப்பிட்டால் அவர் எவ்வளவு தூரம் தமக்கு அனுகூலமாக விஷயங்களைத் திரித்துக் கூறினர் என்று நமக்குத் தெரிய வருகிறது (அப். 22:22—29; 23:26—30 வசனங்களை ஒப்புநோக்குங்கள்).

பெரிய ஏரோதுவின் அரண்மனையிலிருந்த காவலறையில் பவுல் இரண்டு ஆண்டுகள் வைக்கப்பட்டார். அக்காலத்தில் இவ்வரண்மனை உரோம ஆளுநரின் மாளிகையாக இருந்தது. பவுலின் சொந்த மாநிலமான சிலிசியாவும், சீரியாவுங்கூட பேலிக்சின் இராணுவ மேலதிகாரியின் நிர்வாகத்தில் இருந்தன. எனவே, அவருடைய துணை அதிகாரியான பேலிக்சுக்குப் பவுலை விசாரிக்க அதிகாரமுண்டு. பேலிக்ஸ் உரோமப் பேரரசின் ஒரு மாநிலக் கருவூல அதிகாரி. இவர் பொல்லாதவர், கொடுமைக்காரர் என்று சொல்லப்படுகிறது. இவர் மக்களைச் சிலுவையில் அறைந்து கொன்று, யூதேயாவை அடக்கி ஆண்டுவந்தார். ஆனல், பவுல் யூதராயிருந்தாலும் உரோமக் குடிமகன் என்றதால் வாரால் அடிக்கப்படுவதற்கும் வேறு சித்திரவதைக்கும் ஆளாகவில்லை.

* *




செசரியாவுக்குப் பயணமாதல்



உரோமப் போர்வீரர் பவுலை செசரியாவுக்குக் கூட்டிச் செல்லுதல்

## விளக்கப் பயிற்சி

1. நீங்கள் எருசலேமில் உள்ள யூதக் கிறிஸ்தவர்கள் என்று நினைத்துக்கொண்டு (அ) பவுல் வந்து சேரும் முன். (ஆ) பவுல் வந்து சேர்ந்தபின், அவரது திருப்பணி குறித்து நீங்கள் பேசி செய்யப்பட வேண்டிய காரியங்களைத் திட்டமிடுங்கள்.
2. கிலவுதியு லீசியா பவுலைத் தப்புவித்த விதத்தை நாடகமாக்கி நடியுங்கள்.
3. பவுல்மீது யூதர்கள் சீற்றங்கொள்ள இரண்டு முக்கிய காரணங்கள் எவை?
4. லீசியாவுக்கும், பவுலுக்கும் இருந்த 'குடி உரிமை'யில் என்ன வேற்றுமை இருந்தது?
5. கமாலியேலுக்கும் அவர் முன்னாள் மாணவர் பவுலுக்கும் இடையே நடந்திருக்கக்கூடிய உரையாடல் ஒன்றைத் தயாரியுங்கள்.
6. (அ) அந்திப்பத்திரிக்கும், (ஆ) அங்கிருந்து செசரியாவுக்கும் பவுலும் போர் வீரர்களும் சென்றதை விவரிக்கவும்.
7. இவ்வத்தியாயத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளுக்குத் தொடர் சித்திரம் தயார் செய்யுங்கள்.
8. கிலவுதியு லீசியா பேலிக்சுக்கு அனுப்பிய அறிக்கையில் எங்ஙனம் செய்திகளைத் திரித்துக் கூறியிருந்தார்? ஏன் இவர் இதைச் செய்தார்? இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?
9. 1 கொரிந்தியர் 16:13ம் வசனத்தை அழகான எழுத்தில் எழுதி உங்கள் வகுப்பறையில் மாட்டி வையுங்கள்.

அல்லது

துரோப்பீமு, ஓர் எபேசு நண்பர், நூற்றுவர் தலைவர் ஆகியோரைப் பேட்டி காணுங்கள்.

அத்தியாயம் 12

# பவுலும் உரோம ஆளுநர்களும்

*(24–26)*

பவுல் செசரியா வந்து சேர்ந்து ஐந்து நாட்களுக்குப்பின் உரோம ஆளுநரின் தீர்ப்பு மன்றத்தின் முன்போ அல்லது வழக்கு மன்றத்தின் முன்போ அவர் விசாரிக்கப்படக் கொண்டுவரப்பட்டார். அவர் தங்கள் கைகளிலிருந்து தப்பிவிட்டார் என்ற ஆத்திரத்தோடு பவுலின் பகைவர்கள் குற்றம் சாட்டுவதற்காக எருசலேமிலிருந்து வந்தார்கள். பவுல் தம்மை இகழ்ந்து பேசியதைக் கேட்ட குருக்கள் தலைவர் அனனியாவின் கோபம் இன்னும் அடங்காத நிலையில் இருந்தது. அவரும் அங்கு வந்திருந்தார். பவுலுக்கு எதிராக தெர்த்துல்லு வழக்கை எடுத்துச் சொன்னார். இவர் பேலிக்சின் ஆதரவு பெறுவதற்காகப் பெருமுயற்சி செய்து பார்த்தார் என்று (அப். 24:2) தெரிகிறது; அவர் லீசியாவின்மேல் பழி சுமத்திப் பேசினார்; அவர் மட்டும் தடை செய்யாதிருந்தால் சனகரீம் பேரவையினரே பவுலைக் குறித்து தீர்வு செய்திருக்கக்கூடும் என்றார். மேலும் பவுல் புரட்சிக்காரர், தொல்லை விளைவிப்பவர், நசரேயர்களின் கூட்டத்திற்குத் தலைவர் என்று குற்றஞ் சாட்டினார்; அதுவுமல்லாமல் தேவாலயத்தைத் தீட்டுப் படுத்தி விட்டார் என்று பேசி, இவரால் இனியும் கலகம் மூளுமுன் இவரை ஒழித்துக் கட்டுவது அவசியம் என்றார்.

### பவுலும் பேலிக்சும்

பொந்தியு பிலாத்துவைப்போல் (புத்தகம் 3) உணர்ச்சி வயப்படாமல் நியாயம் விசாரிக்கும் திறமை பேலிக்சுக்கு இருந்தது. தெர்த்துல்லுவின் குற்றச்சாட்டுகளைக் கேட்ட அளவில் லீசியாவைப்பற்றித் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்று இருந்தார். தம்மேல் சாட்டப்பட்ட குற்றங்களுக்கு மறுப்புக்கூற பவுலுக்கு வாய்ப்பளித்தார். பவுல் குற்றங்களை மறுத்ததோடு அப்படி அவர் செய்திருந்தால்கூட அவர்களால் அவற்றை நிரூபிக்கமுடியாது என்றார். தம்மேல் பொய்யாய்க் குற்றம்சாட்டின அந்த எபேசுப்பொய்யர்கள் எங்கே என்று கேட்டு, தாம் எதற்காக தேவாலயத்திற்குச் சென்றார் என்றும், லீசியா எவ்விதம் தமக்குப் பாதுகாப்பு கொடுத்தார் என்றும் விளக்கிச் சொன்னார். அவர் செய்த குற்றமெல்லாம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவிலும் அவருடைய உயிர்த்தெழுதலிலும் நம்பிக்கை வைத்ததே; இதைத்தான் சதுசேயர்கள் அவர் செய்த தவறு என்று சொல்லுகிறார்கள் என்றார்.

பவுல்மேல் குற்றம் ஒன்றுமில்லை எனப் பேலிக்சுக்குத் தெரிந்தது. கிலவுதியு லீசியா வந்து இன்னும் சில விவரங்கள் கூறும்வரை தாம் விசாரணையை ஒத்திப் போட்டிருப்பதாகச் சொன்னார். (இதை வெறும் பேச்சுக்காகச் சொன்னார். உண்மையில் லீசியாவை அவர் அழைக்கவில்லை.) பவுலை மறுபடியும் சிறையில் போட்டாலும் அவருக்கு அதிக அளவு சுதந்திரம் கொடுத்திருந்தார். லூக்கா, தீமோத்தேயு, அரிஸ்தர்க்கு, பிலிப்பு போன்ற பல நண்பர்கள் அவரைப்போய் பார்க்க அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். இந்த நாட்களில்தான் லூக்கா தம்முடைய நற்செய்தி நூலுக்கும் நடபடிகள் நூலுக்கும் குறிப்புகளைத் திரட்டியிருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது.

பவுல் சொன்ன விஷயங்களைக் குறித்து பேலிக்ஸ் அதிகம் சிந்தித்தார். வைதிக யூதர்கள் கைக்கொண்டது போன்ற சமயச் சடங்குகளும் விதிகளும் உரோமர்களின் சமய முறைகளில் அதிகமில்லை. ஆனால், அவர்கள் தெய்வங்களில் சிறப்பான அக்கறை காட்டி அவைகளைத் திருப்தி செய்வதில் கவனமாய் இருப்

பார்கள். பவுல் தம்முடைய கடவுளைப்பற்றியும் பேலிக்சுக்கு முன்னால் இருந்த ஆளுநர் ஒருவர் சிலுவையில் அறைந்து கொன்றுவிட்ட இயேசு என்ற ஒரு குற்றவாளியைப்பற்றியும் பேசியதாக எண்ணினார். பேலிக்ஸ் சற்று குழப்பமடைந்தார். முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மகளான துருசில்லாள் என்ற யூதப் பெண்ணை இவர் மணந்திருந்தார். இந்த அகிரிப்பா அரசர்தான் யாக்கோபைக் கொலை செய்தவர். வீண் பெருமையில் தம்மைப்பற்றி அதிகம் நினைத்து அந்த நினைப்பில் இருந்தபோதே அழிக்கப்பட்டவர். (54ம் பக்கம் பார்க்கவும்.) பேலிக்ஸ் பவுலை அழைத்து வரச்சொன்னார். பவுல் வந்து அவருக்கும், துருசில்லாளுக்கும் தம்முடைய நம்பிக்கைகளை எடுத்துச்சொன்னார். துருசில்லாளை பேலிக்ஸ் சரியான முறையில் மணந்து கொள்ளாததால் பவுல் அவருக்கு இன்னொரு திருமுழுக்கனுகக் காணப்பட்டார் திருமுழுக்கன் யோவான் ஏரோதையும் அவர் மனைவி ஏரோதியாளையும் தவறான நடத்தைக்காகக் கடிந்துகொண்டார். பவுல் நியாயத்தீர்ப்பு நாள் பற்றிப் பேசப் பேச பேலிக்சுக்கு தம் கொடுமைகள் ஒவ்வொன்றாக மனக்கண்முன் வந்தது; மனச்சாட்சியும் அவரை வாட்டிற்று. பவுலை உடனே அவர் அனுப்பிவிட்டார். 'சமயம் வாய்க்கும்போது' அல்லது இன்னொரு முறை பவுல் சொல்லுகிறவற்றைக் கேட்பதாகச் சொல்லி பவுலை பேலிக்ஸ் அனுப்புவதை இங்கு நாம் கவனிக்க வேண்டும்.

பேலிக்ஸ் பவுலிடமிருந்து லஞ்சத்தை எதிர்பார்த்தார். பவுல் பணக்காரர், எனவே தமக்குப் பணம் கொடுப்பார் என்று நம்பி அவர் பவுலை அடிக்கடி அழைத்தனுப்பினார். அன்று அவர் ஒரு முடிவுக்கு வரத் தவறிவிட்டதால் பவுலின் அருளுரையில் நம்பிக்கை வைக்கும் வாய்ப்பை அவர் இழந்துபோனார். பேலிக்ஸ் யூதர்களுக்குச் செய்த கொடுமைகளைப்பற்றி விசாரிக்கும்படி சிறிது காலத்திற்குப்பின் நீரோ மன்னர் அவரை உரோமுக்குத் திரும்பி வரச்சொல்லி உத்தரவு போட்டார். செல்வாக்கு மிகுந்த யூதர்களைத் திருப்திப்படுத்த எண்ணி அவர் பவுலைச் சிறையிலேயே விட்டு வைத்திருந்தார்.

## பவுலும் பெஸ்துவும்

ஓராண்டு கழிந்த பின்னரும் பவுல் சங்கிலியால் பிணைக்கப்பட்டு சிறையில் வாடிக் கொண்டிருந்தார். இப்போது பெஸ்து என்ற புதிய ஆளுநர் பவுலை விசாரித்து அவரைப் பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டியதாயிருந்தது. எருசலேமைச் சேர்ந்த யூதர்கள் எருசலேமிலேயே பவுல் புதிதாக விசாரிக்கப்பட வேண்டும் என்று தந்திரமாகக் கேட்டார்கள். புதிய ஆளுநரை ஏமாற்றித் தங்கள் விருப்பத்திற்கு இசைய வைத்துவிடலாம் என்று நினைத்தார்கள். இந்த ஏமாற்று வேலையை பெஸ்து உடனே புரிந்துகொண்டார். மீண்டும் ஒரு விசாரணை வேண்டுமென்றால் அவர்கள் செசரியாவுக்கு வரவேண்டும் என்றார். மன உளைச்சலோடு அவர்கள் சென்றார்கள். பொய்யாகவே குற்றம் சாட்டி ஆத்திரமாக—ஆனால் ஆதாரமில்லாமல் அதை உறுதி செய்யப் பார்த்தார்கள். பவுல் திருச்சட்டத்துக்கு விரோதமாகவும், தேவ ஆலயத்துக்கு எதிராகவும் பேரரசரைப் பகைத்தும்பேசினார் என்றார்கள் (அப். 25:8; 28:19). பெஸ்து ஒருவேளை சலித்துப்போயிருந்திருக்கலாம். ஆனால் யூதர்களைத் திருப்தி செய்வதற்காகப் பவுலிடம் விசாரணைக்கு எருசலேம் செல்ல விருப்பமுண்டா என்று கேட்டார். இதற்கு தாம் சம்மதித்தால் அநேகமாக எருசலேம் போய்ச் சேருமுன்பே வழியில் தாம் கொலை செய்யப்பட்டு விடக்கூடும் என்று அவருக்குத் தெரியும். நியாயம் பெற அவருக்கு உரிமையுண்டு. எனவே வியப்பான வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். இதைப்பற்றி அவர் அதிகமாகச் சிந்தித்து வந்திருக்கவேண்டும். இது அந்தக் கணத்தில் முடிவு செய்த ஒன்றல்ல. சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருந்தாலும் அவர் உரோமுக்குச் சென்று இயேசு அவரிடம் சொல்லியிருந்ததுபோல் அவருக்குச் 'சாட்சியாக' இருக்கவேண்டும். உரோம உரிமையோடு பிறந்த குடிமகன் என்று உரிமை பாராட்டி, 'பேரரசரே எனக்குத் தீர்ப்பளிக்கட்டும்' என்றார். அவர் இனி நீரோவால் உரோமப் பட்டணத்தில் விசாரிக்கப்பட வேண்டும்.

பெஸ்து சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்து விட்டு, 'அப்படியென்றால் நீ பேரரசரிடமே போகவேண்டும்' என்றார். காரியம் தம்முடைய கையை மீறிப் போய்விட்டது என்ற கவலை அவருக்கு ஏற்பட்டது. உரோமுக்கு என்ன பதில் சொல்வதென்று விழித்துக்கொண்டிருந்தார். இப்போது யூதர்களின் கண்கள் கனலைக் கக்கியிருக்க வேண்டும் என்று நாம் உறுதியாகக்கூறலாம். பவுல் அவர்கள் கைக்குத் தப்பிவிட்டார். அவர்களால் இனி ஒன்றும் செய்யமுடியாது.

## இரண்டாம் அகிரிப்பா

பவுலை உரோமாபுரிக்கு அனுப்புவதற்குள் பெஸ்துவுக்கு விருந்தினர் வந்துவிட்டார்

கள். இரண்டாம் அகிரிப்பா அரசரும், அவர் தங்கை பெர்னீக்கேயாளும் புதிய ஆளுநரைப் பார்க்க வந்திருந்தார்கள். இதே அரண்மனையில்தான் அவர்களுடைய தமக்கை துருசில்லாள் முன்பு ஆட்சி நடத்திக்கொண்டிருந்தாள். உரோமப் பேரரசுக்குக் கீழ்ப்பட்டு இந்த இரண்டாம் அகிரிப்பா அரசராய் இருந்தார். இவர் ஒரு யூதர். குருக்கள் தலைவரைத் தெரிந்தெடுக்கும் அதிகாரம் இவருக்கு உண்டு. ஏற்கெனவே இவர் அனனியாவைப் பதவி நீக்கம் செய்துவிட்டிருந்தார். தேவாலய குருக்கள் அகிரிப்பா அரசரை அதிகம் வெறுத்தனர் என்றும், அரண்மனையின் பல கணிகள் வழியாக அகிரிப்பா தேவாலயத்தைப் பார்க்கமுடியாதபடி அவர்கள் ஒரு சுவர் எழுப்பிவிட்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது! இவர் கொலைகாரப் பரம்பரையைச் சேர்ந்தவர். இவர் தந்தை, முதலாம் அகிரிப்பா அரசர் யாக்கோபைக்கொன்றுவிட்டு பேதுருவின் உயிருக்கும் வலை வீசிக் கொண்டிருந்தார். இவர் பாட்டனாரான ஏரோது அந்திப்பா திருமுழுக்கன் யோவானைக் கொலை செய்ததோடு, இயேசுவைப் பார்த்து 'நீ ராஜாவா?' என்று கேலி பேசி முள்முடி சூட்டி இகழ்ந்தவர். இவருடைய முப்பாட்டனாரான பெரிய ஏரோது பெத்லெகேமின் குழந்தைகளைக் கொன்று குவித்த பாவி. இந்தக் கொடுமைகள் யாவும் ஏதேனும் ஒரு வகையில் இயேசுவோடு தொடர்புடையனவாய் இருப்பதை இங்கு நாம் கவனிக்கவேண்டும். இப்போது அகிரிப்பாவிடம் பவுலைப் பற்றிச் சொல்லவேண்டிய அவசியம் பெஸ்துவுக்கு ஏற்பட்டது. ஏனென்றால் சிலுவையில் அடிக்கப்பட்ட அந்த இயேசு உயிரோடு வாழ்கிறார் என்று பவுல் நம்பினார். பவுல் இது பற்றிப் பேசுவதை அகிரிப்பாவே கேட்க வேண்டும் என்று பெஸ்து ஆவலாய் இருந்திருக்கலாம். அதன்பின் பவுலுக்கு எதிரான அறிக்கை தயாரித்து உரோமுக்கு அனுப்ப அவரும் தமக்கு ஏதாவது ஆலோசனை கூறக்கூடும் என்று நினைத்தார். அகிரிப்பாவும் பவுல் பேசுவதைக் கேட்க ஆவலாயிருந்திருக்கலாம். யூதராக இருந்ததால் அவருக்கு சனகரீம் பேரவையினரிடமும் கொஞ்சம் பரிவு இருந்தது. பவுலைப்பற்றி அவர் ஏற்கெனவே கேள்விப்பட்டிருந்தார். இப்போது அவர் பேசுவதைக் கேட்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. செசரியாவுக்கு அவர் அரசாங்க வேலையாகப் பயணம்செய்து மிகவும்சோர்ந்து போயிருந்தார். பவுலின் உரை தம்முடைய சோர்வை நீக்கும் என்று நினைத்தார்.

### பவுலும் அகிரிப்பாவும்

அகிரிப்பாவைப் பவுல் சந்தித்ததை பவுலின் இன்னொரு விசாரணை என்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் அப்படியல்ல. அகிரிப்பாவே விரும்பியதால் பவுல் பேசினார். தாம் விசாரிக்கப்பட்டதாகப் பவுல் கருதவில்லை. உரோமுக்குப் போகவேண்டும் என்று அவர் கேட்ட பிறகு எந்த விசாரணையும் இருக்க முடியாது என்று அவருக்குத் தெரியும். இதைத் தம்முடைய வரலாற்றை மீண்டும் ஒருமுறை சொல்லத் தமக்குக் கிடைத்த ஒரு நல்ல வாய்ப்பாகக் கருதினார். அதை ஒரு அரசருக்கு அதிலும் ஒரு யூதருக்கு அவர் இப்போது சொல்லப் போகிறார். இக்காட்சியைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். சிறப்பாக உடை உடுத்திய உரோமர்கள் அமர்ந்திருக்கிறார்கள்; படைவீரர்கள் பளிச்சிடும் படைக்கலன்களோடு இறகு வைத்த இரும்புத் தலைக்கவசங்கள் அணிந்து நிற்கிறார்கள்; எக்காளம் ஊதுபவர்கள் அரசரும் அவர் தங்கையும் அரசவைக்கு வருவதுபற்றி எக்காளம் ஊதிக் கட்டியங்கூறுகிறார்கள்; அரசரின் தங்கை வண்ணப்பட்டாடை சல சலக்க, கையிலும் கூந்தலிலும் பற்பல அணிகலன்கள் அணிந்து 'மிகவும் அலங்காரமாய்' வருகிறார். இவர்களுக்கு எதிரே கறுத்த குள்ளமான ஒரு மனிதர் நரைத்த தலையோடு நிற்கிறார். அவர் கண்களில் பேரொளி சுடர் விடுகிறது. கையிலிடப்பட்டுள்ள விலங்குகள் கூட அவரைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு ஓர் ஆர்வம் பற்றி, கொழுந்துவிட்டு எரிகிறது.

நல்ல கிரேக்க மொழியில் நயம்பட உரை ஆற்றினார் பவுல். அகிரிப்பாவுக்கு யூதர்களின் ஒரே நம்பிக்கையான அந்த மேசியாவை நினைப்பூட்டிப் பேசினார். மேசியா வந்தாயிற்று என்றும், பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அடிக்கப்பட்டு இறந்த அவர் உயிரோடெழுந்து விட்டார் என்றும் பேசினார். இது நடந்து சுமார் முப்பது ஆண்டுகளானாலும் இயேசு உயிரோடெழுந்தது உண்மை என்று அவர் அறிவார். தமஸ்குவுக்குப் போகும் வழியில் இயேசு அவருக்குக் காணப்பட்டார். 'யூத மக்களுக்கும் புறவின மக்களுக்கும் ஒளியைப்பற்றி அறிவிக்க' அவரை அனுப்பியிருக்கிறார். இந்தப் பணியை முதலில் அவர் யூதர்களிடையேயும் பிறகு மற்றவர்களிடையேயும் செய்தார். மோசேயும் தீர்க்கர்களும் மேசியாவைக் குறித்துப் பேசியதற்கு அவர் சாட்சியாகவே இருந்து வந்திருக்கிறார். இதற்காக யூதர்கள் அவரைப் பாடாய்ப்படுத்தினார்கள். இச்சமயத்தில் பெஸ்து தம்முடைய அரச விருந்தினர்களின் மனம் நோகக்கூடாதென்று கருதிப் பவுலின் பேச்சைத் தடுத்து நிறுத்தினார். பவுல் உடனே அகிரிப்பா அரசரைப் பார்த்து 'தீர்க்கர்கள் உரைத்தவற்றை நீர் நம்பு



அகிரிப்பாவின் முன் பவுல்

கிறீரா?' என்று கேட்டார். அகிரிப்பா மனம் விட்டு ஒன்றும் பேசவில்லை. அரச சபையினர் முன்பும் அலுவலர்கள் முன்பும் இப்படி ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுவிட்டதைக் குறித்து அவர் கோபமாக இருந்திருக்கலாம். 'இவ்வளவு குறுகிய காலத்தில் என்னைக் கிறிஸ்தவனுக்கி விடலாம் என்று நினைக்கிருய்' என்று அகிரிப்பா கூறிய பதில், கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்க அவர் விருப்பமாயிருந்தார் என்பதைக் காண்பிக்கிறது என்று பலர் கருதுகிருர்கள். ஆனுல், ஆராய்ச்சியாளர்கள் கிரேக்க மொழிபெயர்ப்பைப் படித்துவிட்டு, இது அகிரிப்பா கேலியாகப் பேசிய பேச்சு என்கின்றனர். எருசலேமில் உள்ள யூதர்களைப் போலவே அகிரிப்பாவும் ஆணவத்தால் கேலி செய்து கிறிஸ்துவை நம்பாமற்போனுர். மொஃபட் (Moffat) என்பவரின் மொழிபெயர்ப்பில், 'நீ பேசுவதை இப்படியே நான் கேட்டுக்கொண்டு இருந்தால் இன்னுங் கொஞ்ச நேரத்தில் என்னைக் கிறிஸ்தவனுக்கி விட்டதாகவே நீ நினைத்துவிடுவாய் போலிருக்கிறதே' என்று அகிரிப்பா அவரைக் கேலி செய்கிருர் என்று எழுதப்பட்டிருக்கிறது.

பவுல் உண்மையான ஆர்வத்தோடு இதற்குப் பதில் கூறினுர்: 'சங்கிலியால் பிணைக்கப்பட்ட இந்த ஒரு நிலை தவிர' மற்றப்படி தம்மைப் போலவே அவர்கள் நம்பிக்கை உள்ளவர்களாய் மாறவேண்டும் என்று தாம் விரும்புவதாகக் கூறினுர்! பவுலின் பேச்சு, அகிரிப்பாவை சற்று கோபமூட்டினுலும் அவரை சிந்திக்க வைத்துவிட்டது. பவுல் நீரோவுக்கு முறையிடாமலிருந்திருந்தால் அவரை உடனே தாம் விடுதலை செய்திருக்கக்கூடும் என்று பெஸ்துவிடம் சொன்னுர். விசாரணைக்காக இனி பவுலை உரோமுக்கு அனுப்பாமல் இருக்க முடியாது. பவுல் செய்த 'குற்றங்கள்' எவை என்று இன்னும் பெஸ்துவுக்குத் தெளிவாகவில்லை. பவுலைப்பற்றி இவர் எழுதி அனுப்பிய அந்த அறிக்கை பவுலுக்குச் சாதகமாய் இருந்திருக்கலாம். ஏனெனில் முதல் விசாரணைக்குப்பின் நீரோ பவுலை விடுதலை செய்திருக்கக்கூடும். மூன்று வருடங்களுக்குமுன் லீசியாவால் எழுதப்பட்ட அறிக்கையோடு இதையும் சேர்த்து பத்திரப்படுத்தி வைத்திருந்தால் அந்த அறிக்கை இன்று நாம் படிப்பதற்குச் சுவையாக இருந்திருக்கும்.

## விளக்கப் பயிற்சி

1. குருக்கள் தலைவர் அனனியாவும், வழக்கறிஞர் தெர்த்துல்லுவும் பவுலின் விசாரணைக்கான திட்டம் ஒன்று போடுகிறார்கள். இவர்கள் உரையாடலை எழுதுங்கள்.

2. தம்மேல் கூறிய குற்றச்சாட்டுகளைப்பவுல் மறுத்துக்கூறியபதிலை இன்றைய தமிழில் எழுதுங்கள். வகுப்பறையில் அல்லது காலை வழிபாட்டில் அதைப் படியுங்கள்.

3. நீதி விசாரணைக் காட்சிகளை நாடகமாக அமைத்து நடியுங்கள்.

4. **பையன்கள்:** உரோமில் இருக்கும் பேலிக்சுக்குப் பவுலைப்பற்றி பெஸ்து எழுதுவது போல் ஒரு கடிதம் எழுதுங்கள்.
**பெண்கள்:** எருசலேமிலுள்ள துருசில்லாளுக்கு பவுலைப்பற்றி பெர்னீக்கேயாள் எழுதுவதுபோல் ஒரு கடிதம் எழுதுங்கள்.

5. பெஸ்து, பவுலை முதல் முதல் சந்தித்தபோது அவரிடம் என்னென்ன விஷயங்கள்பற்றிக் கேட்டிருப்பார்? பவுல் அவருக்கு என்ன பதில் கூறியிருப்பார்?

6. 'பேரரசரே எனக்குத் தீர்ப்பளிக்கட்டும்' என்று பவுல் செய்த முடிவு ஏன் முக்கியமானது? இது விவேகமான முடிவா, இல்லையா என்று விவாதியுங்கள்.

7. ஏரோதுவின் 'வமிசக்கிளை' ஒன்று போட்டுக் காண்பியுங்கள்.

8. அகிரிப்பாவின் முன் பவுல் நிற்கும் காட்சியை வண்ணப்படமாகத் தீட்டுங்கள்.

9. உங்களைப் பெஸ்துவாக நினைத்துக்கொண்டு, பவுலைப்பற்றி ஓர் அறிக்கை தயார் செய்யுங்கள். இது நீரோ மன்னருக்கு அனுப்பப்படவேண்டும். சரியான முறையில் வாழ்த்துக்களோடுதொடங்கி விஷயங்களைச் சொல்லி, பொருத்தமான வணக்கங்கள் கூறி அதை முடிக்க வேண்டும்.

10. ஒரு உரோமனாக உங்களைக் கற்பனை செய்துகொண்டு, அகிரிப்பா முன் பவுல் பேசிய பேச்சையும் அதில் உங்கள் இதயத்தைத் தொட்ட விஷயத்தையும் உங்கள் குடும்பத்தினருக்கு எடுத்து எழுதுங்கள்.

11. பவுலின் பேச்சை (அ) கேட்குமுன், (ஆ) கேட்டபின் அகிரிப்பா, பெஸ்து, பெர்னீக்கேயாள் உரையாடுகிறார்கள். அப்படி இரு உரையாடல்கள் நிகழ்த்துங்கள்.

12. 1 யோவான் 4:7–11, 18–21 வசனங்களை மனப்பாடம் செய்யுங்கள்.



உரோம உயர் குடிமகனும் மனைவியும்

அத்தியாயம் 13

# உரோமுக்குச் செல்லுதல்

*(27;28)*


கி. பி. 58ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள். 'நாங்கள்' என்று லூக்கா எழுதுவதிலிருந்து லூக்காவும் பவுலோடு இருக்கிறார் என்று தெரிகிறது. அவர் நேரில் கண்டவைகளை மிகவும் தெளிவாக வருணித்துள்ளார். இப்போது யூலியு என்பவருடைய கண்காணிப்பில் பவுல் இருந்து வந்தார். இந்த யூலியு ஒரு நூற்றுவர் தலைவர். இவரிடம் ஒரு படைப்பிரிவிலுள்ள வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் பேரரசின் பல இடங்களிலுள்ள இராணுவங்களுக்கும் உரோமுக்கும் தொடர்புள்ள அலுவல்களைக் கவனித்து வந்தார்கள். இவ்வீரர்கள் பிரிட்டோரியக் காவல் படையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். இவர்கள் செய்தி கொண்டுபோகிறவர்களாகவும், முக்கியமான கைதிகளைப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்பவர்களாகவும் பணியாற்றினர். பல இடங்களுக்குச் சென்று அங்கு உள்ள படைகள் எவ்வளவு திறமையாகப் பணியாற்றுகின்றன என்பது போன்ற விவரங்களைக் கண்டறிந்து அறிவிப்பார்கள். இவர்களுக்கு அகுஸ்துப் பட்டாளம் என்று பெயர். அகுஸ்து பேரரசர் இதுபோன்ற அலுவல்களுக்காக இப்படிப்பட்ட ஒரு படையை நிரந்தரமாக ஏற்படுத்தி இருந்ததினலே இப்பெயர் கொடுக்கப்பட்டிருந்திருக்கலாம்.

### பயணத்தைத் தொடங்குகிறார்கள்

செப்டம்பர் மாதம் இரண்டாவது வாரத்திற்குப் பின், மத்தியதரைக் கடலில் கிழக்கு முகமாய்ப் பயணம் செய்வது மிகவும் ஆபத்தானது. அங்கு நவம்பர் மாதத்தில் குளிர் காலம் தொடங்கிவிடும். கடலைக் கடந்து நேராக உரோமுக்கு எந்தக் கப்பலும் செல்லாது. குளிர்காலம் தொடங்குமுன் அங்கே போய்ச் சேரவேண்டுமென்றால் பயணதாமதம் எதுவும் இருக்கக்கூடாது. அவர்கள் செசரியாவில் கப்பல் ஏறினார்கள். கப்பல் தலைவர் கடற்கரையில் இருந்த துறைமுகங்களோடு எல்லாம் தொடர்பு வைத்துக் கொண்டே கப்பலைச் செலுத்தினர். திடீர் திடீரென புயல்கள் அல்லது கடல் கொந்தளிப்பு ஏற்பட்டால் சீக்கிரம் பாதுகாப்பான இடத்தை அடைய ஏதுவாகும் என்றே இப்படிச் செய்தார். கப்பல் சீதோனில் சற்று நின்றது. பவுல் தம் நண்பர்களைப் போய்ப் பார்த்து வர 'நன்னம்பிக்கை வாக்குறுதி' கொடுத்தபின் அனுப்பப்பட்டார். பிறகு மேற்கு முகமாக சிலிசியா கரையைச் சுற்றிக் கொண்டு கப்பல் சென்றது. இங்கு இறங்கி, தர்சு பட்டணம் சென்று வந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று பவுலின் உள்ளத்தில் ஆசை பிறந்திருக்கலாம்! மேற்கிலிருந்து அடித்த பருவக்காற்று கப்பலை ஒதுக்கி, சீப்புரு தீவுக்குக் கிழக்கே கொண்டுபோயிற்று. அப்பருவத்தில் காற்றுக்கேற்றபடி கப்பல் செல்லும் பாதை இதுதான். (ஆனால் அப். 27:4ல் வேறுவிதமாக, எதிர்க்காற்று வீசியதால் என்று கூறப்பட்டிருக்கிறது.) அந்நாட்களில் பயன்படுத்தப்பட்ட படகுகளில் ஒரு முக்கிய பாயும், முன் பாய்மரத்தின் பாயும் பொருத்தப்பட்டிருந்தன. கடுங்காற்று வீசும்போது பாயைத் திருப்பி, கப்பல் போகும் வழியில் மாற்றம் செய்யமுடியாது. ஆகையால் அந்தந்தக் காலத்தில் வீசும் காற்றின் போக்குக்கு ஏற்றபடியே கப்பல்கள் ஓடிக்கொண்டிருந்தன. அலெக்சாந்திரியாவிலிருந்து புறப்படும் கப்பல்கள் பலவற்றிற்கு வட மேற்காக சிசிலிக்கும் இத்தாலிக்கும் நேராகச் செல்வதைவிட வடக்கு நோக்கிப் பயணம் செய்து சின்ன ஆசியாவுக்குச் செல்வது எளிதாயிருந்தது. அங்கிருந்து அவை காற்றுக்கு ஒதுக்காகக் கரை ஓரமாகவே சென்றுவிடும். மைரா என்ற இடத்தில் பெரிதான ஓர் அரசாங்கக் கப்பலில் ஏறி, புத்தேயோலியை

நோக்கிச் சென்றனர். லூசியன் என்ற கிரேக்க எழுத்தாளர் அத்தகைய ஒரு கப்பலின் சிறப்பை எவ்வாறு வருணித்துள்ளார் பாருங்கள்:

'நல்லதொரு கப்பல் இது! நீளம் ஐம்பத்தைந்து மீட்டரும், அகலம் இதைப்போல் கால் மடங்குக்கு அதிகமாகவும் இருக்கும் என்று கப்பல் கட்டுகிறவர் சொன்னார். மேல் தட்டிலிருந்து அடித்தட்டு வரை பதின்மூன்று மீட்டர். பாய்மரக் குறுக்குக் கைச்சட்டமும் பாய்மரத்தின் முற்பகுதியைத் தாங்கும் வடமும் எவ்வளவு பெரியதாயுள்ளன! ஆகா! பின்புறம் அன்னத்தின் கழுத்துப்போல் இலாவகமாக வளைந்து காணப்படுகிறதே! முன் பக்கமும் எவ்வளவு நீளமாயிருக்கிறது! இதன் இரு பக்கமும் ''ஐசிஸ்'' என்ற தெய்வத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அவன் பெயரே கப்பலுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு அலங்காரங்கள்! அழகான வண்ண வேலைகள். பாய்மரத்தின் துணி பார்வையாயிருக்கிறது. நங்கூரங்கள், பாயை உயர்த்தும் கம்பிப்பொறி, பாரந்தூக்கும் இயந்திரம், பின்பகுதியிலுள்ள அறைகள் இப்படி கப்பலின் ஒவ்வொரு பாகமும் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. எல்லாம் அற்புதம்! கப்பலில் உள்ளவர்கள் தொகையை ஒரு பெரிய பட்டாளத்திற்கே ஒப்பிடலாம். அத்திக்கா நகர மக்களுக்கு ஒரு வருடத்திற்குத் தேவையான தானியம் கப்பலில் இருந்தது என்று எனக்குச் சொல்லி இருக்கிறார்கள்.'




உரோமுக்குப் பயணம்

அந்தக் கப்பலிற்குத் தலைமை தாங்கும் அதிகாரம் யூலியுவுக்கு இருந்தது. நிகழ்ச்சியில் விவரிக்கப்பட்டுள்ளபடி கப்பலில் இருக்கக் கூடிய அளவின்படி இருநூற்று எழுபத்தாறு பேர் இருந்திருக்கலாம். ஆனால், சில கையெழுத்துப் பிரதிகள் இரு நூறுகளை விட்டுவிட்டு எழுபத்தாறு என்று மட்டும் குறிப்பிடுகின்றன. கினீது தீவிலிருந்து தெற்காகக் கிரேத்தா தீவுக்கு கப்பலைக் காற்று அடித்துக்கொண்டு போயிற்று. விபத்து ஏதும் நிகழாவண்ணம் பாதுகாப்பாகச் செல்ல வடகிழக்கு முனையைச் சுற்றி, தீவின் தென்கரையோரமாகக் கப்பல் செலுத்தப்பட்டது. அத்தீவின் ஊடாக, கடற்கரை ஓரமாக இருந்த மலைத் தொடர் கப்பல் காற்றுக்கு ஒதுக்காகச் செல்ல வசதியாக இருந்தது. சல்மோனே நிலக்கூம்பு கிழக்கே சற்று தொலைவு கடலுக்குள்ளும் நீண்டு நின்றது. கரையோரமாக, பாதி வழியில் அவர்கள் நல்ல துறைகள் என்ற துறைமுகத்தை அடைந்து காற்றுக்கு மறைவான இடத்தில் கப்பலை நிறுத்தினர். இப்படி கப்பல் நின்ற நேரத்தில் பவுல் லசேயா என்ற இடத்திற்குச் சென்று திரும்பியிருக்கக்கூடும் (அப். 27:7,8).

### ஆபத்தான பயணம்

மீதமுள்ள பயணம் மிகவும் ஆபத்தானது என்று உணர்ந்தார்கள். ஏனெனில், காற்று பிரயாணத்திற்குப் பாதகமாக வீசும் பருவத்தில் அவர்கள் பயணம் செய்துகொண்டிருந்தார்கள். உபவாச நாளைப்பற்றிய குறிப்பு ஒன்று இருக்கிறது (அப். 27:9). அது பாவ நிவாரண நாள் உபவாசம் (புத்தகம் 3). அந்த நாள் கூடாரப் பண்டிகையின் கடைசி நாள் ஆகும். எனவே இது அக்டோபர் திங்களின் தொடக்கமாக இருக்கலாம். ஆகவே இது பிரயாணத்திற்கு ஏற்ற காலம் அல்ல. பவுல், கப்பலின் முக்கிய அலுவலர்களிடமும் போர் வீரர்களிடமும் வரவிருக்கும் ஆபத்துக்களைக் குறித்து எச்சரிக்கை செய்து பேசினார். எத்தனையோ கப்பற் சேதங்களைப் பார்த்திருந்த அனுபவத்தால் அப்படிப் பேசினார் (2 கொ. 11:25). கைதியாயிருக்கிற இவர் இப்படிப் பேசுவது சாத்தியமா என நீங்கள் நினைக்கலாம். அவர் செய்த பயணங்கள் குறித்தும், கடலைப்பற்றி அவருக்குத் தெரிந்துள்ள விஷயங்கள் குறித்தும் கப்பல் தலைவரோடும், யூலியுவோடும் அவர் உரையாடியிருக்கலாம். எது எவ்வாறாயினும் இவர் பேரரசர் நீரோவைக் காணச் செல்லும் ஓர் அதிசயமான கைதி.


யூலியு உரோம் செல்ல விரும்பினார். கப்பலில் உள்ள மேலதிகாரிகள் பவுலின்மேல் கொண்டிருந்த பொறாமையினாலும், தங்கள் மனைவி, பிள்ளைகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலினாலும் பயணத்தைத் தொடர வேண்டுமென்று கூறிய நூற்றுவர் தலைவரை ஆதரித்துப் பேசினார்கள். அறுபது கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பேனிக்ஸ் செல்ல அவர்கள் திட்டமிட்டனர். இப்போது காற்றின் உதவியால் நிலக்கூம்பைச் சுற்றிக் கொண்டு கப்பல் அத்தீவைக் கடந்து சென்றது. அது பாதுகாப்பான இடத்தைத் தாண்டி திறந்தவிடம் வரவே சீறி வந்த புயலுக்கு இலக்காயிற்று. யூராக்கிலிதோன் என்ற அந்தக் கொடிய புயல் கிரேத்தா தீவின் மேலாகவும், பின் பனியடர்ந்த ஐடா மலையின் சரிவிலும் வீசி இவர்கள் எதிர்பாராத சமயத்தில் கப்பலைத் தாக்கிற்று. முப்பது கிலோ மீட்டர் தூரம் அந்தக் காற்றினால் தள்ளப்பட்டுக் கப்பல் வேகமாய் ஓடி, கிலவுதா என்ற ஒரு சின்ன தீவின் காற்றொதுக்குப் பக்கம் நோக்கிய கரையில் ஒதுங்கிற்று. இதற்குச் சில நாட்களுக்கு முன்வரை காற்றலைவற்ற காலத்தில் கப்பலின் பின்னால் கட்டி இழுக்கப்பட்டதும் இப்போது மிதக்க முடியாதபடி நீரில் ஊறியிருந்ததுமான படகை அவர்கள் உயரத் தூக்கிக் கப்பலில் வைத்தார்கள்.

### கடைசி முயற்சிகள்

பயணிகள், மாலுமிகள், போர்வீரர்கள் எல்லோரும் சேர்ந்து கப்பல் தளத்திலிருந்த கப்பல் பாய் இழுப்புக் கயிறுகளையும் கருவிகளையும் அப்புறப்படுத்தினார்கள். பிறகு அவர்கள் கப்பல் உடைந்து போகாவண்ணம் அதன் கட்டுமானத்தைக் கயிறுகளால் இறுகக் கட்டினார்கள். இதை எப்படிச் செய்தார்கள் என்பதைப் படங்களைப் பார்த்து நாம் நன்கு தெரிந்துகொள்ள முடியும்.


தெற்குப் புறத்தில் வேறொரு புதிய ஆபத்து உண்டு. வட ஆப்பிரிக்கக் கடற்கரைக்கு அப்பால் சிறிது தூரத்தில் சிர்த்திஸ் என்ற இடத்தில் சொரிமணல் இருந்தது. இப்போது கப்பல், புயல்வீசும் சமயங்களில் உபயோகிக்கும் சிறிய பாய் மட்டும் பறக்க விட்டுக்கொண்டு காற்றின் போக்கிலே இழுத்துச் செல்லவிடப்பட்டது. அரிய தானியங்களையெல்லாம் கடலில் கொட்டியாயிற்று. பின் கனமான பாய்மரக் குறுக்குச் சட்டத்தையும், பிரித்து எடுக்கக்கூடிய தளவாடங்களையும் கடலில் எறிந்தார்கள். இரவு வரவும் அந்த இருட்டில் கப்பலில் இருந்த அனைவரும்

தாங்கள் அழிவது நிச்சயம் என்று எண்ணினர். புயல் அடங்கினாலும் கதிரவனோ, விண்மீன்களோ இல்லாமல் அவர்கள் கப்பலைச் செலுத்த முடியாது. அக்காலத்தில் கப்பலை ஓட்டிச் செல்ல வேறு கருவிகள் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இயேசுவைப்போல் பவுலும் ஜெபத்தினால் மனத்திட்பம் பெற்றார். அவருடைய நம்பிக்கை மற்றவர்களுக்கும் தைரியமூட்டியது. பதினான்கு நாட்கள் ஆதிரியாக் கடலில் (மத்தியதரைக் கடலின் கீழ்ப் பகுதிக்கு மாலுமிகள் இப்பெயரிட்டிருந்தனர்) அலைக்கழிக்கப்பட்ட பின்பு அனுபவம் மிகுந்த மாலுமிகள் அலைகள் கரைமீது மோதும் சத்தம் கேட்டனர் (அப். 27:27). கடல் ஆழம் இல்லாமல் இருந்தது கரை அண்மையிலிருக்கிறது என உறுதிப்படுத்திற்று. கப்பல் பாறைகளில் மோதிவிடாதபடி கப்பலின் பின்புறத்திலிருந்து நான்கு நங்கூரங்கள் போட்டபின், 'விடியற்காலம் வராதா' என்ற தவிப்புடன் காத்திருந்தனர். இந்த வார்த்தைகளில் உள்ள அவலநிலை நமக்கு நன்றாகப் புரிகிறது அல்லவா?




கப்பலின் கட்டுமானத்தைக் கயிறுகளால் இறுகக் கட்டுதல்

1. கயிறு கப்பலின் பின்பக்கமாகக் கொண்டுவரப்படுகிறது
2. பளு இணைக்கப்பட்ட கயிறு கப்பலின் பின்புறமாகக் கடலில் வீசப்படுகிறது
3. இப்போது கயிறு கப்பலுக்கு அடியில் தொங்குகிறது
4. கயிறு இறுக்கமாய் இருக்க கப்பல் ஆட்கள் இழுக்கிறார்கள்
5. பழுதடைந்த கப்பலின் கட்டுமானத்தை இறுகக் கட்டும்வரை கயிறு இழுக்கப்படுகிறது




கப்பலின் பாகங்கள்

1. முக்கியமான பாய் சுருட்டப்படுகிறது
2. சுக்கான்
3. நங்கூரம்
4. கப்பலின் படகு
5. ஆழங்காண உபயோகிக்கும் ஈயத்துண்டு
6. சேதமடைந்த கப்பலின் மாலுமிகள் பாய்மரத்தைப் பிடித்துக்கொண்டிருத்தல்

### கப்பல் உடைந்தது

நங்கூரத்தைப் போட இறங்குவதுபோல் நடித்து, கோழை மாலுமிகள் படகை இறக்கி, தப்பி ஓட வகை பார்த்தனர். ஆனுல் பவுல் யூலியுவிடம் அவர்கள் ஓடாத படி தடுத்து நிறுத்தச் சொன்னுர். இங்கு பவுலின் மன உறுதியும், செயல்கள் ஆற்றும் திறமையும் நன்கு புலனுகின்றன. எல்லோருக்கும் உணவு தேவை என்பதைப் பவுல் வலியுறுத்தி ‘அப்பத்தை எடுத்து’ எல்லோருக்கும் முன்பாகக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப் பிட்டார். எல்லோரும் சாப்பிட்டார்கள். கப்பல் எடைப் பாரமான மீதமுள்ள சரக்குகளையும் கடலில் எறிந்து விட்டார்கள். முக்கிய பாய்மரத்தின் துணை கொண்டு கப்பல் ஓடி, இரு கடல்களுக்கும் இடையே உள்ள ஒரு குறுகிய மணற்பாங் கான கரையில் போய் நின்றது. இன்றும் கூட மெலித்தா தீவின் வட கோடியில் தூய பவுல் விரிகுடாவில் குறுகலான அந்நிலம் இருப்பதைக் காணலாம். இத்தீவு இன்று மால்த்தா எனப்படுகிறது.

பவுலைக் காப்பாற்ற எண்ணிய யூலியு கைதிகளைக் கொல்லக்கூடாது என்று போர்வீரர்களுக்கு உத்தரவிட்டார். ஏனென்ருல் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் கைதிகள் தப்பி ஓடிவிடாதபடி கொன்று விடுவதுதான் அவர்கள் கடமை. எல்லோரும் பத்திரமாகக் கரை சேர்ந்தார்கள். மால்த்தாவில் இருந்த மக்கள் அனைவரும் பெனிக்கேயர்களின் வழித் தோன்றல்கள்; இவர்கள் கிரேக்கர்களல்ல. இம்மக்கள் அன்பில் சிறந்தவர்கள். கடல் விபத்துக்குத் தப்பி வந்தவர்களுக்குத் தீ மூட்டி உணவு தயாரித்துக் கொடுத்தார்கள். பவுலைப் பாம்பு கவ்விக்கொண்டபோது அவர் ஒரு குற்றவாளி என்று கருதினுர்கள்; பின் அவர் ஒரு தெய்வம் என்று நினைத்தனர். புப்பிலியு பவுலையும் அவரோடு வந்த முக்கிய அலுவலர்களையும் மூன்று நாட்கள் உபசரித்தார். அந்த மூன்று நாட்களும் பவுலும் லூக்காவும் நோயாளிகளைப் பராமரித்து குணப்படுத்தி வந்தனர். அங்ஙனம் நோய் நீங்கப்பெற்றவர்களில் புப்பிலியுவின் தந்தையும் ஒருவர்.

## உரோம் நோக்கிச் சென்றனர்

அது கி.பி. 59ம் ஆண்டு, பெப்ருவரித் திங்களாக இருக்கலாம். இன்னும் பயண பயம் நீங்கிவிடவில்லை. ஆயினும் குளிர்காலத்தில் இத்தீவில் வந்து தங்கியிருந்த அலெக்சாந்திரியக் கப்பல் ஒன்றில் எல்லாரையும் ஏற்றிச் செல்வது என்று யூலியு முடிவு செய்தார். அது காஸ்டர், போலக்ஸ் என்ற இரு தெய்வங்களின் பெயர் இடப்பட்ட 'இரட்டையர்கள்' (மிதுனம்) என்ற கப்பல் ஆகும். இவ்விரு தெய்வங்களும் மாலுமிகள் வணங்கும் தெய்வங்கள். ஆகவே மூட நம்பிக்கை கொண்டமக்களை இப்பெயர் அதிகம் கவர்ந்து, இது நல்ல அறிகுறி என்று நம்பச் செய்தது. உரோமப்போர்வீரர் இந்த நல்ல அறிகுறி தங்கள் பயணம் பத்திரமானதாயிருக்கும், இனிப் பயமில்லை என்பதைக் குறிக்கும் என்று நினைத்தனர். சிசிலியில் உள்ள சிரகூசா என்ற இடத்தை அவர்கள் அடைந்தபோது, தானிய மூட்டைகளை இறக்கவோ, சரக்குகளையும் பயணிகளையும் ஏற்றிக்கொள்ளவோ அங்கு கப்பல் மூன்று நாட்கள் தாமதித்தது. அதன் பின்பு இத்தாலியாவின் பெருவிரல் போன்ற பகுதியைச் சுற்றிக்கொண்டு இரேகியு வந்து சேர்ந்தது. இத்தாலியாவின் மேற்குக் கரையோரமாக, காற்றின் துணையோடு புத்தேயோலி என்னும் துறைமுகத்தை நோக்கிச் சென்றபோது புகையைக் கக்கிக்கொண்டிருக்கும் விசுவியஸ் என்னும் எரிமலையும் எவ்வித அச்சமும் இன்றி அதன் அடிவாரத்தில் இருந்த பாம்பே நகரும் காணப்பட்டன. உரோமப் பட்டணத்திலிருந்து 224 கிலோமீட்டர் தொலைவிலேயே புத்தேயோலி இருந்தது. இது ஒரு பெரிய வணிகத் துறைமுகம். மேல் பாயைப் பறக்கவிட்டுக்கொண்டு இத்தாலியக் கப்பல் பெருமையுடன் இத்துறைமுகத்தின் உள்ளே நுழைந்தது. இவ்விதம் துறைமுகத்தில் நுழையும் உரிமை அதற்கு உண்டு. இப்பட்டினத்தில் கிறிஸ்தவ சபையினர் இருந்தனர். இத்தகைய வணிகப் பட்டினத்தில் அவர்கள் இருந்தது ஆச்சரிய மல்ல. பேதுரு கி.பி. 42ல் இருந்தே உரோமில் இருந்ததாகவும், புத்தேயோலியில் ஒரு சபையைத் தொடங்கியதாகவும் ஒரு மரபு வழிச் செய்தி உண்டு. இங்கு பவுலும் லூக்காவும் தங்கள் நண்பர்களுடைய வீட்டில் ஏழு நாட்கள் தங்கியிருந்தனர்.

'அப்பியு வழி' என்ற பெருவழியில் உரோமிற்கு இப்பக்கம் 64 கிலோமீட்டர் தொலைவில் அப்பியு சந்தை இருந்தது. எல்லாப் பெருவழிகளும் உரோமப் பட்டணத்தை நோக்கியே சென்றன (50ம் பக்கத்திலுள்ள நிலப்படத்தைப் பார்க்கவும்). இது பிரிந்திசி என்ற இடத்திலிருந்து வரும் சாலை. எல்லாச் சாலைகளிலும் தொலைவு மதிப்பிடப்படுவதற்கான 'பொற் கல்' ஒன்று பேரரசின் நகராக விளங்கிய உரோமின் நடுவில் நாட்டப்பட்டிருந்தது. உரோமாபுரி நோக்கி வரும் இத்



பவுல் பாம்பை உதறி எறிகிறுர்



முச்சத்திரத்தில் உரோமக் கிறிஸ்தவர்கள் பவுலைச் சந்தித்தனர்

தகைய சாலைகள் பலவற்றில் பவுல் பயணம் செய்திருக்கிறார். இப்பெருஞ்சாலைகள் பல வற்றின் வழியாக அவர் கூறிச் சென்ற நற் செய்தி எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. அவ்வாறே உலகம் முழுவதும் அது செல்ல இருக்கிறது. கிறிஸ்தவர்கள் இந்த இடம் வரையிலும் வந்து, பவுலை மனம் உவந்து வரவேற்றனர். இதிலிருந்து பதினாறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முச்சத்திரம் என்ற இடம் வரை கூடவே சென்றனர். இவ்விடத்தில் பல ஆண்டுகளாகவே கொல் லுலை வசதியும் பொருட்கள் வாங்க வசதியும் திராட்சை ரசம் பருக வசதியும் இருந்து வந்திருக்கிறது. இங்கு அவர்களோடு இன் னும் பல கிறிஸ்தவர்கள் சேர்ந்துகொண் டார்கள்.

இத்தகைய வரவேற்பைக் கண்டு பவுல் தைரியம் கொண்டார். கப்பல் பயணத்தில் ஏற்பட்ட தொல்லையும் அசதியும் களைப்பும் அவரை மிகவும் சக்தியிழந்த ஒரு நிலைக்குக் கொண்டு வந்திருந்தது. பிரயாணம் செய்து வந்த சதுப்பு நிலப் பகுதிகளில் ஏற்பட்ட மலேரியாக் காய்ச்சல் அவரைப் பலவீனப் படுத்தி உற்சாகமற்ற நிலையில் வைத் திருந்தது. இப்போது அவர் நண்பர்க ளோடு இருக்கிறார்; அவருடைய இலக்கையும் நெருங்கிவிட்டார். ஆகவே வலுவூட்டப்பட்ட வராயும் மனநிறைவு அடைந்தவராயும் இருந் தார். இந்தப்பெரு மகிழ்ச்சியோடு சோர்வு நீங்கப் பெற்றவராய் அவர் உரோமுக்குள் அடியெடுத்து வைத்தார்.

### உரோம்

கி.பி. 59ம் ஆண்டு இது. பேரரசின் நகராம் உரோம் 'உலகத்து தலைவி' என்ற புகழோடு செல்வச் செருக்கில், கடவுளற்று, கொடுமையின் சின்னமாக விளங்கிற்று. குன்றின்மேல் நின்றபடி பவுல் கிளாடியாவின் கால்வாய்ப் பாலம், காயு செஸ்தியு என்பவரின் பிரமிடு (கல்லறைக் கோபுரம்), யூப்பித்தர் என்ற தெய்வத்தின் கோயில், அரண்மனை, சட்ட மன்றம் என்ற அனைத்தையும் பார்க்க முடிகிறது. கடந்த கால வெற்றிகளுக்கும் போர்களுக்கும் நினைவுச் சின்னங்களான அலங்கார வளைவுகள் அநேகம் இருந்தன. ராமுலஸ், வெஸ்தா, செராப்பிஸ், ஐசிஸ், மித்ராஸ் என்னும் பெயருடைய எத்தனையோ தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் அங்கு புனித நினைவுச் சின்னங்களும் ஆலயங்களும் எழுப்பப்பட்டிருந்தன. மருத்துவத் தெய்வமான ஏஸ்குலாப்பியஸ் ஆலயம் லூக்காவின் கண்களில் படுகிறது. அதோ, சந்தைவெளி! சர்க்கஸ் மாக்சிமஸ் என்ற பெரிய விளையாட்டு அரங்கம்! இங்கு பல அடிமைகள் உயிரிழந்தனர். பின்னர் கிறிஸ்தவர்களும் கொடிய விலங்குகளால் கொல்லப்பட இருக்கின்றனர். பவுலினுடைய தோழர்களில் சிலரும் இதே அரங்கத்தில் மக்கள் கூடி வந்து வேடிக்கை பார்க்கும்பொழுது பலியாகப் போகின்றனர். இங்குதான் கி.பி. 64ல் ஒரு பெருந் தீ மூளவிருக்கிறது. இதைச் சாக்கிட்டு நீரோ மன்னர் எத்தனையோ கிறிஸ்தவர்களைச் சித்திரவதை செய்யவிருக்கிறார். அந்தியோகியாவின் இன்னாசியார் கொலை செய்யப்படவிருக்கும் 'கொலோசியம்' அதாவது கேளிக்கைக் கூடம் இனிமேல்தான் கட்டப்படவிருக்கிறது. இது பவுல் இறந்த ஐந்தாவது ஆண்டில் கட்டப்பட்டது. கி.பி. 70ல் வெஸ்பேசியன் என்ற பேரரசர் மகனாகிய தீத்து, எருசலேம் நகரைக் கொள்ளையடித்த பிறகு பன்னீராயிரம் யூதர்கள் விலங்கிடப்பட்டு அடிமைகளாக உரோமுக்குக் கொண்டுவரப்பட்டனர். இவர்களால் இக் 'கொலோசியம்' கட்டப்பட்டது.

ஒருநாள் உரோமாபுரியைக் காண்பேன் என்று பவுல் சொல்லியிருந்தார்; இதோ! அந்த உரோமாபுரிக்கே அவர் வந்துவிட்டார்! பவுலின் வலது கையில் பிணைக்கப்பட்டிருந்த சங்கிலி அவர் உரோமக் காவலரின் இடது கையிலும் பிணைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நகருக்குப் புறம்பேயுள்ள கோவேலியன் குன்றிலுள்ள இராணுவ முகாமின் அதிகாரியிடம் பவுலை யூலியு ஒப்புவிக்கிறார். யூலியுவும் பேரரசின் விரைவுத் தூதர் படையான சிறப்புப் படையில் நூற்றுவர் தலைவராகப் பணி ஆற்றுகிறார். அந்தப் படையின் ஒரு பிரிவுதான் இங்கும் இருந்தது.

### பவுல் யூதர்களைச் சந்திக்கிறார்

தாமே வாடகைக்கு அமர்த்திக்கொண்ட வீட்டில் பவுல் ஜாமீனில் விடுவிக்கப்பட்ட, விலங்கிடப்பட்ட கைதியாக வாழ்ந்து வந்தார். ஜெப ஆலயம் செல்ல முடியாத காரணத்தால் மூன்று நாள் கழித்து யூத ஜெப ஆலயத் தலைவர்களை வீட்டிற்கு அழைத்து அவர் ஒரு கூட்டம் நடத்தினார். தம் அனுபவங்களைச் சுருக்கமாய் எடுத்துக் கூறி, உரோமுக்கு தாம் வந்துள்ள காரணத்தையும் விளக்கினார். யூதர்கள் அவரிடம் அவ்வளவு நட்புடன் நடந்துகொள்ளவில்லை. அவர்களுக்கு இவர் வரம்புமீறு யூதராயிருந்தும் யூத வளர்ப்புக்கு எதிராக, சிலுவையில் அறையப்பட்ட ஒருவரை மேசியா என்று போதித்து வருபவர். அவர் பேரரசருக்கு வேண்டுகோள் விடுத்ததைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது. கிறிஸ்தவ சமயத்தைப் பற்றியும் பலர் நல்லெண்ணம் கொள்ளவில்லை என்றும், எல்லா இடங்களிலும் அதற்கு விரோதமாகவே பேசி வருகிறார்கள் என்றும் மட்டுமே அறிந்து வைத்திருந்தனர். பவுல் இந்தப் புதிய சமயப் பிரிவினருக்குத் தலைவர் என்பதை ஒப்புக்கொண்டு அதுபற்றி இன்னும் கூற அவரைக் கேட்டனர். தம் நற்செய்தியை அவர்களுக்கு விளக்கிக் கூறுவதாக வாக்களித்தார். அவர்கள் மீண்டும் அவரிடம் கூடி வர, அவர் அவர்களிடம் பேசினார். ஆனால் அவர்களிடையே கருத்து வேறுபாடு காணப்பட்டது. தாம் கற்ற வேதக் கூற்றுக்கள் அவர் நினைவிற்கு வந்தன. ஏசாயா 6:9,10 வசனங்களை எடுத்துச் சொன்னார் (அப். 28:26,27). கடவுளின் இரட்சிப்பு 'புற இனத்தவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது' என்பதே அவர் பேச்சின் சாரமாக விளங்கிற்று. உரோம யூதர்களுக்கு இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்கள் ஒருவரோடொருவர் ஒத்துவரவில்லை. முன்போலவே யூதர்கள் தமக்கு எதிராக இருக்கிறார்கள் என அறிந்தார். தாம் பேசுவதை விரும்பிக் கேட்கும் அனைவர்க்கும் அவர் தொடர்ந்து திருவுரையாற்றி வந்தார்.

லூக்கா எழுதியவை இங்கு முற்றுப் பெறுகின்றன. இதன் பிறகு பவுல் எழுதும் கடிதங்களிலிருந்தும், மரபு வழிக் கதைகளிலிருந்தும் மீதமுள்ள விவரங்களை நாம் அறிய வருகிறோம். லூக்கா எழுதிய மூன்றாவது நூல் ஒன்று இருந்திருக்கக் கூடும். அப்படி

யிருந்திருப்பின் இப்போது அது நமக்குக் கிடைக்கவில்லை. இதோடு பவுலின் செய்தியோ, பணியோ முடிந்துவிடவில்லை. கிறிஸ்தவத்தின் தூதுச் செய்தி இப்போது பேரரசின் மையத்தை எட்டிவிட்டது. இங்கிருந்து உலகெங்கும் இனி பரவ வேண்டும்.

## விளக்கப் பயிற்சி

1. உரோமுக்குப் பயணம் செய்த நாட்களின் 'நாட்குறிப்பு' கப்பல் தலைவர் எழுதுவதுபோல் எழுதுக.

2. பவுல் பயணம் செய்த கப்பலின் படம் வரைந்து வண்ணம் தீட்டிக் காட்டுக.

அல்லது

மால்த்தாவில் ஏற்பட்ட கப்பற் சேதத்தைப் படம் வரைந்து வண்ணம் தீட்டிக்காட்டுங்கள்.

3. பயணத்தைத் தொடர்வது குறித்த ஒரு விவாதத்துக்கு ஒழுங்கு செய்யுங்கள். இதில் பவுல், யூலியு, கப்பல் தலைவர் மற்றும் சிலர் பங்கு பெற வேண்டும்.

4. விளக்கப் படங்களைப் பார்த்து கப்பலின் கட்டுமானத்தைக் கயிறுகளால் எப்படி இறுகக் கட்டினார்கள் என்று அறிந்து கொள்ளுங்கள். பின் அதை விவரித்துச் சொல்லுங்கள்.

5. கப்பலிலுள்ள மாலுமிகளும் பயணிகளும் நீங்கள்தான் என நினைத்துக் கொண்டு, கப்பற் பயணம்பற்றியும், அதிலுள்ள ஆபத்துக்கள்பற்றியும் கூடிப் பேசுங்கள். பின் பவுல் உங்களிடம் பேசி, தைரியமடையும்படி அறிவுரை கூற உங்கள் மனநிலையை வார்த்தைகளில் வெளிப்படுத்துங்கள்.

6. கப்பல் சேதமடைந்ததை தீவில் உள்ள ஒருவன் பார்த்து புப்பிலியுவிடம் போய் விளக்கிச் சொல்வதைப்போல் சொல்லுங்கள்.

7. ரோமர் 8:31—39; 12:9—21 இவற்றை குழுப்பாடமாகச் சொல்ல மனப்பாடம் செய்யுங்கள். ரோமர் 8:28ம் வசனத்தை அழகாக எழுதவும்.

8. கி.பி. 59ல் உரோமுக்குச் சென்றதாக வைத்துக்கொண்டு அதை விவரியுங்கள்.

9. உரோமிலுள்ள யூதர்களைப் பவுல் முதன் முதலாகச் சந்தித்ததை நாடகமாக்குங்கள்.

10. பவுலுக்கும் பேதுருவுக்கும் இடையே ஓர் உரையாடல் தயார் செய்யுங்கள்.

11. யூலியு நீரோவிடம் சமர்ப்பிக்கும் அறிக்கையை நீங்கள் எழுதித் தயாரியுங்கள்.

12. காலைக் கூட்டத்திற்காக 'கடல் மார்க்கமாய் பயணம் செய்கிறவர்களுக்காக' என்ற தலைப்பில் ஓர் ஆராதனை ஒழுங்கு ஆயத்தம் செய்யுங்கள். இந்த ஆராதனையில் சங்கீதம் 107:23—30 வாசிக்கலாம். ஏன்?

* * * *

அத்தியாயம் 14

# உலகெங்கும்

பவுல் கைதியாக இருந்த இரு ஆண்டுகளிலும் திருவுரையாற்ற அவருக்குப் பல வாய்ப்புகள் கிடைத்தன. பிலி. 1:12–14; 4:22 வசனங்கள் அவரைக் காவல் செய்துவந்தவர்களிடம் செய்த நற்பணியை விளக்குகின்றன. இதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஏனெனில் ஒருவன் பவுலைப்போன்ற ஒரு மனிதரோடு இணைக்கப்பட்டிருந்தால் அவன் பவுலின் சமயத்தை ஏற்றுக்கொள்வதற்கு அதுவே முதல் படி.

### பவுலின் கடிதங்கள்

லூக்கா இன்னும் பவுலோடு இருந்தார். தீமோத்தேயுவும் சிலகாலம் அவரோடு இருந்தார். மாற்குவும் இருந்தார். இப்போது பவுல் அவரை மன்னித்துவிட்டார். சீக்கிரமே அவர் ஒரு நல்ல பேச்சாளராகத் திகழப் போகிறார். கைதியாக இருந்தபோது பவுல் நண்பர்களுக்கும் சபைகளுக்கும் பல கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தார். இவைகளில்



பவுல் கடிதத்தை வாய்மொழியாகக் கூற எழுத்தர் எழுதுகிறார்

தனிப்பட்ட நண்பருக்கு எழுதப்பட்ட கடிதங்களில் ஒன்றுமட்டும் நம்மிடம் இருக்கிறது. கொலோசே பட்டணத்தில் உள்ள கிறிஸ்தவ நண்பர்ஒருவருக்கு அடிமைஒருவரைக்குறித்து இந்த மடலைப் பவுல் வரைந்தார். பல பெரிய பட்டணங்களில் நூற்றுக்கு எண்பது பேர் அடிமைகளாக இருப்பார்கள். உரோமில் சுதந்திரக் குடிகள் ஒரு பங்கும் அடிமைகள் இரு பங்கும் இருந்தனர். அடிமைகள் நீண்ட நாட்கள் வாழ்வதில்லை. அவர்கள் உயிர் மிகவும் அற்பமாக எண்ணப்பட்டது. அடிமைகளுக்காக யாரும் கவலைப்படமாட்டார்கள். எஜமானைவிட்டு ஓடிவந்த ஒநேசிமு என்ற அடிமை உரோமுக்கு வந்தார். எஜமானிடம் ஏதோ திருடிவிட்டு இங்கு தொழில் செய்ய நல்ல வாய்ப்பு இருக்கும் என்று வந்திருப்பார் போலும். பவுலைப்பற்றி தம் எஜமான் பேசக் கேள்விப்பட்டிருப்பார். எனவே பவுலிடம் சென்று சில நாட்களுக்குப்பின் தம் குற்றங்களை ஒப்புக்கொண்டார். பவுல் இவரிடம் அதிக அன்புகொள்ளத் தொடங்குகிறார். ஆயினும் அவருடைய எஜமானிடம் அவரை அனுப்பி வைப்பது தம்முடைய கடமை என்றும் உணர்ந்தார். ஒநேசிமு அடிமை என்பதால் எஜமான் அவரை நன்றாக அடிக்கலாம்; அடித்துக் கொன்றும் போடலாம். இது சட்டப்படி சரியே ஆகும். எனவேதான் பவுல் பிலேமோனுக்கு ஒரு கடிதம் எழுதினார். ஒநேசிமு 'மீட்கப்பட'வேண்டும்; அதாவது அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவேண்டும். அவரைக் கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரராய்ப் பிலேமோன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எழுதினர். இதைப் பவுலுக்காகச் செய்ய பிலேமோன் கடமைப்பட்டவர் (வசனம் 19; கொலோ. 3:22—4:1 வரை படித்து ஒத்துப் பாருங்கள்). நம்பிக்கை மிகுந்தவராக ஒநேசிமுவின் கையில் கடிதத்தைக் கொடுத்து அவர் எஜமான் கையில் கொடுக்கச் சொல்லுகிறார். என்ன நடந்திருக்கும் என்று நாம் ஊகிக்கத்தான் வேண்டியதிருக்கிறது. பவுலை நாம் நன்றாய் அறிவோம். ஒநேசிமு என்றால் 'தகுதி' என்று பொருள். எனவே பவுலின் முயற்சி வெற்றி பெற்று, ஒநேசிமுவைக் கிறிஸ்துவில் சகோதரராகப் பிலேமோன் ஏற்றிருப்பார் என்று நாம் எண்ணிக்கொள்ளலாம். பின்பு ஒநேசிமு ஒரு பேராயரானார் என்று மரபுச் செய்தி ஒன்று கூறுகிறது. பவுல் எபேசுவில் கைதியாக இருந்தபோது இக்கடிதத்தை எழுதினர் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். எபேசுபட்டினம் கொலோசே பட்டணத்திற்கு மிக அருகாமையில் உள்ளது. இது உண்மையென்றால் ஒநேசிமு உரோமுக்கு அல்ல எபேசு பட்டினத்திற்குத்தான் ஓடிப் போயிருக்கவேண்டும்.

**பவுல் கடிதங்களை 'எழுதிய முறை'**

கிழக்கத்திய நாடுகளில் உள்ளவர்கள் கடிதம் எழுதுவதுபோல் பொதுவாகப் பவுலும் ஒரு குறிப்பிட்ட முறையில்தான் கடிதங்களை எழுதினர். கடிதங்கள் பாப்பைரஸ் தாளில் எழுதப்பட்டன (புத்தகம் 1). பிலேமோனுக்கு வரைந்த மடலில் 1 முதல் 3 வரை உள்ள வசனங்கள் வாழ்த்தாய் அமைகின்றன; 4—7 பகுதி கடவுளுக்கு நன்றி செலுத்துவதாகவும் விண்ணப்பம் செய்வதாகவும் அமைந்துள்ளது; 8—22ல் கடிதத்தின் முக்கிய செய்தி அடங்கியுள்ளது; 23—25 இறுதி வாழ்த்தும் ஆசீர்வாதமும். இப்படித்தான் அக்கால மக்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். பவுலைத் தவிர வேறு பலரின் கடிதங்களும் இப்படியே இருக்கின்றன. கடிதம் எழுத உதவும் எழுத்தர் தம்முடைய செய்தியையும் அதில் சேர்த்து எழுதுவார்; எடுத்துக்காட்டாக ரோ. 16:22. பவுல் சில கடிதங்களில் தம் கையெழுத்தைப் போடுவார் — 1 கொ. 16:21; கலா. 6:11; 2 தெச. 3:17. கடிதத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் இந்தக் கையெழுத்தை அதிகமாக மதிப்பார்கள். ஏனெனில், சொந்தக் கையெழுத்தால் கடிதம் எழுதுவது அன்புக்கு அடையாளம் என்று கருதினர்கள்.

கிரேக்க மொழியை ஆராய்ந்து படித்துப் புலமை பெற்றவர்கள் பவுல் இக்கடிதங்களை தம் திருவுரையில் பயன்படுத்தும் சாதாரணப் பேச்சு நடையில் எழுதினர் என்கின்றனர். எனவே, வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வந்த மக்களால் எளிதில் அவர் கடிதங்களிலுள்ள செய்தியைப் புரிந்துகொள்ளமுடிந்தது. திருமறையின் பழைய மொழிபெயர்ப்பில் பழங்காலத் தமிழ் நடையில் உள்ள வழக்கொழிந்த சொற்கள் காணப்படுவதால் பவுலின் கடிதங்களைப் புரிந்துகொள்வதில் இன்று நமக்கு சிறிதளவு சிரமம் உண்டாகிறது. இவர் குறிப்பிட்டு எழுதுகிற பிரச்சினைகள் நமக்குப் புதியவைகளாக இருப்பதால் மட்டும் இச்சிரமம் உண்டாவதாக நினைக்கவேண்டாம். மொழிபெயர்ப்பில் பல இடங்களில் பயன்படுத்தியிருக்கிற வார்த்தைகள் அவ்வளவு பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமையவில்லை. பவுலின் கடிதங்கள் எவ்விதம் தற்காலத்துக்கு ஏற்றவையாயும் சிக்கலற்றவையாயும் இருக்கின்றன என்பதை உணர இன்றைய புதிய மொழிபெயர்ப்புகளில் அவற்றை வாசித்துப்பார்க்கவேண்டியது அவசியம். ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்குப்பின் நூற்றுக்கணக்கான மொழிகளில் உலகின் எல்லாப் பகுதிகளில் உள்ள மக்களும் தம் கடிதங்களை வாசிப்பார்கள்

என்று பவுல் கனவில் கூட நினைத்துப்பார்த்திருக்கமாட்டார். இது நிச்சயம்.

## கொலோசேயருக்கும் எபேசியருக்கும் எழுதுகிறார்

இப்போது எப்பாப்பிரா வருகிறார். இவர் கொலோசே பட்டணத்தில் உள்ள சபையின் முக்கிய உறுப்பினரில் ஒருவர். எபேசு பட்டினத்திற்குக் கிழக்காக நூற்று அறுபது கிலோ மீட்டர் தொலைவில் இப்பட்டணம் இருந்தது. எபேசு சபையினர் அங்கு சென்று இச்சபையைத் தொடங்கியிருந்தனர். இவர் ஒரு பிரச்சினையோடு வந்தார். அதாவது ஒரு புதிய பேச்சாளர் வந்து கிறிஸ்தவ சபையினரிடம் குழப்பமான கருத்துக்களைக் கூறுவதாகச் சொன்னார். பவுல் இச்சபையைப் பார்த்ததேயில்லை. ஆனாலும் பவுல் தங்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று எப்பாப்பிரா அவரை வேண்டிக்கொண்டார். பவுல் உடனே கடிதம் எழுதி அதைத் தீகிக்கு கையில் கொடுத்தனுப்பினார். கிறிஸ்தவ விசுவாசம் என்றால் என்னவென்றும் அன்பு காட்டுதல், மன்னித்தல், சகித்துக்கொள்ளுதல் போன்ற கிறிஸ்தவ அறங்களைப் பயின்று அவற்றை நடத்தையில் காட்டவேண்டுமென்றும் அவர் அறிவுரை கூறி எழுதினார். ஒநேசிமு பிலேமோனிடம் திரும்பிச் சென்றபோது தீகிக்கும் அவரோடு பயணம் செய்தார் (கொலோ. 4:7–9).

இக்கடிதத்தில் லவோதிக்கேயா சபைக்கு இது போன்ற கடிதம் ஒன்றை எழுதியதைப் பற்றிப் பவுல் குறிப்பிடுகிறார் (கொலோ. 4:16; இதோடு வெளி. 1:11ஐயும் 3:14ஐயும் ஒப்பிட்டுப் பாருங்கள்). இருசபைகளும் ஒருவர் கடிதத்தை மற்றவரிடம் மாற்றிக்கொள்ளும்படி ஆலோசனை கூறுகிறார். சிறப்பாக இந்தக் கடிதம் ஒரு சுற்றறிக்கைபோல் எழுதி அனுப்பப்பட்டது. இதில் கிறிஸ்தவ வாழ்க்கைபற்றியும் நடத்தைபற்றியும் விளக்கம் கொடுத்திருந்தார் பவுல். இந்த லவோதிக்கேயா கடிதம்தான் ஒருகால் இன்று எபேசியர் நிருபம் என்று நாம் குறிப்பிடும் நிருபமாக இருக்கலாம். பொதுவாக அவர் எழுதுவது போல் நண்பர்களையும், தம்மைக் கடைசி முறையாக வழியனுப்ப மெலித்தாவரை சென்றவர்களையும் அவர் அன்போடு விசாரித்து எழுதவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும் (எபே. 3:2 உடன் ஒத்துப் பாருங்கள்). ஆயினும் பவுல் எழுதிய கடிதங்களில் இதுவே மிக அருமையான கடிதம் எனலாம். இது தெய்வீக எழுச்சி பெற்று எழுதப்பட்ட சிறப்பு வாய்ந்த கடிதம். இயேசு இவ்வுலகில் வந்து தோன்றுவதற்கு முன்பே கடவுள் மனிதனில் உள்ள தீமையைக் களைந்துபோடுவதற்குத் திட்டம் தீட்டியிருந்தார். இத்திருப்பணியைச் செய்வதற்கும் எவ்விடத்திலுமுள்ள எல்லா மனிதரையும் மறுபடியும் தம் மண்டை கொண்டுவரவுமே இயேசு அனுப்பப்பட்டார். இப்பூவுலகில் கடவுளின் அரசாம் கிறிஸ்துவின் திருச்சபையைக்கொண்டே கடவுள் இப்பணியைச் செய்ய விழைகிறார் (எபே. 2:12–20; 3:9–11; 4:1–6, 17, 22–25, 28–32; 5:1, 2, 8, 11, 21–27; 6:5, 6, 9). எனவே சபையார் இந்த மாபெரும் அழைப்பிற்குத் தகுதி படைத்தவர்களாய் இருந்து ஒன்றுபட்ட ஒரு திருச்சபையை அமைக்கவேண்டும் என்று எழுதினார்.

சங்கிலியால் தம்மோடு பிணைக்கப்பட்டிருந்த அந்தக் கம்பீரமான உரோமக் காவலரைப் பார்த்தபடியே பவுல் எழுதிய வசனங்கள் இன்றும் நம் நினைவில் பசுமையாய் நிற்கின்றன. இவைகளை நீங்கள் எபே. 6:10–18 வசனங்களில் படிக்கலாம்.

## பிலிப்பி சபையாருக்குக் கடிதம்

எப்பாப்பிராதீத்து ஒரு முறை பிலிப்பி சபையிலிருந்து நன்கொடைகளை எடுத்துக்கொண்டு பவுலைப் பார்க்க வந்தார். வந்த இடத்தில் அவர் நோய்வாய்ப்பட்டுவிட்டார். அவர் குணமடைந்த பின் பவுல் பிலிப்பி பட்டணத்தில் உள்ள சிறை அதிகாரி, லீதியாள், மற்றும் தம் நண்பர்களுக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுத்தனுப்ப நினைக்கிறார். இது மகிழ்ச்சி ததும்ப எழுதப்பட்ட கடிதம். தம்மைப்பற்றிக் கவலையோடிருந்த கிறிஸ்தவ நண்பர்களுக்கு உற்சாகமூட்டி அவர்களிடம் ஐக்கியத்தையும் பொருட்களைப் பகிர்ந்து கொள்ளும் பண்பையும் தூண்டத்தக்கதாக இக்கடிதத்தை வரைகிறார் (பிலி. 4:1, 4, 10). 4ம் அதிகாரம் 8ம் வசனத்தில் திருமறையில் உள்ள மிக அழகான சொற்கள் சில காண்கிறோம். அவர் நண்பர்கள் அனைவரும் வாழ்த்துக் கூறுவதாகக் கடிதத்தில் எழுதுகிறார். அதில் பேரரசருடைய வீட்டு வேலையாட்களும் உண்டு.

தம்முடைய பல்வேறு சிறைவாசங்களைப் பற்றிப் பவுல் குறிப்பிடுகிறார். எபேசியருக்கும் கொலோசேயருக்கும் பிலேமோனுக்கும், பிலிப்பியருக்கும் எழுதிய கடிதங்கள் சிறையிலிருந்து எழுதப்பட்ட கடிதங்கள் எனப்படுகின்றன. எந்தச் சிறையில் இருந்தபோது இவைகளை எழுதினார் என்று உறுதியாகக்

கூறமுடியாது. செசரியா, எபேசு பட்டினங்களிலிருந்து இவற்றை எழுதியிருக்கக் கூடும். உரோமாபுரியிலிருந்து இவற்றை இவர் எழுதியதாக நம்பப்படுகிறது.

### உரோமர்களின் ஐயம்

இதற்கிடையே உரோமில் பேரரசருடைய அரசவையில் கொந்தளிப்பு ஏற்படத் தொடங்கிற்று. ஆக்டேவியஸின் காலத்தில் இருந்தே பேரரசரை தெய்வமாக எண்ணி மக்கள் வழிபட்டு வந்தனர். மந்திரச் சடங்குகளையும் விநோதமான வழிபாட்டு முறைகளையும்கொண்ட 'குருட்டு'ச் சமயங்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்த காலம் அது. வாழ்க்கைக்கு 'விளக்கம் தரும்' தத்துவ அடிப்படையில் ஏற்பட்ட சமயங்களும் உண்டு. மற்ற நாடுகளில் உள்ள தெய்வங்கள்மேல் மக்கள் பலவிதமான நம்பிக்கை வைத்திருந்தனர். பிரிகியாவின் சிபிலி, எகிப்தின் ஐசிஸ், பெர்சியாவின் மித்ராஸ் போன்ற தெய்வங்களை அவர்கள் வணங்கி வந்தனர். மித்ராஸ் வழிபாடு சிறந்து விளங்கியது. இங்கிலாந்திலும் கூட இது கிறிஸ்தவத்திற்கு ஒரு போட்டியாகப் பல ஆண்டுகள் இருந்து வந்தது. மறுமை வாழ்வில் நம்பிக்கையூட்டி சிறப்பாகப் போர் வீரர்களை அந்த ஆலயங்கள் கவர்ந்து நின்றன.

மற்றைய சமயங்கள் தரும் எல்லா நற்பேற்றையும் கிறிஸ்தவமதம் தர முன்வந்தது. விடுதலையா? மறுமை வாழ்வா? மெய் கடவுளா? மீட்பரா? எல்லாம் கிறிஸ்தவத்தில் உண்டு.

இதுவரை, அதாவது கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கை ஆட்சியுரிமை, அரசியல் ஒழுங்கு முறை, பேரரசருடைய ஆற்றல் முதலியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் இருந்தவரை, உரோமிலுள்ள மக்கள் கிறிஸ்தவர்களோடு ஒப்புரவு காட்டினுர்கள். ஆனுல், இந்தக் கிறிஸ்தவர்கள் இப்போது நீரோவுக்குத் தூபங்காட்டவும் புறச் சமயத்தார் பண்டிகைகளிலும் ஊர்வலங்களிலும் கலந்துகொள்ளவும் மறுக்கிறுர்களே! தங்களுடையவர்களுக்கு மாத்திரம்இரகசியமாகக் கூட்டங்கள் வைத்து இரகசியமாக ஒருவிருந்தும்நடத்திக்கொள்ளுகிறுர்களே! கிறிஸ்துவாகிய மேசியாவே சிறந்த கடவுள் என்றும், இரட்சகர் என்றும் பேசத் தொடங்கியிருக்கிறுர்களே! இவை உரோமர் தங்கள் பேரரசர்களின் பண்புகளை எடுத்துரைக்க உபயோகிக்கும் சொற்களாகும். பேரரசர் ஜூலியஸ் சீசரை அவர்கள் 'கடவுளின் அவதாரம்' என்றும், 'மனுக்குலத்தின் இரட்சகன்' என்றும் புகழ்வதுண்டு. அகுஸ்து பேரரசரை 'தேவாதிதேவன்' 'தேவ மகன்' என்றெல்லாம் சிறப்பித்தார்கள். இவரையும் கிலவுதியு பேரரசரையும், 'கடவுளே!' 'ஆண்டவரே!' என்றுகூட அழைத்தார்கள். இப்போது நீரோவை 'ஆண்டவன்' (அப். 25:26) 'பேரரசராகிய கடவுள்' என்றெல்லாம் அழைத்தார்கள். அரச கட்டளைகள் புனித வேத வாக்குகள் எனப்பட்டன.

பேரரசரைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டு தாங்கள் வழிபடும்போது அப்படி ஏற்க மறுப்பவர்களை உரோமர்கள் சந்தேகக் கண்ணேடு பார்ப்பது இயல்பே. அரசரைத் தெய்வமாக நினைத்து வழிபடுவது இயலாத காரியம். மேலும் கிறிஸ்தவர்கள் தங்கள் கடவுளை ஆண்டவர் என்றும் இரட்சகர் என்றும் புனிதமான கடவுள் என்றும் சொல்லிவருகிறுர்கள். இவை உரோமப் பேரரசர்களுக்குத் தாங்கள் உபயோகித்து வந்த பெயர்களே!

உரோமிலுள்ளவர்கள் கிறிஸ்தவர்கள்மேல் பகைமை கொண்டனர். பிடிவாதப் போக்குள்ள கிறிஸ்தவர்களை இன்னும் உறுதியான கட்டுப்பாட்டுக்குள் வைக்க எண்ணினர். உரோமர்கள் இவ்விதம் பல தெய்வங்களையும் மனிதர்களையும் வழிபட்டு வந்தாலும், கிறிஸ்தவர்களின் புதிய வாழ்க்கை நெறி அமைதியும் மகிழ்ச்சியும் மேம்பட்ட வாழ்வும் உதவ முன்வந்தது என்ற உண்மையை அவர்கள் அறியாமலில்லை. ஆனுலும் வேண்டுமென்றே கிறிஸ்தவ சமயத்தை வெறுத்து ஒதுக்கி, கிறிஸ்தவர்கள்மேல் சந்தேகம் கொண்டதோடு பகைமை உணர்ச்சியும் காட்டி நின்றனர். வெளிப்படையாக அவர்களைத் துன்புறுத்தத் தொடங்குவதற்குச் சாக்காக ஒரு நிகழ்ச்சியே வேண்டியதாய் இருந்தது. பேரரசின் தலைநகரில் அவ்விதம் ஒரு நிகழ்ச்சி தொடங்கிவிட்டால் போதும், பிறகு உரோமப் பேரரசு முழுவதும் அது பரவிவிடும்; கிறிஸ்தவ சமயமும் பூண்டோடு அழிந்துவிடும். ஒருவன் தன்னைக் கிறிஸ்தவன் என்று வெளிப்படையாகச் சொல்லிக் கொள்வது அப்போதுகூட ஆபத்தானதாயிருந்தது.

கி.பி. 64ல் அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் வந்துவிட்டது. அது உரோமில் ஏற்பட்ட மாபெரும் தீ விபத்து. யார்மீது பழியைப் போடலாம் என்று காத்துக்கொண்டிருந்த நீரோ இதற்குக் காரணம் கிறிஸ்தவர்களே என்று சொல்லிவிட்டார். உடனே கொடுமை தலைவிரித்தாடியது. அக்கொடுமையின் கோர

தாண்டவத்தை வரலாற்றின் வழியாக நாம் அறிகிறோம். கிறிஸ்தவர்கள் வதைக்கப்பட்டார்கள்; கொடுஞ்சிலுவையில் கொல்லப்பட்டார்கள்; விலங்குகளின் தோல்களில் வைத்துத் தைக்கப்பட்டு விளையாட்டரங்கங்களில் காட்டு மிருகங்கள் நடுவே தூக்கி எறியப்பட்டனர்; தம்முடைய பூந்தோட்டங்களில் பேரரசர் தம் நண்பர்களோடு குடித்து விருந்துண்ணும்போது கிறிஸ்தவர்கள் அங்கே தீப்பந்தங்களாக உடலில் தார் பூசிக் கொளுத்தப்பட்டனர்.



நீரோ

### பவுலுக்கு என்ன நடந்தது?

இச்சமயத்தில் பவுல் எங்கிருந்தார்? இரு வருடங்கள் கழித்து நீரோ பவுலை விடுதலை செய்துவிட்டதாக நம்பப்படுகிறது. பெஸ்து, யூலியு என்பவர்களும் ஒருவேளை அகிரிப்பாவும் கொடுத்த நற்சான்றுகளை வைத்து இப்படி அவர் செய்திருக்கலாம். குற்றம் ஏதும் சாட்டப்படாத கைதியை பதினெட்டுத் திங்களுக்குமேல் சிறையில் அடைத்துவைக்கக் கூடாது என்பது உரோமச் சட்டம். எருசலேமில் இருந்த யூதர்கள் முதலில் கொடுத்த புகாரைத் தொடர்ந்து வேறு புகார்கள் எதுவும் கொடுக்காமல் இருந்துவிட்டனர். உரோமர்களுக்கு எவ்விதக் குற்றமும் சாட்ட வகையில்லை. எனவே பதினெட்டு மாதங்கள், அதாவது ஏறத்தாழ 'இரண்டு' ஆண்டுகள் கழித்து பவுல் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம்.

ஆகவே கி.பி. 61ஐ ஒட்டி மீண்டும் சுற்றித் திரிந்து 'ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை'ப் பற்றித் திருவுரை ஆற்றவும் கிறிஸ்தவ நம்பிக்கை குறித்து நன்கு வலியுறுத்திப் பேசவும் பவுலுக்கு வாய்ப்பு கிடைத்தது. கடிதத்தில் வாக்களித்த வண்ணம் கொலோசேயில் பிலேமோனை அவர் சந்தித்திருக்கக்கூடும். அவர் ஸ்பெயின் நாடுவரை சென்றதாக மரபுச் செய்தி ஒன்று கூறுகிறது. கிறிஸ்தவர்கள் வதைக்கப்பட்டபோது பவுல் உரோமுக்கு வெகு தொலைவில், சின்ன ஆசியாவில் எங்காவது, அநேகமாக எபேசு பட்டினத்தில் இருந்திருக்கக்கூடும். எதிரிகள் அவரை கவனித்து வந்திருக்கலாம். அவர்களில் யாராவது ஒருவர் காட்டிக்கொடுத்துமிருப்பார்கள். 2 தீமோ. 4:14ல் அலெக்சாந்தர் என்ற கருமான் குற்றஞ்சாட்டி விட்டதாக அவன்மேல் பவுல் குறைபடுகிறார். துரோவா பட்டினத்துக்குச் சமீபமாகப் பவுல் இருந்த இடத்தை இவன்தான் காட்டிக்கொடுத்திருக்கக்கூடும். இறுதியாகப் பவுல் கைது செய்யப்பட்டார். பேரரசரால் விசாரிக்கப்பட தமக்குள்ள உரிமையை எடுத்துக்காட்டிய தன்பேரில் உரோமுக்கு அழைத்துவரப்பட்டார். அவரோடு அவர் அருமை நண்பர் லூக்கா மட்டும் இருந்தார். பேதுரு இருந்த சிறையிலேயே பவுலும் அடைக்கப்பட்டதாகச் செவிவழிச் செய்தி ஒன்று கூறுகிறது. அவருக்கு இப்போது பலத்த காவல் போடப்பட்டது. நண்பர்கள் எவரையும் பார்ப்பதற்கு அவர் அனுமதிக்கப்படவில்லை. பலர் அவரை விட்டு ஓடிவிட்டார்கள். 'அவர்கள் எல்லோரும் என்னைவிட்டு விலகிப்போய் விட்டார்கள்' என்று பவுல் எழுதுகிறார் (2 தீமோ. 1:15).

### 'ஆயர்களுக்கான கடிதங்கள்'

சிறையிலிருந்த இச்சமயம்தான் தீமோத்தேயுவையும் தீத்துவையும் உற்சாகப்படுத்த பவுல் மூன்று கடிதங்களை எழுதியிருக்கலாம். முழுக்க முழுக்க கிறிஸ்தவ நடத்தைபற்றி அறிவுரை கொடுத்து சபையின் தலைவர்களாக அவர்கள் ஊழியத்தில் ஊக்கப்படுத்த இந்தக் கடிதங்களை எழுதுகிறார். இன்று சபை ஊழியக்காரரை 'ஆயர்கள்' என்னும் பொருள்பட 'பாஸ்டர்' என்று அழைக்கி

றோம். எனவே இந்தக் கடிதங்கள் 'ஆயர்களுக்கான கடிதங்கள்' எனப்பட்டன. சில ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி இக் கடிதங்களின் சில பகுதிகளே பவுலால் எழுதப் பட்டவை. இதில் எந்தெந்தப் பகுதிகள் பவுல் எழுதியிருக்கக் கூடியவை என்று நாம் கண்டு பிடித்துவிடலாம்.

கிரேத்தா தீவிலிருந்த கிறிஸ்தவ சபைக்கு தீத்து பொறுப்பாயிருந்து நடத்தி வந்தார். பவுல் அங்கு சென்று அவரைப் பார்த்து வந்திருக்கிறார். ஆனால் வெகுநாள் அவர்களோடு தங்கி, தாம் செய்ய நினைத்தவைகளைச் செய்து முடிக்கவில்லை. தீத்து இளவயதாயிருந்ததால் வயதில் பெரியவர்கள் சிலர் அவருக்கு கீழ்ப் படிய மனம் இல்லாமல் இருந்தார்கள். எனவே, பவுல் அவருக்கு சபை காரியங்களில் அறிவூட்ட தீமோத்தேயுவுக்கு எழுதினதைப் போன்ற அறிவுரைகளைக் கூறி எழுதுகிறார்.

எபேசு சபையின் பேராயராகத் தீமோத்தேயு இருந்தார். பேராயர் என்ற சொல்லுக்கு 'தலைவர்' அல்லது 'மேற்பார்வையாளர்' என்பதுதான் பொருள். தீமோத்தேயு பெருமைக்குரிய இப்பணிக்குப் பொருத்தமானவர். ஏனெனில் 'வேத வாக்கியங்களில் நன்கு தேறியிருந்தார்'. பவுலே நேரடியாக அவரைப் பயிற்றுவித்திருந்தார். தீமோத்தேயுவுக்கு எவ்விதம் தனிப்பட்ட முறையில் ஆலோசனை கூறினர் என்பதை அறிய 1 தீமோ. 6:11–16 வாசித்துப் பார்க்கவும். கடிதங்கள் முழுவதிலும் விசுவாசத்தில் தம் பிள்ளையாகிய அவர்மேல் பவுல் அன்பைக் கொட்டி நிற்பதை நாம் காண்கிறோம். பொய்யான போதகர்களையும் கள்ளப் போதகர்களையும் குறித்து கவனமாயிருக்க வேண்டும் என்று பவுல் அவருக்கு எச்சரிப்புக் கொடுக்கிறார். சிலர் நம்புவதுபோல் முதல் கடிதம் பவுல் மக்கெதோனியாவிலிருந்த போது எழுதப்பட்டிருந்தால், இரண்டாம் கடிதம் உரோமில் சிறையிலிருந்துதான் அனுப்பப்பட்டிருக்கவேண்டும். பவுல் இப் போது முதிர்வயதினர். தாம் கொண்ட திரு நம்பிக்கைக்காக மரண தண்டனை விதிக்கப் பட்டவர். மரணமடையுமுன் ஒருமுறை தீமோத்தேயுவைக் காண ஆவலாயிருக்கிறார் (2 தீமோ. 1:3,4; 4:9,21). ஒருவேளை தீமோத்தேயு தக்க சமயத்தில் வரக்கூடாமற் போகுமோ என எண்ணி, பவுல் மறுபடியும் ஏராளமான அறிவுரைகளைக் கூறியுள்ளார். குளிர் வாட்டுகின்றது. சிறைக்கூடத் தனியறையின் கடுமையான குளிரினின்று தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக சிலிசியா நாட்டு முரட்டு மேல் அங்கியையும் தம் முடைய சுருள்களையும் தோற் சுருள்களையும் கொண்டு வரச்சொல்லி எழுதுகிறார். 'சிறப்பாய் அத்தோற் சுருள்கள்' என்று குறிப்பிடுகிறார் (2 தீமோ. 4:13). 4:6–8ல் இயேசுவில் கொண்ட அவருடைய நம்பிக்கையின் வெற்றியும் நிச்சயமும் காணப்படுகின்றன. நாம் என்றுமே இவ்வசனங்களை மறக்க முடியாது.

### பவுல் கொல்லப்பட்டார்


பவுலுக்கு விசாரணை வைத்தார்கள். அந்நாளில் கிறிஸ்தவர்களுக்கு விசாரணை என்றால் முடிவைப்பற்றிக் கேட்க வேண்டுமா? இவர் கிறிஸ்தவர்களுக்குத் தலைவர். இவர் சாகத் தான் வேண்டும் என்று தீர்ப்பளித்தனர். ஏற்கெனவே அவருடைய கூட்டத்தார் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டாயிற்று. தீக்கிரையானவர்கள் எத்தனையோ பேர்! வாளுக்கு இரையாகி உயிரிழந்தவர் எத்தனை பேர்! வதைக்கப்பட்டு சிங்கங்களுக்கு முன்னுகத் தூக்கி எறியப்பட்டவர்கள் பலர்; விளையாட்டு அரங்கில் சிலுவையில் தூக்கப்பட்டவர்கள் ஏராளம். பவுலுக்குக் கிடைத்திருந்த உரோமக் குடியுரிமை அவர் இறுதிநாள்வரை பயன்பட்டது. அவருக்கு இத்தகைய சித்திரவதைகள், கொடுமைகள் எதுவும் இல்லை. அவருக்கு உரோமக் குடிமகனுக்குரிய தண்டனை கொடுக்கப்பட்டது. அவர் வாளால் வெட்டப் பட்டார்! அவரும் பேதுருவும் ஒன்றாகச் சாவு மேடைக்கு அனுப்பப்பட்டதாக மரபுவழிச் செய்தி ஒன்று கூறுகிறது. பேதுருவை விளையாட்டு அரங்குக்கும் பவுலை ஊருக்கு வெளியே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தேவதாரு மரக்காடுகள் நிறைந்த சால்விய நீரூற்று என்னுமிடத்திற்கும் கொண்டு போனார்கள். செஸ்துவின் கல்லறைக் கோபுரம் பக்கத்தில் இந்த இடம் உண்டு. பவுல் முதன் முதல் உரோமுக்கு வந்தபோது இதனைப் பார்த்திருந்தார். ஆஸ்தியா துறைமுகத்திற்குச் செல்லும் அந்த நீண்ட உரோமப் பெருஞ்சாலைக்கு அருகே இது நிற்கிறது. யூலியுவும் பவுலின் காவலர்களாக அவரோடு வந்தவர்களும் எழுபது வயது நிரம்பிய இந்த வயோதிகர் இறுதி முறையாக முழந்தாளிட்டு வாளுக்குத் தலையை நீட்டுவதைப் பார்த்து வருந்தியிருக்கக்கூடும். எப்பொழுது இக்கொடுமை நடந்தது என்று நம்மால் திட்டமாய்க் கூற முடியவில்லை. ஏறத்தாழ கி.பி. 64ல் இது நிகழ்ந்திருக்கலாம்.

### கிறிஸ்தவம் இங்கிலாந்துக்குச் செல்கிறது


பவுலின் காலத்தில் உரோமப் போர்வீரர்கள் இங்கிலாந்தின்மேல் படையெடுத்துச்

சென்று அங்கு குடியேறிக்கொண்டிருந்தார்கள். உரோமப் பெரும் படைகள் தென் பகுதியில் வந்து இறங்கி, லண்டனிலிருந்து புறப்பட்டு இங்கிலாந்து நாட்டில் மேற்கேயும் கிழக்கேயும் வட திசையிலும் பரவிவிட்டன. எங்கெல்லாம் இவர்கள் சென்றார்களோ அங்கெல்லாம் பிரித்தானியர்களைத் தோற்கடித்து தங்கள் ஊர்களையும் பட்டணங்களையும் கட்டத் தொடங்கினர். மித்ராஸ் என்னும் தெய்வத்தை வணங்கிய உரோமப் படை வீரர்கள் அந்தச் சிலைகளைக் கொண்டு வந்து ஆலயங்கள் அமைத்துக்கொண்டார்கள். பெர்சியர்கள் தொழுதுவந்த மிகப் பழங்காலத்துத் தெய்வம் இது. இன்றும்கூட மெசொபொத்தோமியாவில் ஏரேக் என்னுமிடத்தில் (ஆதி. 10:8–10) புதை பொருள் ஆராய்ச்சியாளர் கி.மு. 3000ல் இருந்த மித்ராசின் ஆலயத்தைக் கண்டுபிடித்துள்ளனர். மித்ராசை உரோமர்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டனர் (புத்தகம் 2, அத்தியாயம் 12). சாவாமையும் மறுமையும் அருளுவதாக நம்பப்பட்ட சில உரோமத் தெய்வங்களில் இந்த மித்ராஸ் ஒன்று. இப்போர் வீரர்களில் பலர் கிறிஸ்தவம் என்ற புதிதான நம்பிக்கை குறித்துக் கேள்விப்பட்டு அதை ஏற்றுக்கொண்டு மதம் மாறியவர்கள். சிலர் மித்ராசிடமும் நம்பிக்கை வைத்திருந்து இயேசுவையும் வணங்கி வந்தனர். இவர்கள் பவுலைக் குறித்துக் கேள்விப்பட்டிருந்தார்கள். பவுலுக்குக் காவல் வீரர்களாகவும் இருந்திருக்கலாம். தங்கள் சமய நம்பிக்கையில் உறுதிகொண்டு, இயேசுவோடு மீண்டும் 'உயிர்பெற்று எழுவோம்' என்ற நம்பிக்கையில் சாவை அணைத்த கிறிஸ்தவர்களின் வியக்கத்தக்க நெஞ்சுரத்தை இவர்கள் அறிவார்கள். இந்த உறுதி இவர்கள் நெஞ்சில் ஆழமாகப் பதிந்தது. தாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமயத்தை இங்கு கண்டனர். மித்ராஸ் வழிபாட்டைவிட அது மிகச் சிறந்ததாய் இருந்தது.

இவ்வாறு உரோமர்களும் பிரித்தானியர்களும் கிறிஸ்தவ நம்பிக்கையில் ஒருசேர வளர்ந்தனர். எனவே, பிற்காலத்தில் தூதுப் பணியாளர் இங்கிலாந்திற்குச் சென்றபோது பவுல் சொல்லிய வழிகளில் இயேசுவுக்காக உழைத்து நின்ற பல கிறிஸ்தவர்கள் இங்கு ஏற்கெனவே இருப்பதைக் கண்டார்கள்.



இரத்தச் சாட்சிகளாக மரித்த சில கிறிஸ்தவர்கள்



பேதுரு, பவுல், தூய பேதுருவின் ஆலயம், சர்க்கஸ் மாக்சிமஸ் என்ற விளையாட்டு அரங்கம்

### கிறிஸ்தவம் இந்தியாவுக்கு வருகிறது

கி.பி. 52ல் அப்போஸ்தலராகிய தோமா இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கொச்சி என்ற இடத்தில் வந்து இறங்கினர் என்று ஒரு மரபுச் செய்தி உண்டு. தமது இரண்டாம் தூதுப் பயணத்தை முடித்துக்கொண்டு பவுல் அந்தியோகியா வந்து சேர்ந்த சமயம் இது. தோமாவின் தூதுரை கேட்டு, பலர் திரு முழுக்குப் பெற்றனர். சிலகாலம் தொடர்ந்து திருப்பணி செய்துவிட்டு, கிழக்குக் கடற்கரை வந்து சென்னையிலுள்ள மயிலாப்பூர் பகுதியில் தூதுரையாற்றினர். இங்குள்ள அரசரும் மற்றும் பலரும் தோமாவின் சான்றுரை கேட்டு, கிறிஸ்தவர்களாக மாறினர்கள். திருப்பணி தொடர்ந்து வெற்றிகரமாய் நடந்துவரவே இவருக்குப் பகைவர் பலர் உண்டாயினர். கி.பி. 72ல் நகரின் தெற்கே 8 கிலோ மீட்டர் தொலைவில், ஒரு சிறிய குன்றின் குகையில் ஒளிந்திருந்தபோது அவர் தாக்கப்பட்டார். உடனே அங்கிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் சற்றுத் தெற்கேயுள்ள மற்றொரு குன்றின்உச்சிக்கு அவர் ஓடிச் சென்ருர். அவரைத்தொடர்ந்து சென்று பிடித்து ஈட்டியால் குத்திக் கொன்றுபோட்டார்கள். இக்குன்று தூய தோமாவின் குன்றென்று இன்று அழைக்கப்படுகிறது. தோமாவின் உடல் மயிலாப்பூரில் அடக்கம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர் அடக்கம் பண்ணப்பட்டதாகவழிவழியாய்க்கூறப்படும் இடத்தை 'சாந் தோம்' பேராலயத்தில் இன்று நாம் காணலாம். மனிதர்களை வாழ்விக்கும் நம்பிக்கையாம் கிறிஸ்தவப் பணிக்கு 'பூமியின் கடைசிபரியந்தம் எடுத்துச் செல்லுங்கள்' என்று ஆதிச் சீடர்களுக்குக் கொடுக்கப்பட்ட அப்பணிக்குச் சான்ருக இப்பேராலயம் திகழுகிறது.

## விளக்கப் பயிற்சி

1. செனேக்கா கல்லியோவின் உடன் பிறந்தவர். நீரோவின் முதலமைச்சராகவும் பணியாற்றினர். பவுலைப்பற்றி கொரிந்து பட்டணத்திலிருந்து கல்லியோ செய்தி அனுப்பினர். பெஸ்து, லீசியா, அகிரிப்பாவும் தங்கள் அறிக்கைகளைக் கொடுத்திருந்தார்கள். இவற்றைப் பயன்படுத்தி பேரரசரின் முன்னிலையில் பவுல் முதன் முறையாக விசாரிக்கப்பட்டதை நாடகமாக்குங்கள். யூலியு அனுப்பிய அறிக்கையையும் பயன்படுத்தலாம். எருசலேமிலிருந்து யாரும் குற்றஞ்சாட்டவில்லை என்பதையும் மனதில் கொண்டு நாடகத்தைத் தயாரியுங்கள்.

2. கொலோசே சபையில் உள்ள சிக்கல்களைப்பற்றி எப்பாப்பிராதீத்துவும் பவுலும் விவாதிப்பதுபோல் உரையாடுங்கள். எப்பாப்பிராதீத்து பிலிப்பி சபையிலிருந்து நன்கொடைகளைக் கொண்டு வந்து அங்குள்ள செய்தியையும் கூறுகிறுர். அவரைப்போல் நீங்கள் நடித்துக் காண்பியுங்கள்.

3. உரோம வழிபாடுகள் குறித்து திரட்டக்கூடிய செய்திகளையெல்லாம் திரட்டுங்கள். மித்ராஸ் வழிபாடு கிறிஸ்தவ சமயத்திற்குப் போட்டியாக நின்றது ஏன்?

4. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வாழும் 'சர்க்கஸ் மாக்சிமஸ்' என்ற திறந்த வெளி அரங்கின் அருகில் தீப்பிடித்துவிட்டதைக் குறித்து நீரோவுக்கு அறிவியுங்கள். விபத்தை விவரியுங்கள் (வெளி. 18:11—19 வசனங்கள் இவ்விபத்தைக் கற்பனை செய்ய உங்களுக்கு உதவும்).

5. எபே. 4:25—32; பிலி. 4:8ஐ மனப்பாடம் செய்யுங்கள். 2 தீமோ. 4:7ஐ அழகான எழுத்துக்களில் எழுதிவையுங்கள்.

6. ஒநேசிமுவும், பிலேமோனும் சந்தித்ததை நாடகமாய் நடியுங்கள்.

7. கிறிஸ்தவ இரத்தச்சாட்சிகளாய் உயிர் விட்ட பன்னிரண்டு பேரை, கால வரிசைப்படி தெரிந்தெடுத்து, அவர்களைப்பற்றிய எல்லா விவரங்களையும் சேகரித்து, உங்கள் வகுப்பில் உள்ளவர்களுக்கு சொற்பொழிவாற்றுங்கள்.

8. பேதுரு, பவுல் இவர்களின் மரணம் குறித்த செய்திகளை மாற்கு தம் வீட்டாரிடம் கூறுவதுபோல் கூறுங்கள்.

அல்லது

செசரியா பட்டினத்தில் உள்ள தம் நண்பர்களுக்குப் பவுல் இறந்த விதத்தை யூலியு வருணிப்பதுபோல் சொல்லுங்கள்.

9. உரோமர்கள், பிரித்தானியர்கள் என்று இரு குழுக்களாகப் பிரிந்து கொள்ளுங்கள். உரோமப் படை வீரர்களும் பிரிட்டனில் குடியேற வந்தவர்களும் கொண்டுவந்த 'புதிய சமய'த்தைப் பற்றிப் பேசுங்கள்.

10. டாக்டர் ஆல்பர்ட் சுவைட்சர் 'இருபதாம் நூற்றுண்டின் பவுல்' எனப்படுகிறுர். இப்பெரியாரைப்பற்றிய விவரங்கள் சேகரித்து, இக்கூற்று சரியென்று நீங்கள் நினைக்கிறீர்களா என்று கூறுங்கள். இப்படி வருணிக்கப்படுவதால் சுவைட்சருக்குப் பெருமைதானே? சுவைட்சரின் பணிக்கும் பவுலின் பணிக்கும் எந்த அளவு ஒற்றுமை இருக்கிறது? ஏதாவது வேற்றுமைகள் இருக்கின்றனவா?


11. காலைக் கூட்டத்திற்காக 'தூதுப் பணியாளர்கள்' அல்லது 'இந்தியாவிற்கு கிறிஸ்தவ சமயம் வருகிறது' என்ற தலைப்பில் ஓர் ஆராதனை ஒழுங்கு ஆயத்தம் செய்யுங்கள்.

12. தூய தோமா இந்தியாவுக்கு வந்ததைக் குறித்து கண்டுபிடிக்கக்கூடிய விவரங்களையெல்லாம் கண்டுபிடிங்கள்.

* * * *

# அரும்பதவுரைத் தொகுதி

| | |
|---|---|
| அரமிய | Aramaic |
| குடியிருப்பு | Colony/Settlement |
| குழுப்பாடம் | Choral Speech |
| சிதறிக்கிடந்த யூதர்கள் | Jews of the Dispersion |
| தலைமைக் குரு | Chief Priest |
| திருச்சட்டம் | Law |
| தீட்டான | Unclean |
| தேற்றரவாளர் | Comforter |
| நாடகப் பாடமாகப் படித்தல் | Dramatic Reading |
| மரபு | Tradition |
| மறுமை வாழ்வு | After Life |
| யாவே | Jehovah/God |
| யூதா இஸ்காரியோத் | Judas Iscariot |
| விண்ணரசு | Kingdom of Heaven |
| விண்ணுலக அரசு | " " " |
| விண்ணேற்றம் | Ascension |
| விவாதக் கூட்டம் | Council of Jerusalem |
| ஹெலனிய | Hellenist |



சென்னையிலுள்ள சான்தோம் ஆலயம்

| ஆண்டு | ஆதித் திருச்சபை | புதிய ஏற்பாடு | பலஸ்தீனாவின் ஆளுநர் | உரோமப் பேரரசின் அரசர்கள் |
|---|---|---|---|---|
| கி.மு. 6–5 | கிறிஸ்து பிறந்தார் | | பெரிய ஏரோது கி.மு. 40–4<br>அர்கெலாவு கி.மு. 4–கி.பி. 6 { யூதேயா, சமாரியா, இதுமேயா<br>அந்திப்பா கி.மு. 4–கி.பி. 39 கலிலேயா<br>பிலிப்பு கி.மு. 4–கி.பி. 34 இத்துரேயா<br>யூதேயாவில் உரோம அரசப் பிரதிநிதிகள் கி.பி. 6 முதல்<br>பொந்தியு பிலாத்து கி.பி. 26–36 | அகுஸ்து சீசர் கி.மு. 31-கி.பி. 14 |
| | இயேசு ஊழியம் செய்தார் | | | |
| கி.பி. 29 | சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்தார் | | | |
| 31/32 | ஸ்தேவான் கல்லெறியப்பட்டார் | | | திபேரியா சீசர் 14–37 |
| 32/33 | சவுல் மனம் மாறினார் | | | |
| 34/35 | பவுல் முதல் முறை எருசலேம் சென்றார் | | அகிரிப்பா I 39–44 | களகுலா 37–41 |
| 46 | யூதேயாவில் பஞ்சம் | | உரோமுக்கு அடியில் யூதேயா 44 | |
| | பவுல் இரண்டாம் முறை எருசலேம் சென்றார் | | | |
| 47–49 | முதல் தூதுப் பயணம் | கலாத்தியர் 48/49 அல்லது 52 | | |
| 49 | எருசலேமில் விவாதக் கூட்டம் | | | கிலவுதியு 41–54 |
| | பவுல் மூன்றாம் முறை எருசலேம் சென்றார் | | அகிரிப்பா II 50–100 | |
| 49–52 | இரண்டாம் தூதுப் பயணம் | தெசலோனிக்கேயர் 51/52 | | |
| 52 | பவுல் நான்காம் முறை எருசலேம் சென்றார் | | பேலிக்ஸ் 52–58 | |
| 53–56 | மூன்றாம் தூதுப் பயணம் | கொரிந்தியர் 55 | | |
| 56 | பவுல் ஐந்தாம் முறை எருசலேம் சென்றார் | ரோமர் 56 | | நீரோ 54–68 |
| 56–58 | செசரியாவில் பவுல் | | | |
| 58–59 | உரோமுக்குப் பயணம் | | பெஸ்து 58 | |
| 59–61 | பவுல் உரோமில் சிறையில் அடைக்கப்பட்டார் | கொலோசேயர்<br>எபேசியர்<br>பிலிப்பியர்<br>பிலேமோன் } 59/66 | | |
| 61 | பவுல் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம் | | | |
| | சின்ன ஆசியாவில் நற்செய்தியைக் கூறினார் | | | |
| 64 | உரோம் தீப்பிடித்து எரிந்தது | | | |
| | கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள் | தீமோத்தேயு 1,2 | | |
| | பேதுருவும் பவுலும் இரத்தச் சாட்சிகளாய் மரித்தார்கள் | தீத்து 64/65 மாற்கு 64/65 | | |
| | | 1 பேதுரு ? | | |
| 70 | எருசலேமின் அழிவு | | | உள்நாட்டுப் போர்கள் 68–69 |
| | யூதர் துன்புறுத்தப்பட்டார்கள் | | | வெஸ்பேசியன் 67–79 |
| [illegible] | | லூக்கா 80 | | தீத்து 79-81 |
| | | அப்போஸ்தலர் நடபடிகள் 82 | | |
| | | எபிரேயர் ? | | |
| 85 | | மத்தேயு 85 | | |
| 95 | | திருவெளிப்பாடு 95 | | |
| 100 | | யோவான் 100 | | தொமிஷியன் 81–96<br>டிரேஜன் 98–117 |
| | | ஏறத்தாழ முதல் நூற்றாண்டின் இறுதியில்:<br>யோவான் 1,2,3<br>யாக்கோபு<br>யூதா<br>பேதுரு 2 | | |

*Copies can be had from*

**C. L. S. BOOK SHOPS**

**at**

Park Town, Madras-600 003
15-D West Veli Street, Madurai-625 001
Kodaikanal-624 101, Madurai Dt.
110 Avanashi Road, Coimbatore-641 018
Boulevard Road, Teppakulam, Tiruchirapalli-620 002

150/-

**Price : Rs.** [illegible]